சுதேச
மித்திரன்
மே 6, 1956 விலை 4 அணா

ராமுவுக்கு வீடு திரும்ப நடுக்கம்...
என் துணி அழுக்காகி விட்டது, சோமு. அம்மா கோபித்துக்கொள்வாளே இப்போ.
என் துணி கூடத்தான் அடிக்கடி அழுக்காகிறது, ராமு. ஆனால் எங்கம்மா கோபித்துக்கொள்வதில்லையா, போவோம்.
சோமுவின் வீட்டில்:
ஏன் அழுகிறான் இவன்?
துணிகளை அழுக்காக்கிக் கொண்டான், ஆகவே வீட்டுக்குப் போக பயப்படுகிறான்
ராமுவின் வீட்டில்:
மறுபடியும் அழுக்கோடு வந்தாயாடா! இன்மேலே உன்னை விளையாடப் போகவிடமாட்டேன்.
குழந்தையை கோபிக்காதீங்க. விளையாடும் போது குழந்தைகள் அழுக்காவது சகஜம்.
அரும்பாடுபட்டு ஒவ்வொரு நாளும் அடித்துத்துவைக்கிறேன், அதன் பிறகு துணிகள் சீக்கிரம் கிழிந்துவிடுகின்றன.
அது வாஸ்தவம். அடித்துத்துவைத்தால் நூலிழைகள் நைந்து, துணிகள் சீக்கிரமே கிழிந்துவிடும்
(அடித்துத் துவைத்த துணி பூதக் கண்ணாடி மூலம்)
ஆனால் ஸன்லைட் சோப் உபயோகிக்கும் போது நீங்கள் அடித்துத்துவைக்கவே வேண்டியதில்லை. வளமையான அதன் நுரை எல்லா அழுக்குகளையும் அகற்றுகிறது. உங்கள் துணிகளும் நெடுங்காலம் உழைக்கும்.
உண்மைதான்! துரிதமாக நுரைத்துக்கொள்ளும் ஸன்லைட் சோப் துணிகளை அடித்துத்துவைக்காமலேயே தூய்மையாகவும் பிரகாசமாகவும் வெளுக்கிறது. இதனால் துணிகள் நீடித்திருக்கிறது, எனக்கும் பணம் மிச்சம்.
SUNLIGHT SOAP
ஸன்லைட் சோப்
துணிகளை நீடித்திருக்கச் செய்கிறது.
இந்தியாவில் தயாரித்தது
S. 237

மே 11உ முதல் சென்னையில் ஸ்ரீ கிருஷ்ணா, வெலிங்டன் & உமா

பொருளடக்கம்

Vol. XXVII] துன்முகி௵ சித்திரை௴ 24௳ மே 6, 1956. [No. 14

தொழிலபிவிருத்திக்கு....	3
காற்றுவாக்கிலே —அரட்டை	4
காவிய உதயம் —பானுஸிம்மன்	6
சாவும் வாழ்வும் —பி. கோதண்டராமன்	9
பிரமுகர் வரிசை	12
திரிவேணி —ஹேமா ஆனந்ததீர்த்தன்	13
நாராயணீயம் —அனந்தராம தீக்ஷிதர்	17
இருட்டு —எம். வி. வெங்கட்ராம்	19
எழுத்துலகம் —எஸ். ராஜா	25
பெண்களின் உரிமை —சுமங்கலி	26
கதாநாயகி —ரா. வேங்கடசாமி	28
காதல் பாதை —வெ. கிருஷ்ணமூர்த்தி	32
சட்டம் பேசுகிறது! —வழக்கறிஞர்	35
அதிசய வீணை —வாண்டுமாமா	36
எனக்கும் இதயம் உண்டு —முரளி	38
மோகமுள் —தி. ஜானகிராமன்	44
துப்பறியும் சுப்புடு —சந்தனு	49
இலங்கை லிகிதம்	50
கலாமண்டபம்	51
நகர அரங்கம் —சஞ்சாரி	52
வாசுதேவாச்சார் கீர்த்தனை	53
பம்பாய் நிகழ்ச்சிகள்	55
தலைநகர் தபால்	56

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகளில் பெயர்கள், சம்பவங்கள் எல்லாம் கற்பனையே: அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல

நீரிழிவுக்கு நிவாரணம்

சிறுநீரில் சர்க்கரை இருப்பின் நீரிழிவு (DIABETES) என்று சொல்லப்படும். இப்பயங்கர வியாதியுள்ள நோயாளி நாளுக்கு நாள் தன் முடிவு நெருங்குவதைக் காண்கிறான்

அதிகதாகம், பசி, அடிக்கடி சிறுநீர் சர்க்கரையுடன் போதல், எரிச்சல் ஆகியவைகள் இந்த வியாதிகளின் முக்கிய அறிகுறிகள், வியாதி முற்ற ராஜப் பிளவை, கட்டிகள், சாளேஸ்வரம் இதர கொடிய வியாதிகள் ஏற்படும்.

பல வருட ஆராய்ச்சிக்குப்பின் வீனஸ் சார்ம் தயாரிக்கபபட்டிருக்கிறது. இதை உபயோகிப்பதால் பலர் மரணத்தினின்றும் தப்பியுள்ளனர். சில தினங்களுக்குள் குணம் அடைந்து வருவதை உணர்வீர்கள். இந்த மருந்துக்குப் பத்தியம் கிடையாது. நன்கு விளக்கும் இலவச ஆங்கில புத்தகத்திற்கு எழுதிக் கேளுங்கள்.

50 வில்லைகள் கொண்ட புட்டி 1-க்கு விலை ரூ. 6.12.0. பாக்கிங் தபால் செலவு இனும்.

வீனஸ் ரீஸர்ச்லாபரட்டரி

(S. M. W.)

Post Box No. 587, CALCUTTA.

வெட்டுக்காயம், சொரி சிறங்கு, வேனில்கட்டி, தீப்பட்டபுண், கரப்பான், முகப்பரு, சேத்துப்புண், கொப்புளம், பத்து முதலிய சகல சரும வியாதிகளையும் போக்கும் களிம்பு.

சைபால் CIBOL

ரமணீஸ்

பேபி கிரைப்

குழந்தைகளுக்கு ஏற்படும் மாந்தம், வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல், பல் முளைக்கும்போது ஏற்படும் வயிற்றுப் போக்கு முதலிய **சகல அஜீரணக் கோளாறுகளையும் போக்கி, புஷ்டி அளிப்பது.**

நவீன யந்திர சாதனங்களால் தயாராகிறது

"எல்லிஸ் பாம்" (ELLIS BALM)

ஜலதோஷம், நரம்புவலி, தலைவலி, பல்வலி, மார்சளி, முதலியவைகளைப் போக்கவல்லது.

எமது பாக்டரியில் எல்லா மருந்துகளும் நவீன யந்திர சாதனங்களாலேயே தயாராகின்றன.

தயாரிப்பவர்கள்:

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி,

மதுரை.

வாழிய செந்தமிழ் — சுதேசமித்திரன் — வாழ்க நற்றமிழர்
வாரப்பதிப்பு

தொழிலபிவிருத்திக்குப் புதிய கொள்கை

இவ்வாரம் பார்லிமெண்டில் சர்க்காரின் புதிய தொழில் கொள்கையைப் பிரதம மந்திரி வெளியிட்டிருக்கிறார். படிப்படியாக சர்க்கார் அதிகப்படி பொறுப்பை மேற்கொள்வரென்பதை, பண்டித நேருவின் அறிக்கை குறிக்கின்றது.

புதிய கொள்கைப் பிரகாரம் தொழில்கள் மூவ்வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் வகையில் போர்த் தளவாடங்கள், அணுசக்தி, இரும்பு, எஃகுத் தொழில், கனரகத் தொழில்கள், பெரிய மின்சார இயந்திரங்கள், விசை உற்பத்தியும் விநியோகமும், சுரங்கங்கள், விமானம், ரயில்வே, கப்பல் கட்டுதல், தந்தி டெலிபோன் சாதனங்கள் ஆகியவை இடம் பெற்றிருக்கின்றன. இவற்றை அபிவிருத்தி செய்யும் முழுப் பொறுப்பையும் சர்க்காரே ஏற்கும். ஏற்கெனவே தனிப் பட்டோர் வசமுள்ள தொழில் விஸ்தரிப்பதற்குச் சர்க்கார் ஆட்சேபிக்காது.

இரண்டாவது வகையில், அலுமினியம், ரஸாயனத் தொழிலுக்கு வேண்டிய பொருள்கள், முக்கியமான மருந்துகள், உரம், செயற்கை ரப்பர், ரஸ்தா, கடல் போக்குவரத்து முதலிய 12 தொழில்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சர்க்காரும் தனியாரும் கூட்டாகச் சேர்ந்து நடத்தும் தொழில்களும் இதில் அடங்கியுள்ளன.

மேற்படி ஜாபிதாக்களில் வராமல் எஞ்சியுள்ளவை மூன்றாவது வகையாகும். முற்றிலும் தனியாருக்கென விடப்பட்டாலும், இவை இயங்கும் முறை சர்க்காரின் சமுதாய—பொருளாதார நோக்குக்கு ஒத்ததாக இருக்க வேண்டுமென்று பிரதம மந்திரி வலியுறுத்தியிருக்கிறார். தனியார் முயற்சிக்கு வேண்டிய வசதிகளைச் சர்க்கார் செய்து கொடுப்பரென்றும், குறிப்பிட்ட துறையில் சர்க்கார், தனியார் நடத்தும் தொழில்களிடையே அதிகாரிகள் பாரபட்சம் காட்டாமல் நடந்துகொள்வரென்றும் பண்டித நேரு தெளிவுபடுத்தியிருப்பது வரவேற்கத்தக்கது.

மேற்குறித்த மூவ்வகைகளில் ஒவ்வொன்றிலும் இடம் பெறவேண்டிய தொழில்கள் பற்றி கருத்துவேற்றுமை இருக்கலாம். ஆனால், இப்பாகுபாடு எந்நிலையிலும் மாற்ற முடியாத ஒரு கண்டிப்பான பிரிவினையல்ல என்று பண்டித நேரு தெளிவுபடுத்தியிருக்கிறார். எந்தத் தொழில் யாருடைய நிர்வாகத்தில் திறம்பட நடக்கக்கூடும் என்பதை அனுபவத்தின் மூலம் கண்டுகொள்ளலாம். கண்மூடித்தனமான கோட்பாடு எதையும் கடைப்பிடிக்காமல் இந்த அனுபவத்தை யொட்டியே நடந்துகொள்வதென சர்க்கார் உறுதிகொள்வராயின், இந்நாட்டில் தொழில் வளர்ச்சி மிக துரிதமாக நடந்தேறும் என்பதில் சந்தேகமில்லை.

சர்க்காரே வரவர அதிகமாக வியாபாரப் பொறுப்பை மேற்கொள்வரென்று பண்டித நேரு அறிவித்துள்ளார். ரேஷன் முறை இருந்தபோது சர்க்கார் வியாபாரப் பொறுப்பை மேற்கொண்டு அதை நிர்வகித்து வந்த வகையை இதற்குள் யாரும் மறப்பதற்கில்லை. எனினும் இதிலும் அதிகாரிகள் அனுபவத்தைக்கொண்டு மாற்றிக் கொள்ளக்கூடிய ஒரு வேலை முறையை அமைத்துக் கொள்வதே உசிதமாகும்.

குடிசைத் தொழில்கள் அல்லது சிறு தொழில்களின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்க சர்க்காரும், மக்களும் தங்களாலான ஆதரவு அனைத்தையும் அளிக்கக் கடமைப்பட்டவர்கள். அப்படியே செய்தும் வருகின்றனர். ஆனால், இத்தகைய ஆதரவையே எப்போதும் நம்பியிராமல் சுயபலத்தைக் கொண்டே அவை மற்ற சாக்குகளுடன் போட்டி போடக்கூடிய வலுவை அடையவேண்டுமென்பதைப் பிரதமர் உணர்த்தியிருக்கிறார்.

இவ்வாறே, நாட்டில் தொழில் துறையில் பிற்போக்கான நிலையிலுள்ள பகுதிகளிலும் தொழிலபிவிருத்தி ஏற்பட, தக்க வசதிகள் அளிக்கப் படுமென பண்டித நேரு உணர்த்தியிருப்பது வரவேற்கத்தக்கது.

தொழிலாளர் பங்கு பற்றியும் கொ[illegible]
பற்றிய அறிவிப்பில் பிரஸ்தாபிக்கப்[illegible]
கிறது. ‘ஸோஷலிஸ ஜனநாயகத்தில்[illegible]
விருத்தியில் தொழிலாளியும் ஒரு[illegible]
அவர் ஆர்வமுடன் அபிவிருத்[illegible]
வேண்டும். சாத்தியப்பட்ட இ[illegible]
டாளிகளும் தொழில் வல்லுனர்[illegible]
தில் படிப்படியாகச் சேர்[illegible]
வேண்டும். இவ்விஷயத்தில் ச[illegible]
துறை உதாரணமாகத் திகழவே[illegible]
பிக்கை தெரிவிக்கப்பட்டிருக்கி[illegible]

சோஷலிஸ வடிவிலான [illegible]
யத்தை அடையும் பொருட்டு[illegible]
துரிதமாக அபிவிருத்தியடையு[illegible]
மக்களின் வாழ்க்கைத்தரம் உய[illegible]
தியை அதிகரிக்கும் பொருட்டும்[illegible]
புதுக் கொள்கையை அறிவிப்பதா[illegible]
படுகிறது. இதைப் பிரத்யட்ச[illegible]
நடத்திவைப்பதைப் பொறுத்தே[illegible]
மெனத் திட்டமாகக் கூறலாம்.

காற்று வாக்கிலே.

காலம் மாறிப் போச்சு !

“பத்தாம் பசலிக் கருத்துக்களில் சிறைப்பட்டுக் கிடக்கலாகாது. இருபதாம் நூற்றாண்டின் சவாலை ஏற்கத் தயாராகுங்கள்” என்று வேண்டுகிறார் பாரதமாளும் பண்டிதர். காலம் மாறிப் போச்சு. கொசுவைக் கண்டால் கொலை செய்தது போகக் கொஞ்ச வேண்டிய காலம் வந்துவிட்டது. ஒழித்துக்கட்டுவதில் இருந்த ஆர்வம், அதன் குலம் செழிக்கச் செய்வதில் திரும்புகிறது! பலரும் புசிக்கும் பழங்களின் மீதுள்ள பாஷாணத்தைக் கண்டு தெளிய உதவுகிறதாம் பாழுங் கொசு. மன்னுயிரைக் காக்கத் தன்னுயிரையும் தியாகம் செய்கிறதாம்! இன்னுமா பழைய கருத்தைக் கட்டியழுவது?

‘அற்பக் கொசு விஷயம் விட்டுத்தள்ளு’ என்றால், வன ராஜன் வேஷமும் விலகிவிட்டது. “அடிப்பயோ, ஒங்கப்பன் மவனே, சிங்கண்டா” என்று இனியும் வீராப்பு பேச முடியாது. சாயம் வெளுத்துவிட்டது. சிங்கத்தின் வீர, சூரத்தனமெல்லாம் அரை நிமிஷத்துக்குத்தானும்! அதற்கு மேல் இருதயக் கோளாறு ஏற்பட்டுவிடுமாம். பெருமூச்சு வாங்கும்; அப்படியே அசந்து போய்விடும்; கவலையே வேண்டாம். என்று அபயமளிக்கிறார் பெரிய நிபுணர். சிங்கத்தோடு சண்டையிட நேர்ந்தால் என்ன செய்ய வேண்டும் தெரியுமா? ஒன்றும் பிரமாதமில்லை. முதல் தாக்கு[...]லிலிருந்து மட்டும் தப்பித்துக்கொள்ள [...]டும். அவ்வளவுதான். அதோடு [...]ந்தது சிங்கம்! “மூச்சுத் திணறி உட்கார்ந்திருக்கும்; நாம் ஜாலியாகக் கம்பி நீட்டிவிடலாம்”. எப்படி கதை? கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிக்கும் தந்திரம்தான். ரொம்ப சரி. ஆனால் சிங்கத்தைக் கண்டவுடனேயே ஆசாமிக்குக் கைகால் நடுங்கி மூச்சு நின்றுவிடுமே, அதற்கென்ன செய்வது? குலைக்கிற நாய் கடிக்காது என்பது பழமொழியே. அது அந்த நாய்க்கல்லவா தெரிந்திருக்க வேண்டும்?

மாறுதலில் மனிதன் சளைத்தவனா? ஆரோக்கிய வாழ்வுக்கென அறுபத்து மூன்று நாட்கள் பட்டினி கிடக்க முன் வந்திருக்கிறார் அயல் நாட்டுப் பக்கிரியொருவர். வாசமோ சவப்பெட்டியில்! பல புட்டிகளை உடைத்துக் கண்ணாடித் துண்டுகளைப் பரப்பி ஆனந்தசயனமிருக்கத் தொடங்கியுள்ளார். அதுவும் போதாதென்று கூடவே ஐம்பது விஷப்பாம்புகளையும் கொண்டு சென்றிருக்கிறார். இத்தனை அலங்கோலத்திலும் சொகுசையும், சிங்காரத்தையும் மட்டும் மறக்கவில்லை. சிகை அலங்காரத்துக்குச் சின்னக் கத்திரியும், அந்த ஆளுடன் அடக்கமான அத்தியாவசியப் பொருள்களில் ஒன்று! உண்ணாவிரதமிருப்பதில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லையென நிரூபிக்கவே இத்தனையும் பூர்வாங்க நடவடிக்கையாம். புது உலகமா, இல்லையா?

புரட்சி பேசி வந்த கம்யூனிஸ்ட் கட்சியிலும் ஒரு மருட்சி. கிடுகிடுக்க வைத்த கட்சி கலகலத்து நிற்கிறது. குட்டை குழப்பிய ஸ்தாபனம், தானே குழம்பி நிற்கிறது. சாத்வீக காங்கிரஸோ பெரிய அதிர்வேட்டுகளை வெடித்து வருகிறது.

ஏழையைச் சீமானாக்காவிடினும் பணக்காரரையாவது ஓட்டாண்டிகளாக்கக் கங்கணம் பூண்டிருப்பதாகக் கோஷம். ஏற்றத்தாழ்வுகளை எப்படி அகற்றினால் என்ன? மேலிடத்தார் உத்தரவெனக் கண்டிப்பும், காய்தாவும் கொடி கட்டிப் பறக்கும் அமைப்பில் இன்று தலையாட்டி பொம்மைகளுக்கும் ‘ஆமாம் சாமி’களுக்கும் இடமில்லையென இடித்துரையும் பிறக்கிறது.

சமதர்ம சமுதாய நல்வாழ்வே புது லட்சியமென ஆர்ப்பாட்டம். வேலையில்லாமையை அகற்ற அமர்க்களமான திட்டம். அதேசமயம் அரசாங்க ஊழியத்திலேயே பெரும் ஆட்குறைப்பிலும் ஆர்வம். சிக்கனத்திலும், சேமிப்பிலும் கவனம் செலுத்த ஊருக்கெல்லாம் உபதேசம். சர்க்காரின் நிர்வாகச் செலவோ ஹனுமார் வால் போல் நீண்டு போவதாகப் பாராளு மன்றத்தில் ஆளும் கட்சியினரே புகார். வேலை வாய்ப்பு தேடி வருவதில் அக்கறையை மறுப்பதற்குமில்லை. இப்போதுகூட இரண்டு பேருக்கு மத்திய சர்க்காரில் குட்டி மந்திரி வேலை கிடைத்திருக்கிறது. நானூறு பேர்கள் கொண்ட சபையில் ஐம்பது பேருக்கு மேல் மந்திரிகள். எட்டு பேருக்கு ஒரு மந்திரியென்று புது விகிதாசாரமா? வேலையில்லாமையைத் தவிர்க்க இதுவும் ஒரு வழிதானே? “கலைஞர்”களின் தொல்லையைத் தீர்க்கக் காசை வாரியிறைத்துக் கண்ட இடங்களுக்கெல்லாம் கலாசாரத் தூது கோஷ்டிகள் அனுப்புவதில்லையா? நவ ஜனநாயகத்துக்கு ஏற்ற புதுக் கொள்கைகள்!

நவீன இயந்திரச் சாதனங்களைப் பயன்படுத்துவதிலும், விஞ்ஞான வளர்ச்சியில் முன்னேறுவதிலும் நாட்டம். அத்துடன் பழங்கால முறைகளிலும், மாட்டு வண்டிப் பொருளாதாரத்திலும் மோகம். அம்பர் சர்க்காவுக்கும், அப்பளம் தயாரிப்புக்கும் அரசாங்க உதவி! பொறுப்புள்ள பெரிய பதவி வகித்தும் பல நாட்களாகப் பணி புரிய மறுத்து விசித்திர ஒத்துழையாமை நடத்தும் அமைச்சர்; தாமதமாக ஓடுவதையே தர்மமாகக் கொண்டிருக்கும் ரயில்களின் பரம்பரைப் பண்பாட்டை எதிர்த்து வாயில்லாப் பூச்சிகளாயிருந்த பிரயாணிகள் மறியல்; காசைக் கொடுத்துத் தேளைக் கொட்டிக்கொள்வதுபோல் உயர்ந்த கட்டணத்தையும், சகிக்க முடியாத நெரிசலையும் சற்றேனும் மதியாது, தலைவிதியை நொந்துகொண்டு பிரயாணம் செய்பவரை உல்லாச யாத்ரீகர் என்று மதித்து கூட்டத்தைக் குறைக்க விநோதமான சிபார்சுகள்! என்னே புதுமைகள்! சிந்தையறிந்த செய்கையா, சித்த ஸ்வாதீனமற்ற போக்கா? சந்தேகம் வருவது சகஜமே. ஆனால் கடைசியில் எப்படிப் பார்த்தாலும் பழைய பெத்தானே பெத்தான் கதையாகத் தானே இருக்கிறது?

—அரட்டை

★

தில்லித் தமிழ்ச் சங்கத்தின் தமிழ் வருஷப் பிறப்பு தின விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவர்களையும், தலைமை வகித்த மந்திரி அளகேசனையும், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ பி. கக்கனையும் படத்தில் காணலாம்

★

காலச் சக்கரம்


இந்த மாளிகை உமக்குத்தான்....
தனித் தொகுதி முறைக்கு ஆதரவு காட்டியுள்ளது, பாக். முஸ்லிம் லீக்
முஸ்லிம் லீக்
தனித் தொகுதிகள்
சிறு ராஜ்யங்கள் டில்லியின் கருணை கடாக்ஷம் பெறுவதை அறிந்தென்கிறார், தக்ஷிண பிரதேசம் கோரும் சென்னை அமைச்சர்
ஏய், அவங்களோடே என்ன செஞ்சிண்டிருந்தே...?
பிரிட்டன்
ஆங்கிலோ-ஸோவியத் பேச்சுகள் பற்றி டல்லஸ் முழு விவரமும் கோருவாராம்

காவிய உதயம்

— பானுசிம்ஹன் —



மஹா கவி பவபூதி ஹோம குண்டத்தின் எதிரில் அமர்ந்திருந்தார். அருகில் கிடந்த உலர்ந்த சமித்துக்களை கட்டு கட்டாக அந்த ஹோமகுண்டத்திலே போட்டு அக்னியின் ஜ்வாலையைத் தூண்டிக்கொண்டிருந்தார் அவர்.

ஹோம குண்டத்திலிருந்த அக்னி அவரால் உண்டாக்கப் பட்டது...ஆனல், அவர் இதயத்திலே கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்த அந்த கனல்....அதை யார் மூட்டினர்கள்?

ஃ ஃ ஃ

பல வருஷங்களுக்கு முன்பு. அப்பொழுது பவபூதி கவியாகி இருக்கவில்லை. ஒரு சாதாரணச் சிறுவனாக ஸ்ரீகாந்தனாகத்தான் இருந்தார் அவர். ஸ்ரீகாந்தன் அவருடைய இயற் பெயர்.

ஒரு நாள். ஸ்ரீகாந்தன் தன் தந்தையிடம் எதையோ சொல்ல ஆவலுடன் ஓடி வந்துகொண்டிருந்தான். அந்த ஆவலில், தந்தை எதையோ ஆழ்ந்து சிந்திக்கிறார் என்பதை அவனால் அறிய முடியவில்லை. இரு முறை தந்தையைக் கூப்பிட்டுப் பார்த்தான் அவன். அவர் ஏன் என்று கேட்கவில்லை. பிறகுதான் அவரைப் பிடித்து உலுக்கினான் அவன்.

திடுக்கிட்டு விழித்தார் அவன் தந்தை. அவர் பார்வையில் வழக்கமான கனிவு தென்படவில்லை என்பதை அந்தப் பிஞ்சு உள்ளம் எப்படியோ புரிந்துகொண்டு விட்டது. தந்தையின் சிந்தனையைக் கலைத்து, சினத்திற்கு ஆளாகிவிட்டோம் என்பது தெரிந்துவிட்டது அவனுக்கு. அவ்வளவுதான்; ஓடோடியும் தன் தாயிடம் சென்று அடைக்கலம் புகுந்து விட்டான் ஸ்ரீகாந்தன்.

ஆனாலும் அவன் உள்ளம் விம்மத் தொடங்கியது. அப்படி என்ன தவறு செய்துவிட்டான் அவன்? தந்தை பூஜை செய்துகொண்டிருக்கும்பொழுதுகூட அவன் தன் தந்தையின் அருகில் சென்று அவர் கவனத்தைக் கலைத்திருக்கிறானே. அப்பொழுதெல்லாம் கூட அவர் அவனைக் கோபித்துக்கொண்டதில்லையே!

சற்று நேரம் கழித்து, அவன் தந்தையிடம் சென்றான்.

“கண்ணே, அப்பொழுது நான் ஒரு காவ்யம் படித்துக்கொண்டிருந்தேன். அதில் ஒரு இடத்தில் கவி தன் சக்திகளையெல்லாம் அள்ளிக் கொட்டியிருந்தார். அதை நான் ரஸித்துக்கொண்டிருக்கும்பொழுதுதான் நீ வந்தாய். . .” ஒரு தந்தையின் அன்பெலாம் செறிய, ‘கோபித்துக்கொண்டோமே குழந்தையை?’ என்ற பச்சாத்தாபமெல்லாம் தொனிக்க, ஸ்ரீகாந்தனை அருகில் அழைத்து உச்சிமோந்தார் தந்தை.

ஸ்ரீகாந்தனுக்கு அவன் தந்தை அவன் மீது எவ்வளவு பேரன்பு பூண்டிருக்கிறார் என்பது தெரியும். ‘அந்த அன்பின் சக்தியையும் வெல்லக் கூடியதா ஒரு காவ்யத்தின் சக்தி? ஒரு கவிக்கு அவ்வளவு பெருமையா, சக்தியா?

அன்றிலிருந்து அவனுக்கும் ஒரு ஆசை பிறந்தது. அந்த ஆசை ஒரே கணத்தில் அவன் இதயத்தில் ஊன்றி வேர் விடத் தொடங்கியது. . . . . ஸ்ரீகாந்தனுக்குத் தானும் ஒரு கவியாகிவிட வேண்டும் என்ற பேராசை. . . அது முடியுமா? முடியும் என்று அவன் உள்ளத்திலிருந்து ஏதோ ஒன்று அழுத்திக்கூறியது.

ஸ்ரீகாந்தன் எவ்வளவோ மஹாகாவ்யங்களையும், நாடகங்களையும் படித்திருந்தான். ஆனாலும் அவனுடைய இதய அரங்கிலே மஹாகவி காளிதாஸன்தான் ஒரு தனி ஏறு நடை போட்டான். எப்படியாவது தானும் காளிதாஸனைப்போல ஒரு கவியாகிவிட வேண்டும் என்று துடித்தான் ஸ்ரீகாந்தன்.

அதுமுதல் அவன் தனிமையை நாடினான். சதா சிந்தித்தான். அவனுடைய காலத்திலே சாதாரண பாமர ஜனங்கள்கூட காளிதாஸனைத் தெரிந்து வைத்திருந்தார்கள். அநேகம் பேர் காளிதாஸனைத் தெரிந்திருக்காவிட்டாலும் அவனுடைய சகுந்தலையையும், துஷ்யந்தனையும் தெரிந்து வைத்திருந்தார்கள். அதேபோல தானும் ஒரு காதல் ஜோடியை, அமர இன்ப ஜோடியை, இந்த உலகிற்கு அளித்துவிடவேண்டும் என்றுதான் அல்லும் பகலும் யோசித்தான் ஸ்ரீகாந்தன்.

அதன் பலனாகத்தான், எவ்வளவோ நாட்களின் கடுமையான சிந்தனைக்குப் பிறகு மாலதியும் மாதவனும் உருவானார்கள். ஒரு வழியாக அவன் கதையைப் பூர்த்தி செய்துவிட்டான். அந்தக் கதையை நாடகமாக்கி மற்றவரிடம் காட்டும்வரையில்கூட அவனால் பொறுக்க முடியவில்லை. அந்தக் கதையை முதன் முதலாகத் தன் அருமை நண்பன் ஒருவனிடம் சொன்னான் ஸ்ரீகாந்தன்.

'அந்தக் கதையைக் கேட்ட பிறகு, அவன் தன்னை அப்படியே அணைத்துக் கொள்வான், ஆயிரமாயிரம் வார்த்தைகள் அதைப் புகழ்ந்து பேசுவான், பேசிக்கொண்டே இருப்பான்'—என்றுதான் ஸ்ரீகாந்தனுடைய உள்ளம் கோட்டை கட்டியது. ஆனால், அந்த நண்பன் அப்படியெல்லாம் ஒன்றும் செய்யவில்லை. ஒரு முறை, ஒரே ஒரு முறை, சிரித்து வைத்தான். அது என்ன சிரிப்பு? புகழ்ச்சிச் சிரிப்பா, கேலிச் சிரிப்பா?

"ஸ்ரீகாந்தா! உன்னைக் கண்டு நான் அனுதாபப் படுகிறேன்" என்றான் நண்பன்.

ஸ்ரீகாந்தன் ஒன்றுமே பேசவில்லை.

"ஸ்ரீகாந்தா! நீ எதற்காக வீணாக உன் நேரத்தை இப்படி வீணாக்குகிறாய்?"

"நேரத்தை வீணாக்குகிறேனா? நான் ஒரு கவியாகிவிடப் போகிறேனடா."—ஸ்ரீகாந்தனுடைய குரலிலே அவனது அவ்வளவு ஆசைக்கனவும் தொனித்தது.

"ஸ்ரீகாந்தா, கவிகள் கவிகளாகவே பிறக்கிறார்கள். தனது யத்னத்தினால் யாரும் கவியாகிவிட முடியாது."

"அப்படியானால் நான் ஒரு கவியாகிவிட முடியாதா?"

"முடியாது."

ஸ்ரீகாந்தனின் இதயம் வறண்டுவிட்டது. அவன் அத்துடன் தன் பேச்சை நிறுத்திவிட்டான், ஆனாலும் அவனால் சும்மாயிருக்க முடியவில்லை. அப்படியானால் அவன் ஒரு கவியாக முடியாதா? இந்தக் கேள்வியைத்தான் அவன் உள்ளம் திரும்பத் திரும்ப அவனைக் கேட்டது. முடியும்..முடியும்..முடியுமா?.. இப்படியே போராடியது அவன் உள்ளம். கடைசியில் யாருக்குமே சொல்லாமல் 'மாலதீ மாதவ'த்தை எழுதி முடித்துவிடுவதென்று தீர்மானித்தான். அப்பொழுதெல்லாம் அவன் உள்ளத்திலே நிறைந்திருந்தது வடித்தெடுக்கமுடியாத சோகம்தான். அதனால்தான் மாலதீ மாதவத்தில் வழக்கமாக சம்ஸ்கிருத நாடகங்களில் வரும் விதூஷகனே இல்லை.

அவன் தனித்து உட்கார்ந்து அதை எழுதியபொழுதெல்லாம் அவன் நண்பர்கள் அவனை எப்படி எப்படியெல்லாமோ கேலி செய்தார்கள். ஆனால் ஸ்ரீகாந்தன் அதை எல்லாம் லட்சியமே செய்யவில்லை. எப்படியோ அவன் அதை எழுதி முடித்துவிட்டான்.

அன்றிரவு அவன் தூங்கச் சென்ற பொழுது, அவன் இதயத்திலே எவ்வளவோ உணர்ச்சிகள் அலை பாய்ந்தன. அவன் முகத்திலே ஒரு தனிப் பெருமை தாண்டவமாடியது. அதிலே கொஞ்சம் கர்வத்தின் சாயல்கூட தென்பட்டது.

இனி அவனை உலகம் கவி என்று போற்றும். எல்லோரும் அவனைக் கண்டால் ஒரு தனி மரியாதை செய்வார்கள். எல்லோரும் அவனைப் பற்றியும், அவன் சிருஷ்டிகளைப் பற்றியும் பேசிக்கொண்டே இருப்பார்கள். அவனுடைய புகழ் நாடெங்கும் பரவும், பல தேசத்து மன்னர்கள் காதுவரை அது போகும். பிறகு எல்லோரும் அவனைத் தன் ஆஸ்தான கவியாக வைத்துக்கொள்வதற்காகப் போட்டி போடுவார்கள்...இப்படியெல்லாம் அவன் மனம் சிந்தித்தது.

மறு நாள், அவன் தன் நாடகத்தைத் தன தந்தையிடம் காட்டினான். ஒவ்வொரு வசனமாக தானே நடித்துக் காட்டினான். இதையெல்லாம் கேட்டார் அவர். அவர் இதயம் மலர்ந்தது. ஆனால் அவர் முகம் மலரவில்லை.

"அப்பா, நாடகம் நன்றாக இல்லையா?"

"ஸ்ரீகாந்தா நீ எழுதடா கண்ணே. ஆனால் புகழை எதிர்பார்க்காதே."—அவனது தந்தை இவ்வளவுதான் பேசினார். அதன் பொருளை அவனால் உணரமுடியவில்லை.

அவன் தனக்குத் தெரிந்த பெரியவர்களிடம் எல்லாம் அதைப் படித்துக் காட்டினான். தன் நண்பர்களிடமெல்லாம் வாசித்துக் காட்டினான். யாரும் அவன் எதிர்பார்த்த அளவு அவனைப் புகழவில்லை. ஆனால் அவன் எதிர்பாராத அளவிற்கு குறை சொன்னார்கள். அந்த இளம் கவியின் இதயம் வறண்டது. அவனது எண்ணக்கோட்டைகள் இடிந்து தகர்ந்தன. அவனுக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போன்ற நிலை ஏற்பட்டது.

இந்த நேரத்தில்தான் அவனது பெற்றோர்கள் அவனுக்கு மணம் செய்து வைத்தார்கள். அவளுடைய நினைவிலேயாவது அவனுடைய இதயம் சிறிது சாந்தியைக் காணாதா என்பதுதான் அவர்களது ஆவல், பிரார்த்தனை.

அன்றொரு நாள். அன்றுதான் ஸ்ரீகாந்தனும் அவனது புது மனைவியும் வாழ்வைத் தொடங்கப்போகும் முதல் நாள். அவளைப் பார்த்தான் ஸ்ரீகாந்தன். அவனுக்கு என்ன தோன்றிற்றோ தெரியவில்லை; உடனே தன் 'மாலதீ மாதவ'த்தை எடுத்து வந்து, அதைப் படித்துக் காட்ட ஆரம்பித்தான்.

முதலில் அவள் திடுக்கிட்டுவிட்டாள். ஆனால் அடுத்த கணம் அவள் தன் கணவனைப் புரிந்துகொண்டுவிட்டாள். அவனது வெள்ளை இதயத்தையும், அதன் நொந்த நிலையையும் அவள் அறிந்துகொண்டுவிட்டாள்.

அதன் பிறகு அவன் இதயத்திற்கு ஏற்றபடி தன்னை மாற்றிக்கொண்டாள் அவள். அவனை எழுதச்சொல்லித் தூண்டினாள். அவன் மனம் நொந்து போன நேரங்களில் எல்லாம் அவனைத் தேற்றினாள். சில சமயம் அவள் அவனது தாயாக நடக்க வேண்டியிருந்தது; சில சமயம் அவனது குழந்தையைப்போல நடக்க வேண்டியிருந்தது.

அவனுக்காக அவள் வாழ்ந்தாள். அவனுக்காகவேதான் வாழ்ந்தாள். அவள் வந்த பிறகு எவ்வளவோ தடவைகள் அவனது இதயம் குமுறியிருக்கிறது; ஆனால் வெடித்தது கிடையாது. எவ்வளவோ முறைகள் அவனது இதயத்து உணர்ச்சிகள் பொங்கியிருக்கின்றன; ஆனால் ஒரு முறையாவது வழிந்ததே கிடையாது. எவ்வளவோ சந்தர்ப்பங்களில் அவன் உணர்ச்சி வடிந்திருக்கிறது; ஆனால் வறண்டதே கிடையாது.

அவளால்தான் ஸ்ரீகாந்தன் பவபூதியாக ஆனார். 'மாலதீ மாதவ'த்தை அடுத்து 'மஹா வீர சரிதம்' எழுதினார். ஆனால்

அந்த வாழ்வு அவருக்கு நீண்ட நாள் கிட்டவில்லை. தெய்வத்திற்கே அது பொறுக்க முடியவில்லை போலிருக்கிறது. அவர் மஹாகவியாக ஆகக்கூடாது என்று அவர் எண்ணினரோ என்னமோ! இல்லா விட்டால் அவளையும் அவரையும் கடவுள் ஏன் பிரித்துவிடவேண்டும்?

ஒரு நாள் அவள் போய்விட்டாள். பவபூதியை ஏங்க வைத்துவிட்டு அவள் போயே போய்விட்டாள். அவரால் போக முடியாத உலகிற்குப் போய் விட்டாள். அவரை எழுதத் தூண்டிய அவள் போய்விட்டாள். அவர் எழுது வதை இதயபூர்வமாக மெச்சிய அவள் போய்விட்டாள்.

பின் அவர் ஏன் எழுதவேண்டும்? எதற் காக எழுத வேண்டும்? அதெல்லாம் போகட்டும், இனி அவரால் எப்படி எழுத முடியும்? இனி அவர் எழுத முடியாத பொழுது, அந்த இரண்டு நாடகங்களால் தான் என்ன பயன்? 'அவைகளைத் தீயி லிட்டுப் பொசுக்கினல்தான் தேவலை. . . ஆம்; அக்கினி ஜ்வாலைக்கு அவற்றை இரையாக்கிவிடத்தான் வேண்டும். . .' பொசுக்கிவிட வேண்டும். . ஆம். .

ஃ ஃ ஃ

பவபூதி மன உளைச்சல் தாளாமல் அந்த ஓலைச்சுவடிகளை தீயிலிடத் தீர் மானித்துவிட்டார். அதற்காகத்தான் எதிரிலே ஒரு அக்னியை வளர்த்திருந் தார். அந்தக் கொழுந்துவிட்டு எரியும் அக்னி ஜ்வாலையிலே பவபூதி அவைகளை எறியப்போகும் சமயம். இன்னும் சில நாழிகைகளில் அவருடைய பல வருஷத் திய உழைப்பு, வாழ்வின் லட்சியம், அவ ரது எண்ணக்கோட்டை, அவரது இதயம் எல்லாமே ஒரு பிடி சாம்பலாகிவிட்டி ருக்கும். . .

அந்தச் சமயம். . .

"பவபூதி!"—யாரோ கூப்பிட்டார்கள்.

பவபூதி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார். அக்னிப் பிழம்புகளின் செந்நிற ஒளியில் ஒரு பெண் நின்றிருந் தாள். அவளுடைய தெய்வீக முகத்திலே ஆழம் காணமுடியாத ஒரு சோகம் ததும்பியது. யார் அவள்?

"பவபூதி! என்னைத் தெரியவில்லையா உனக்கு?"

பவபூதி ஒன்றும் தோன்றாமல் திகைத்து நின்றார்.

"நான்தான் வைதேஹி."

பவபூதி அலறினர். வைதேஹியா? வாழ்வு முழுதும் கஷ்டம் என்ற ஒன்றைத் தவிர வேறு எதையும் அனுபவித்திராத ஜனக குமாரியா அவள்? சீதாதேவியா அவள்?

"சீதாதேவீ!"

"பவபூதி! நீ இப்பொழுது என்ன காரியம் செய்யத் துணிந்துவிட்டாய்!"

"நான் என்ன செய்வேன் தாயே. என் கனவுகளையெல்லாம் இந்த உலகம் சிதைத்து உருத்தெரியாமல் அடித்துவிட்டது. என்னை ஊக்கிய ஒரே மனைவி—அவளும் போய்விட்டாள். இனி நான் எதற்காக எழுதவேண்டும்? யாருக்காக எழுத வேண்டும்?"

"பவபூதி! உனக்கு என்னைப்பற்றி ஒன் றும் தெரியாதா என்ன? நான் என் வாழ்வில் எவ்வளவு துன்பத்தையும் அப வாதத்தையும் பெற்றேன்! நான் வனத் தில் இருக்கும்பொழுது ராவணன் என்னைத் தூக்கிச்சென்றானே, அதை இந்த உலக மக்களில் ஒருவரும் பார்க்க வில்லை. அதேபோல, நான் அக்னிப் பிர வேசம் செய்தேனே, அதையும் யாரும் பார்க்கவில்லை. ஆனாலும் இந்த உலகம் நான் அக்னிப் பிரவேசம் செய்ததை மறந்துவிட்டு, ராவணன் என்னைத் தூக்கிச் சென்றதை மட்டும்தானே சொல்லிக்காட்டுகிறது! பவபூதி! இந்த உலகம் என்றுமே ஒரு பெண்ணையும், ஒரு கவியையும் அவ்வளவு எளிதில் பரிசுத்த மானவர்கள் என்று ஒப்புக்கொண்ட தில்லை..." இதைச் சொல்லிவிட்டு வைதேஹி மறைந்துவிட்டாள்.

பவபூதி பொலபொலவென்று கண் ணீர் வடித்தார். அவரையறியாமல் அவர் வாய் ஒரு சுலோகத்தை முணுமுணுத் தது.

ஸர்வதா வ்யகர்த்தவ்யம் குதோஸ்ய
வசனீயதா
யதா ஸ்த்ரீணாம் ததா வாசாம்
ஸாதுத்வே துர்ஜனோ ஜன:
தேவ்யா அபி ஹி வைதேஹ்யா:
ஸாபவாதோ யதோ ஜன:
ரக்ஷோ கிருஹஸ்திதிர் மூலம்
அக்னி சுத்தௌ த்வஸ்சய:

பவபூதியின் உள்ளத்திலே இந்த ஸ்லோகம் மட்டும் உருவாகவில்லை. ஒரு காவியமே உருவாகிவிட்டது. அதைப் பிறகு உலகமெல்லாம் போற்றிப் புகழ்ந் தது. அப்பொழுது அந்த மஹாகவியின் இதயத்திலே உதித்த காவ்யம்தான் இன்று நாம் படிக்கும் 'உத்தர ராம சரிதம்.'

★

பௌத்தக் கதை:

சாவும் — வாழ்வும்

ப. கோதண்டராமன்

[சென்ற வாரத் தொடர்ச்சி]

கௌதமன் மீண்டும் பல நாட்கள் பிரயாணம்செய்து இந்திரப் பிரஸ்தத்தை அடைந்தான். அதில், துறவிகளின் மகத்தான நந்தவனம் ஒன்றிருந்தது. அங்கே ஆயிரம் புனிதர் பிரம்மனை அறியக் கடுந்தவம் செய்தனர்.

அவர்களில் ஒருவன் கல் போன்ற ஓடுகளையுடைய ஆப்பில் பழங்களையும், மரங்களின் இளந்தளிர்களையும் உண்டான். மற்றொருவன் ஒரு நாளுக்கொரு அரிசி மணி வீதமே உண்டான். வரையறையுள்ள உணவு தூய்மை செய்கிறது. மற்றொருவன் இரவும் பகலுமாக இடுப்பு மட்டும் நீரில் நின்று தன்னைத் தூய்மை செய்துகொண்டான். இன்னொருவன் அசையாமல் உட்கார்ந்து சூரியனையே உற்று நோக்கினான். இன்னுமொருவன் சுற்றிலும் அக்கினி வளர்த்து வழிபட்டான். இவ்விதமாக ஒவ்வொருவரும் தவத்தால் குவியல் குவியலாக புண்ணியம் சம்பாதிக்க எண்ணினர்.

கௌதமன் இக்கூட்டத்தாரை அணுகினான். அவர்கள் 'நீங்களும் எங்களோடு சேர்ந்து மகத்தான இத்தவத்தில் ஈடுபடுகிறீர்களா?' எனக் கேட்டனர்.

கௌதமன், 'உங்களோடு தங்கித் தவஞ் செய்ய எனக்குப் போதிய அவகாசமில்லை. நான் மேரு மலையை அடைந்து சாவை வெல்லவே விரும்புகிறேன்' என்றான்.

'பெரியீர், நாங்களும் சாவை வெல்ல விரும்புகிறோம்' என்றான் அவர்களில் ஒருவன்.

'எங்ஙனம் வெல்வீர்?'

'மிக உயரிய பிரம்மனுடன் ஒன்றாகி விடுவதன் மூலம். எவன் பிரம்மனாகிறானோ அவனிடம் சாவின் ஜம்பம் செல்லாது'.

'இந்தப் பரப்பிரம்மத்துடன் ஒன்றுவது எங்ஙனம்?'

'பரஞானத்தால். யார் பிரம்மனை அறிகின்றனரோ அவரே பிரம்மம். அதுவே பண்டை ஞானம்.'

'ஆனால், இப்பரஞானத்தை எங்ஙனம் அடைவீர்?'

'கடுந்தவம், தியானம் ஆகியவற்றின் மூலமாக.'

'பரப்பிரம்மன் வதிவது எங்கே?'

'அவன் நம்முள்ளேயே வதிகிறான். அதனாலேயே பிரம்மனை அறிந்தவர் பிரம்மனாகின்றனர் என்பர்.'

'இப்பரப்பிரம்மனை உங்கள் கண்களால் பார்க்க முடியுமா?'

"முடியாது. கண்கள் அவன் மூலமாகவேயிருக்க, கண்மூலம் அவனைப் பார்ப்பது எங்ஙனம்?"

'அப்படியானால், அறிவு விளக்கத்தால் நீங்கள் அவனைப் பார்க்கலாம்.'

'இல்லை. அறிவு அவன் மூலமாகவே இருக்க, அதனால் அவனைக் காண்பது எங்ஙனம்?'

'அப்படியானால் உள்ளத்தால் நீங்கள் உணர முடியலாம்.'

'இல்லை. உள்ளம் அவன் மூலமாகவே இருக்க, உள்ளத்தால் உணர்வது எங்ஙனம்?'

'இப்பரப்பிரம்மனைக் கண்ணால் பார்க்க முடியாது; அறிவினால் அறிய முடியாது; இதயத்தினால் உணர முடியாது. அப்படியானால், இப்பரப்பிர்ம்மன் உண்மையில் உள்ளான் என்பதன் அறிவு எங்ஙனம் கிடைக்கிறது?'

'ரிஷிகள் அதைப் போதிக்கின்றனர்.'

'அப்படியானால், ரிஷிகள் அதை உணர்ந்து அது உள்ளதென அறிவர்.'

'அப்படித்தான் எண்ணுகிறோம்.'

'இந்த பரப்பிரம்மன்பால் உங்களுக்கு ஆர்வமும் பக்தியுமுண்டு அல்லவா?'

'ஆம், உண்டு.'

'அப்படியானால் பக்தர்கள் பிரம்மன்பால் பற்றுதல் கொள்கின்றனர். பற்றுதலிலிருந்து துன்பம் வருகின்றது என்பதை அவர்கள் அறியார் போலும். ஒன்று உள்ளதோ இல்லையோ என்று அறியாமல் அதன்பால் பற்றுதல் கொள்பவனுக்கு இரட்டை வேதனை ஏற்படுகிறது. இப்புனிதர்கள் சாவை வெல்ல விரும்பவில்லை; தம் வறட்டு வேதாந்தத்தால் தம்மை மறைத்துக்கொள்ளவே விரும்புகின்றனர். இவர்கள் அறிவற்ற மூடர். இவர்களை நான் விரும்பவில்லை'. இவ்வண்ணமாக எண்ணினான் கௌதமன்.

அதன் மேல் அவன் அவர்களிடமிருந்து பிரிந்து சென்றான்.

பல நாட்கள் பிரயாணம் செய்து, வெறும் மணற் பரப்பாயும், முடிவற்ற பனி வயலாயும் இருந்த ஓரிடத்திற்கு வந்தான். அங்கே அவன் தன் காஷாயத்தையும் கமண்டலத்தையும் துறந்தான். தடியை மட்டும் வைத்துக்கொண்டு நடந்தான்.

புனிதமான கங்கை, மலைச்சாரிலிருந்து நகரும் பனிப் படலமொன்றிலுள்ள ஒரு நீல வெடிப்பிலிருந்து எழும் இடத்தை அடைந்தான். அங்கே மேரு பர்வதத்திற்காகச் சுற்றிப் பார்த்தான். சுற்றியுள்ளசிகரங்களை நோக்கினான். ஒவ்வொன்றும் ஒன்றே போலிருந்தன.

ஒன்று மட்டும் உயர்ந்துகொண்டே இருந்தது. அதுவே மேருவென்றுணர்ந்தான். எவ்வளவு நடந்தும் அதனருகே போக முடியவில்லை.

உருண்டை வடிவக் கற்பாறைகளையும் செங்குத்தான மலைகளையும் கண்மூடிக்கொண்டு தாண்ட வேண்டும் என்று முதியவர் சொன்னபடியே அவனும் கண்மூடித் தாண்டிக்கொண்டே முன்னேறினான். பிறகு கண்களைச் சிறிது திறந்து மலை அருகே வந்துவிட்டதாவெனப் பார்த்தான். ஆனால் மலை இன்னும் வெகு தொலைவிலிருந்தது. அண்ணாந்து பார்த்தால்தான் அது தெரியும். யாவும் பனி மயமாயிருந்தது. வெடிப்புக்கள் பச்சை மரகதமாகப் பிரகாசித்தன.

கௌதமன் முன்னேற முயன்றான். மலை இன்னும் தொலைவிலேயே இருந்தது. தைரியமிழந்தும் சோர்ந்தும் தரையில் உட்கார்ந்தான். கிழவனின் ஏமாற்று வித்தையா இது? படுகள்ளன்!

புயலடித்தது. பயந்து குனிந்தான். மறைந்துகொள்ள ஓரிடமும் இல்லை. பனி, சண்பகமலர்போலக் கொட்டவாரம்பித்தது. மாங்காயளவு ஆலங்கட்டிகள் விழுந்தன.

கௌதமன் பின்புறமாகத் திரும்பித் தரையில் குப்புறப்படுத்தான். என் மீது கட்டிகள் நன்றாக விழட்டும் என்றான். திடுமென யாவும் மரணவமைதி அடைந்தன. அவன் எழுந்தான். மேரு அவன் முன் நின்றது. 'என்ன அற்புதம்!' என்று எண்ணினான். பின்னோக்காது கண்மூடிக்கொண்டு நடந்தான். அமைதியாக நடந்தான். பாதை மழமழவென்றிருந்தது. 'அற்புதம்!' என்றான் மீண்டும்.

கடைசியாக, களைத்து நடந்துகொண்டே தூங்கினான். கண் திறந்தான். இரவு முழுதும் தூங்கினது போலிருந்தது அவனுக்கு. அவன் முன் ஒரு கிழவன் தன் துணியைத் தைத்துக்கொண்டிருந்தான். மலையைக் காணவில்லை.

அக்கிழவனை உற்றுநோக்கினான். மலைக் கிழவனே அவன்!

'என்ன கௌதமா?'

'என்னை அறிவீரோ?'

'உன்னைப் பல்லாயிரம் ஆண்டுகளாக அறிவேன்! ஆனால் பெயரால் மட்டுமே. நீ என்பால் வருவதேன்?'

'சாவை வெல்லுவது எங்ஙனம் என்று கேட்டு அறிய விரும்புகிறேன்.'

கிழவன் புன்னகை புரிந்தான். 'பொன்னாசை உன்னை விட்டதோ?'

'ஆகா.'

'புகழாசை விட்டதோ?'

'ஆகா.'

'பெண்ணாசை விட்டதோ?'

'ஆகா.'

'பொன்னாசை விட்டது எதன் மூலம்?'

'ஐயத்தின் மூலம்.'

'புகழாசை விட்டது எதன் மூலம்?'

'ஐயத்தின் மூலம்.'

'விவரமாகச் சொல்லு.'

கௌதமன் தன் கதையை மீண்டும் சொன்னான். அது முடிந்ததும் கிழவன் தலையசைத்துச் சொன்னான்:

'மகனே! பொன்னாசை, புகழாசை, பெண்ணாசை வென்றாய். உயிரையும் வென்றாயோ? அதை வெல்லாமல் நீ சாவை வெல்ல முடியாது.'

'உயிரை வெல்ல வேண்டும் என்பது எனக்குத் தெரியாது. உயிர்—வாழ்க்கை என்றால் என்ன என்பதை எனக்குச் சொல்லுங்கள் தந்தையாரே, அதற்கு வழி காட்டும். அதையும் வெல்ல விரும்புவேன்.'

'நீ வாழ்வு.'

'நான் என்ன, தந்தையாரே?'

'நீ உன் மீது வைத்துள்ள ஆசை, காதல். சாவை வெல்லு முன் அதை வெல்ல வேண்டும்.'

'நல்லது, தந்தையாரே, எனக்குச் சொல்லிக்கொடும். நான் தயார்.'

கிழவன் மேலும் சிரித்தான். 'மகனே, நீ செயல்கள் பல செய்திருக்கிறாய். உயர்ந்த செய்கையானது, செய்வதல்ல, செய்யாமலிருப்பதேயாம்.'

'நான் இன்னும் யாவற்றினின்றும் விலகிவிடவில்லையா, என் தந்தையே. அப்படியானால் அதையும் கற்றுக்கொடும்.'

கிழவன் அவனுக்கு மையிருள் போன்று கறுத்திருந்த மூன்று புறாக்களைத் தந்தான். அவற்றில் ஓர் இறகுகூட வெண்மையாயில்லை.

'நாளை வந்து இவற்றில் நீ காண்பதைக் கூறு.'

கௌதமன் மூன்று புறாக்களையும் எடுத்துச் சென்றான். 'இவை மையிருள் போலக் கறுத்துள்ளன. ஓர் இறகுகூட வெளுப்பாயில்லையே. இவற்றுடன் என்ன செய்வது?' என்று எண்ணினான்.

அடுத்த நாள் காலை கிழவனிடம் சென்றபோது அவன், 'அவற்றில் நீ ஏதாவது பார்த்தாயா, மகனே?' என்று கேட்டான்.

'ஒவ்வொன்றிலும் ஒரு வெண்மையான இறகு காண்கிறது.'

சாது, 'மகனே, தைரியமாயிரு. நீ சாவை வெல்வாய். இதுவே அடையாளம். ஒவ்வொரு நாளும், இவை ஒவ்வொன்றும் ஒரு புதிய வெண்மையான இறகு உடையதாக மாறும். கடைசி கறுப்பு இறகு மறைந்துவிடும் வரையில் பொறுமையுடன் காத்திரு. பிறகு இம்மூன்றையும் நீ உண்ண வேண்டும். அதைச் செய்து முடித்ததும் நீ என்னிடம் மீண்டும் வா. நீ சாவை எங்ஙனம் வெல்லலாம் என்பதைக் கூறுகிறேன்.'

இது எளிய காரியமாகவே கௌதமனுக்குப் பட்டது. தென்புடன் விடை பெற்றுச் சென்றான். நாளுக்குப் பின் நாளாக, மாதத்திற்குப் பின் மாதமாக, வருஷத்திற்குப் பின் வருஷமாகக் காத்திருந்து ஒவ்வொரு வெண்மையான இறகையும் எண்ணினான். ஒவ்வொரு நாளும் முன்னேற்றம் காணவே, அவன் அமைதியுற்றிருந்தான்; திருப்தியுடனிருந்தான்; விருப்பற்றுக் கிடந்தான். ஆகா! கடைசி கறுப்பு இறகும் போய்விடலாகாதா? என்று முதலில் எண்ணினான். ஆனால் மூன்றாண்டுகள் காத்திருந்த அவனுக்கு அந்த எண்ணம் பிறகு தோன்றவில்லை. ஆகவே விருப்பற்று இருந்தான்.

ஆறு வருஷங்கள் உருண்டோடின. ஏழாவது வந்தது. அநேகமாக கறுப்பு இறகுகள் யாவும் போய்விட்டன. மூன்று புறாக்களும் தினந்தோறும் மேன்மேலும் அழகுடன் பளபளத்த வெண் இறகுகளுடன் விளங்கின. அவை யாவும் சண்டையிடாமல் அமர்ந்து ஒன்றுக்கொன்று கூவிக்

அலகினால் கொத்திக்கொண்டன. கரகரப்பாகக் கத்தின. அவை இப்போது அற்புதமாகப் பாடின. கௌதமன் பகலெல்லாம் அவற்றை உற்று நோக்கிக் கவனித்து வந்தான்.

கடைசி கறுப்பு இறகு மறையும் நாள் வந்தது. கௌதமன் எண்ணினான்: 'நான் இங்கே வந்தது சாவை வெல்ல; இவ்வுயிர்களை அபகரிக்கவல்ல. நான் சமதையுடனிருப்பது நலமன்றோ? சாவையும் வாழ்வாகவும், வாழ்வையும் சாவாகவும் பாவிப்பது நல்லதல்லவா? நான் ஏன் முயல வேண்டும்? இச்சைப்படுவதில் சளைத்தேன்.'

ஆகவே, கூண்டைத் திறந்தான். மூன்று புறாக்களும் சிறகடித்து அவனை மூன்று தடவை சுற்றி வந்தன. பின்னர், நேராக உயரப் பறந்தன. சிறு புள்கள் போலத் தோன்றும் வரையில் உயரப் பறந்தன. மேலும் உயரப் பறந்து நீலவானில் மறைந்தன.

'நான் மலைக்கிழவனிடம் சென்று இதைச் சொல்வேன்' என்று நினைத்தான் கௌதமன். அவ்வண்ணமே மலைக் கிழவன் இருந்தவிடம் சென்றான். மலைக்கிழவன் அங்கே காணப்படவில்லை. அவன் முன் பளிங்கு போன்று தெளிந்த, அமைதியான ஏரியொன்றே காணப்பட்டது. அதன் நடுவே நாரையொன்று நீந்தியது. அது அசையாமல் அமர்ந்திருந்தது. தலையை இறக்கைக்குள் புதைத்திருந்தது.

கௌதமன் அமைதியாக நீரின் விளிம்பு சென்று நாரையை நோக்கினான். ஏரியின் அடி வரையில் நோக்கினான். அங்கே பல நிறக் கூழாங் கற்களும், வெண்மையான மணலும் காணப்பட்டன. அங்கே மீன்கள் துள்ளியோடின. அவன் மனத்தில் அதிசய அமைதி நிறைந்திருந்தது. தன்னுள் நினைத்தான்: 'மனத்தில் அமைதி நிரம்பியிருக்க, இத் தெள்ளிய ஏரிக் கரையில் உட்கார்ந்து உறங்கும் நாரையையும், பல நிறக் கூழாங் கற்களையும், அடியில் சிறு மீன்களையும் பார்க்கும்போது, எவ்வளவு அற்புதமான அமைதி ஏற்படுகின்றது. இந்த அமைதி எவ்வளவு இனிமையாயுள்ளது.'

பகலவன் மலைவாயில் விழும் வரையில் அவன் அங்கேயே அமர்ந்திருந்தான். பிறகு எழுந்து வீடு நோக்கிச் சென்றான். சூரியனோ சந்திரனோ பிரகாசிக்காமலிருந்தும், வெளிச்சம் மட்டும் பகல் போல எங்கும் சூழ்ந்திருந்தது. அவன் எளிதில் தன் வழியைக் கண்டுபிடிக்க முடிந்தது.

அடுத்த நாள் காலை அவன் ஒரு குடிலின் முன், கிழவன் முன்னிலையில் நின்றான். கிழவன் புன்னகை புரிந்து, 'என்ன கௌதமா, சாவை வென்றாயா?' என்று கேட்டான்.

'பெரியீர், சாவை இன்னும் வெல்லவில்லை. அந்த மூன்று புறாக்களை உண்ண முடியவில்லை. சாவைப்பற்றிய கவலை ஏன் எனக்கு? சாவும் எனக்கு வாழ்வைப் போலவே உள்ளது. வாழ்வும் சாவைப் போலவே உள்ளது. வணக்கத்திற்குரிய பெரியீர், நான் அமைதியுடன் பிணக்கின்றி வாழ்கிறேன்.'

'விளக்கமாகக் கூறுவாயாக' என்றான்

திரையில் நேர்ந்த யாவற்றையும், மலைக் கிழவனோடு இருந்தபோது நேர்ந்ததையும் விரிவாகச் சொல்ல ஆரம்பித்தான். அது முடிந்ததும், கிழவன் கௌதமனை நோக்கி, 'என் மகனே, சாதுவே, நீ சாவை வென்றுவிட்டாய்!' என்றான்.

கௌதமன் மீண்டும் நாற்பாதைகள் சந்திக்குமிடம் வந்தான். வலது பக்கம் திரும்பி பெரிய ரஸ்தாவில் நுழைந்தான். மற்றொரு பக்கத்திலிருந்து, அவன் எவர்களுடன் தன் சொந்தக் கிராமத்தை விட்டு யாத்திரைக்குப் புறப்பட்டானோ, அவர்களும் வந்தனர். அதே சமயம் அவர்கள் இடது பக்கம் திரும்பி பெரிய ரஸ்தாவில் நுழைந்தனர். ஒருவரையொருவர் நெருங்கியபோது, அடையாளம் தெரியாமல், கௌதமனை அவர்கள் மரியாதையுடன் விளித்தனர். அவர்கள் அனைவரும் பைகள் வைத்திருந்தனர். அவற்றின் பளுவால் புலம்பியவண்ணம் வியர்வை விட்டனர். கௌதமன் வலது கையில் கைத்தடி தவிர, வேறொன்றையும் கொண்டு செல்லவில்லை. அவன் அமைதியாகவும், சௌக்கியமாகவும் சென்றான்.

வாசகர்களே! இக்கதையின் உட்பொருளை நன்கு கிரகித்துக்கொள்ளுங்கள். கௌதமனின் கிராமத் தோழர் வலது பக்கம் திரும்பக் கௌதமன் இடதுபக்கம் திரும்பியது, தனிமையில் அவனது விருப்பத்தைக் காட்டுகிறது. நல்லதற்கெல்லாம் வித்து அதுவே. பழம் முதிர வெப்பம் வேண்டுவதேயன்றோ? அதைப்போலவே, மனிதனிடமுள்ள நற்குணம் முதிர, தனிமை இன்றியமையாதது என்பதை அறிவீராக.

சுற்றிலும் எல்லையற்ற வெளியிடம் ஒன்றைக் கண்டானல்லவா, கௌதமன். மழ மழப்பான துணியைப்போலப் பரந்துள்ள வெளியிடம்–அது, உலக சிந்தனையினின்று விடுதலையடைவதைக் குறிக்கிறது. அவன் நடந்தபோது உடன் சென்ற நிழல் மனச் சாட்சியாகும். திறந்த வெளியில்தான் நம் நிழலின் முழு அளவையும் பார்க்க முடியும். சூரியன் எந்த நிலையில் இருந்தபோதிலும், அவ்விதமாகப் பார்க்கலாம். அதைப்போலவே, உலக சிந்தனையினின்று விடுதலையுற்றிருக்கும்போதே மனச் சாட்சியின் முழு அனுபவத்தையும் பெறுவோம். சில சமயம் நம் நிழல் பின்னே இருக்கும். சில சமயம் அது முன்னே செல்லும். அதைப்போலவே, மனச் சாட்சியும் இறந்தகால நிகழ்ச்சிகளுக்கும் வருங்கால நிகழ்ச்சிகளுக்கும் இடையே முன்னும் பின்னுமாகச் செல்லும்.

கௌதமன் கண் திறந்தபோது பார்த்த குடிலுக்கு முன்னிருந்த கிழவன், பகுத்தறிவின் குரல் ஆவான். உலகப் போக்கின் குழப்பமும், முட்டாள்தனமும் அமைதியுற்ற பின்பே அது எப்போதும் பேசும்.

கங்கை மானிடத் துயரங்களின் நதியாகும். உயர்ந்ததை நாடுவோர் அதில் சென்றாக வேண்டும், துயரங்களுக்கெல்லாம் ஆதிக்கு வரும்வரையில்.

சிவப்பு உடை காமவெழுச்சி, சிற்றின்ப உணர்ச்சியின் சின்னம்; கமண்டலம் ஆணவத்தின் சின்னம். உரத்த பேச்சும், கோபமும் பகைமையின் சின்னம். உலகக் குழப்பத்தினின்று விடுதலையை நாடுவோன் இம்மூன்றையும் அப்புறப் படுத்திவிட வேண்டும்.

தடி சரியான சிந்தனையாகும். புயல், பனிப் பருவம்–இவை மனச்சாட்சியின் குரல்கள். இவை தனிமையில் இடியின் குரலில் பேசுகின்றன. செவிடுபடும் பேராரவாரத்தைக் காதை மூடிக் கொண்டு கேட்பதைப்போல, உலகக் குழப்பத்திற்கு எதிரே காதுகளை மூடுவோன், மனச்சாட்சி இடி முழக்கம் செய்வதைக் கேட்பான்.

மேரு மலை மிகப் புனிதமானது. அதுவே நம்மை நம்மினும் மேலே உயர்த்தவல்லது. கௌதமன் அதைக் கண்டான். அது அவனைக் கண்டதும், அவன் கண் முன் வளர்ந்து உச்ச நிலை அடைந்தது. பின்போல முன்னும் பரந்து நின்றது. அதைப் பார்த்ததும், புனிதமானதாகவே அது அறியப்படுகிறது. அதையே நாம் காண்கிறோம். நம் ஆத்மீக விழிப்பின் முழுப் பரப்பையும் அது நிரப்பிவிடுகிறது. நோக்கை எப்பக்கம் திருப்பினும், அது அங்கே காணப்படுகிறது. அதனுடன் வேறொன்றும் காணப்படுவதில்லை. கௌதமன் அதைக் கண் மூடிக்கொண்டே அடைந்ததுபோல, நம்மிடமுள்ள புனிதத்தைச் செயலற்றிருப்பதன் மூலமாகவே அடைவோம்.

மலைக் கிழவன் யார்? அவன் நம்மிடம் மிகப் புனிதமாயுள்ள குரலும், அதன் பேச்சும், உண்மையும்.

மூன்று புருக்கள் ஒருவனின் சுயப்பற்றின் மூவகையுருவம். நான் என்பதன் மீதுள்ள பற்று, புறத்தேயுள்ள அகந்தையின் மீதுள்ள பகை, மதி மயக்கம் இவையே இம்மூவகையுருவம். கருப்பிலிருந்து வெளுப்புக்குப் படிப்படியாக உரு மாறுதல் யாது? இம்மூவகை உருவின் படிப்படியான மறைவேயாகும். மூவகையுருவுள்ள இந்த ஆணவம் எவனிடம் இறந்துபடுகின்றதோ, அவனிடம் இனி சாக்காடு தலைகாட்டாது. பகல் இருக்கும் வரையில்தானே இரவும் இருக்கும். அதைப் போலவே, வாழ்வு உள்ள வரையில்தான் சாவும் இருக்கும்.

பளிங்குபோன்ற மலை ஏரி, தியாகத்தின் பலன், பரிசு.

எவனிடம் மிகப் புனிதமானது விழிப்புறுகின்றதோ, அவன் உள்ளொளி பெற்றவனாவான். அவனுக்குப் புறவொளி தேவையில்லை. வீட்டுக்குத் திரும்புதலின் பொருள் யாது? மேலே எழும்பினால் மீண்டும் தரைக்கே திரும்பிவர வேண்டுமல்லவா? அதைப்போலவே, தன்னை உயர்த்திக்கொண்டவன், தன் அகந்தைக்கு மேலே கிளம்பினவன், இந்த 'நான்' என்பதற்கே திரும்பிவர வேண்டும். ஆனால், அவன் தான் எதிலிருந்து திரும்பி வருகின்றானோ, அதனின்று ஏதோ ஒன்றைக் கொண்டுவருகிறான். இதன் காரணமாகவே அவன் பிறரால் மரியாதையுடன் விளிக்கப்படுகிறான். முதலில் முட்டாள்போலக் கருதப்பட்டவன் கடைசியில் புனிதனாக, முனிவனாகக் கருதப்படுகிறான்.

★

தமாஷ் தம்பதி

★

மனைவி:—

கவர்னர் சம்பளப் போராட்டம் நடத்தப்போறதா சொல்லிக்கிறாளே! உங்க ஆபீஸிலே நீங்களெல்லாம் ஒன்றும் சம்பளப் போராட்டம் நடத்தலியா?

கணவன்:—

அவாள்ளாம் போராட்டம் நடத்தி கவர்னர் சம்பளத்தைக் குறைக்கப் போறாளாம். எங்களுக்குத்தான் போராட்டம் நடத்தாமலே சம்பளத்தைக் குறைக்கிறாங்களே!

★

சுகேசமித்திரன்



பிரமுகர் வரிசை:
டாக்டர்
கான் சாகேப்

இன்று பாகிஸ்தான் அரசியல் அரங்கில் ஆதர்ச புருஷராகக் காட்சியளிப்பவர் டாக்டர் கான் சாகேப். தன் சுதந்திரத்தையும், எதிர்கால வாழ்வையும் பணயம் வைத்து இவர் போராட்டத்தில் இறங்கியிருக்கிறார். வகுப்புவாதிகளின் இரும்புப் பிடியைத் தகர்க்க, இவரது புதிய கட்சியும் உதயமாகிவிட்டது. லீகர்கள்கூட அதில் போட்டியிட்டுக் கொண்டு சேருகின்றனர்.

ஜனங்களின் பூரண அபிமானத்தை ஆகர்ஷிக்கின்றது இவரது பூர்வாச்ரமம். 1882–ல் பட்டாணியர் குடியிலுதித்து, லண்டனில் வைத்தியப் பட்டம் பெற்று, ஆங்கில மாதை மனைவியாக வரித்து, சர்க்கார் உத்தியோகமும் வகித்தவர் தான். ஆனால், சகோதரர் எல்லை காந்தியுடன் சுதந்திரப் போரில் குதித்த பிறகே, 'கான் சகோதரர்கள்' பாரதமெங்கும் புகழ் பெற்றனர்.

இரு முறை எல்லை மாகாணப் பிரதமராயிருந்த கான் சாகேப், அடிமை ஊழியத்தை ஒழித்து, தொழிலபிவிருத்திக்கும் அடிகோலினார். முல்லாக்கள் எதிர்ப்பினிடையே, தம் மகளை கிறிஸ்தவருக்கு மணம் செய்வித்தார். மருந்துக்குக்கூட வகுப்புவாதக் கலப்பில்லாத இவரை 'சுதந்திர பாகிஸ்தான்' சகிக்க முடியுமா? மீண்டும் பல்லாண்டுகள் சிறை வாசம் சம்பவித்தது!

புதிய சக்திகள் தலையெடுத்து இவரை விடுவித்தன. பதவி ஆசை காட்டி வகுப்புவாதியாக்க முயற்சித்தன; பலிக்கவில்லை. இறுதியில் கான் சாகேப் பாக். சர்க்கார் மந்திரியாகி, மேல் பாக். பிரதமரானார். சர்க்காருடன் இங்ஙனம் ஒத்துழைக்க விரும்பவில்லை, எல்லை காந்தி. சகோதரர்களிடையே கருத்து வேற்றுமையென பகைவர் கொக்கரித்தனர்.

ஆனால், அபிப்பிராயபேதம், நடைமுறை பற்றித்தான்; லட்சியத்தில் அல்ல என்பதைச் சம்பவங்கள் நிரூபித்து விட்டன. 'நாணயஸ்தன்; பாமரரின் நேசன்' என்ற பெயரை நிலைநாட்ட டாக்டருக்குச் சந்தர்ப்பம் கிட்டுமா, கிட்டாதா? பாக். அரசியலில் எதுதான் நிச்சயம்!

★ தொடர் கதை ★

திரிவேணி

ஹேமா ஆனந்ததீர்த்தன்

கடற் கரை மணலில் உட்கார்ந்து ராஜுவும் சேகரும் நேரம் போவதே தெரியாமல் பேசினர். இரண்டு பாக்கெட் சிகரெட்டுகள் காலியானபோதிலும் அவர்கள் பேச்சு ஓயவில்லை.

சேகரன் தன் பிரதாபங்களையெல்லாம் அவனிடம் அளந்து கொட்டினான். அது வரையில் அவன் உறவாடிய பலவகைப் பெண்களைப்பற்றியெல்லாம் கதை கதையாகச் சொன்னதை, வாயில் ஈ நுழைந்து தெரியாதபடி ராஜு கேட்டுக்கொண்டிருந்தான்.

கடைசியாக சேகரனேதான் அவனை அங்கிருந்து கிளப்பவேண்டியிருந்தது. "எழுந்திரு. மணி ஒன்பதரையாகப் போகிறது. அப்புறம் லீலாவினிடம் உனக்கு உதை விழும்" என்று கிண்டலாகக் கூறிச் சிரித்தான் சேகரன். இருவரும் எழுந்து நின்று உடையிலும் கை கால்களிலும் ஒட்டிக்கொண்டிருந்த மணலைத் தட்டி விட்டுக்கொண்டனர்.

"அப்படியானால் நாளைக்கு பெங்களூருக்குப் புறப்படுவது நிச்சயம்தானா?" என்று சேகரன் கேட்டான்.

"தாராளமாக. இன்றைக்கே வேண்டுமானாலும் நான் புறப்படத் தயார்."

"அடேயப்பா! அவ்வளவு தூரத்துக்கு ஆள் முன்னேறிவிட்டாயா? அப்போ தேவலையே...ஆமாம் வீட்டில் என்ன சொல்லப்போறே?"

"காலேஜ் நண்பர்கள் நாலு பேர் சேர்ந்து 'பிக்னிக்' போவதாகச் சொல்லி விடுகிறேன்."

"பலே. சரியான யோசனை!"

இருவரும் சென்று காரில் அமர்ந்ததும் சேகரன், "எங்கே?" என்று ராஜுவைக் கேட்டான்.

"எங்கே என்றால்? வீட்டுக்குத்தான்."

"இவ்வளவு நேரத்திற்குப் பிறகு வீட்டுக்குப் போய் சாப்பிடப் போகிறாயா?"

"ஆமாம். லீலா சாப்பாட்டை வைத்துக் கொண்டு எனக்காகக் காத்திருப்பாள்."

"ச்சொ...ஊம்...சரி அப்படியானால்" என்று அசுவாரஸ்யமாகச் சொல்லிக் கொண்டே சேகரன் காரை ஸ்டார்ட் செய்தான்.

"ஏன், என்ன?"

"மணி ஒன்பதரைக்கு மேல் ஆய்விட்டதே. இங்கே புஹாரியில் சாப்பிட்டு விட்டுப் போய்விடலாமே என்று யோசித்தேன்" என்று சேகரன் இழுத்தான்.

"சரி அப்படியே செய்வோம். அதனால் என்ன?" என்று ராஜு ஒத்துக்கொண்டான்.

கார் மௌண்ட் ரோடை நோக்கிப் பறந்தது.

புஹாரியை விட்டு அவர்கள் வெளியே வந்தபோது மணி பத்தேகால்.

"உன்னை வீட்டிலே கொண்டுபோய் விட்டு விட்டு நான் வீட்டுக்குப் போகிறேன் வா" என்று ராஜுவை அழைத்துக் கொண்டே சேகரன் காரில் ஏறினான்.

ராஜுவின் வீட்டுக்குப் பத்து வீடு தள்ளியே சேகரன் காரை நிறுத்தினான். இது கொஞ்ச நாட்களாகவே ராஜுவும் சேகரனும் முன்னெச்சரிக்கைக்காக செய்துகொண்ட ஏற்பாடு. ராஜு சேகரனுடன் சுற்றுவது லீலாவுக்குத் தெரிந்து விடக்கூடாது என்பதற்காக.

"அப்போ நான் வரட்டுமா? நீ நாளைக்கு ஸ்டேஷனுக்கே வந்து விடுகிறாயா?" என்று சேகரன் கேட்டான்.

"ஓ. கே." அவனிடம் விடைபெற்றுக் கொண்டு ராஜு வீட்டை நோக்கி நடந்தான்.

வீட்டு வாசலில் லீலா நின்றுகொண்டிருந்தாள்!

அவளைக் கண்டதும் ராஜுவின் இதயம் ஏனோ படபடவென்று அடித்துக் கொண்டது. போலீஸ் அதிகாரியைக் கண்டு நடுங்கும் குற்றவாளிபோல் அவன் உள்ளம் அஞ்சியது. குற்றமுள்ள அவன் நெஞ்சு அவனைக் குத்தியது.

லீலாவைப் பார்த்து முறுவலித்துக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தான் ராஜு. ஆனால் லீலாவின் முகம் கம்பீரமாக இருந்தது. அவள் பதிலுக்குச் சிரிக்கவில்லை. ராஜு உள்ளே போன பிறகு தெருக் கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டுவிட்டு உள்ளே வந்தாள்.

லீலா கோபமாக இருக்கிறாள் என்பதை ராஜு ஊகித்துக்கொண்டான். அவளை எப்படி சமாளிப்பது என்பதைப் பற்றி அவனுக்குக் கவலை ஏற்பட்டது. அவன் மூளை தீவிரமாக வேலை செய்து கொண்டிருந்தது. உடை மாற்றிக் கொண்டு கட்டிலில் படுக்கையின் மீது சாய்ந்தபடி உட்கார்ந்துகொண்டான்.

உள்ளே வந்த லீலா பேசாமல் சமையலறைக்குச் சென்று மனை போட்டு, வட்டிலும் கூஜாவில் தண்ணீரும் எடுத்து வைத்துவிட்டு ராஜுவுக்காகக் காத்து நின்றாள்.

ராஜுவுக்கு இப்பொழுது பெரிய சங்கடமாகப் போய்விட்டது. சாப்பாடு வேண்டாமென்பதற்கு அவளிடம் ஏதாவது காரணத்தைச் சொல்லியாக வேண்டும். புஹாரியில் சாப்பிட்டுவிட்டு வந்ததாக அவளிடம் சொல்ல முடியுமா? பேசாமல் ஒரு வாய் சாப்பிட்டுவிடலாமென்றாலோ, ஹோட்டலில் எதுக்கி ஏப்பம் வரும் வரையில் வயிறு புடைக்கத் தின்றிருந்தான். பசி இல்லை யென்று சொன்னாலும் லீலா ஒத்துக் கொள்ள மாட்டாள். வயிறு சரியாக இல்லையோ என்று வைத்தியத்துக்கு ஆரம்பித்து விடுவாள். என்ன செய்வது?

எப்படியோ தைரியத்தை வரவழைத்துக்கொண்டான். "லீலா, எனக்கு சாப்பாடு வேண்டாம். நீ சாப்பிடு" என்றான்.

லீலா வெளியே வந்தாள்.

"ஏன்?"

"நான் சாப்பிட்டுவிட்டேன்."

"எங்கே?"

"ஒரு நண்பன் வீட்டில்."

"யார் அந்த நண்பன்?"

"உனக்கு அவனைத் தெரியாது லீலா."

"ஏன் தெரியாது? நன்றாகத் தெரியும். உன்னைக் கொண்டுவந்து காரில் இறக்கி விட்டு விட்டுப் போனானே அவன்தானே!"

ராஜுவின் முகம் களையிழந்தது. சேகரனுடன் அவன் வந்ததை லீலா பார்த்து விட்டிருக்கிறாள். இனி அதை மறைப்பதில் பயனில்லை. அவன் மூளை வேகமாக வேலை செய்ய ஆரம்பித்தது.

"இல்லையே. அது சேகரன் கார். பஸ் ஸ்டாண்டில் அகஸ்மாத்தாக என்னைச் சந்தித்தான். காரில் வரும்படி கட்டாயப் படுத்தினான். முடியாது என்று கண்டிப்பாகச் சொன்னால் ஏதாவது தப்பாக நினைத்துக் கொள்ளப்போகிறானே என்று ஏறிக்கொண்டு வந்தேன்."

"இது நிஜம்தானா ராஜு?"

"ஆம் லீலா."

"அப்படியானால் திருட்டுத்தனமாக பத்து வீடுகள் தள்ளியே ஏன் இறங்கி

கொள்ள வேண்டும்! வீட்டு வாசலில் வந்து இறங்குவதற்கு என்ன?"

"உனக்குத்தான் அவனைக் கண்டால் பிடிக்கவில்லையே! ஏன் உன் மனத்தை அநாவசியமாகப் புண்படுத்த வேண்டும் என்றுதான் அப்படிச் செய்தேன்."

"இப்பொழுது நீ செய்யும் காரியங்கள் என் மனத்திற்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்று நினைத்துக்கொண்டிருக்கிறாயா?"

"நான் அப்படி என்ன செய்துவிட்டேன் இப்போ?"

"உன் மனத்தைத் தொட்டுப் பார்த்துச் சொல். நீ செய்வதெல்லாம் நியாயமா என்று உன் மனச்சாட்சியைக் கேட்டுப் பார் ராஜு!"

ராஜுவால் பதில் சொல்ல முடியவில்லை. தன் அறைக்குச் சென்று கட்டிலின் மீது அமர்ந்தான். லீலா அவனைப் பின்தொடர்ந்து வந்து கட்டிலின் மீது அவன் கால்மாட்டில் அமர்ந்துகொண்டாள்.

சிறிது நேரம் இருவரிடையேயும் மௌனம் நிலவியது. ராஜுவின் உள்ளத்திலே பெரும் போராட்டம் நடந்துகொண்டிருந்தது. லீலா அவன் எதிரே உட்கார்ந்திருப்பது அவனுக்கு இன்னும் அதிக வேதனையைத் தந்தது.

"லீலா, நீ போய்ச் சாப்பிடு" என்றான்.

"நான் இன்றைக்கு இதற்கு ஒரு முடிவு கட்டாமல் சாப்பிடப்போவதில்லை, ராஜு" என்றாள்.

"நீ இந்த மாதிரி சிறு விஷயங்களையெல்லாம் என்னைக் கண்டிப்பது எனக்குக் கஷ்டமாக இருக்கிறது லீலா."

"இது சிறு விஷயமல்ல ராஜு. என்னிடம் உண்மையை மறைக்காதே. சிறிய

விஷயத்திலிருந்து பெரிய விஷயத்திற்குப் போவதற்கு வெகு நாளாகாது."

"நீ இன்றைக்கு என்னோடு சண்டை பிடிப்பதற்குத் தயாராகக் காத்துக் கொண்டிருக்கிறாய் போலிருக்கிறது."

"நல்ல வார்த்தையில் சொல்லிப் பார்த்தாயிற்று. பலனில்லை. சண்டை பிடிக்க வேண்டியதுதானே?"

"என்ன அப்படி நான் உன் வார்த்தையைக் கேட்காமல் போனது?"

"சேகருடன் சேராதே என்று நான் சொல்லவில்லையா?"

"அப்போதே நான் அவனுடன் சேருவதை விட்டு விட்டேனே? இன்று அகஸ்மாத்தாக மாட்டிக்கொண்டுவிட்டேன் என்று சொல்லவில்லையா?"

"அது பொய்"

"உனக்கு ரொம்பத் தெரியுமாக்கும்!"

"கண்டிப்பாகத் தெரியும். உன்னையும் சேகரையும் சேர்ந்தாப்போல் பல இடங்களில் பல நிலைகளில் பார்த்தவர்கள் இருக்கிறார்கள்."

"யார் அது அப்படி உனக்காக உளவு பார்ப்பவர்கள்?"

"யாராயிருந்தால் என்ன? உண்மையா, இல்லையா? அதைச்சொல்."

ராஜு மாட்டிக்கொண்டான். அவளுக்கு என்ன பதில் சொல்லித் தப்பித்துக் கொள்வதென்று அவனுக்குத் தெரியவில்லை.

"யார் எங்களைப் பார்த்தவர்கள் என்பதைச் சொல். பிறகு நான் அது உண்மையா இல்லையா என்பதைச் சொல்லுகிறேன்". என்றான்.

"கமலாதேவிதான் சொன்னாள்."

"அவள் சொல்வதை நீ நம்புகிறாய்! என் வார்த்தையில் உனக்கு நம்பிக்கை இல்லை?"

"கமலாதேவி பொய் சொல்லமாட்டாள். அதுவும் உன் விஷயத்தில் அவளுக்கு சிரத்தை அதிகம். நீ இப்படி கெட்டுப் போவதைப்பற்றி என்னிடம் எவ்வளவு வருத்தப்பட்டுக்கொண்டாள் தெரியுமா?"

"என்பேரில் அவளுக்கென்ன அவ்வளவு கர்ம சிரத்தை?"

"எனக்கு வேண்டியவர்களெல்லாம் அவளுக்கும் வேண்டியவர்களே. இது வரையில் உன் படிப்புக்காகவும், மற்ற செலவுகளுக்காகவும் கிட்டத்தட்ட ஆயிரத்தைந்நூறு ரூபாய் வரையில் கைக்கடன் கொடுத்திருக்கிறாள். பத்திரம் கிடையாது, ஸ்டாம்பு கிடையாது. அவள் புருஷனுக்கும் தெரியாது. பத்மாவுக்குக்கூடத் தெரியாது.

இதைக் கேட்டதும் ராஜு வாஸ்தவத்திலேயே திகைத்துப்போய்விட்டான்.

லீலா தனக்காக ஆயிரத்தைந்நூறு ரூபாய் வரையில் கடன்பட்டிருக்கிறாள்! அவன் உள்ளத்தில் ஊற்றெடுத்த நன்றி உணர்ச்சி ஒரு கணம் அவனை ஆட்டுவித்தது. தனக்கு வேண்டும்பொழுதெல்லாம் வேண்டிய பணத்தை அவள் கொடுத்து

வந்ததன் ரகஸ்யம் இப்போதுதான் அவனுக்குப் புரிந்தது.

"நான் ஊரிலுள்ள என் வீட்டின்பேரில் கடன் வாங்கி இந்தக் கடனை அடைத்துவிடுகிறேன் லீலா" என்றான்.

"அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. கடன் வாங்கும்பொழுது உன்னைக் கேட்டுக்கொண்டு நான் வாங்கவில்லை. அதை அடைத்துக்கொள்ள எனக்குத் தெரியும். நீ கமலாதேவியைப்பற்றிய பேச்சை எடுக்காவிட்டால் நான் இதைச் சொல்லியே இருக்கமாட்டேன்...சரி, அந்தப் பேச்செல்லாம் இப்போது வேண்டாம். சேகரின் சிநேகத்தை நீ விடவில்லையென்பது உண்மைதானே?"

"உண்மையாகவே இருக்கட்டும். அதனால் என்ன லீலா? அவன் கெட்டவனாக இருந்தால் இருந்துவிட்டுப் போகிறான். அவனோடு சேர்ந்தால் நானும் கெட்டுப் போகவேண்டுமென்பது கட்டாயம் இல்லையே! என்னால் அவன் திருந்தக் கூடாதா?"

லீலா இதைக் கேட்டுச் சிரித்தாள். அதில்தான் எத்தனை வேதனை கலந்திருந்தது! "ராஜு, நீ சொல்வதை நம்புவதற்கு நான் இன்னும் அவ்வளவு முட்டாளாகி விடவில்லை. ஊசி வாழையிலையில் பட்டாலும், வாழையிலை ஊசியில் பட்டாலும் கிழிவது வாழையிலைதானே ஒழிய ஊசி உடையாது ராஜு. சேகரன் உன்னைப் படுகுழியில் தள்ளிவிடுவது நிச்சயம். நீயும் இப்பொழுது அதற்குத் தயாராகவே இருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும்!"

"லீலா!"

"ஆம், ராஜு. சும்மா பதட்டம் அடைவதுபோல் பாசாங்கு செய்யாதே. ஆண்களின் மனநிலையை நான் அறிய மாட்டேன் என்று நினைக்காதே. பத்மாவைப் பற்றி இப்போதெல்லாம் நீ கொஞ்சமாவது கவலைப்படுகிறாயா?"

"கவலைப்பட்டு என்ன பிரயோஜனம் லீலா?"

"ஆம். அவளால் உனக்கு இனி ஒன்றும் பிரயோஜனமில்லை என்பதை நீ தீர்மானம் செய்துகொண்டுவிட்டாய். அதனால்தான் அவளிடம் கிடைக்காத சுகம் வேறெங்கே கிடைக்கும் என்று அலைய ஆரம்பித்துவிட்டாய். நன்றி கெட்டவர்கள்தானே ஆண் வர்க்கமே."

"லீலா, நீ என்னென்னமோ கற்பனை செய்துகொண்டு வீணாக உன் மனத்தை அலட்டிக்கொள்ளுகிறாய்" என்று சொன்னானே தவிர, லீலா தன் உள்ளத்திலிருந்த அழுக்கைப் புரிந்துகொண்டுவிட்டாள் என்ற எண்ணம் அவனை வாட்டின.

"வேண்டாம் ராஜு. என்னையும் ஏமாற்றப் பார்க்காதே. உன் முகத்தைப் பார்த்தே உன் அந்தரங்கத்தைப் புரிந்துகொள்ளும் அளவுக்கு உன்னுடன் நான் பழகிவிட்டேன். ஒரு மாசமாகவே நீ பழைய ராஜு அல்ல. என்றைக்கோ நீ தவறான பாதையில் போயிருக்க வேண்டியவன். என்மேலுள்ள ஒரு பாசத்தால் இவ்வளவு நாளும் அப்படிப் போகாமல் இருந்தாய். இப்பொழுது உன்னையும் மீறி நீ துணிந்துவிட்டாய். உண்டா இல்லையா?"

ராஜு பதில் பேசாமல் தலை குனிந்துகொண்டான். அவன் உள்ளம் உணர்ச்சிப் பிழம்பாக மாறியிருந்தது. லீலாவின் ஒவ்வொரு வார்த்தையும் அவன் உள்ளத்தைக் குத்திக் கிளறிக்கொண்டிருந்தது.

"ராஜு, நான் கேட்கிறேன். இன்றைக்கு நீயும் சேகரனும் எங்கெங்கே போனீர்கள்; என்னென்ன பேசிக்கொண்டீர்கள் எல்லாவற்றையும் நீ சொல்லத்தான் வேண்டும்."

ராஜு தலை நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அப்பப்பா! அவனால் அவள் முகத்தை ஏறெடுத்துப் பார்க்க முடியவில்லை. மீண்டும் தலை குனிந்துகொண்டான்.

"வேண்டாம் லீலா. அதை மாத்திரம் கேட்காதே. விட்டுவிடு. நீ நினைத்துக்கொண்டிருப்பதுபோல் நான் இன்னும் அவ்வளவு தூரத்திற்குப் போய்விடவில்லை. இதுவரையில் நான் பரிசுத்தமாகவே இருக்கிறேன்."

"இனிமேல்?"

"இதுவெல்லாம் என்ன பேச்சு லீலா? இனி நடக்கப்போவதைப் பற்றி யார் என்ன சொல்ல முடியும்?"

"இப்படிக்கூட நீ பேசுவாயென்று நான் எதிர்பார்க்கவே இல்லை ராஜு. உன் உள்ளம் இவ்வளவு கொடுமையானதா? நீங்கள் இருவரும் சந்தோஷமாக வாழ வேண்டுமென்பதற்காக நான் பட்ட கஷ்டமெல்லாம் இப்படியா போக வேண்டும்? பத்மா இதை அறிந்தால் எப்படிப் பொறுப்பாள்? நீ இவ்வளவு தூரம் உன் மனத்தை

அலையவிடுவதற்கு இப்பொழுது என்ன நடந்துவிட்டது? பத்மா செத்துப்போய்விட்டாளா? அல்லது நிரந்தரமாக உபயோகமற்றுப் போய்விட்டாளா? ஆறு மாசம்; மீறிப்போனால் ஒரு வருஷம். பிறகு குணமடைந்து வந்துவிடமாட்டாளா? அதுவரையில் உன்னால் பொறுத்துக்கொள்ள முடியாதா?"

ராஜு ஏதாவது பதில் சொல்லுவானே என்று ஒரு விநாடி அவள் தயங்கினாள். ஆனால் ராஜு குனிந்த தலையை நிமிர்த்தவும் இல்லை. வாய் திறந்து ஒரு வார்த்தையும் சொல்லவில்லை.

"என்ன ராஜு? ஏன் பேசமாட்டேனென்கிறாய்?"

"என்ன பேசச் சொல்லுகிறாய் லீலா. பத்மாவினால் எனக்கு இனி வாழ்க்கையில் சுகம் கிடைக்குமென்று நான் நம்பவில்லை. அதுதான் இரண்டு முறை பார்த்தாயிற்றே. முதல் முறை என் தாயார் போனாள். இரண்டாவது முறை உன் புருஷர். பிறகு அவளே படுத்துக்கொண்டுவிட்டாள். இனி எந்தக் காலத்திற்கு அவள் உடம்பு குணமாகி மீண்டும் பழையபடி வரப்போகிறாள்?"

"அதற்காக?"

"நான் எவ்வளவு நாள் இப்படியே இருக்க முடியும் லீலா? நானும் மனிதன் தானே? எவ்வளவு நாள்தான் நான் பொறுத்துக்கொள்வேன்?"

"ராஜு! நீயா இப்படிப் பேசுகிறாய்? சேகரன் உறவு உன்னை இவ்வளவு தூரத்திற்குக் கொண்டுபோய்விட்டதா? இந்த அல்ப திருப்திக்காக பத்மாவின் எதிர்கால வாழ்வையே பாழ்படுத்தப் போகிறாயா?" என்று கண்களில் நீர் பெருக்கினாள் லீலா.

ராஜு கட்டிலினின்றும் எழுந்திருந்தான். அவன் உடலில் எங்கிருந்தோ ஒரு வேகம் வந்து புகுந்துகொண்டது. மாலையிலெல்லாம் சேகரனுடன் சேர்ந்து பேசித் திட்டம் போட்டுக்கொண்டு வந்ததெல்லாம் லீலாவின் பேச்சினால் தவிடு பொடியாகிக்கொண்டிருந்தன. லீலாவின் பேச்சை ஒதுக்கவும் முடியவில்லை; ஏற்றுக்கொள்ளவும் அவன் உஷ்ணமடைந்த ரத்தம் மறுத்தது. வீட்டைவிட்டு வெளியே சென்றால்தான் அவன் மனத்திற்கு நிம்மதி கிடைக்கும்போல் தோன்றியது.

சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டான்.

"ராஜு, எங்கே போகிறாய்?"

"நான் எங்கோ போகிறேன். என் இஷ்டம். என்னைத் தடுக்காதே. நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன். இதையெல்லாம் நீ கேட்க வேண்டிய தேவை இல்லை" என்று வெளியே செல்லக் காலடி எடுத்து வைத்தான்.

லீலா அவனுக்குக் குறுக்கே வந்து நின்றுகொண்டாள்.

"ராஜு, நீ போகக்கூடாது."

"நான் போகத்தான் போவேன். விடு என்னை" என்று லீலாவைப் பிடித்துத் தள்ளிவிட்டு ராஜு தடதடவென்று படிகளில் இறங்கி தெருவை அடைந்துவிட்டான்.

"ராஜு, என் மீது ஆணை. இனி ஒரு அடிகூட நீ முன்னால் எடுத்துவைக்காதே. பேசாமல் உள்ளே வா."

ராஜு மகுடியில் கட்டுண்ட நாகம் போல் ஆனான். அவனை அறியாமலே அவன் கால்கள் வீட்டுக்குள் அடி எடுத்து வைத்தன.

"லீலா, உன் மீது ஆணை வைத்து என்னை மடக்கிவிட்டாய். சந்தோஷம். நானும் சொல்லுகிறேன். என் மீது ஆணை. நீ மறுபடியும் இந்த விஷயத்தைப்பற்றி என்னோடு பேசக்கூடாது."

"இல்லை."

ராஜு உள்ளே சென்று கட்டிலில் படுத்துக்கொண்டான்.

லீலா பொங்கி வரும் அழுகையை அடக்கமாட்டாமல் விம்மிக்கொண்டே தன் அறையை அடைந்து 'பொத்'தென்று படுக்கையில் விழுந்தாள்.

அன்று இரவு ஒருவரோடொருவர் மறுபடி பேசவில்லை. ஆனால் இருவர் உள்ளமும் பெரும் போராட்டத்தில் மூழ்கி நிம்மதியற்றுத் தவித்தன.

லீலா வெகு நேரம் அழுதுகொண்டே இருந்தாள். கண்ணீரால் தலையணையெல்லாம் ஈரமாகிக்கொண்டிருந்தது. எவ்வளவு அழுதாலும் துக்கம் மேலும் மேலும் பெருகிக் கொண்டிருந்ததே ஒழிய, குறையவில்லை.

ராஜுவைத் தவறான பாதையிலிருந்து விலக்குவது இனி அசாத்தியம் என்று அவளுக்குப்பட்டது. "என் மீது ஆணை, இனி இதுபற்றிப் பேசாதே" என்று வேறு சொல்லிவிட்டான். எந்த விஷயத்திலும் அவன் அவள் வார்த்தையை இதுவரை மீறி நடந்ததில்லை.

அதை நினைத்தபோது அவளுக்கு அவன் மீது அனுதாபம் பெருகியது. "பாவம் ராஜு! அவன் நிலையில் இன்னொருவன் இருந்தால் என்றோ கெட்டுக் குட்டிச்சுவராகி இருப்பான்" என்று நினைத்தாள்.

பத்மாவின் துரதிர்ஷ்டம் அவள் இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது. அவள் வாழ்வு மலர வேண்டுமென்பதற்காகத் தான் பட்ட பாடெல்லாம் கடைசியில் விழலுக்கிறைத்த நீர்போல் ஆகிவிடும் போலிருக்கிறதே என்பதை நினைத்தபோது லீலாவுக்கு நெஞ்சத்தின் சுமை அதிகரித்தது. கண்களை மூடினால் பயங்கரமான எண்ணங்களும் காட்சிகளும் அவள் மனக்கண் முன் நர்த்தனமாடத் தொடங்கின.

"ஓ" என்று கத்த வேண்டும்போல இருந்தது லீலாவுக்கு. படுக்கை கொள்ளவில்லை. எழுந்து உட்கார்ந்தாள். ஓடிப்போய் ராஜுவின் கால்களில் விழுந்து கதறலாமா என்று நினைத்தாள். ஆனால் மறுபடியும் அவனிடம் சென்று பேச அவளுக்குத் தைரியம் வரவில்லை.

சேகரனின் மீது அவளுக்கு அடங்காத ஆத்திரம் எழுந்தது. ஆனால் அவளால் என்ன செய்ய முடியும்? மேலும், முழுக் குற்றத்தையும் அவன் பேரிலேயே போட முடியுமா? ராஜுவும் மன உறுதி இல்லாதவனாக இருப்பதுதானே இவ்வளவுக்கும் காரணம்!

அன்று மாலை கமலாதேவியுடன் அவள் ராஜுவைப்பற்றி நடத்திய விவாதம் அவளுக்கு ஞாபகத்திற்கு வந்தது. "ராஜுவுக்காக நீ இப்படிப் பரிந்து பேசுவது தவறென்று எனக்குப்படுகிறது" என்று கமலாதேவி சொன்னாள். ஆனால் லீலாவுக்கு ராஜுவைப்பற்றித் தவறாக நினைக்கவே முடியவில்லை. சந்தர்ப்பங்கள்தான் அவனை அலைக்கழிக்கின்றன என்பதை அவள் உணர்ந்துகொண்டாள். கமலாதேவி சொன்ன மற்றொன்றும் அவள் நினைவுக்கு வந்தது. "அவனை நீ நல்ல வார்த்தைகள் சொல்லியோ எப்படியோ கெட்ட வழியில் போகாமல் திருப்பி விட வேண்டும்". நல்ல வார்த்தைகள் வேண்டியமட்டும் சொல்லிப் பார்த்துவிட்டாள். ராஜு அவைகளுக்கெல்லாம் செவிசாய்க்கும் நிலையைத் தாண்டிவிட்டான். பின் வேறு வழி?

"எப்படியோ" என்று கமலாதேவி சொன்ன வார்த்தை மீண்டும் மீண்டும் அவள் மனத்தைக் குடைந்தது. "எப்படி? எப்படி?" என்று ஆயிரம் முறை தன்னையே கேட்டுக்கொண்டாள்.

அக்கேள்விக்கு அவள் இதயத்திலே பதில் பிறந்தது. கூடவே நிம்மதியும் உதித்தது மனத்திலே. ஒரு நம்பிக்கை துளிர்விட்டது அவள் நெஞ்சிலே. 'ஆம். அதுதான் சரியான வழி. ராஜு இதற்குக் கட்டுப்பட்டே தீருவான். பத்மாவின் நல்வாழ்வுக்காக நான் இப்படிச் செய்வது தவறாகாது' என்று எண்ணிக்கொண்டதும் மகத்தான ஒரு காரியத்தைச் சாதித்துவிட்ட மகிழ்ச்சி பிறந்தது அவள் உள்ளத்திலே.

ஆனால், ராஜுவிடம் அதை எப்படித் தெரிவிப்பது? அது ஒரு பெரிய பிரச்னையாகப்பட்டது. மனத்துள் எப்படியோ தீர்மானம் செய்துவிட்டாள். அதைச் செயல்படுத்துவது எவ்வளவு கடினம் என்பது அப்போதுதான் அவளுக்குத் தோன்றியது. தீர யோசித்த பிறகு ஒரு கடிதம் எழுதி ராஜுவிடம் கொடுத்துவிடுவதுதான் சரி என்ற முடிவுக்கு வந்தாள்.

(தொடரும்)

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ. 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூபா 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை

பண்டித காழியூர்

ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்

தபோநிதி

தியாகராய நகர், மதராஸ்-17

தபால் பெட்டி 1417

நாராயணீயம்

சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர்

8. தேவர்களை அஸுரர்கள் எதிர்ப்பதும், மஹாபலி அவர்களைத் தடுப்பதும்

तावद्दैत्यास्त्वनुमतिमृते भर्तुरारब्ध
युद्धा :
देवोपेतैर्भवदनुचरैः सङ्गता भङ्गमापन् ।
कालात्माऽयं वसति पुरतो यद्वशात्
प्राग्जिता : स्म :
किं वो युद्धैरिति बलिगिरा तेऽथ
पातालमापु : ॥

தாவத்தைத்யாஸ்த்வனுமதிம்ருதே
பர்த்துராரப்த யுத்தா:
தேவோபேதைர்பவதனுசரைஸ்
ஸங்கதா பங்கமாபன்
காலாத்மா (அ) யம் வஸதி புரதோ
யத்வசாத் ப்ராக்ஜிதா: ஸ்ம:
கிம்வோ யுத்தைரிதி பலிகிரா
தே (அ) த பாதாளமாபு:

பதவுரை:—

தேவ—தெய்வமான ஹே குருவாயூரப்பா!, தாவத்—அப்பொழுது, தைத்யா:து—அஸுரர்களோவெனில், பர்த்து:—அரசனை மஹாபலியினுடைய, அனுமதிம்ருதே—அனுமதியில்லாமலேயே, ஆரப்த யுத்தா:—ஆரம்பிக்கப்பட்ட யுத்தத்தையுடையவர்களாய், உபேதை:—அங்கு வந்திருந்த, பவதனுசரை:—தங்களுடைய வேலைக்காரர்களால், ஸங்கதா:—எதிர்க்கப்பட்டு, பங்கம்—தோல்வியை, ஆபன்—அடைந்தார்கள். யத்வசாத்—எவருடைய வசமாகி, ப்ராக்—முன்பு, ஜிதா: ஸ்ம:—ஜெயத்தை அடைந்தவர்களாக இருந்தோமோ, காலாத்மா—காலஸ்வரூபியான, அயம்—இந்த பகவான், புரத:—முன்னால், வஸதி—வஸிக்கிறார். வ:—உங்களுக்கு, யுத்தை:—யுத்தங்களினால், கிம்—என்ன பயன்?, இதி—என்ற, பலிகிரா—பலியின் வார்த்தையால், அத—பிறகு, தே—அந்த அஸுரர்கள், பாதாளம்—பாதாள லோகத்தை, ஆபு:—அடைந்தார்கள்.

கருத்துரை:—

"தெய்வமான ஹே குருவாயூரப்பா! அப்பொழுது மஹாபலியின் அனுமதியில்லாமலேயே, அஸுரர்கள் பகவானான உங்களுடன் யுத்தம் செய்ய ஆரம்பித்தார்கள். அந்த சமயத்தில் உங்களுடைய பணியாட்கள் அந்த அஸுரர்களை எதிர்த்துத் தோற்கடித்தார்கள். அந்த ஸமயம் மஹாபலி இவ்வாறு சொன்னானமே?

'எந்த பகவானுக்கு வசப்பட்டு அவருடைய மஹிமையால் முன்பு நாம் மூவுலகங்களையும் ஜெயித்திருந்தோமோ, அதே பகவான் காலரூபியாக நம் முன் நிற்கும்போது, நீங்கள் அந்த காலரூபியுடனேயே சண்டைபோடுவதில் என்ன பயன்?'

இம்மாதிரி மஹாபலி சொல்லியவுடன், தோல்வியடைந்த அந்த அஸுரர்கள் அனைவரும் பாதாள லோகத்தை அடைந்தார்களாமே?" என்று ஸ்ரீ நாராயண நம்பூதிரி ஸ்ரீ குருவாயூரப்பனின் பிம்பத்தைப் பார்த்துக் கேட்க, இக்கலியுகத்திலும் அந்த பிம்பம் "ஆம்" என்று தலையையசைத்து அங்கீகாரம் செய்தாராம்.

விளக்கவுரை:—

தேவர்களுக்குப் பரிந்துகொண்டு அஸுரச் சக்ரவர்த்தியான மஹாபலியின் ராஜ்யங்களைப் பிடுங்க பகவான் த்ரிவிக்ரமனாக வந்திருக்கிறார். இந்த ஆத்திரத்தில் அஸுரர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து தேவர்களைத் தாக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். அந்த ஸமயத்தில் பகவானுடைய வேலைக்காரர்கள் அந்த அஸுரர்களை முறியடித்துப் புறங்காட்டி ஓடும்படி செய்துவிடுகிறார்கள். மேலும், அஸுரர்களின் ஆவேசத்தில் தங்களுடைய சக்ரவர்த்தியின் ஆக்ஞையைக்கூட எதிர்பார்க்காமல் தாங்களாகவே சண்டைபோடக் கிளம்பிவிட்டார்களாம்.

இதையெல்லாம் கொஞ்சங்கூட மனம் கலங்காதவனாக இருந்துகொண்டு பார்க்கும் மஹாபலி தன்னுடைய போர்வீரர்களைப் பார்த்துச் சொல்வது உலகுக்கு எடுத்துரைக்கும் ஒரு உண்மை.

ஒரு மனிதனுடைய வாழ்வில், வெற்றியும் தோல்வியும், இரண்டுமே ஏற்படுகின்றன. வெற்றியேற்படும்போது மனிதன் தன்னுடைய சொந்த ஸாமர்த்தியத்தினால் ஒரு காரியத்தைச் சாதித்துவிட்டதாக இறுமாப்பு அடைகிறான். தோல்வி ஏற்படும்போதும், தனது சாமர்த்தியக் குறைவினால் ஏமாந்துபோனதாக நினைக்கிறான். அந்த வெற்றிக்கும், தோல்விக்கும், அந்த மனிதன் காரணமேயல்ல. அந்த மனிதனும், அவனுக்கு அவ்வப்பொழுது ஏற்படும் சூழ்நிலைகளும் வெறும் வியாஜங்கள். வெற்றிக்கும், தோல்விக்கும், மூலகாரணம் பகவானே. பகவதனுக்ரஹம் இருந்தால் ஜெயம் உண்டு. பகவானுடைய அனுக்ரஹம் இல்லாவிட்டால், மனிதன் எவ்வளவு புத்திசாலியாயிருந்தாலும், எவ்வளவு பராக்ரமசாலியாயிருந்தாலும் அவனுக்குத் தோல்வி நிச்சயம்.

எவ்வளவோ படித்தவர்களும், விஷயக்ஞர்களும், இந்தக் காலத்தில் வாழ்க்கையில் வெற்றி கிட்டாதவர்களாக—அதாவது ஐஹிக சுகம் பெறாதவர்களாக—இருக்கக் காண்கிறோம். அதே ஸமயத்தில் ஸாமான்ய அறிவுடையவர்கள் பெரும் பதவியில் ஸகல சௌபாக்யங்களுடன் வாழ்வதையும் பார்க்கிறோம். ஆகையால், நம்முடைய அறிவும், ஆற்றலும் தேவைகளுக்குக் குறைவாயிருந்தபோதிலும், பகவானுடைய அனுக்ரஹம் இருக்கும்போது நன்கு பிரகாசிக்கும், பூர்த்தியாகப் பரிமளிக்கும்.

ஒரு சித்திரம் எழுதுபவன் தன் கலைத்திறனால் தீட்டப்பட்ட ஓர் உயர்ந்த சித்திரம், உயிர்பெற்று எழுந்து, பேசி நடமாடமுடியுமோ? அதேபோல் நம்முடைய அறிவும் ஆற்றலும் ஒரு வரையறைக்கு உட்பட்டவை. ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் மனிதயத்னம் ஒன்றும் செய்ய முடியாது.

"செயற்கரிய செய்வர் பெரியர்" என்ற வள்ளுவரின் வாக்கியத்தில் பெரியர் என்றால் பகவானுடைய அனுக்ரஹத்தைப்பெற்ற மஹான்கள் என்று பொருள். அத்தகைய மஹான்களால்தான் செய்ய முடியாததாகத்தோன்றும் காரியங்களைச் செய்து முடிக்கமுடியும் என்பதுகருத்து.

மஹாபக்தனான மஹாபலி இவ்வுண்மையை நன்கு அறிந்திருந்தான். அன்றொரு நாள் மூவுலகங்களையும் ஜெயித்தான். தேவர்களையும், தேவர்களின் அரசனையும் ஓட ஓட விரட்டினான். எல்லாவுலகங்களுக்கும் ஏகசக்ராதிபதியாக விளங்கினான். இன்று அதே மஹாபலியினுடைய வீரர்கள் தோல்வியுற்று புறங்காட்டி ஓடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மஹாபலியினுடைய வலிமை இன்று குறைந்துவிட்டதா? இல்லை. ஆள் பலம் குன்றிவிட்டதா? இல்லை. திறமை போய்விட்டதா? இல்லை. தோல்வியையே காணாத மஹாபலியின் வீரர்களுக்குத்

பாலஸாதி

குழந்தைகளின் சகல நோய்களுக்கும் சிறந்தது.

★

எல்லா கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்.
அல்லது கீழ்க்கண்டவருக்கு எழுதுக:

Vaidya J. G. VARADH Office, NADIAD

ஸ்டாகிஸ்டுகள்: **தாமோதர் & கம்பெனி,**
113, நைனியப்ப நாயகன் தெரு, சென்னை 3.

தோல்வி ஏன் ஏற்பட்டது? இக் கேள்விக்குப் பதில் மஹாபலி ஒருவனுக்குத்தான் தெரிகிறது. திருவிக்ரமனுக ஆகாயத்தை அளாவி பூமி முழுதையும் வியாபித்துக் கொண்டு, காலத்தையும் கடந்து நிற்கும் அந்த சர்வேசுவரனுடைய அனுக்கிரஹம், அன்று மஹாபலிக்கு இருந்தது. அவனுடைய வலிமையும், பெருமையும் பிரகாசித்தன, இன்று அதே காலஸ்வரூபியான பகவானின் அனுக்கிரஹம் இல்லை. அந்த அனுக்கிரகம் தேவர்களின் பக்கத்தில்இருக்கிறது. ஆகையால் மஹாபலியின் வலிமையும், பெருமையும், மங்கி ஒளியிழந்து இருக்குமிடம் தெரியாமல்போய்விட்டது. ஐஹிக விஷயம் சம்பந்தப்பட்டவரையில் அவனுடைய ஆற்றல் முழுதும் மறைந்துவிட்டது.

அகங்காரத்தாலும், மமகாரத்தாலும் கொழுப்பு என்னும் திரை அவனுடைய பகவத்ஞானத்தை மறைத்துக்கொண்டிருந்தது. திருவிக்ரமனைப் பார்த்தமாத்திரத்தில், பகவானே தன்னிடம் வாமன மூர்த்தியாக வந்திருக்கிறார் என்பதை அறிந்த மாத்திரத்தில், அவனுடைய கொழுப்புத்திரை அகன்றுவிட்டது. பகவத்ஞானமாகியஒளி, சுடர்விட்டுப் பிரகாசிக்க ஆரம்பித்துவிட்டது. அதனுல் தான் அந்த சமயம் எத்தனை பெரிய போர் புரிந்தாலும் தோல்வி கண்டிப்பாய் ஏற்படும் என்பதை அவன் அறிந்துவிட்டான்.

அத்தகைய பகவத் ஞானத்தைப் பெறுவதற்குக் காரணமாயிருந்த அந்தத் திருவிக்ரம மூர்த்தியை மஹாபலி எவ்வாறு கண்டான் என்பதை ஸ்ரீமத் பாகவதத்தில் விரிவாகக் காணலாம்.

கங்கா தீரத்தில் மஹான்களுடைய சந்நிதானத்தில் ஸ்ரீ சுகர் கருணை மேலிட்டவராய் பரீக்ஷித்துச் சக்ரவர்த்திக்குத் திருவிக்ரமனுகக் காக்ஷியளித்த பகவானின் விச்வரூபத்தை தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார். பரீக்ஷித்தும், மற்றும் அங்கு கூடியிருந்த மஹான்களும் அந்த சமயம் தங்கள் எதிரிலேயே திருவிக்ரமமூர்த்தி ஆவிர்ப்பவித்து நிற்பது போன்ற உணர்ச்சியை அடைகின்றனர். அவ்வளவு ஆச்சரியமாக ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீ சுகர் பரீக்ஷித்து மஹாராஜனிடம் திருவிக்ரமமூர்த்தியை வர்ணிக்கிறார்.

काये बलिस्तस्य महाविभूते ‍:
सहर्त्विगाचार्य सदस्य एतत् ।
ददर्श विश्वं त्रिगुणं गुणात्मके
भूतेन्द्रियाथाशय जीव युक्तम् ॥

காயே பலிஸ்தஸ்ய மஹாவிபூதே:
ஸஹர்த்விகாசார்ய ஸதஸ்ய ஏதத்!
ததர்ச விஸ்வம் த்ரிகுணம் குணத்மகே
பூதேந்திரியார்த்தாசய ஜீவயுக்தம்
ஸ்ரீமத் பாகவதம் 8-வது ஸ்கந்தம்
அத்தியாயம்—20.

இந்தப் பிரபஞ்சம் பஞ்சபூதங்களால் ஆனது; முக்குண கார்யத்தால் விளங்கிக் கொண்டிருப்பது. இப்பிரபஞ்சத்திலுள்ள பொருள்களிலெல்லாம் மூலசக்தியாக (விபூதியாக) விளங்கிக்கொண்டிருக்கும் பகவானுடைய திருவிக்ரம ரூபத்தில், மஹாபலி தன் ஆசார்யர்கள், ரித்விக்குகள், மற்றுமுள்ள மஹான்கள் இவர்களோடு அந்தப் பிரபஞ்சம் முழுவதையும் காண்கிறன்.

மேலும் திருவிக்ரம மூர்த்தியின் ஒவ்வொரு அவயவத்திலும் மஹாபலி கண்ட வைபவத்தை ஸ்ரீமத் பாகவதத்தில் விஸ்தாரமாகக் கூறியிருப்பதாவது:—

திருவிக்ரமனின் பாதங்களின் கீழ் ரஸாதலம் முதலிய கீழே உள்ள உலகங்கள்; பாதங்களின் மேல் பாகத்தில் பூமி; ஆடு சதைகளில் மலைகள்; முழங்கால்களில் பக்ஷிகள்; தொடைகளில் ஏழு விதமான மருத்துக்கள்; இடுப்பு வஸ்திரத்தில் சந்தியா தேவதை; குஹ்யப் பிரதேசத்தில் நவப் பிரஜாபதிகள்; பின் பக்கத்தில் தன்னை (மஹாபலியை) முக்கியமாகக்கொண்ட அஸுரர்கள்; நாபியில் ஆகாயம்; வயிற்றில் ஏழு சமுத்திரங்கள்; மார்பில் நக்ஷத்திரக் கூட்டங்களின் மாலை; ஹிருதயத்தில் தர்மம்; ஸ்தனங்களில் ரிதம், ஸத்யம் என்ற இரண்டு தேவதைகள்; மனதில் சந்திரன்; மார்பில் தாமரையைக் கையில் உடைய மஹாலக்ஷ்மி; தொண்டையில் (கண்டத்தில்) ஸாமம் முதலிய வேதங்கள்; கைகளில் இந்திரன் முதலிய தேவர்கள்; காதுகளில் திசைகள்; தலையில் ஸ்வர்க்க லோகம்; கேசங்களில் மேகங்கள்; மூக்கில் வாயு; கண்களில் சூர்யன்; முகத்தில் அக்னி; வாக்கில் சந்தஸ்ஸுக்கள்; நாக்கில் வருணன்; புருவங்களில் விதி நிஷேதம் (அதாவது வேதம் 'செய்' என்றும் 'செய்யாதே' என்றும் சொல்லியது); இமை கொட்டுதலில் பகலும் இரவும்; நெற்றியில் கோபம்; உதடுகளில் அதிக ஆசை (லோபம்); தொடு இந்திரியத்தில் காமம்; ரேதஸ்ஸில் ஜலம்; பின்புறத்தில் அதர்மம்; நடைகளில் யாகம்; நிழலில் மிருத்யு; புன்சிரிப்பில் மாயை; ரோமங்களில் செடி கொடிகள்; ரத்தக் குழாய்களில் நதிகள்; நகங்களில் கற்கள்; புத்தியில் பிரம்ம தேவன்; பிராணன்களில் தேவர் கூட்டங்களும், ரிஷிகளும்; சரீரத்தில் அசையும் பொருளும், அசையாப் பொருளுமான எல்லா பிராணிகளும்—இவை யாவற்றையும் வீரனை மஹாபலி பகவானுடைய சரீரத்தில் கண்டான். இவ்வாறு மஹாபலி கண்ட விஷயங்களை ஸ்ரீமத் பாகவதத்தில் பல சுலோகங்களால் சொல்லி,

नदीश्च नाडीषु शिला नखेषु
बुद्धावजं देवगणानृषींश्च ।
प्राणेषु गात्रे स्थिरजंगमानि
सर्वाणि भूतानि ददर्श वीर ‍: ॥

நதீஸ்ச நாடீஷு சிலா நகேஷு
புத்தாவஜம் தேவகணன்ருஷீம்ஸ்ச
ப்ராணேஷு காத்ரே ஸ்திர ஜங்கமானி
ஸர்வாணி பூதானி ததர்ச வீர:

என்று முடித்து, திருவிக்ரம மூர்த்தியின் பெரிய ரூபத்திற்குத் தகுந்த அளவில், பெரிய சங்கு, சக்ரம், கதை, பத்மம், கௌஸ்துபம், பீதாம்பரம், வன மாலை முதலிய ஆபரணங்களோடு திருவிக்ரமன் விளங்கினர் என்று வர்ணித்திருக்கிறார்.

அவ்வளவு வர்ணனையையும் "காலாத்மாயம் வஸதி புரத:" என்ற வார்த்தைகளால் ஸ்ரீ நாராயண நம்பூதிரி இந்த சுலோகத்தில் குறிப்பிட்டு விடுகிறார்.

இந்த சுலோகத்தின் தாத்பரியத்தை பக்தர்கள் பூரணமாக உணர வேண்டும். செடி வளர வேண்டுமானுல் வேரில்தான் ஜலம் ஊற்ற வேண்டும். இப்பிரபஞ்சத்திற்கு வேரைப்போல் மூலமாக இருக்கும் பகவானை ஆராதித்தால்தான் நமக்கு க்ஷேமம் உண்டு. இதே விஷயத்தை மஹாபாரதத்தில் காந்தாரி தன் பிள்ளையான துர்யோதனனுக்குச் சொல்லி இருக்கிருள்.

துர்யோதனனும் அவன் சகோதரர்களும் யுத்தத்திற்குப் புறப்படுவதற்கு முன் காந்தாரியை நமஸ்கரித்து, யுத்தத்தில் ஜெயம் கிடைக்கும்படி அனுக்கிரகம் செய்ய வேண்டுகிறார்கள். அப்போது காந்தாரி அவ்விதம் அனுக்கிரகம் செய்யாமல்

यतो धर्म ‍: ततो जय ‍:

யதோ தர்ம: ததோ ஜய:
(எங்கு தர்மம் இருக்கிறதோ அங்குதான் ஜெயம்) என்று கூறுகிருள். தர்மபுத்திரரிடம்தான், தர்மம் உள்ளது என்பதை அறிந்த துர்யோதனன் தர்மம் இருக்குமிடத்தில் ஜெயம் ஏன் இருக்க வேண்டும் என நினைக்கிறன். அப்போது காந்தாரி மறுபடியும்

यतो धर्म ‍: तत ‍: कृष्ण ‍:
यत ‍: कृष्ण ‍: ततो जय ‍:

யதோ தர்ம: தத: கிருஷ்ண:
யத: கிருஷ்ண: ததோ ஜய:
என்று கூறுகிருள். அதாவது தர்மம் இருக்குமிடத்தில் பகவான் இருக்கிறார். பகவான் இருக்குமிடத்தில் ஜெயம் இருக்கிறது என்று பொருள். இதை யாரும்

(தொடரும்)

வியாபார அறிவிப்பு

டேனிஷ் & ஸ்வீடன் நியூஸ் பேப்பர்
பேல்கள் ரெடி ஸ்டாக்கில்
குறைந்த விலைக்கு சப்ளை செய்கிறோம்.

விவரங்களுக்கு எழுதவும்:
மானேஜர், தபால் பெட்டி நெ. 1596, மதராஸ்-1.

இருட்டு

எம்.வி.வெங்கட்ராம்

[சென்ற வாரத் தொடர்ச்சி]

எதிர்பார்த்தபடியே வெண்ணிலா கோபமாக இருந்தாள். என்னைக் கண்டதும், வேகமாக உள்ளே சென்றுவிட்டாள், ஒரு வார்த்தையும் பேசாமல். டாக்டரை ஒரு நாற்காலியில் உட்கார்த்திவிட்டு நான் அவள் பின்னல் சென்றேன்.

"வெண்ணிலா, எனக்கு ஏதோ ஒரு கடுமையான வியாதி இருக்கிறதாம், தொத்து வியாதியாம்; உனக்கும் அந்த வியாதி இருக்கலாம் என்று டாக்டர் சொல்கிறார். அதனல் அவரை அழைத்து வந்தேன். அவரைப் பார்த்தால்– ராத்திரி நான் நடந்துகொண்டதற்கு அர்த்தம் விளங்கும். டாக்டருக்கு எதிரில் நாம் வித்தியாசமாய் நடந்து கொள்ளலாமா?" என்று ஹிதமாகப் பேசி அவளைச் சமாதானப்படுத்தி வெளியே அழைத்து வந்தேன்.

மூவரும் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தோம். டாக்டர்தான் நிதானத்துக்குப் பெயர் பெற்றவராயிற்றே. வியாதி பற்றிப் பேசாமல், எங்கள் கட்சி விவகாரங்கள் பற்றிப் பேசியபடி இருந்தார். நாத்திகத்தை அவர் கண்டிக்கவில்லை. தெய்வ நம்பிக்கையில்லாமல் தம்மால் வாழ முடியாதுபோல் இருக்கிறதே என்று வருந்துகிறவர் போல அவர் பேசுவதைக் கேட்க எனக்கு ஆச்சரியமாகவும் இருந்தது. இரண்டு நாட்கள் வெண்ணிலாவுடன் பேசினல்–அவர் பரம நாத்திகராக மாறி விடுவார் என்று தோன்றியது!

"நீங்கள் இளைஞர்கள்; உங்களால் கடவுள் இல்லாமல் வாழ முடிகிறது. நான் வயதானவன். தெய்வம் இல்லாமல் வாழ முடியாதுபோல் ஒரு பிரமை எனக்கு. என்னைப் பெற்றவர்கள் என்னை அப்படித் தயார் செய்துவிட்டார்கள்" என்றார் டாக்டர்.

வெண்ணிலா உற்சாகமாய்ப் பதில் கூறினாள்: "டாக்டர், எந்தப் பழக்கத்தையும் நாம் கைவிட முடியும் என்பது உங்களுக்குத் தெரியாதா? எவ்வளவு காலமாகக் கடவுள் என்கிற இந்தக் கற்பனை மனிதரை ஆட்டி வைக்கிறது! மத வேறுபாடுகள், ஜாதி பேதங்கள், மனிதருக்கு மனிதர் தாரதம்யம்–இவ்வளவு கோளாறுகளும் அக்கற்பனையின் விளைவுகள் தானே?"

"இருக்கலாம். . . மூட நம்பிக்கை என்று சொல்லுவீர்கள். பாருங்கள், நான் சிகித்சைக்குப் போகும்போதுகூட என்னேடு ஏதாவது ஒரு தெய்வத்தின் படத்தை எடுத்துச்செல்வேன்" என்று தம் கையில் இருந்த காகிதச் சுருளைக் காண்பித்தார் அவர். அவர் தெய்வ நம்பிக்கை உடையவர் என்பதை அறிவேன். ஆனல் சிகித்சைக்குப் போகும்போது படமும் எடுத்துப் போவதாகச் சொன்னது பொய் என்பது எனக்குத் தெரியும். ஏதோ காரணத்தால் அப்படிச் சொல்கிறார் என்று எண்ணி மௌனமாயிருந்தேன்.

"அப்படியா? உங்களைவிட அக்காகிதத்துக்கு சிகித்சா சக்தி அதிகம் என்ற நம்பிக்கை போலும்!" என்றாள் அவள் கிண்டலாக.

"அது என்ன படம்?"

"தெய்வம் என்று பார்க்க வேண்டாம். படத்தின் கலையழகையாவது நீங்கள் பார்த்து ரஸிக்கக்கூடாதா? உருவ அமைப்பு, பாவ வெளியீடு–முதலியவை களைக்கூடப் பார்க்கக்கூடாதா?" என்ற டாக்டரின் வேண்டுகோளை அவள் நிராகரிக்க முடியவில்லை.

எழுந்து, அவள் டாக்டர் அருகில் வந்தாள். பெரிய புதையலைக் காட்டுகிறவர் போல், சுருட்டி வைத்திருந்த படத்தை மெதுவாகப் பிரித்துக் காட்டினர் டாக்டர். படத்தில் புதுமை ஏதும் இல்லை. மிகவும் பழைய சித்திரம். ராமரின் பட்டாபிஷேகக் கோலம். டாக்டர் கிண்டல் செய்கிறாரோ என்று அவர் முகத்தைப் பார்த்தேன். நோயை ஆராயும் தீவிரம்தான் அங்கு தென்பட்டது.

வெண்ணிலா முதலில் அலட்சியமாகப் படத்தைப் பார்த்தாள். பிறகு, பார்வையால் அதைக் கிழிக்க முயலுகிறவள்போல் உற்றுப் பார்த்தாள். அப்பால், பெண்மைக்கு அழகு தராத, இதுவரை அவளிடம் நான் கேட்டிராத விதத்தில் ஹோவென்று சிரித்தாள்.

"இதையா இவ்வளவு பிரமாதப் படுத்தினீர்கள் டாக்டர்!" என்று சிரிப்புக்கிடையில் அவள் சொல்லும்போதே, யாரோ அவள் கழுத்தைப் பிடித்துத் தள்ளியதுபோல், பின்பக்கம் ஐந்தாறு அடிகள் பாய்ந்து கீழே விழுந்தாள்.

அவளைத் தூக்குவதற்காக எழுந்த என்னை டாக்டர் உட்காரவைத்தார். அந்தச் சித்திரத்தையும் அவள் கண்களுக்கு நேராகக் காட்டியபடி இருந்தார். ஒன்றும் புரியாமல், வெண்ணிலாவைக் கவனித்தேன்.

அவள், தன்னை அழுத்தும் ஏதோ ஒரு சுமையை உதறுகிறவள்போல், இரண்டு, மூன்று முறை விழுந்து, திமிறித் திமிறி எழுந்தாள். எழுந்தவள் எங்களைப் பார்க்கவே இல்லை; படத்தின் மீதே அவளுடைய பார்வை குத்திட்டு நின்றது. அப்படி நின்றவள் ஒரு விநாடிகூட நிற்கவில்லை. கயிறு கொண்டு இழுக்கப் பெறுவதுபோல் படம் நோக்கி நேராக விரைந்தாள். படத்தருகில் வந்ததும், ஆற்று நீரில் அலசப்படும் துணியைப் போல் முன்னும் பின்னும், வலமும் இடமுமாய் தடதடவென்று ஆடிக்கொண்டிருந்தாள் கொஞ்ச நேரம். ஆடிக்கொண்டிருந்தாள் என்பதும் தவறு. யாரோ அவளைக் குலுக்கி ஆட்டிக்கொண்டிருப்பதுபோல் இருந்தது.

குழப்பத்துடன் நான் பார்க்கும்போது, "போதும், போதும்; படத்தைச் சுருட்டுங்கள்!" என்று அவள் கூக்குரலிட்டாள்.

டாக்டர் நிதானமாகப் படத்தைச் சுருட்டி, கயிற்றால் கட்டி மேஜை மேல் வைத்தார்.

பிறகுதான் வெண்ணிலா சகஜ நிலைக்கு மீண்டு நாற்காலியில் அமர்ந்தாள்.

"என்ன டாக்டர் இது?" என்று ஆரம்பித்தேன் நான்.

"வெண்ணிலாவே சொல்லட்டும். படத்தைப் பார்த்ததும் ஏனம்மா இப்படிக் கீழே விழுந்தாய்?" என்று டாக்டர் அவளிடம் கேட்டார்.

"எனக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. படத்தை உற்றுப் பார்த்ததும்—மின்சாரத் தாக்குதல் போல் ஏதோ ஒன்று பின்னால் தூக்கி எறிந்தது போல் இருந்தது. அப்போது என் கண்கள் இரண்டும் இருண்டன; மயக்கம் எனக் கூற முடியாத ஒரு தெளிவின்மை என் மனத்தைச் சூழ்ந்தது; பிறகு படத்தின் பக்கம் இழுக்கப்படுவதுபோல் ஒரு பிரமை; படத்தருகில் வந்ததும் என் உடலை யாரோ அப்படியே தூக்கி அலசுவது போலத் தடுமாற்றம் உண்டாயிற்று. என்ன இது?"

"உடம்பு பூராவும் நெருப்பு வைத்தாற் போல் எரிச்சலாக இருக்கும்; நம்மை மீறி, நமக்கும் விளங்காமல், ஏதோ செய்வதுபோல் இருக்கும்; இருக்கிறதா?" என்றார் டாக்டர்.

"இருக்கிறது. ஆனால், என்ன இது?" என்றாள் வெண்ணிலா.

"இதுதான் வியாதி. இதைக் கண்டு பிடிக்கத்தான் படத்தைக் கொண்டு வந்தேன்."

"புது வியாதியாக இருக்கிறதே; நான் கேள்விப்பட்டது கூட இல்லை," என்றாள் அவள் கவலையோடு.

"புது வியாதி அல்ல; மிகவும் பழைய வியாதி. இந்த வியாதி உள்ளுக்குள் இருப்பது புரியாமல் இதற்கு பலி ஆகிறவர்கள்தான் அதிகம். முதன் முறையாக நானும் இப்போதுதான் நேரிடையாக இந்த நோய் பிடித்தவர்களைச் சிகிச்சை செய்கிறேன்."

நான் கேட்டேன்: [illegible] இந்த நோய் பற்றி நானும் கேள்விப்பட்டதில்லை. விசித்திரமாக இருக்கிறதே! இதற்கு என்ன பெயர்?"

"எனக்கும் சரியாக ஞாபகம் இல்லை. வடமொழிப் பெயர். 'இருட்டு' என்று அர்த்தம் வரும்".

"இருட்டா! பெயரும் வேடிக்கையாகத்தான் இருக்கிறது! கூத்தரசுக்கும் இதே வியாதி இருக்கிறது என்கிறீர்களா?" என்றாள் வெண்ணிலா.

"உனக்கு இருப்பதைப்போல் அவ்வளவு கடுமை இல்லை. எந்தக் கோளாறு உன்னை இப்படிப் பின் பக்கம் தூக்கி எறிந்ததோ, அதுதான் கூத்தரசையும் படுக்கை அறையிலிருந்து நேற்றும் முந்தா நாளும் வெளியே எறிந்தது. வியாதி கடுமைதான்; கடுமையான சிகித்சை செய்துகொள்ள வேண்டும்."

என் அறிவினால் அறுதியிட முடியாத இந்தப் பயங்கரமான நோய்பற்றிய பயம் என்னை வதைத்தது. "டாக்டர், எப்படியாவது நீங்கள்தான் எங்களைக் குணப்படுத்த வேண்டும்" என்று வேண்டினேன்.

"முடிந்ததைச் செய்கிறேன்" என்று கூறிய அவர், எங்கள் இருவருடைய நாடியையும் நெஞ்சையும் சோதனை செய்தார். எங்கள் ரத்தம், நீர், மலம் ஆகியவைகளையும் சோதனைக்காக எடுத்துக்கொண்டார். எங்கள் ரத்த அழுத்தத்தையும் கணக்கெடுத்தார்.

"இருவருக்கும் எக்ஸ்ரேயும் எடுத்துப் பார்க்க வேண்டும். தலை, மூளை, மார்பு, இடுப்பின் கீழ் பாகம், முதுகு—எல்லாவற்றுக்கும் தனித்தனியாக எக்ஸ்ரே எடுத்துப் பார்க்க வேண்டும். எல்லா சோதனைகளின் முடிவையும் பார்த்த பிறகுதான் சிகித்சையை ஆரம்பிக்க வேண்டும். அதற்கு முன் உபசாந்திக்குச் சில மருந்துகள் தருகிறேன். சாப்பிடுங்கள். இந்த நோய் குணமாக வேண்டுமானால் கடுமையான கட்டுப்பாடு தேவை. நீங்கள் இருவரும் கண்டிப்பாக விலகியே இருக்க வேண்டும்."

நோயின் கடுமையை அப்போதுதான் உணர்ந்தவள்போல், வெண்ணிலா—டாக்டரின் முன்னிலையிலேயே—அழுததைக் காண எனக்கு வெட்கமாக இருந்தது.

"வியாதி அவ்வளவு கடுமையா?" என்று அவள் கேட்ட கேள்வி—சிறு குழந்தையின் கேள்வியா? அப்போது அப்படித்தான் நினைத்தேன்.

"ஆம், அம்மா. கடுமைதான்; இல்லாவிட்டால், இவ்வளவு கண்டிப்பாய்ப் பத்தியம் சொல்வேனா? எக்ஸ்ரே சீக்கிரம் எடுத்துக்கொள்ளுங்கள். அதைப் பார்த்துக்கொண்டுதான் முறையான சிகித்சை ஆரம்பிக்க வேண்டும்.. கூத்தரசு, சாயங்காலம் வீட்டுக்கு வருகிறாயா?"

அவர் விடை பெற்றுக்கொண்டார்.

7

மருந்து

என் அறிவு முரண்டது; ஆனால், உயிராசை அறிவை அச்சுறுத்தியது.

'இருட்டு என்றொரு வியாதியா?' என்று கேட்டது அறிவு. டாக்டருக்குப் பைத்தியமா என்ற கேள்விக்கு இடமில்லை. அவர் எங்களிடம் விளையாடுகிறார் என்றும் எண்ணிவிட முடியாது. 'இருட்டு' என்கிற நோய் இல்லை என்று கூறுவதும் எவ்வாறு? ஒளியில் முழு உடலோடு இருப்பவள், இருளில் அங்கங்கள் வெட்டுண்டதுபோல் தோன்றுகிறாள் என்றால், அதுவும் ஒரு துளி ரத்தமும் கீழே சிந்தாமல் வெட்டுண்டு கிடப்பதாய்த் தோன்றினால், அப்படித் தோன்றியது உண்மையானால், 'இருட்டு' என்று டாக்டர் அந்த நோய்க்குப் பெயரிட்டதில் என்ன தவறு? அந்த மாதிரி ஒரு தோற்றத்தைக் கண்டதாய் வேறு யாராவது கூறியிருந்தால்—நிச்சயமாக நான் நம்பமாட்டேன். ஆனால்,அக்கோரத்தைக் கண்டவன் நான்; என் கண்களால் பார்த்தேன். என் மனத்தால் பயந்து சுண்டினேன்.

'அக்காட்சி—ஒரு பிரமை' என்று ஒதுக்கித் தள்ள முயன்றது அறிவு— அப்போதைய அறிவைத்தான் கூறுகிறேன். பி ர மை என்றால்—இருட்டும்போதெல்லாம் தொடர்ந்து வருமா என்று தானாகவே சந்தேகச் சேற்றைப் பூசிக்கொண்டது அறிவு.

'எதற்கும், கொஞ்சம் பொறுத்து அம்பலவாணரின் முடிவைத் தெரிந்து கொள்ள வேண்டும்; வேறு வழி இல்லை' என்ற சுவர் தாண்டிச் செல்ல என் அறிவால் இயலவில்லை.

ஒரு விஷயம் உறுதி ஆயிற்று. அறிஞன் என்றும் அறிந்தவன் என்றும் போற்றப்படும் எந்த அறிவும் ஒரு வரம்பு கடந்தால், அறியாமை ஆகிவிடுகிறது என்பதை நன்றாய் உணர்ந்துகொண்டேன். உணர்ந்தாலும், அகந்தையுள்ள என் அறிவு தன் தோல்வியை எளிதில் ஒப்புக்கொள்ள மறுத்தது; அந்த அகந்தைக்கும் ஆணி அறைந்துவிட்டது, டாக்டரின் முடிவு.

மூன்றே நாட்களில் ரத்தம், நீர், மலம் ஆகியவைகளைச் சோதனை செய்த முடிவுகள் கிடைத்துவிட்டன. டாக்டர் கூறியபடி எக்ஸ்ரேயும் எடுத்துக்கொண்டோம். எல்லாவற்றையும் தூக்கிக்கொண்டு அவரிடம் சென்றேன்.

எல்லாவற்றையும் அவர் மிகவும் கவனமாக ஆராய்ந்தார்;என்னிடமும் விளக்கினார்.

"பார்த்தாயா, ரத்தம், நீர், மலம், எலும்பு, நரம்பு, சருமம் —முதலியவை சம்பந்தப்பட்ட எந்த நோயும் உங்களுக்கு இருப்பதாக—இந்தச் சோதனை முடிவுகளிலிருந்து தெரியவில்லை. பொதுவான சாதாரணமான பலஹீனம் தான் உங்கள் இருவருக்கும் இருக்கிறது. மருத்துவ சாஸ்திரப்படி உங்களுக்குப் பிரமாதமான வியாதி ஒன்றும் இல்லை" என்றார் டாக்டர்.

"டாக்டர், உங்களுடைய சோதனை மர்மம் ஆகிக்கொண்டே போகிறது. நான் படுகிற அவஸ்தை போதாது என்று நீங்களும் புதிர்போட்டால் குழப்பம் தான் அதிகம் ஆகிறது. எங்களுக்கு என்ன கோளாறு? இருட்டில் எனக்கு ஏற்பட்ட பிரமை தொடரக் காரணம் என்ன? படம் பார்த்த வெண்ணிலா மயங்கி விழுந்தது எதனால்? இந்தக் கோளாறு நீங்க என்ன வழி?—என் பதை எல்லாம் தயவு செய்து விளக்குங்கள்".

டாக்டர் கேட்டார்: "உனக்கு வால்மீகியின் கதை தெரியுமா?"

நான் பொறுமை இழந்துகொண்டிருந்தேன். என் ஆத்திரத்தைச் சிறிதும் மதியாமல் கதை பேசுவதைக் கேட்க, (நிஜமாகச் சொல்கிறேன்) அவர் கழுத்தை நெருக்கிவிடலாமா என்று கூடத் தோன்றியது!

"எனக்குக் கதை கேட்க நேரம் இல்லை. எங்களுக்கு வியாதி என்கிறீர்கள்; வியாதி என்றால் அதற்கு மருந்து என்ன என்று சொல்லுங்கள்".

"இருட்டுக்கு மருந்து என்ன? நீ சொல்லு" என்றார் அவர் சிரித்தபடி.

அவரை வெளிப்படையாகக் கோபித்துக்கொள்ள முடியவில்லை; ஆகையால் பெரு மூச்சுவிட்டேன்.

"நான் டாக்டர் அல்ல; எனக்கு மருந்து விஷயம் தெரியாது" என்றேன், படபடப்புடன்.

"இதற்கு பிரமாதமான படிப்பு வேண்டாமே. சிறு குழந்தையும் சொல்லும். இருட்டைப் போக்க ஒளியால் தான் முடியும்; ஆக இருட்டுக்கு மருந்து ஒளிதான்."

"வெளியில், வெயிலில் நிற்கட்டுமா?" என்றேன் ஆத்திரப்பட்டு. "வியாதியின் பெயர் இருட்டாக இருக்கட்டும்; மருந்தின் பெயர் ஒளியாக இருக்கட்டும். உங்கள் சிகித்சை முறையும் மருந்தும் என்ன என்பதைச் சொல்லுங்கள்?"

"சிகித்சை முறை சொன்னால் நீயும் ஏற்கமாட்டாய்; வெண்ணிலாவும் கேலி செய்வாள்; அதனால் மலைக்கிறேன்."

"சொல்லுங்கள். நீங்கள் எது சொன்னாலும் கேட்கிறேன். அதுபோல் செய்கிறேன். வியாதி இருக்கும்போது மருந்துக்கு மலைக்க முடியுமா?"

"உனக்கு நன்மை செய்ய விரும்புகிறவன் என்று என்மேல் உனக்கு நம்பிக்கை இருக்கிறதா?"

"நம்பிக்கை இல்லாவிட்டால் உங்களிடம் ஏன் வருகிறேன்? தயவுசெய்து என் குழப்பத்தை அதிகம் ஆக்காமல் விஷயத்தைச் சொல்லுங்கள்".

"சொல்லுகிறேன். ஆத்திரப்படக் கூடாது. எங்கும், எளிதில் செலவில்லாமல் கிடைக்கிற மருந்துதான்; பொறுமையாக உபயோகித்துப் பார்க்க வேண்டும் என்கிற ஒரே நிபந்தனை".

"என்ன அது?" என்றேன் ஆவலுடன்.

"ராம நாம ஜபம்."

திடுக்கிட்டு எழுந்து நின்றேன். எனக்கு வந்த கோபத்தில்—டாக்டரிடம் எனக்கு இருந்த மரியாதையால்தான்—ஒன்றும் செய்யாமல் இருந்தேன்.

"டாக்டர், கிண்டலும் கேலியும் செய்வதற்காகவா இவ்வளவு செய்தீர்கள்? நீங்கள் இப்படிச் செய்வீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை."

"உட்காரு, அரசு. நீ வேதனைப்படும் சமயம் பரிகாசம் செய்ய எனக்குப் பைத்தியம் பிடிக்கவில்லை. அமரிக்கையாக நான் சொல்லுவதைக் கேள்."

அவர் குரலில் இருந்த கனிவு என்னை அமர்த்தியது; ஆயினும் என் கோபம் முழுவதும் தணியவில்லை. "பரிகாசம் இல்லை என்றால் நீங்கள் சொல்லுவது தான் என்ன? கொள்கை வேறுபாட்டை நீங்கள் தொழிலில் புகுத்துவது முறையல்ல. உங்களிடம் அதை நான் எதிர்பார்க்கவும் இல்லை."

"நீ நினைப்பது தவறு. நீ தெய்வத்தை நம்பாததால் தெய்வத்துக்கும் நஷ்டம் இல்லை; எனக்கும் நஷ்டம் இல்லை. இருட்டில் உடல் துண்டாடப்பட்டதாய்த் தோன்றுவது எந்த வியாதிக்கும் லட்சணமாய்ச் சொல்லப்படவில்லை; படம் பார்த்து மயங்கி விழும் வியாதி பற்றி நீ கேள்விப்பட்டது உண்டா? அந்த இரண்டும் நடந்தது உண்மை என்றால் நான் சொன்னதும் உண்மையே".

அவர் கூற்று என்னைச் சிந்தனை வசப்படுத்தியது. நோயாளியின் கண்கள் இருளுவது இயற்கை; என் விஷயம் அப்படி இல்லையே! பலஹீனத்தாலும் பயங்கரத்தாலும் நோயாளி மயக்கம் அடையலாம்; வெண்ணிலாவின் சேதி அப்படி இல்லையே! டாக்டர் சொல்லுவதை விவரமாய்க் கேட்டுக்கொண்டுதான் ஒரு முடிவு செய்ய வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டேன்.

"டாக்டர், என் பதட்டத்தை மன்னியுங்கள். நீங்கள் சொல்ல விரும்புவதை விளக்கமாய்ச் சொல்லுங்கள். நான் இனி ஆத்திரப்படவில்லை."

"அரசு, துர்ப்பாக்கியத்தாலோ, பாக்கியத்தாலோ நீங்கள் இருவரும் நாத்திகர்களாயிருக்கிறீர்கள். உங்களுக்கு இந்தக் கோளாறு இவ்வளவு வெளிப்படையாக வந்ததே ஆச்சரியம்தான். உன்னைப் பற்றின வரை, உனக்கு நல்ல வேளை இருக்கிறது என்றுதான் நினைக்கிறேன்."

"மறுபடியும் நீங்கள் சுற்றி வளைத்துப் பேசுகிறீர்கள். நான் பொறுமை இழப்பேன் என்கிற சந்தேகம் உங்களுக்கு. நிச்சயமாக, இனி பொறுமையாக இருக்கிறேன். இருட்டு என்று நீங்கள் பெயர் சொல்லுகிற கோளாறு எதனால் ஏற்படுகிறது? அதற்கு மருந்து உண்டா?—என்பதை நேரடியாகச் சொல்லிவிடுங்கள்."

"உன்னுடைய கொள்கைக்குப் பொருந்தாத விஷயத்தைச் சொல்லப் போகிறேன். புரிந்துக்கொள்ளக் கஷ்டமாக இருக்கும். ஆனால் தெய்வ நம்பிக்கை உடைய எல்லோருக்கும் சுலுவாகப் புரியும். விஞ்ஞானிகள் ஆராய்ச்சிக்கூடத்தில் (Labaratory) சோதனைகள் நடத்தி வெளியிடும் முடிவுகளை நீங்கள் உண்மை என்று மறு வார்த்தை சொல்லாமல் நம்புகிறீர்கள்; விஞ்ஞானிகள் ஒருமுறை கண்ட முடிவுகள் கூட மாறுதலுக்கு உட்பட வேண்டிய கட்டாயம் பல சமயங்களில் ஏற்படுகிறது. நான் விஞ்ஞானத்தைக் குறைகூற முயலவில்லை. நான் ஒரு டாக்டர்; விஞ்ஞானத்தை நம்பாதவன் டாக்டராக இருக்க முடியுமா? கண்ணால்பார்த்து, காதால் கேட்டு, புலன்களால் அறிய முடிகின்ற பொருள்களை ஆராய்ச்சிக்கூடத்தில் வைத்து ஆராய்வதுதான் விஞ்ஞானியின் வேலை. மனிதன் லோகாயத முயற்சிகளில் வெற்றி பெற்று, சுக சௌகரியங்களை விருத்தி செய்ய விஞ்ஞானம் முயலுகிறது. அது கண்டு பிடித்த சாதனங்களை வைத்துக்கொண்டு மனித வர்க்கம் எவ்வளவோ நிம்மதியாக வாழ முடியும். ஆனால் உண்மை அதற்கு நேர் விரோதமாக இருக்கிறது. அது ஏன் என்பதை நாம் இப்போது ஆராய வேண்டிய தேவை இல்லை. விஞ்ஞானம் கண்ட சாதனங்களைக் கொண்டு மனிதன் தன் இனத்துக்கே அழிவு தேடும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதைக் காண்கிறோம். ஒரே தலைமுறையில் இரண்டு யுத்தங்கள் நடந்து, மூன்றாவது யுத்தத்துக்கும் ஏற்பாடுகள் நடக்கின்றன என்பதற்காக—விஞ்ஞானிகளை நாம் குறைகூற முடியுமா? எய்தவன் இருக்க அம்பை நோவது அறிவாகுமா? அது போலத்தான், தெய்வ சம்பந்தமான விஷயமும். மத சம்பந்தமான போர்கள் நடந்தன என்றால்—மதத்தைக் குற்றம் சாட்டுவது மதியீனம்; தெய்வத்தின் பெயர் சொல்லிக் கொடுமைகள் நடக்கின்றன என்றால், அது தெய்வத்தின் குற்றமாகிவிடுமா? தெய்வம் இல்லை என்றுதான் ஆகிவிடுமா? விஞ்ஞானிகள் ஆராய்ச்சிக் கூடங்களில் சோதனைகள் நடத்தியது போலவே—நம் முன்னோர்களும் தெய்வ சம்பந்தமான ஆராய்ச்சிகள் நடத்தி, நிராகரிக்க முடியாத பல முடிவுகள் கண்டிருக்கிறார்கள். உடலுக்கும், மனத்துக்கும், மூளைக்கும், உயிருக்கும் அப்பால், ஆன்மா என்றொரு 'பொருள்' உண்டு என்பது ஞானிகள் கண்ட முக்கியமான முடிவுகளில் ஒன்று. லோகாயதவாதிகளான நீங்கள், 'பொருள்' (Matter) தான் எல்லாவற்றுக்கும் முன் இருந்தது என்கிறீர்கள்; நாங்கள் பரம்பொருள்தான் ஆதிமூலம் என்கிறோம். புலன்களால் காணமுடியாத பொருள்கள் இருப்பதை ஒப்புக் கொள்ள நீங்கள் மறுக்கிறீர்கள்; அத்தகைய பொருள்கள் இருப்பதை நாங்கள் கண்டு, ஆராய்ந்தும் வைத்திருக்கிறோம். லெனின் எழுதிய நூல் ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தேன்; 'லோகாயதவாதம்' பற்றின புஸ்தகம்; அவனுடைய தர்க்கங்களுக்கு எல்லாம் நான் பதில் கூற முடியவில்லை; அவசியமும் இல்லை. விஞ்ஞானம் கண்ட ஒரு முடிவை மறுக்க வேண்டும் என்றால்—விஞ்ஞான ரீதியான அறிவால் தானே முடியும்? ஞானிகள்கண்ட முடிவை மறுக்க—ஞான வழி செல்லாதவனால் எப்படி முடியும்? லெனின் எழுதியுள்ள ஒரு வாக்கியம் படித்து எனக்குச் சிரிப்பு வந்தது. 'மூளை இல்லாமல் சிந்தனை சாத்தியம் என்று சில தத்துவதரிசிகள் நம்புகிறார்கள்!' என்று லெனின் கிண்டலும், கேலியும் செய்கிறான் ஓரி

எதிர்பார்த்ததும் எதிர்பாராததும்!



டத்தில். மூளையில்லாமல் சிந்தனை சாத்தியம் இல்லை என்பது லெனின் போன்ற லோகாயதவாதிகளின் நினைவு..."

"டாக்டர், மூளையில்லாமல் நினைக்க முடியும் என்று நம்புகிறீர்களா நீங்கள்? நல்ல வேடிக்கையான கதையாகச் சொல்லுகிறீர்கள்!" என்றேன் குறுக்கிட்டு.

"மூளையில்லாமல் நினைக்க முடியும் என்று மட்டும் நான் நினைக்கவில்லை; கண்ணில்லாமல் பார்க்க முடியும், காதில்லாமல் கேட்க முடியும், மூக்கு இல்லாமல் நுகர முடியும் என்றெல்லாம்கூட நான் நம்புகிறேன்; நம்புவதென்ன, நன்ருக அறிந்திருக்கிறேன். நீயும் இப்போது அறிந்துவிட்டாய்– நீ அறிந்தாய் என்பதை அறியாமலே!"

"எனக்குத் தெரியாமல் என்ன அறிந்துவிட்டேன்? புரியும்படி சொல்லுங்கள்!"

"நான் சொன்னதை நம்பாவிட்டாலும் உன்னால் புரிந்துகொள்ள முடியும். புலன்களால் அறிய முடியாத பொருள்களை 'இல்லை' என்று கூறி நீங்கள் மறுக்கிறீர்கள் என்றேன், இல்லையா? ஆனால், சாதாரணப் புலன்களால் அறிய முடியாத விதத்தில் வானவெளியில் **(Atmosphere)** உயிர்கள் நிறைந்துள்ளன என்பதை மதவாதிகளான நாங்கள் கண்டோம்; இவ்வுயிர்களுக்கும் மனிதர்களுக்கு இருப்பதுபோல், ஆனால் நம் சாதாரணப் புலன்களால் காண முடியாத, வடிவங்கள் உண்டு என்பதைக் கண்டோம். இவ்வுயிர்களைத்தான், அவைகளின் குணாதிசயங்களுக்கு ஏற்பப் பேய்கள், பூதங்கள், தேவதைகள் என்று தரவாரியாக நம் முன்னோர்கள் பிரித்தார்கள்; பேய் பூதங்களைப் பற்றி நமக்கு அக்கறை இல்லை; அவை மனிதரைவிட வலிமையில் குறைந்தவை. தேவதைகள் மனிதரைவிட அதிக வலிமை வாய்ந்தவை; புத்தியும் வாய்ந்தவை. இத்தேவதைகளில் சுத்தமானவை, அசுத்தமானவை என இரு வகை உள்ளன. இவ்விருவகைத் தேவதைகளும் மனிதரை வெகுவாக ஆட்டிவைக்கின்றன. அசுத்தமானவை மனிதரைத் தீய நெறியில் செல்லத் தூண்டுகின்றன. சுத்தமானவை நம்மை நல்ல நெறியில் நடத்துகின்றன. வினைவிதிப்படி, மனிதரை துர்த்தேவதைகளோ நல்ல தேவதைகளோ பீடிக்கின்றன!"

"இந்தக் கட்டுக்கதைகள் இப்போது..."

"அவசரப்படாதே. குறுக்கிடாமல் கேள். அத்தேவதைகள் வலிமை வாய்ந்தவை என்றேன். அவைகளை அட்சாங்களின் ஒலியாலும் பலி கொடுத்தும் வசப்படுத்தித்தான் மந்திரவாதிகள் பிறர் வியக்கும்படியான காரியங்களைச் செய்கிறார்கள்; பல கொடிய வேலைகளும் செய்கிறார்கள். ஆனால், மந்திரவாதிகளுக்கும் லேசில் கட்டுப்படாத, அசுத்தமான தேவதைகள் இருக்கின்றன; அவைகளுக்கு ரத்தம், மாமிசம், மனிதரின் உயிர்ச்சத்து மிகவும் பிரியமான உணவுப் பொருள்கள்; இந்த ஆகாரத்தை வேண்டி அவை மனிதரைப் பீடிக்கின்றன. பீடிக்கின்றன என்பதைச் சாதாரணமாக யாராலும் உணர முடியாது. முதலில் அவை மனிதர்களின் உடல்களைத் தம் வசப்படுத்திக்கொள்கின்றன. உடலிலிருந்து பிறகு மனத்தையும் மூளையையும் பீடிக்கின்றன. அவை உடலைப் பீடிக்கும்போது சோம்பல், தூக்கம், காமம் முதலிய கீழுணர்ச்சிகள் அதிகம் ஆகும்; இவ்வுணர்ச்சிகள் அதிகமானால், அவைகளையடுத்து மனம் அசுத்தம் ஆகிறது; மனத்தை அவை ஆக்ரமித்துக்கொள்கின்றன; அப்பால், மூளையையும் தொடருகின்றன. உடலும், மனமும், மூளையும் அத்தேவதைகளின் வயமான பின், யாரும் உயிரோடு மீள முடியாது. அத்தேவதைகள் அல்லது சக்திகள் மனத்திலிருந்தபடி தீய நினைவுகளை நினைக்க வைக்கின்றன. மூளையிலிருந்து தீய யோசனைகளைச் செய்ய வைக்கின்றன; உடலைத் தம் விருப்பத்துக்கு ஆட்டிவைக்கின்றன. உன்னையும், உன் மனைவியையும் இத்தகைய பயங்கரமான சக்தி ஒன்றுதான் பீடித்துள்ளது; உன்னைப்பற்றினவரை, உன் உடலை மட்டும்தான் அது பீடித்துள்ளது; அத்தேவதைகளுக்கு இருட்டில்தான் வலிமை அதிகம்; உன் உடலிலுள்ள அந்தத் தீய சக்தியின் கண்ணுக்குத்தான் அந்த வெட்டுண்ட கோரம் தென்பட்டது; உன்னுடைய சாதாரணக் கண்களுக்கு அக்கோரம் தென்பட்டிராது; உன் உடலோடு ஒன்றியுள்ள அத்தீய சக்தி பார்த்ததை நீ உன் கண்ணால் பார்த்ததாக நினைக்கிருய்; வெண்ணிலாவின் உடலை மட்டும் அல்ல, மனத்தையும், மூளையையும் ஆக்ரமித்துள்ள தீய சக்தி நினைப்பதையும், யோசிப்பதையும், தானே செய்வதாக அவள் நினைக்கிருள். அதாவது, அவள் தன் சுயத்தன்மையை இழந்து, வேருெரு சக்திக்கு இரையாகிவிட்டாள். இன்னும் சிறிது காலம் இந்நிலை நீடித்தால், உன் கதியும் அதுவாகும். உன் இச்சை இல்லாமல்–உன் மூளையும், உன் மனமும்–சிந்திக்கும், செயலாற்றும்–இதைத்தான் 'மூளையில்லாமல் நினைக்கிற நிலை' என்கிறேன்.

"உன்னையும் வெண்ணிலாவையும் பிடித்துள்ள சக்தி மிகவும் பயங்கரமானது; ரத்தமும், மாமிசமும், உயிர்ச்சத்தும் உண்பது; மிகவும் அசுத்தமானது; தமோகுணம் உடையது; பீடித்தவரின் உயிரை உண்டுதான் அமரும்; இறைத் தன்மையும், சாத்வீகமும் அதற்குப் பிடிக்காது; கோயில், பூஜை அறை முதலிய தூய இடங்களில் அவை வலுவிழக்கும்; ஆகையால், அது தான் பீடித்த மனிதர்களைக் கோயிலுக்குப் போகாமலும், பூஜை செய்யாமலும் தடுக்கும்; தெய்வத்தை நிந்திக்கத் தூண்டும்; தானே உன் நாவில் அமர்ந்து, நீ பேசுவதுபோலவே மயக்கம் உண்டு பண்ணி தெய்வ நிந்தனை செய்யும். உங்கள் இருவரையும் பிடித்துள்ள அந்தச் சக்தியைத்தான் 'இருட்டு' என்று நான் குறிப்பிடுகிறேன்; இந்தச் சக்தியை மருந்து கொடுத்துக் குணப்படுத்த முடியாது. இருட்டையும் அஞ்ஞானத்தையும் துணையாகக்கொண்டு, மனித உயிரை உண்கின்ற அந்த சக்தியை நீக்க வேண்டுமானல், ஒளியையும் ஞானத்தையும் துணைகொள்ள வேண்டும். அதனல்தான் அதற்கு மருந்தாக ஜபத்தைக் கூறினேன்."

டாக்டர் சொல்வது அனைத்தையும் நான் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்தேன். பாடம் புகட்டும் ஆசிரியர்போல் அவர் விஷயங்களைச் சொல்லிக்கொண்டிருந்தார். அவர் கூறுவதை உண்மை எனக் கொள்ள என்னல் முடியவில்லை; பொய் என்று அடித்துப் பேசவும் முடியவில்லை. இருட்டில் கண்ட தோற்றத்துக்கு விஞ்ஞான ரீதியில் விளக்கம் கூறுவது தான் எப்படி?

நான் கூறினேன்: "நீங்கள் சொல்வதை நான் நம்பவில்லை. பிரமைகளை விஞ்ஞான ரீதியில் விளக்க முடியாது என்கிற காரணத்தைக்கொண்டு நீங்கள்..."

"பிரமை என்று நீ சொல்லுவது பொய் என்று உனக்கே தெரியும். பிரமை என்ருல், தினமுமா பிரமை உண்டாகும்? வெண்ணிலாவை இருட்டில்–இரவு பன்னிரண்டு மணிக்கு மேல்–பார்த்தால் அப்படித் தோன்றுகிறது; உனக்கு மட்டும் தோன்றுகிறது; எனக்குத் தோன்றவில்லை; வெண்ணிலாவைத் தவிர, வேறு யாரும் உன் கண்ணுக்கு அப்படித் தோன்ருததற்கும் காரணம் என்ன? அத்தோற்றம் உண்டாகும்போது, துர்நாற்றம் ஏன் உண்டாகிறது? சுடலையில் இருப்பது போல் ஏன் பிரமை உண்டாகிறது? உடம்பில் எரிச்சல் உண்டாகக் காரணம் என்ன? கண்கள் இருளுவது ஏன்?— இவைகளுக்கெல்லாம் என்ன பதில் சொல்லப்போகிருய்?"

"இந்தக் கேள்விகளுக்குப் பதில் எனக்குத் தெரியவில்லை என்பதற்காக உங்கள் பதிலைச் சரியென்று ஏற்க வேண்டுமா? நீங்கள் சொல்லுவது சரி என்றே கொண்டாலும், என் கண்களுக்கு மட்டும் வெண்ணிலா அப்படித் தோன்றுவா

இனும்! இனும்!! இனும்!!!

பூரண ஆரோக்யம்
இன்ப வாழ்க்கை
நல்ல சந்ததிக்கு வழி

"தம்பதி விகாசம்"

மேன்மையான
உங்கள் ஜீவிதம்
சௌக்யமாகவிருக்க
ஓர் வழிகாட்டும்
புஸ்தகம்.

மதன் மஞ்சரி பார்மஸி,
ராம்வாடி, கல்பா தேவி ரோட்,
பம்பாய்-2.

னேன்? அவள் கண்களுக்கு நான் அப்படித் தோன்றவில்லையே?"

"உனக்கு நல்ல வேளை இருக்கிறது என்று நான் சொன்னதற்குக் காரணம் அதுதான். அந்த சக்தி வெண்ணிலாவின் ரத்தத்தை உண்ணும் காட்சியைத்தான் நீ கண்டுவிட்டாய்; அதற்குப் பரிகாரம் காணவும் முனைந்துவிட்டாய்; அந்தக் காட்சியை நீ கண்டிராவிட்டால், வெண்ணிலாவைப்போல் நீயும் அதற்கு இரையாக வேண்டியவன்தான்... அதனால்தான் உன் கதை கேட்டதும், வால்மீகியின் கதை ஞாபகம் வந்தது. தெய்வம் பயம் காட்டித் தன் பக்கம் உன்னை இழுத்துக்கொள்கிறது."

"வாதத்திற்காக நீங்கள் சொல்வதை ஒப்புக்கொண்டு கேட்கிறேன்: ராமர் படம் பார்த்ததும், வெண்ணிலா அப்படிக் குதித்தது ஏன் என்பதற்கு உங்கள் விளக்கம் என்னவோ?"

"முதலிலேயே சொன்னேன். உங்களைப் பீடித்துள்ள அசுத்த சக்திக்குத் தூய்மை பிடிக்காது; தெய்வ சாந்நித்தியம் பிடிக்காது; சாத்வீகம் பிடிக்காது; தெய்வ சாந்நித்யமும், தூய்மையும், சாத்வீகமும் உள்ள இடத்தில் அதனால் நிற்கமுடியாது. ராமர் சாத்வீகத் தெய்வம்; அவர் உருவத்தைக் கண்டதும், நடுங்கியவள் வெண்ணிலா அல்ல, அவளைப் பீடித்துள்ள அசுத்த சக்திதான் நடுங்கிக் குதித்தது. வான வெளியில் உலாவும் இத்தகைய அசுத்த சக்திகளிடமிருந்து மனிதர்கள் தப்ப வேண்டும் என்பதற்காகவே நம் முன்னோர்கள் தேவாலயங்களை எழுப்பி, மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்தார்கள். கோயில்களிலும், மூர்த்திகள் உள்ள இடங்களிலும் அசுத்த சக்திகளால் தொந்தரவு செய்ய இயலாது. 'தெய்வம் எங்கும் இருக்கிறது. கோயிலுக்குப் போய் ஆகவேண்டியது என்ன?' என்று சில ஆஸ்திகர்களும் கூறுகிறார்கள். கோயிலுக்குச் சென்றும், மூர்த்திகளை வணங்கியும், ஜபம் செய்தும்—உடலையும் மனத்தையும் மூளையையும் தூய்மைப்படுத்திக்கொண்டவனுக்குத்தான் கோயிலும், மூர்த்தியும் தேவை இல்லை; அத்தூய்மை பெறுகிற வரை, கோயிலும் மூர்த்தியும் அவசியம். கோயிலின் இந்த உண்மையான உபயோகத்தை நம் ஆஸ்திகர்களும் மறந்து வருகிறார்கள்."

"இவ்வளவு காலமாக எந்த விஷயத்தைப் பொய் என்றும், புரட்டு என்றும் நம்பிவந்தேனோ—அவ்வளவையும் உண்மை என்று நம்பச் சொல்கிறீர்கள்."

"நம்பச் சொல்லவில்லை; அறியச் சொல்கிறேன். நாத்திகன் என்பதற்காக நான் உன்னை என்றாவது பகைத்தது உண்டா?"

"ராம ஜபம் ஒன்றுதான் இதற்கு விமோசனம் அளிக்கும் என்கிறீர்களா?"

"நிச்சயமாக."

"இல்லாவிட்டால்?"

"நீங்கள் இருவருமே பிழைப்பது சந்தேகம்தான். உயிருக்கு அபாயம் என்று நோயாளியைப் பயமுறுத்துவது தவறு என்பதை அறிவேன். ஆனால், உண்மையை உன்னிடம் மறைப்பதில் பயனில்லை என்பதால் சொல்லுகிறேன். உங்களைச் சூழ்ந்துள்ள அசுத்த சக்தி மிகவும் கொடியது; மனிதர்களைவிட வலிய அறிவும் உடையது; உன்னை லேசாகத்தான் அது பற்றியுள்ளது; நன்றாகப் பீடிக்குமுன் அதன் பிடியிலிருந்து விடுவித்துக்கொள்வதுதான் விவேகம்."

அவர் பரிகாசம் செய்கிறார் என்கிற சந்தேகம் எனக்கு இப்போது இல்லை. சரியோ, தவறோ, அவர் நினைத்ததை உண்மையாகவே பேசிக்கொண்டிருந்தார்.

அவர் கூறிய விளக்கம் உண்மையா பொய்யா என்பது இருக்கட்டும். இருட்டு செய்யும் கோரம் நீடித்தால், என் உயிருக்கு அபாயம் விளையும் என்பதுபற்றி எனக்குச் சந்தேகம் இல்லை. இன்பம் எதிர்பார்த்துத்தான் படுக்கை அறையை நாடுகிறோம்; இன்பம் அளிக்க வேண்டியவள் தலையற்ற முண்டமாய்க் காட்சி அளிக்கும் கோரத்தை எவனால் தாங்க முடியும்?

"இந்தமாதிரி அனுபவம் வேறு யாருக்கும் நேர்ந்ததாய் நான் கேள்விப்பட்டதும் இல்லை" என்றேன், வேறு ஒன்றும் சொல்லத் தோன்றாமல்.

"வேறு யாரும் காணாத ஓர் அதிசயம் நீ கண்டதால்—நம்மை மீறிய ஒரு சக்தி உள்ளது என்பது புலப்படவில்லையா?.... வேறு யாராவது ஒரு பெரிய டாக்டரைப் பார்ப்போமா?"

"எந்த டாக்டரும் இந்த மாதிரி நோயைச் சிகித்சை செய்திருக்க முடியாது. டாக்டர், உங்கள்மேல் எனக்கு உறுதியான நம்பிக்கை இருக்கிறது. ஆனால், நீங்கள் சொல்லுவதை எப்படி நம்புவது? அதற்கு ஓர் ஆதாரம் வேண்டாமா?"

"வயிற்று வலிக்காக டாக்டரிடம் போகிறாய். மருந்து தருகிறார். அதை ஒரு வேளைகூட சாப்பிடாமல்—அந்த மருந்து வலியைக் குணப்படுத்தும் என்பதற்கு ஆதாரம் என்ன என்று கேட்பாயா?"

"அதுபோல—?"

"நான் சொல்லும் மருந்தை ஒரு டோஸ் சாப்பிட்டுப் பார். குணம் தெரிந்தால், தொடர்ந்து சாப்பிடு. சரிதானே? வேறு எந்த டாக்டராவது குணமாவது பற்றி இவ்வளவு உறுதி சொல்லுவானா?" என்று அவர் லேசாக நகைத்தார்.

அவரே தொடர்ந்து கூறினார்: "நான் முருக பக்தன். தினம் காலையில் நீராடி ஒரு மணி நேரம் தியானம் செய்வது என் பழக்கம்; அந்தத் தியான பலத்தால்தான் எனக்கு இந்த மனோபலம் இருக்கிறது என்பது என் நம்பிக்கை. என் பூஜை அறையைப் பார்க்கிறாயா?"

இருவரும் அவருடைய பூஜை அறைக்குப் போனோம். அறை வாசலிலேயே என்னை நிறுத்தி, கதவைத் திறந்து உள்ளே காட்டினார் அவர்.

"இங்குதான் நான் தியானம் செய்வது வழக்கம். ஸ்நானம் செய்துவிட்டு வா. இப்போது ஐந்து மணி ஆகிறது. ஆறு மணியிலிருந்து பத்து மணி வரை, தியானத்தில் இரு. பத்மாசனத்தில் அமர்ந்து, எதிரில் உள்ள ராமர் உருவத்தைப் பார்த்தபடியோ அல்லது கண் மூடியோ ஜபம் செய்யலாம்."

நான் தயங்கினேன்.

"நான் விளையாடவில்லை. 'மருந்து சாப்பிட வேண்டும்' என்று எந்த டாக்டராவது இவ்வளவு தொந்தரவு செய்வாரா? உன் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்கிற நினைவால்தான் சொல்லுகிறேன்."

உயிராசை என்னை உந்தியது. அவரும் என்னை வாதாட அனுமதியாமல், ஸ்நான அறைக்கு அழைத்துச் சென்றார். நீராடி, அவர் கொடுத்த புது ஆடை உடுத்து, அவரோடு பூஜை அறைக்குச் சென்றேன்.

"டாக்டர், நான் தெய்வத்தையே நம்பாதவன். இப்போது தேவதைகளையும் நம்பச் சொல்கிறீர்கள். நாலு மணி நேரம் ஜபம்...."

"செய்துவிட்டு வா. தெய்வத்தின் உண்மை விளங்கும்" என்றவர், ஸ்ரீ ராமர் பட்டாபிஷேகக் கோலப் படத்தின் முன்னிலையில், ஒரு பலகை மீது என்னை உட்காரவைத்து, என் கையில் ஒரு ஜப மாலையும் கொடுத்துக் கூறினார்: "அரசு, ஜபம் செய்யும்போது, மனத்தைச் சலிக்காமல் வைத்துக்கொள். நீ திடசித்தம் உடையவன்; மனத்தை ஒருமுகப்படுத்த உன்னால் முடியும். பத்து மணியானதும், நான் வந்து உன்னை எழுப்புகிறேன்."

என்னைத் தனியாக அறையில் விட்டு, வெளிப்பக்கம் கதவைத் தாழிட்டுக் கொண்டு அவர் போய்விட்டார்.

ஜப மாலையும், பத்மாசனமுமாய் விடப்பட்ட என் மனத்தில் பெரும் புயலே வீசியது எனலாம். பணக்காரர்களும், புரோகிதர்களும் பாமர மக்களை ஏமாற்றுவதற்காகச் செய்த கற்பனை என்று இகழ்ந்த தெய்வத்தை, பேடியின் சரித்திரம் என்று தூற்றி, நான் தீக்கிரையாக்கின நூலின் நாயகனை ராமரை—மெய்ப் பொருளாக வழிபட நான் அந்த அறைக்கு வந்திருக்கிறேன்! அறியாமையால் மக்கள் தெய்வ நம்பிக்கை கொள்கிறார்கள் என்று பழித்தேன்; இப்போது நான் செய்யப்போவது

அறிவுடைமை ஆகிவிட்டதோ? என்னை ஏமாற்றுவதற்காக டாக்டர் செய்யும் சூழ்ச்சியாக இது இருக்கலாமோ? ஆஸ்தி கரான அவர் என் கட்சியைப் பழிப்பதற்காக என்னை இப்பேதமைக்கு உட்படுத்துகிறாரோ?

ஆனால் இருள் செய்த ஜாலத்துக்கும் வெண்ணிலாவின் ஆட்டத்துக்கும் காரணம் என்ன? நாலு மணி நேர ஜபம் அக்கேள்விக்கு விடை தரும் என்கிறார் டாக்டர். அதனால் இன்னொரு உண்மையும் தெளிவுபடும்; தெய்வம் உண்டா, இல்லையா என்று. 'இல்லாத தெய்வத்தை இருப்பதாக எண்ணி மக்கள் ஏமாறுகிறார்கள்', என நான் பிரசாரம் செய்தேன்; சொன்னதை நம்பித்தான் சொன்னேன். கடவுள் இருப்பது உண்மையாக இருந்து, அதற்கு மாறாக நான் பிரசாரம் செய்தால்—அது தவறுதானே? எல்லா சந்தேகங்களுக்கும் ஜபம் பதில் அளித்துவிடும். டாக்டர் எங்கள் நன்மையைக் கோருகிறவர் என்பதைப்பற்றிச் சந்தேகப்படுவது மதியீனம்; உள்ளொன்றும் புறமொன்றுமாய் நடிக்கும் குணம் அவரிடம் இல்லை; அவர்மேல் பாரத்தைப் போட்டு ஜபம் செய்வோம். நடக்கிறபடி நடக்கட்டும்—என்று உறுதியான முடிவு செய்துகொண்டேன்.

உறுதி கொண்டபின்தான் அறையைக் கவனித்தேன். சிறிய அறை; நடுவில் முருகன் படமும், சுற்றிலும் வேறு தெய்வங்களின் படங்களும் இருந்தன. எனக்கு எதிரில் ராமர் பட்டாபிஷேகச் சித்திரம் இருந்தது. மிகவும் அழகிய அந்தச் சித்திரத்தை நோக்கியபடி ஜப மாலையை உருட்டத் தொடங்கினேன்.

சிறிது நேரம் வரை என் மனம் சலித்துக்கொண்டிருந்தது. அப்பால், என் நினைவுகள் பன்மை இழந்து ஒருமையுற்றன. இருட்டை மறந்தேன்; வெண்ணிலாவின் கோரத்தை மறந்தேன்; தெய்வம் உண்டா இல்லையா என்கிற சந்தேகத்தை மறந்தேன்; ஒரு சோதனையாக ஜபம் செய்வதையும் மறந்தேன்; திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருந்த அந்தச் சொல் என்னுள் உடல், மனமெங்கும் ஊடுருவி நிறைவதாய் எனக்குத் தோன்றியது; அந்த நிறைவில் ஓர் அமைதி ஏற்படுவதையும் உணர்ந்தேன்; பிறகு நானே அச்சொல் வடிவாகிவிட்டது போல், அதுவும் நானும் ஒன்றிவிட்டோம்.

நேரத்தை நான் கவனிக்கவில்லை; அம்பலவாணர் அறைக்குள் எப்போது வந்தார் என்பதும் எனக்குத் தெரியாது.

"....ராவணனோடியல்
பேற்றிவிடக்கம லாலய சீதையை
மோட்டன்வளைத்தொரு தேர்மிசையே
கொடு
முகிலேபோய்,
மாக்கனசித்திர கோபுர நீள்படை
வீட்டிலிருத்திய நாளவன் வேரற
மார்க்க முடித்த விலாளிகள் நாயகன்
மருகோனே!"

என்று பாடுகின்ற அவருடைய கம்பீரமான குரல் எனக்கு உணர்வு உண்டாக்கியது.

நெற்றியில் திருநீறிட்டுக்கொண்டு அவர் கூறினார்: "அரசு, மணி என்ன தெரியுமா?"

"ஏன், இன்னும் பத்து ஆகவில்லையா?"

தொட்டு வணங்கிவிட்டு வா: சாப்பிட்டுவிட்டுப் பேசலாம்" என்று அவர் சொன்னதும், நினைவிழந்த நெஞ்சோடு குனிந்து அவ்வுருவின் தாள் தொட்டு வணங்கிவிட்டு வெளியே வந்தேன்.

சாப்பிட்ட பிறகுதான் அவர் என்னைப் பேச அனுமதித்தார்: "நீங்கள் சொன்னபடி செய்துவிட்டேன்; என்ன ஆகும் என்கிறீர்கள்?"

"வீட்டுக்குப் போ; தெரியும். நான் சொன்னது ஞாபகம் இருக்கட்டும்; படுக்கைப் பத்தியத்தை மறந்து விடாதே. இன்னொரு வேண்டுகோள்: வீட்டுக்குப் போகும்போதும், போன பிறகும் ஜபம் செய்தால் நல்லது; குறைந்தபட்சம், பன்னிரண்டு மணிக்கு அவசியம் செய்ய வேண்டும். உன் நன்மை கோருகிற நண்பனின் வேண்டுகோள் இது; மறுக்காதே" என்று மிகவும் இதமாக அவர் சொல்லியதை என்னால் மறுக்க முடியவில்லை.

"நீங்கள் சொல்லியபடி செய்கிறேன். அவளும் நானும் ஓர் அறையில் இருக்கலாம் அல்லவா?"

"ஆம், மறந்து விட்டேன்..ஒரே அறையில், தனித் தனியாகப் படுக்க வேண்டும்...அவளிடம் ஜபம் பற்றி ஒன்றும் சொல்லாதே."

வீட்டுக்குத் திரும்பியபோது வெண்ணிலா கவலையுடன் என்னை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

"அரசு, இவ்வளவு நேரமா அவர் வீட்டில் இருந்தீர்கள்? என்ன சொன்னார் அந்த அரை வைத்தியர்?" என்றாள் என்னைக் கண்டதும்.

"வெண்ணிலா, டாக்டரைப்பற்றி உனக்கு ஒன்றும் தெரியாது; இந்த ஊரில் அவர்தான் பெரிய டாக்டர்."

"எனக்கு என்னவோ நம்பிக்கை இல்லை. கையில் படம் எடுத்துக்கொண்டு நோயாளியைப் பார்க்கச் செல்லும் டாக்டரின் அறிவுத் திறனை நீங்கள்தான் மெச்சிக்கொள்ள வேண்டும்."

"டாக்டரின் அறிவோடு, என் அறிவையும் சந்தேகிப்பதுபோல் பேசுகிறாயே?" என்றேன் வேடிக்கையாக.

"சரி, அவரால் உபத்திரவம்தான் உண்டாகப் போகிறது. சாப்பிடலாமா?"

"அவர் எங்கே விட்டார்? ஆகிவிட்டது?"

அவளுக்குப் பின்னால் படுக்கை அறைக்குள் நுழையும்போது, என்னையும் அறியாமல் என் கால்கள் நடுங்கின; பீதி ஒன்று என்னைச் சூழத் தொடங்கியது.

அடுத்தடுத்து இருந்த இரு கட்டில்களில் ஒன்றை இழுத்து ஒதுக்கினேன்.

"என்ன சேதி? ஓ, உங்கள் டாக்டர் சொன்னார் என்பதால்தானே? சரி, சரி; விளக்கை அணைத்துவிட்டுத் தூங்குங்கள்" என்றவாறு படுக்கையில் விழுந்தாள், படுக்கையை வெறுக்கிறவள்போல்.

மணி பதினொன்றரைக்கு மேல் ஆகிவிட்டதால் விருப்பம் இல்லாமலே விளக்கை அணைத்தேன். அறையில் இருள் சூழ்ந்ததும், சற்றே மறந்திருந்த ஜபத்தைத் தொடங்கினேன். தூக்கம் வரவில்லை; ஏதோ ஒரு பயங்கர நிகழ்ச்சியை எதிர்பார்ப்பதுபோல், துடிதுடித்துக் கொண்டிருந்த நெஞ்சோடு போட்டியிட்டுக்கொண்டு ஜபத்தில் ஆழ்ந்தேன்.

மணி பன்னிரண்டு அடித்தது.

அறையில் துர்நாற்றம் பரவுவதுபோல்—இல்லை, எழுந்த நாற்றம் அடங்கிவிட்டது.

என் மனத்தில் ஒரு தைரியம் பிறந்தது.

வெண்ணிலாவின் கட்டிலைத் திரும்பிப் பார்த்தேன்; எவ்வித மாற்றமும் இல்லாமல், முழு உடலோடு அவள் படுத்திருந்தாள்!

அக்கணத்தில்—ஆதியாகவும் அனாதியாகவும், உள்ள தெய்வத்தையும் தெய்வ சக்தியையும் என்னுள் நான் உணர்ந்தேன். அந்த முதற்பொருளை 'ராமா' என்று அழைத்ததால், அது இரங்கி, இறங்கி என்னைக் காக்க வந்தது என்பதையும் உணர்ந்தேன். இருட்டில் இருந்துகொண்டு, கண்களையும் மூடிக்கொண்டு, 'ஒளி என்பதே இல்லை' என்று இத்தனை நாட்களாகப் பிதற்றிக்கொண்டிருந்த பேதமையை அறிந்தேன். என்னை ஒரு பரவசம் ஆட்கொண்டது...அந்த மகிழ்ச்சியை என்னால் விளக்க முடியாது.

இந்தப் பரவசத்தில் நான் இருந்தபோது, வெண்ணிலா அழுகின்ற ஓசை கேட்டேன்.

"ஏன் அழுகிறாய் வெண்ணிலா?" என்றேன் பரிவுடன்.

"அந்த டாக்டர் உங்களைப் பயமுறுத்தி ஏமாற்றப் பார்க்கிறார். நம் கட்சியைச் சிதைக்க அவர் ஏதோ சூழ்ச்சி செய்கிறார் என்று தோன்றுகிறது. அவர் சொல்லுவதைக் கேட்டு, நீங்கள் என்னை அசட்டை செய்கிறீர்கள்" என்று மேலும் மேலும் அவள் அழுதாள்; என்னைவிட நெஞ்சத் துணிவு உள்ள அவள் இப்படி அடிக்கடி அழுவதைக் காண எனக்கே வியப்பாக இருந்தது.

"நான் உன்னை ஒருக்காலும் அசட்டை செய்யமாட்டேன். டாக்டர் சொன்னதுபோல் கொஞ்ச காலம் இருந்து பார்ப்போமே. அநாவசியமாக அவர் மேல் சந்தேகம் கொள்ளாதே" என்று கூறிவிட்டு ஜபத்தில் தஞ்சம் புகுந்தேன்.

"அரசு, என் உடம்பு எல்லாம், நெருப்பு வைத்ததுபோல் எரிகிறது" என்றாள் அவள்.

"படம் பார்த்தால் மயக்கம் வருகிறது. இப்போது உடம்பு எரிகிறது. வியாதி இல்லாமலா இப்படி ஆகிறது. காலையில் டாக்டரைக் கேட்கலாம். தூங்க முயலு."

"அந்த டாக்டரை நான் இனி பார்க்க மாட்டேன்" என்றாள் அவள், அழுகையை நிறுத்தாமல்.

ஜபம் செய்தவாறு, நான் தூங்கிவிட்டேன்.

(தொடரும்)

பெண்களின் உரிமை

★

[சுமங்கலி]

இதரக் கிழக்கு ஆசிய தேசங்களைவிட இந்தியாவில்தான் பெண்களுக்கு அதிக உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியாமலேயே பல பெண்கள் மிகுந்த கஷ்டங்களுக்கும் அநியாயங்களுக்கும் ஆளாகி வருகிறார்கள். தேசம் சுதந்திரம் அடைவதற்கு முன்பாகவே நமது இந்தியப் பெண்மணிகள் முனிசிபல் தேர்தல்களில் வாக்குரிமையைப் பிரயோகிக்கும் உரிமை பெற்றிருந்தார்கள் என்பது போற்றத்தக்க விஷயம். காங்கிரஸ் மகாசபைகூட, பெண் அங்கத்தினர்களுக்கு வாக்குரிமை அளித்து, பிரதிநிதிகளாகவும், பேச்சாளராகவும், தலைவியர்களாகவும் பெண்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறது. பிறகு சட்ட சபைகளிலும் பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது.

பெண்களின் உரிமைப் போராட்ட சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால், மேல் நாடுகளைவிட இந்தியாவில்தான், 30 வருடங்களுக்குள் இந்திய தேசீய சட்டத்தின்படி, 21 வயதுக்கு மேற்பட்ட எல்லா பெண்களுக்கும் வாக்குரிமையும், எல்லா வேலைகளுக்கும் மனுப்போட உரிமையும் அளிக்கப்பட்டிருக்கிறது.

சட்டபூர்வமாக பெண்களுக்கு இத்தகைய உரிமைகளெல்லாம் அளிக்கப்பட்டிருந்தபோதிலும், நமது அருமைத் திருநாட்டில் அவையெல்லாம் சரிவர செயல்படுவதில்லை என்பதில் சந்தேகமே இல்லை. ஆகவே, மாதர் உரிமைகள் சரியான முறையில் செயல்பட வேண்டுமானால், வரப்போகும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் அபேக்ஷகர்களில் பெண்களுக்கான உரிமைகளை நிலைநாட்டவும், கட்டாய இலவசப் படிப்புக்கு வகை செய்யவும், சுகாதாரப் பாதுகாப்பு, சீரான உணவுப் பொருள் விநியோகம் ஆகியவற்றில் கவனம் செலுத்தி உழைக்கவும், வரதக்ஷிணைக் கொடுமை, வேலையின்மை, பிச்சைக்காரர்கள் தொல்லை ஆகியவைகளைக் களைந்து நல்வாழ்வுக்கு வழிகோலவும் உழைப்பதாக யார் யார் சபதம் செய்கிறார்களோ அவர்களுக்கே 'வோட்டு'ப் போடுவதென இந்நாட்டுப் பெண்மணிகள் உறுதிகொள்ள வேண்டும்.

★ புத்தகங்களை அழகுபடுத்தல்

பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டுவிட்டன. குழந்தைகள் பொழுது போகாமல் தவிக்கும் நேரத்தில், பழைய புத்தகங்களைப் புதுப்பிக்கவோ, வாங்கியிருக்கும் புதுப் புத்தகங்களை அழகுபடுத்தவோ, இந்தப் புது முறையான 'ஹாபி' யை அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கலாம்.

மனசுக்குப் பிடித்த ஏதாவது வர்ணத்தைக் குழம்பாகத் தண்ணீரில் கரைத்துக் கொள்ள வேண்டும். பிறகு, ஒரு சிறு ஜல்லடையை புத்தக அட்டையின் மீது வைத்து, பழைய பல் தேய்க்கும் 'பிரஷ்' ஏதாவது இருந்தால் அதை வர்ணத்தில் தோய்த்து ஜல்லடையின் மெல்லிய கம்பி ஓட்டைகளின்மேல் தேய்த்தால், அழகான புள்ளிகளாக பல வர்ணங்களில் அட்டையை அலங்கரிக்கலாம். அட்டையின் மீது உலர்ந்த இலைகளையோ பூ இதழ்களையோ, அழகிய மாதிரிகளில் வைத்து, பிறகு மேற்கூறியபடி வர்ணங்களை மழை போல் தெளித்தால், அட்டையின் கலரில் இலையும் பூக்களும், அவற்றைச் சுற்றி வர்ணப் புள்ளிகளுமாக நவீன தோற்றத்தை அளிக்கும்.

★ நேயர்களின் அபிப்பிராயங்கள்

தெருக்களில் துர்நடத்தையைப்பற்றி போன இதழில் வந்த கட்டுரையைப் படித்த சில நேயர்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவைகளில் சிலவற்றிலிருந்து சில அபிப்பிராயங்களைக் கீழே தந்திருக்கிறோம்:

மாணவ, மாணவியரின் ஒழுக்க நிலை

ஐயா,

சென்ற பத்து ஆண்டுகளாக ஆண், பெண் உயர்நிலைப் பள்ளிகளில் வேலை பார்க்கும் வாய்ப்பால் நான் கவனித்தவற்றை தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

சில பெண் பாடசாலைகளில் அநேக நாட்களில் ஏதேனும் சில காரணங்களால் மாலை 5 மணிக்குப் பிறகு பெண்களை வீட்டுக்கு அனுப்புகின்றனர். இதை ஒரு வாய்ப்பாகக்கொண்டு சில பெண்கள் வேறு இடங்களில் சுற்றிவிட்டு நேரங் கழித்து வீட்டிற்குப் போகின்றனர். பெற்றோர்கள் கேட்கும்பொழுது பாடசாலை அதிகாரிகள் தாமதித்து அனுப்பியதாகச் சொல்லித் தப்பிவிடுகின்றனர். அதனால் பெண் பாடசாலை நிர்வாகிகள் மாலை 5 மணிக்கு முன்பாக மாணவிகளை அனுப்பிவிடுவது மிகவும் நல்லது. சில அத்தியாவசிய காரணங்களால் மாலை 5 மணிக்குப் பிறகு நிறுத்த நேரிட்டால், அதை முன்கூட்டி பெற்றோர்களுக்கு அறிவித்தால், பெண்கள் தாங்களாக தாமதித்து வருவதைத் தடுக்கலாம். ஒரே வட்டாரத்திலுள்ள ஆண், பெண் பாடசாலைகளை ஒரே சமயத்தில் விடாமல் ஒன்றிற்கொன்று அரை மணி நேர வித்தியாசத்தில் விடுவதால் பாதைகளில் நெரிசல்களால் ஏற்படும் விபரீதங்களைத் தடுக்கலாம். மாணவ, மாணவியருக்கு வரும் தபால்களை பாடசாலை அதிகாரிகள் தணிக்கை செய்துகொடுப்பது சாலச் சிறந்தது.

மாணவியர் அளவுக்கு மீறிய முகப் பவுடர், தலைக்கு மிஞ்சிய பூ, அழகிற்காக மூக்குக் கண்ணாடி அணிதல், உள் சட்டை, பாவாடை தெரியும்படியாக மிக மெல்லிய ஆடைகள் அணிவதைத் தவிர்க்க வேண்டும். வயது வந்த பெண்கள் பாவாடை, சட்டை மட்டும் அணியாமல், புடவை கட்டிக்கொள்ள வேண்டும். இவைகளால் வீண் கவர்ச்சியைத் தடுக்கலாம்.

பதினைந்து வயதிற்குட்பட்ட மாணவ, மாணவியர், கல்வி சம்பந்தமான சினிமாப் படங்களைத் தவிர மற்ற சினிமாப் படங்கள் பார்ப்பதைக் கட்டுப்பாடு செய்ய வேண்டும். தற்கால சினிமாக்களில் அநேகமாக எல்லாப் படங்களிலும் காதல் காட்சிகளை (எப்படி பிறரை வசப்படுத்துவது, கவனத்தைக் கவர்வது, காதல் மொழி பேசுவது, கண் ஜாடை காட்டுவது போன்றவை) தத்ரூபமாக பார்ப்பதால் மாணவ சமூகத்தின் ஒழுக்க நிலை கெடுவதற்கோ, தவறான பாதையில் செல்வதற்கோ அவை ஏதுவாகின்றன. ஆகவே, 15 வயதுக்குட்பட்டவர் சினிமா பார்ப்பதை நிறுத்த வேண்டும். மேலும் தற்போது சில பத்திரிகைகளில் பிரசுரமாகும் கீழ்த்தரமான செய்திகள் (பகல், இரவு-பாதைஇராணிகள், ராஜாக்கள், பருவப் பெண...காரில் ஜல்சா) பிரசுரிப்பதையும் தடை செய்ய அரசாங்கம் முன்வர வேண்டும். இவைகளைப் படிப்பதால் நல்லவர்களும் தவறான பாதையில் செல்ல வழி ஏற்படுகிறது.

சாத்தியமான இடங்களில் ஆண், பெண் மாணவர்கள் சேர்ந்து படிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், இளமையில் இரு பாலரும் ஒருவரை ஒருவர் அறிந்து சகோதர உணர்ச்சி மேலோங்கும். தற்போது இப்படிப்பட்ட சூழ்நிலை இல்லாததால் பெண்களைப் பார்த்தவுடனே, அவர்களைக் கேலி செய்யவோ, தவறான வார்த்தைகள் பேசவோ செய்கின்றனர். மாணவிகளுக்கு ஆசிரியைகள் நல்ல உதாரணமாக விளங்க வேண்டியவர்களாதலால், கலியாணமான ஆசிரியைகளையே பெண் பாடசாலைகளில் நியமிப்பது நல்லது.

மாணவ சமூகத்தை நல்வழி கொண்டு செல்ல அவர்களுக்கு (தத்தம்) மத போதனையும், நல்லொழுக்க பாடங்களும் கட்டாயமாக போதிக்கப்பட வேண்டும்.

திருச்செந்தூர். ரா. பாண்டுரங்கன்.

ஐயா,

ஒரு கூடை நல்ல மாம்பழத்தோடு சில அழுகல்கள் கலந்தால் அனைத்துமே கெடுவதுண்டு. கெடாவிடினும் அவையும் அழுகல் என்று தீர்மானிப்பதுமுண்டு. அதைப்போல ஒரு சில யுவ யுவதிகளால் எல்லோருமே குற்றம் சாட்டப்படுகின்றனர். மிகச் சிலரைத் தவிர, மற்ற பெண்கள் குடும்ப நன்மையை உத்தேசித்தே காலேஜில் படிக்கவும், வேலைக்குப் போக

வும் செய்கிறார்கள். அவர்கள் நிலைமை பரிதாபகரமானது. வீட்டிலும் வேலை செய்துவிட்டு, பஸ்ஸுக்கு கால் கடுக்க நின்று ஆபீஸிலும் வேலை செய்து, வீட்டுத் தொல்லைகளுக்கும் ஈடுகொடுக்கும் இந்தப் பெண்கள் ஆண்களைக்கவர்ச்சிக்க முயல இயலுமா? பொழுதுபோக்கை உத்தேசித்து, மேல் படிப்பு படித்து, வேலைக்குப் போகும் பெண்கள், வேளைக்கொரு உடையணிந்து, நடிகையைத் தோற்கடிக்கும் 'மேக்கப்'போடு நடந்துகொள்கிறார்கள். 'தன் அழகைக் கண்டு மயங்கி, பார்க்கிறார்கள்; பின்தொடர்கிறார்கள்' என்ற தவறான எண்ணம் கொண்டு புகழ்ச்சியில் மதிமயங்கி கெடுகிறார்கள். இதனால் பணக்காரப் பெண்கள் கெட்டவர்கள் என்று அர்த்தமில்லை. விதவித அலங்காரம் செய்துகொண்டு, அதைப் பிறர் புகழ்வதில் சந்தோஷம் கொள்ளும் பெண்களே சுலபத்தில் ஏமாறுகிறார்கள். ஆண்கள், எல்லாப் பெண்களையும் ஒரே விதமாகக் கருதி விஷமம் செய்கிறார்கள். படிக்கும் வாலிபர்கள் கீழ்த்தரமான செயல்களில் இறங்குவது, அவமானம் மட்டுமல்ல. பிற்காலத்தில் அவர்கள் வாழ்வையே பாதிக்கும். ஒரு பெண்ணை அவமானப்படுத்துவது தாய்க் குலத்தையே பழிப்பதாகும். தன்னில் பாதியான பெண்ணை அவமானம் செய்வது, தன்னையே அவமதித்துக்கொள்வதாகும். சட்டம், போலீஸ் இதெல்லாம் எதுவும் நடந்த பிறகு உதவிக்கு வரலாமே தவிர, அதற்குப் பயந்து கெட்ட செயல்கள் நிகழாமல் நின்றுவிடுமா? வாலிபர்கள், தம் மனச்சாட்சிக்குப் பயந்து நடக்க வேண்டும். எவரேனும் போக்கிரிகள் அநியாயமாய் நடந்தால் தடுக்க வேண்டும். பெண்களும் கேவலமான கவர்ச்சியில் கவனம் செலுத்தாமல், அடக்கத்தோடு நடந்துகொண்டு, பெண் குலத்தைப் பெருமையளிக்கலாம்.

மயிலாப்பூர். எம் எஸ். ராஜேஸ்வரி.

குற்றம் யாருடையது ?

ஐயா,

'மித்திரன்' 8-4-56 இதழில் வெளிவந்துள்ள 'தெருவில் துர்நடத்தை—யார் தவறு?' என்ற கட்டுரையைப் படித்தேன்; மிகவும் வருந்துகிறேன். ஓரிரு வாலிபர்கள் எங்கோ ஓரிடத்தில் பெண்களிடம் தகாத முறையில் நடந்து அவர்களைத் துன்புறுத்தியுள்ளார்கள் என்றால், அதற்காக, 'இன்றைய வாலிபர்களெல்லோருமே அத்தகைய புத்திஹீனர்கள் என்று முடிவு கட்டுவது முறையல்ல.

இன்றைய சினிமா உலக நாகரீகம் ம் சமூகத்திலே எவ்வளவு தூரம் திக்கம் செலுத்துகிறதென்பது, இக் லத்து நாகரீக யுவதிகளை ஆராய்ந்தாலே தெரியவரும். படத்தில் வரும் ஒரு கதாபாத்திரம்போல அவள் நடை, உடை பாவனையில் மாறிவிடுகிறாள். இந்தச் செய்கைக்கு அந்த யுவதியைக் குறை கூற முடியாது. ஒரு அழகன் அவளைக் காதலிக்க வேண்டுமானால், அவளிடம் காதல் கீதம் பாட வேண்டுமானால், எந்நேரமும் அவளுக்காக ஏங்கிப் பெருமூச்சு விடவேண்டுமானால் அவள் அப்படித்தான் நடந்துகொள்ள வேண்டுமென்று சினிமா உலகம் அவளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கின்றது. இத்தகைய நடவடிக்கைகள்தான் சிறந்த வாழ்க்கைத்துணைவனை அடைய வழியென்றால், அடக்கமான குணம் படைத்த புத்திசாலியான அழகிகளின் நிலையென்ன?

இந்த மனப்பான்மை சமீபகாலத்தில் எவ்வளவு தூரம் அதிகரித்து விட்டிருக்கிறது என்பதை, இப்பொழுது ஏராளமாக விற்பனையாகும் செயற்கை அழகு சாதனக் 'கருவி'களைக் கொண்டு நன்கு அறிந்துகொள்ளலாம். இன்றைய ஒவ்வொரு ஆடவனும் கண்ணில் தென்படும் அழகிகளைச் சந்தேகத்துடனேயே பார்க்கிறான். இயற்கை அழகியா, அல்லது எல்லாம் 'மேக்கப்' வேலையா? என்ற அர்த்தம் தொனிக்கப் புருவத்தை நெரிக்கிறான்....இதில் வருந்தத்தக்க விஷயம், படித்தவர்கள், படிக்காதவர்கள், பணக்காரர்கள், ஏழைகள், ஆஸ்திகர்கள், நாஸ்திகர்கள் என்ற பாகுபாடின்றி மக்கள் எல்லோரிடையிலும் இந்த நாகரீக மோகம் புகுந்து, அவைகளினால் நன்மை ஏற்படுவதற்குப் பதில் தீமைக்கு இடமளிப்பதுதான்! விஷம்போல் ஏறிவரும் இந்த நாகரீக வளர்ச்சி எங்கு போய் முடியும் என்று யோசிப்பதைவிட, இதனால் நம் நாட்டின் பண்பாடும் கலாசாரமும் நிலைத்து வளர முடியுமா என்பதே சிந்திப்பது அவசர அவசியம். வாழ்க்கையில் நாகரீக வளர்ச்சி ஓரளவுக்கு அவசியம் தேவை என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் இம்மாதிரியான மட்டரகமான முறையில் கவர்ச்சியை வெளிப்படுத்தும் கீழ்த்தரமான செய்கைக்கு எந்த விதமான சமாதானமும் கூற முடியாது. இந்த உண்மையை 'சுமங்கிலி' அவர்களும் உணர்ந்து கொள்வாராக.

ஜமால்பூர் ஓர் நலம் விரும்பி.

ஐயா,

தவறு நம் ஆண், பெண்களின் மீதோ, அவர்கள் படிப்பின் மீதோ இல்லை. நம் சமூகத்தினருக்கு ஒரு ஆண், ஒரு பெண் இருவரையும் சேர்ந்து பார்த்தால் அதை சந்தேகக் கண்கொண்டு பார்க்காமல் இருக்க முடியவில்லை. உதாரணமாக, இந்த மாதிரி 'துர்நடத்தை' வட இந்தியாவைவிட நம் தென்னிந்தியாவில்தான் அதிகம் என்பது நான் அனுபவபூர்வமாகக் கண்ட உண்மை. ஒரு பெண் டில்லியில் பஸ்ஸில் தனியாக எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் செல்லலாம்; ஆனால், இதுவே சென்னையில் முடிவதில்லை. இது தென்னிந்தியாவில், ஆண், பெண் சேர்ந்து பழகுவதற்கு இயலாத கட்டுப்பாட்டினால்தான்.

நான் படிக்கும் காலேஜில் ஆண், பெண் இரு பாலாரும் அனுமதிக்கப்படுகின்றனர். மேலும், சேர்ந்த ஒரு மாதத்திற்குள் இங்குள்ள ஆசிரியர்கள் (ஆண், பெண் இருவரும்) பாடுபட்டு, எங்கள் எல்லோரையும் ஒரு குடும்பத்தினர் போன்று பழகச் செய்து விடுகின்றனர். அதனால், இப்பொழுது எங்களுக்கெல்லாம் நாங்கள் பேசிக்கொண்டிருப்பது ஆணுடனா பெண்ணுடனா என்றே பார்க்கத் தோன்றுவதில்லை இந்த மாதிரி நிலையில் துர்நடத்தைக்கோ, மற்ற கீழ்த்தர எண்ணங்களுக்கோ இடமில்லை.

மேலும், மற்ற கல்லூரி மாணவர்களும், நான் கண்டவரை, தமது காலேஜ் மாணவிகளிடம் மோசமாக நடந்து கொள்வதேயில்லை. அவர்கள் அட்டகாசமெல்லாம் முன்பின் தெரியாத பெண்களிடம்தான்.

இவ்விரண்டு கூற்றுகளினின்றும் நிதர்சனமாகத் தெரிவதென்னவென்றால், துர்நடத்தைக்கெல்லாம் ஆதி காரணம் அதிகக் கட்டுப்பாடுதான். ஆண்களும் பெண்களும் நம் காலேஜ்களில் அண்ணன் தங்கைபோல் பழகிவிட்டால், வருங்கால இந்தியாவில் இப்பேற்பட்ட, அவமானப் படக்கூடிய விஷயங்கள் நடைபெறா. நிற்க.

தற்கால இந்தியாவில் மோசமாக நடப்பவர்களைப்பற்றி ஒரு வார்த்தை. இப்பொழுது டில்லியில் ஒரு புது போலீஸ் சட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது. அதன்படி, தெருவில் எந்த ஆண்மகனாவது மோசமாக நடந்துகொண்டால் ஒரு பெண் இந்தச் சட்டத்தின் உதவியை நாடலாம். அந்த சட்டத்தின்படி, அந்த ஆணைக் கைது செய்யவோ, தண்டிக்கவோ போலீஸாருக்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் வந்த பிறகு பெண்களுக்கு தெருவில் தொந்தரவு வெகுவாகக் குறைந்துவிட்டது. இதைச் சென்னையிலும் அமுலுக்குக் கொண்டு வந்து பார்க்கலாம்.

புது டில்லி. சரோஜா



தகப்பனார்:—நான் உனக்கு ஒரு குட்டிக்கதை சொல்லட்டுமா? 'பூனை அப்பம் திருடிய கதை?'

பையன்:—சொல்லு! நீ சொல்லி முடித்த பின், உனக்கு நான் ஒரு நல்ல துப்பறியும் கதை சொல்றேன்!

நிலைக் கண்ணாடியின் முன் அமர்ந்து
ன் அழகுக்கு அழகு சேர்த்துக்கொண்
ருந்தாள், நட்சத்திர நடிகை ரூபவதி.
பவதியை அப்போது பார்ப்பவர்கள்
த்தமாக இருபது வயதுக்கு மேல் மதிப்
ட மாட்டார்கள். அவளுக்கு வயது
ப்பதாகியும் இன்னும் இளமை மாற
ில்லை. ஒரு வேளை இளமை அவளிடம்
ரஞ்சீவித்துவம் அடைந்து விட்
தோ?...ஆம்! அவள் வர்ணனைக்கு
கத்தவள்தான்; குற்றங் குறை காண
டியாத அழகு படைத்தவள்தான். தன்
ழகைப்பற்றி அவளுக்கே சற்று
பருமை! நியாயந்தானே? கண்ணாடியின்
ன் அமர்ந்துவிட்டால் அவளுக்கு நேரம்
பாவதே தெரியாது. தன் அழகைத்
ானே ரசித்துக்கொண்டிருப்பாள்; அவ்
ளவு ரசிகத்தன்மை படைத்தவள்!

கதவு திறக்கப்படும் ஓசையைத்
தாடர்ந்து, வேலைக்காரியின் உருவம்
வளுக்கு கண்ணாடியில் தெரிந்தது.

"யாரோ நித்தியானந்தமாம்...உங்
களைப் பார்க்க வேண்டுமென்று வந்திருக்
ிறார். முன் ஹாலில் உட்கார வைத்திருக்
ிறேன்" என்றாள் வேலைக்காரி.

"சரி!"—அலட்சியம் தொனித்தது அவ
து குரலில்.

அபரிமிதமாகக் கொட்டிக்
டக்கும் பணத்தை எப்படி
ப்படிச் செலவு செய்வது எனத்
தரியாமல் சிலர் சினிமா உலகில் அடி
டுத்து வைக்கிறார்கள் அல்லவா? அப்
டிப்பட்டவரில் சமீப காலத்திய
சர்க்கைதான் நித்தியானந்தம். சிறு
யது முதற்கொண்டே சினிமா, நாடகம் என்றால் அவருக்கு ஒரே பைத்தியம். அந்தப் பைத்தியம் நாளடைவில் முற்றிக் கொண்டே வந்து, படத் தயாரிப்பில் நின்றது. பிரபலமான நாடகம் ஒன்றைப் படமாகத் தயாரித்து வெளியிட்டார் நித்தியானந்தம். அவரது முதல் முயற்சி நல்ல பலனோடு, அவருக்குப் புகழையும் சம்பாதித்துக் கொடுத்தது. அதிலிருந்து படவுலக முன்னேற்றத்திற்காகவும், கலா சேவைக்காகவும் முழுக்க முழுக்கப் பாடுபடுவதென அவர் தீர்மானித்து விட்டார். சினிமா உலகத்தில் நிறைந்திருந்த பணக்காரர்களில் விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள்தானே உண்மையில் கலைக்காகப் பாடுபடுபவர்கள்? அதில் நமது நித்தியானந்தமும் ஒருவர். பணம் செலவழிந்தால் பரவாயில்லை, எப்படியும் சிறந்த படங்களையே தயாரித்து வெளியிடுவதென அவர் கங்கணம் கட்டிக்கொண்டார். நித்தியானந்தம் இன்னொரு முக்கியமான விஷயத்தில் விசேஷ கவனம் செலுத்தினார். தன்னைப் போலவே கூடுமான வரையில் நடிக, நடிகைகள் ஒழுக்கமுள்ளவர்களாய் இருக்க வேண்டுமென்று அவர் விரும்பினார்.

"இதென்ன நடக்கிற விஷயமா?" என்று இரண்டொரு முதலாளிகள்கூட அவரைக் கிண்டல் செய்தனர்.

"முடிந்த வரையில் முயற்சிக்கிறேன்... என்னால் முடியவில்லை என்றால் கலைக்கு ஒரு முழுக்கு போட்டுவிட்டுப் போய் விடுகிறேன்!" என்பார் நித்தியானந்தம்.

பரிதாபத்தோடு அவரைக் கவனித்தனர் மற்ற முதலாளிகள்.

முதல் படம் வெற்றிகரமாகவே இன்னும் ஓடிக்கொண்டிருந்தது. இரண்டாவது படத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கிவிட்டார் நித்தியானந்தம். சொன்னதைச் செயலில் காண்பிக்க வேண்டாமா?

ரூபவதியைப்பற்றி எல்லோரும் நல்ல விதமாக அபிப்பிராயம் சொன்னார்கள், 'திரை உலகக் கதாநாயகிகளுள் அவள் மிகவும் நல்லவள், ஒழுக்கமானவள்' என்று. அப்படிப்பட்ட ஒரு நடிகை தனக்கு உதவி செய்தால் தன் லட்சியமும் ஒரு வகையாக நிறைவேறும் என்ற நம்பிக்கை நித்தியானந்தத்திற்கு! அதனால் அவர் ரூபவதியைத் தேடிக்கொண்டு வந்தார்!

"மன்னிக்க வேண்டும்! உங்களை அதிக நேரம் காத்திருக்கச் செய்துவிட்டேன்..." என்று வாய் மலர் தேன் துளிகளைச் சிந்த ரூபவதி வந்தாள்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. நான் வந்து சில நிமிஷங்கள்தான் ஆயின..."

"தங்களைப்பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் சந்திக்கும் வாய்ப்பு இதுவரை கிட்டவே இல்லை...என்னால் தங்களுக்கு ஏதாவது..."

"உங்கள் 'ஊர்வசியின் சபதம்' என்ற படத்தைப் பார்த்தேன். எனக்கு உங்கள் நடிப்பு பிடித்திருந்தது. அதனால் எனது அடுத்த படத்திற்குத் தங்களைக் கதாநாயகியாகப் போடலாமென்று..."

"அதற்கென்ன? உங்களைப் போலுள்ள புரொட்யூசர்களிடம் நான் வேலை செய்யக் கொடுத்துவைத்திருக்க வேண்டுமே... !"

"ரொக்கமாகப் பணம் கொடுத்து விடுகிறேன். பிறகு நீங்கள் காண்ட்ராக்டில் கையெழுத்துப் போட்டால் போதும்!"

"பணத்திற்கு என்ன அவசரம் இப்போது? அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்...உம்...என்ன கதையைத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள்?"

"நளாயினி...அதனால்தான் உங்களைத் தேடி வந்தேன். அந்த பாகத்தை ஏற்று நடிப்பவர் கூடுமான வரை, அதற்குப் பொருத்தமானவராக இருக்க வேண்டாமா?"

"எந்த வகையில் சொல்கிறீர்கள்?"— ரூபவதி கேட்டாள் இப்படி.

"ஏன், வேஷப் பொருத்தம், குணப் பொருத்தம் ஆகியவைகளைப்பற்றித்தான் சொல்கிறேன்..."

"நீங்கள் என்னை மிகவும் புகழ்கிறீர்கள்..."

"அதெல்லாம் ஒன்றுமில்லை...இன்னொரு விஷயம்...நீங்கள் அதில் எனக்கு மிகவும் உதவி புரிய வேண்டும்."

"என்ன?"



“‘கலை உலகில் கண்ணியமானவர்கள் இல்லை’ என்பது வெளி உலகத்தோரின் குற்றச்சாட்டு. அதனால், நம்மால் முடிந்த வரை கலை உலகை இந்தக் குற்றச்சாட்டிலிருந்து தவிர்க்க வேண்டும்...”

“அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?”

“எனக்கு உங்கள் உதவியையும், உழைப்பையும் தந்தால் போதும்...தவறி நடக்கும் யாரையும் சினிமா உலகில் அடியெடுத்து வைக்காமல் செய்ய வேண்டும் என்பது என் கொள்கை...உங்களைப் போன்ற பிரபல நடிகைகளின் ஆதரவு இருந்தால் எதுதான் முடியாது?”

“கலை உலகை சீர்திருத்த வேண்டும் என்பதுதான் என் நோக்கமும்கூட... நான் ஒருத்தி இருந்துகொண்டு என்ன செய்ய முடியும்? உங்களைப்போன்ற பணக்காரர்கள் மனதுவைத்தால் எதுதான் முடியாது? என் பூரண ஆதரவு உங்கள் கொள்கைக்கு...போதுமா?”

“பரம திருப்தி...ஆமாம், நமது படத்திற்கு கதாநாயகனை யாரைப் போடலாம்...நீங்களாக யாரையாவது சொல்லுங்களேன்” என்றார் நித்தியானந்தம், அவள் நோக்கத்தை அறிய.

“ஏன், என்னுடன் எல்லா படங்களிலும் கதாநாயகனை நடித்துவரும் ஆனந்தனைப் போட்டால் என்ன?”

“பார்த்துப் பார்த்து அலுத்துப் போயிருப்பார்கள் ரசிகர்கள். அதனால், வேறு நபரை உங்களுக்கு ஜோடி சேர்க்கலாம் என்று நினைக்கிறேன்... நான் சொல்லும் பேர்வழி சினிமா உலகத்திற்குப் புதியவன்; இப்போது நாடகத்தில் நடித்துக்கொண்டிருக்கிறான். பெயர் ராஜன்! நீங்கள் உடன்பட்டால் அவனை உங்களுடன் நடிக்கச் சொல்லலாமென்று பார்க்கிறேன்...”

“எனக்கு எவ்வித ஆக்ஷேபணையும் இல்லை...நீங்கள் எது சொன்னாலும் நான் ஏற்கத் தயார்!”

“சரி...நான் பிறகு வந்து உங்களைப் பார்க்கிறேன்!... உம்... நாளைக்குக்கூட ராஜன் ஒரு ஸ்பெஷல் நாடகத்தில் நடிக்கப்போவதாக ஞாபகம்... நீங்க கொஞ்சம் போய்ப் பார்த்தா தேவலை...”

“நல்லது.”

நித்தியானந்தம் விடை பெற்றுக்கொண்டு போய்விட்டார்.

“கலை உலகை சீர்திருத்தக் கிளம்பியிருப்பவர்களில் இவரும் ஒருவர்...பார்ப்போமே, இவர் சீர்திருத்தம் எவ்வளவு தூரத்தில் போய் நிற்கிறதென்று? சரி... நீ போய் ஆனந்தனை இன்றிரவு சாப்பாட்டுக்கு இங்கு வரச் சொல்” என்றாள் ரூபவதி தன் வேலைக்காரியிடம்.

ஆனந்தன் அவளுடைய காதலன்!

ரூபவதியைப்பற்றி சில வார்த்தைகள். ரூபவதி சினிமா உலகில் அடியெடுத்து வைத்ததே அவளுடைய கணவனது வற்புறுத்தலின் பேரில்தான்! தன் மனைவிக்கிருக்கும் அழகுக்கு, சினிமாவில் சேர்ந்தால் நிறையப் பணம் சம்பாதிக்கலாம் என்ற ஆசை அவனுக்கு. அதனால் என்ன விளைவுகள் பின்னால் நேரப்போகின்றன என்பதைப்பற்றி அவன் முதலில் யோசித்துப் பார்க்கவே இல்லை. பணம்

என்னவோ எதிர்பார்த்தது போலத்தான் வந்தது. ஆனால் மன நிம்மதி எப்போதோ அவனிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு போய்விட்டது.

“போதும் இந்த வாழ்வு!” என்றான் ரூபவதியிடம் ஒரு நாள் அவன்.

அப்போது அவள் புகழ் ஏணியின் உச்சியில் இருந்தாள். பணத்தையும், புகழையும் ஒருங்கே இழக்க அந்தப் ‘பத்தினித் தெய்வம்’ தயாராக இல்லை. அதனால் ஏற்பட்ட தகராறில் அவன் அவளிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு போய்விட்டான். ஆனால், அவளோ, கணவன் இறப்பதற்கு முன்பே விதவைக் கோலம் பூண்டாள். படத்தில் நடிப்பதைப்போல வாழ்க்கையிலும் நடித்தாள். அதனால் அவளுக்கு வெளியில் நல்ல பெயர், மரியாதை எல்லாம்! இப்படிப்பட்டவளின் துணையை நித்தியானந்தம் தேடியதில் ஆச்சரியமென்ன இருக்கிறது? அனுபவத்தில் இவளைப் போல் பல சீர்திருத்தக்காரர்களை அவள் பார்த்திருக்கிறாள். . . சந்தித்திருக்கிறாள்!

ரூபவதி ஆரம்பத்தில் ராஜனைப் பற்றித் தப்புக் கணக்குத்தான் போட்டுவிட்டாள். யாரோ ஒரு நாடக நடிகனை முன்னுக்குக் கொண்டு வர நித்தியானந்தம் முயற்சிக்கிறார் என்று அவள் நினைத்தாள். ராஜனின் நடிப்பை அவள் பார்த்த பின், அந்த எண்ணத்தை அவள் மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. அவ்வளவு நன்றாக நடித்தான் ராஜன். சந்தர்ப்பம் மட்டும் சரியாக அவனுக்கு அளிக்கப்பட்டுவிட்டால், திரையுலகக் கதாநாயகர்களை அவன் வெகு சீக்கிரம் விழுங்கி ஏப்பம் விட்டுவிடுவான் போலிருந்தது.

‘நித்தியானந்தம் சரியான ஆளைத்தான் பிடித்திருக்கிறார். கலை யாரிடம் இருக்கிறது என்பதை அவர் நன்றாக அறிந்திருக்கிறார்’ என்று நினைத்துக் கொண்டாள், ராஜனின் அபார நடிப்பில் மனதிழந்த ரூபவதி.

ராஜனிடம் நடிப்போடு நல்ல முகவெட்டும் இருந்தது. அவனைப் பார்த்தவுடன் நித்தியானந்தம் திருப்தி அடைந்ததில் ஆச்சரியமென்ன இருக்கிறது?

ரூபவதி சொல்லி அனுப்பியதுபோல ராஜன் நாடகம் முடிந்தவுடன் அவளை அவள் வீட்டில் சந்தித்தான்!

ஆரம்பத்தில் சிறிது நேரம் மௌனம் நிலவியது. யார் முதலில் பேச்சை ஆரம்பிப்பது என்ற மனக் குழப்பம்தான் காரணம். பிறகு ரூபவதியே பேச ஆரம்பித்தாள்:

“எனக்கு உங்களுடைய நடிப்பு மிகவும் பிடித்திருக்கிறது. நான் நித்தியானந்தத்திடம் சொல்கிறேன். அவர் எடுக்கப்போகும் படத்துக்கு நான்தான் கதாநாயகி. உங்களுக்கு என்னுடன் நடிக்கச் சம்மதம்தானா. . . ?”

“உங்களுடன் நடிக்கவா. . . ? உங்களுடன் ஒரு படத்தில் நடிக்க வேண்டும் என்பதுதானே என் வாழ்வின் லட்சியம்! அது மட்டும் ஈடேறிவிட்டால். . . அடேயப்பா! . . . பிறகு என்னைப்போல் பாக்கியசாலிகள் யாரும் உலகில் இருக்க மாட்டார்கள்.”

ரூபவதி முறுவலித்தாள். ராஜன் தொடர்ந்தான்: “உங்களைப் போன்ற ஒரு பிரபல நட்சத்திரத்துடன் நான் நடித்துவிட்டால், வெகு சீக்கிரம் பிரபலமடைந்துவிட மாட்டேனா?”

அவன் நோக்கம், ஆசை இன்னும் எதைப்பற்றியெல்லாமோ ராஜன் நிறுத்தாமல் பேசிக்கொண்டே போனான். அவன் பேசுவதுகூட ரூபவதிக்குப் பிடித்திருந்தது. பேச்சின் நடுவே அவளுக்கு ஒரு சந்தேகம். . .

“உங்களுக்குக் கல்யாணமாகிவிட்டதா?” என்றாள்.

“மனைவியோடு, ஒரு குழந்தையும் இருக்கிறது” என்றான் ராஜன்.

“அதனால் என்ன? நீங்கள் இங்கே அடிக்கடி வாருங்கள். . . உங்கள் மனைவி இதற்குத் தடை போட மாட்டாளே. . ?”

இப்போது ரூபவதி ராஜனின் தோளின் மீது கை வைத்திருந்தாள். ராஜனுக்கு என்னவோ போலிருந்தது.

“அவள் மிகவும் நல்லவள். . என் முன்னேற்றம்தான் அவள் விருப்பம். . . நீங்களும் ஒரு நாள் எங்கள் வீட்டுக்கு வாருங்களேன்”. ராஜன் அவளிடமிருந்து விலகி அமர்ந்தான்.

“அவசியம் வருகிறேன். உங்கள் மனைவியையும் இங்கு அழைத்து வாருங்கள்!”

“சரி! நான் வருகிறேன்.”

ராஜன் அங்கிருந்து புறப்பட்டுவிட்டான். ‘திரையுலக கதாநாயகிகள் எல்லாம் இப்படித்தான் இருப்பார்களோ?’ என்று அவன் மனம் எண்ணியது, ரூபவதியின் நடத்தையைக் கண்ட பிறகு.

நான் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். நீ அவனுக்கென்ன அவ்வளவு ஆதரவு காட்டினாய்?” என்றான் ஆனந்தன்.

“நன்றாக நடிக்கிறான். முகவெட்டும் இருக்கிறது. ஆதரவு காட்டினால் முன்னுக்கு வந்துவிட மாட்டானா? வரட்டுமே!”

“அவன் முன்னுக்கு வரட்டும். எனக்கொன்றும் பொறாமையில்லை! அதனால் தான் இப்படியெல்லாம் பேசுகிறேன், என்று நினைக்காதே! ஆனால் ஒன்றை நீ மறந்துவிட்டாய். . .”

“என்னது?” ரூபவதி அலட்சியமாகக் கேட்டாள்.

“உனக்குப் பணத்தின் மேலும், புகழிலும் ஆசை இருக்கிறதல்லவா?”

“ஏன். . . இருக்காதா? இருக்கிறது!”

“ஒரு படத்தில் பெயர் வராவிட்டால், பிறகு புகழ் இருக்கும் இடம் தெரியாமல் ஓடி ஒளிந்துகொள்ளும். . . . . அதைத் தேடிக் கண்டுபிடிக்க வெகு நாட்களாகும் . அதுவரை நீ பட உலகத்தில் இருக்கப்போகிறாயா என்பது சந்தேகந்தான்!”

“நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?”

“என்ன சொல்கிறேனா? ராஜன் உன்னுடன் நடித்தால், பெயர் வாங்கிக் கொண்டு போகப்போவது அவன்தானே ஒழிய நீ அல்ல! அவன் நடிப்பு எல்லோரையும் கவரத்தான் போகிறது.

அதில் சந்தேகமேயில்லை. ஜனங்கள் உன்னைக் கவனிக்காமல் இருந்தால், உடனே மறந்துவிடுவார்கள். அது அவர்கள் வழக்கம். பிறகு. . . ?"

"நீங்கள் சொல்வதன் கருத்தை நான் இப்போதுதான் புரிந்துகொண்டேன். ஆம்! நான் என் நிலையைப்பற்றி யோசிக்கவே இல்லையே. . . அவன் நடிப்பின் முன் என் நடிப்பு சோபிக்காது என்பது வாஸ்தவமே. . . சோபிக்காவிட்டால் எப்படிப் பெயர் வரும்?"—ரூபவதியின் குரலில் வருத்தம் தெரிந்தது.

"அதைத்தான் உன்னை யோசித்துப் பார்க்கச் சொல்கிறேன். ராஜனை சிபார்சு செய்வதன் மூலம், உனது மறைவுக்கு நீயே கோடி கட்டிக்கொள்ளாதே!"

நித்தியானந்தம் ரூபவதியின் பங்களாவுக்கு வரும்போது ராஜனை அழைத்துக்கொண்டு வரவில்லை. கதாநாயகியின் அபிப்பிராயத்தைக் கேட்டறிந்துகொண்டு, பிறகு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொள்ளலாம் என்பது அவர் எண்ணம். மேலும் ராஜனைப்பற்றி அவர் ஒரு முடிவுக்கு வந்திருந்தார். அதைத்தான் ரூபவதி ஆதரிக்கப் போகிறாள் என்று அவர் திடமாக நம்பியிருந்தார்.

ரூபவதியின் வரவேற்பில் தெம்பில்லை.

"இன்றுதான் நான் ஊரிலிருந்து வந்தேன். வந்தவுடன் நேராக இந்த விஷயத்தைக் கவனிக்க ஓடிவந்தேன். . . நீங்கள் நான் சொன்னதுபோல் நாடகத்திற்குப் போயிருந்தீர்களா. . . ராஜனின் நடிப்பு எவ்வாறிருந்தது? அவனைக் கதாநாயகனாகப் போட்டால் படம் சோபிக்குமா...? உங்கள் அபிப்பிராயத்தின் மேல்தான் எனது திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். . ."—நிறுத்தாமல் சற்று நேரம் பேசிக்கொண்டே போனார் நித்தியானந்தம்.

"நாடகத்திற்கு நான் போயிருந்தேன். ராஜன் நன்றாகத்தான் நடிக்கிறார். நடிப்பில் எந்த வகையான குறையும் சொல்ல முடியாது. . ."

"ஏன், அவன் நல்ல பையன்தானே?"

"நடிப்பு மட்டும் இருந்தால் உங்களுக்குப் போதுமா?"—ரூபவதி கேட்டாள்.

"ஒழுங்கானவனாயும் இருக்க வேண்டும். அதனால்தானே நான் எல்லோரையும் ஒதுக்கிவிட்டு ராஜனைப் பொறுக்கினேன்."

"அவர் ஒழுக்கமானவர் அல்ல. . என்பது என் அபிப்பிராயம்."—குண்டு வெடிக்காமல் போகாது என்று அவளுக்குத் தெரியும். அதனால் அதை நிதானமாக வீசினாள்!

"என்ன நீங்கள் அப்படிச் சொல்கிறீர்கள்? அவனுக்குக் கல்யாணம்கூட ஆகிவிட்டதாகச் சொன்னார்களே?"—அவர் பதட்டத்தோடு பேசினார்.

"நான்கூட அவர் நடத்தையைப்பற்றி சந்தேகிக்கவே இல்லை...அவர் என்னிடமே தகாத முறையில் நடந்துகொள்ள முயற்சித்ததனால்தான் நான் இந்த முடிவுக்கு வர நேர்ந்தது!"

"என்னது? உங்களிடமேயா? அவனை நான் என்ன செய்கிறேன் பாருங்கள்!"—

"போகட்டும் விடுங்கள்... நம் படத்தில் அவருக்கு சான்ஸ் இல்லாமல் செய்துவிட்டால் போகிறது!"—சாந்தமாகப் பேசினாள் கதாநாயகி.

"நம் படத்தில் மட்டுமா...சினிமா உலகில் அவன் காலடி எடுத்து வைத்து விடுவானா? பார்க்கிறேன்...அவனை முன்னுக்குக் கொண்டுவரலாம் என்று நினைத்த என் ஆசையில் மண்ணை அள்ளிப் போட்டுவிட்டானே!"

"வேறு நபர்கள் இருக்கும்போது நமக்கு ஏன் வீண் கவலை. ராஜனில்லாவிட்டால், படம் எடுப்பதா நிற்கப் போகிறது?"

"அப்படியொன்றுமில்லை. . .நீ ங் க ள் சொன்னீர்களே அதன்படி ஆனந்தனையே கதாநாயகனாகப் போட்டுவிடலாம்... அவருக்குச் சொல்லி அனுப்புங்கள். நான் பிறகு வருகிறேன்" என்று கூறிவிட்டு நித்தியானந்தம் அங்கிருந்து புறப்பட்டார். அவர் மனதே சரியாக இல்லை. ராஜன் இவ்வாறு செய்வான் என்று அவர் எதிர்பார்த்திருந்தால் அல்லவா?

சினிமா உலகத்தில் சீர்திருத்தம் செய்ய ஆரம்பித்திருக்கும் நித்தியானந்தம், 'தெரியாமல்கூட நடத்தை தவறியவனை, ஒழுக்கமில்லாதவனை, ஆதரிக்க மாட்டார்' என்று ரூபவதியும் ஆனந்தனும் ஊகித்தது சரியாகப் போய்விட்டது! இப்படிப்பட்டவர்கள் இருக்கும்போது, நித்தியானந்தம் போன்றவர்கள் கொள்கையில் வெற்றி பெற முடியுமா என்ன?

எழுத்துலகம்

எஸ். ராஜா

சாதாரணமாகத் தமிழில் முதல் நாவல் என்று பி. ஆர். ராஜமையரின் கமலாம்பாள் சரித்திரத்தைத்தான் சொல்வது வழக்கம். சற்றேறக்குறைய அதே சமயத்தில் எழுதப்பட்டதுதான் அ. மாதவையாவின் பத்மாவதி சரித்திரமும். இவை இரண்டிற்கும் முன் எழுதப்பட்ட நாவல் வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரம்.

கமலாம்பாள் சரித்திரத்தை ஆலிவர் கோல்ட்ஸ்மித்தின் 'விகார் ஆஃப் வேக்ஃபீல்டு' என்னும் ஆங்கில நாவலைப் பின்பற்றித்தான் எழுத முயன்றார் ராஜம் ஐயர். அது தொடர் கதையாக 'விவேக சிந்தாமணி' எனும் மாதப் பத்திரிகையில் வெளி வந்தது. ராஜமையரின் பெயரில்லாமல் அது வெளி வந்துகொண்டிருந்தபோது "நன்றாக இருக்கிறது, நன்றாக இருக்கிறது" என்று சொல்லிப் படித்துக்கொண்டு வந்தவர்களில் ராஜம் ஐயரின் தகப்பனாரும் ஒருவர். ஆனால் எழுதியது ராஜம்தான் என்று தெரிந்தவுடன், "ஐயய்யே!" என்று அவர் தகப்பனார் அதைப் படிப்பதையே நிறுத்திவிட்டாராம். வேறு யாராவது புகழ்ந்து சொன்னாலும்கூட "ஆமாம்! எழுதினான்!" என்று அலக்ஷியமாகச் சொல்லுவாராம்.

ராஜம் ஐயருக்கு 13 வயதில் விவாஹமாயிற்று. அப்போது அவர் மனைவிக்கு வயது 9. 1872-ல் பிறந்த இவர் தன்

26-வது வயதில் அல்பாயுஸாக மாண்டு போனார். இல்லறத்தில் அவ்வளவாக ஈடுபாடு இல்லாத ராஜம் ஐயர் இளம் வயதிலேயே வேதாந்தியாகிவிட்டார். துறவில் நாட்டம் கொண்ட இவர், எப்போதும் பலதரப்பட்ட பைத்தியக்கார சேஷ்டைகள் எல்லாம் செய்துகொண்டேயிருப்பாராம். தனிமையில் உட்கார்ந்துகொண்டு கண்ணீர் உகுப்பது அவருக்குப் பிரியமான பொழுது போக்கு. சதா, 'நாராயண மஹா தேவ சம்போ' என்று கூறிக்கொண்டேயிருப்பாராம். கையில் ஒரு வெண்கல பூஜை மணியை வைத்துக்கொண்டு அதைக் காதருகில் கொண்டுபோய் ஆட்டி அதன் நாதத்தைக் கேட்டுக்கொண்டே பொழுது போக்குவாராம். கமலாம்பாள் சரித்திரத்தின் பிற்பகுதி சிதம்பர தரிசனமாக இருப்பதற்குக் காரணம் அவர் வேதாந்தப் பற்றுத்தான். பிரபுத்த பாரதா என்கிற ஆங்கில வேதாந்த சஞ்சிகையை ஆரம்பித்துத் திறமையுடன் நடத்தியவர் அவர்தான். அவருடைய வேதாந்த கட்டுரைகள் ஆங்கிலத்தில் 'ராம்பிள்ஸ் இன் வேதாந்தா' என்கிற தலைப்பில் பிரசுரமாகியிருக்கின்றன.

கடைசி நாட்களில் அவர் வயிற்றுக் கோளாறினால் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கும்போது, கமலாம்பாள் சரித்திரத்தின் பிரசுர உரிமையைக் கேட்டு அவர் பிரசுரகர்த்தர் அடிக்கடி வந்து போவாராம். கூட இருந்த உறவினர்கள் பிரசுரகர்த்தரைக் கடிந்துகொண்டனர். இது பல நாள் ராஜம் ஐயருக்குத் தெரியாது. இறப்பதற்கு இரண்டு நாள் முன்னதாகப் பிரசுரகர்த்தர் வந்து கண்டனத்துக்குள்ளாகித் திரும்பும்போது, அதைக் கவனித்து அவரைத் திருப்பிக் கூப்பிட்டு உரிமையை எழுதித் தந்தாராம் ராஜம் ஐயர்.

சாகிற சமயத்தில் அவரை "உன் பெண்டாட்டியின் கதி என்னவாகிறது?" என்று சிலர் கேட்டதற்கு, அவர் பின்வருமாறு பதிலளித்தாராம்: "நானா அவளை இவ்வுலகத்திற்கு அழைத்து வந்தேன்? அவளை இங்கு அனுப்பிய பரமசிவன் வழி ஏதாவது செய்வான்". அவர் மனைவி அவருக்குப் பின் வெகு காலம் உயிருடனிருந்தார்.

ராஜம் ஐயர் பி. ஏ. படித்துப் பாஸ் செய்தவர். பி. எல். பரீக்ஷையும் எழுதினார்; ஆனால் தேறவில்லை.

காதல் பாதை

வெ.கிருஷ்ணமூர்த்தி

நான் கோயமுத்தூரில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியின் தலைமை ஆசிரியராக இருந்த சமயம் அது. நிலவு பொழியும் பௌர்ணமி இரவு. சாப்பிட்டுவிட்டு மொட்டை மாடியில் எல்லோரும் அரட்டையடித்துக்கொண்டிருந்தோம். உறவினர்கள் பலர் வந்து தங்கியிருந்தனர். அவர்களோடு ஆற அமரப் பேச எனக்குக் கிடைக்கும் அவகாசம் இரவு தான். பேச்சு ரொம்ப சுவாரஸ்யமாக ஓடிக்கொண்டிருந்தது.

திடீரென்று நாலைந்துபேர்கள் "ஸார், வாத்தியார் ஸார்! ஹெட்மாஸ்டர் ஸார், உங்களைத்தான் ஸார்! உடனே கதவைத் திறவுங்கள் என்று உரத்த குரலில் கூறிக் கதவை தடதடவென்று தட்டினார்கள். என்னவோ ஏதோ என்று அலறிப்புடைத்துக் கொண்டு கீழே வந்து கதவைத் திறந்தேன். மாணவர்கள் கூட்டமாக வந்திருந்தனர். நான் வாய் திறப்பதற்கு முன்பே, மூச்சு தடுமாறிக்கொண்டே, "ஸார், ஸார், பாருங்க ஸார், நம்ப கன்னியப்பனில்லை ஸார், அவன் வந்து மேலத் தெரு சாப்பாட்டு விடுதி முதலாளி சுப்புச்சாமி சேர்வையையும், அவரது மனைவியையும் கத்தியால் குத்திவிட்டு போலீஸ் ஸ்டேஷனைப் பார்க்க ஓடிவிட்டான்,ஸார். எங்களுக்கெல்லாம் ரொம்பப் பயம் ஸார். நீங்கள் நேரில் வந்து கவனித்தால் நல்லது ஸார்" என்றார்கள்.

நான் உடனே அவர்களைப் பின் தொடர்ந்து சைவ போஜன விடுதிக்கு விரைந்து சென்றேன். வாசலில் ஒரே கூட்டம். ஏகப்பட்ட இரைச்சல். போலீசார் வேறு ஒவ்வொருத்தரையும் கேள்வி கேட்டுக்கொண்டேயிருந்தனர். கூட்டத்தை விலக்கிக்கொண்டு "என்ன நடந்தது?" என்று விசாரித்தேன்.

ஃ ஃ ஃ

கன்னியப்பனுக்கும், சேர்வையின் ஒரே மகளான கனகவல்லிக்கும் காதலாம். சுப்புச்சாமி சேர்வைக்கு விஷயம் தெரிந்திருந்தும், தன் உறவினர் ஒருவரின் மகளுக்குத் தன் பெண்ணை கல்யாணம் செய்ய ஏற்பாடு செய்துகொண்டிருந்தாராம். இதைக் கேட்ட கன்னியப்பன் தன் காதலைப் பற்றி சேர்வையிடம் விளக்கி, அவர் காலில் விழுந்து கெஞ்சினானாம். அவர் துடுக்காகப் பேசி அவனை அவமதிக்கவே, கோபாவேசத்தில் கத்தியால் குத்திவிட்டானாம். அவனைத் தடுக்கவந்த சேர்வையின் மனைவியையும் குத்திவிட்டானாம். தகவலைக் கேட்டுக்கொண்டிருக்கையிலேயே, போலீஸ் ஸ்டேஷனிலிருந்து எனக்கு அழைப்பு வந்துவிட்டது. பையன்களை ஒருவாறாகச் சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டு ஸ்டேஷனுக்குப் புறப்படும்போதுதான், என் ஒரே மகள் சீதாவும் என்னோடு ஒட்டிக்கொண்டே வீட்டிலிருந்து வந்திருப்பது தெரிந்தது. அவளுக்குப் பத்து வயதுதானிருக்கும். கொலை, காதல் பற்றிய ஆரவாரப் பேச்சுகளையும், அனுதாப வார்த்தைகளையும் கேட்டு அவள் மிரண்டுவிட்டாள். என் கூடவே இருப்பதுதான் அவளுக்கு ஆச்வாஸமாயிருக்குமெனக் கருதி, அவளையும் அழைத்துக்கொண்டு சென்றேன்.

கன்னியப்பனைப்பற்றி போலீசாரிடம் என்ன சொல்வதென்றே எனக்குப் புரியவில்லை. கொலை செய்யுமளவுக்கு எப்படிப் பதட்டமடைந்தான் என்பது, மற்ற மாணவர்களைப்போல எனக்கும் புதிராகவிருந்தது. படிப்பு, பழக்க வழக்கங்கள், நடத்தை எல்லாவற்றிலும் அவன் நல்ல பெயர் எடுத்திருந்தான். இனிய சுபாவம், அநாவசியச் சண்டைகளில் இறங்கியதாகவோ, குறும்புகள் புரிந்ததாகவோ அவனைப்பற்றிப் புகார் வந்ததில்லை.

இதைத்தான் அதிகாரிகளிடமும் சொன்னேன். வருத்தமும் ஆச்சரியமும் நிரம்பிய மனத்துடன் நடுநிசிக்குப் பிறகு வீடு திரும்பினேன்.

வழியெல்லாம், கேள்விகள் போட்டு என்னைத் துளைத்தெடுத்துவிட்டாள் லீலா. 'கலியாணம் பண்ணிக்கொடுக்கல்லேன்னு எதுக்கப்பா, கொலை பண்ணிச் செத்துப்போகச் செய்யணும்?' என்று அவள் விடாப்பிடியாகக் கேட்டதற்கு ஏதேதோ சமாதானம் சொல்லிப் பார்த்தேன். அவள் திருப்தியடைந்ததாகத் தெரியவில்லை.

மறு வாரம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் குற்றச்சாட்டு வாசிக்கப்பட்டு விசாரணை முடிவடைந்தது. கொலைக் குற்றமாதலால், செஷன்ஸ் கோர்ட்டுக்கு வழக்கு அனுப்பப்பட்டது.

மறு மாதம் செஷன்ஸ் கோர்ட் விசாரணையும் ஆரம்பமாகியது. ஒரு சாட்சியாக நானும் அழைக்கப்பட்டேன். கைதிக் கூண்டில் கம்பீரமாக நின்றுகொண்டிருந்த கன்னியப்பன் கொலை செய்தவன் போலவே தோன்றவில்லை. அவன் முகத்தில் ஓர்விதமான அமைதியும் சாந்தியும் குடிகொண்டிருந்தன. அவன் என்ன சொல்லப் போகிறானென்று எல்லோரும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். தன்னிடம் கருணை காட்ட வேண்டாமென்றும், தனக்காக வாதாட வக்கீல் அமர்த்த வேண்டாமென்றும் கேட்டுக்கொண்டு அவன் விடுத்த வாக்குமூலம் இதுதான்:—

நான் இங்குள்ள டிரெயினிங் ஸ்கூலில் வாசித்துக்கொண்டிருந்த மாணவன். பத்து மாதங்களுக்கு முன் ஒரு நாள். பள்ளிக்கூடத்திலிருந்து என்னுடைய அறைக்கு வந்து கொண்டிருந்தேன். சாயங்காலநேரம். விளையாடிவிட்டு வீட்டுக்குப் போகும் வேளை. அதிக ஜன நடமாட்டமில்லை. எதிரேயுள்ள பெண்கள் பாடசாலையிலிருந்து ஒரு பெண் கை நிறைய புத்தகங்களுடன் வந்துகொண்டிருந்தாள். தெருவில் நடந்து கொண்டே சென்றுகொண்டிருக்கும்பொழுது நான் அவளையே பார்த்துக்கொண்டு நடந்தேன். அவளும் என்னையேதான் கவனித்திருக்க வேண்டும். எதிரிலே வந்த ஒரு மோட்டார், அவளை மோதும் படியாக கிட்டே நெருங்கிக்கொண்டிருந்தது. இதைப்பார்த்த அந்த யுவதி 'ஐயோ' என்று அலறவே, அவளை விபத்தினின்றும் தப்புவிக்கவேண்டி என்னிரு கைகளால் பிடித்து இழுத்துவிட்டேன். விர்ரென்று கார் சென்ற வேகத்தினாலும், சிறிது காலில் அடிபட்டதனாலும் அவளுக்கு அதிர்ச்சி ஏற்பட்டு மூர்ச்சையாகி விட்டாள். வந்த கார் அவள் உயிரைக் கொள்ளைகொண்டிருக்கலாம். ஆனால், என் கைகளிலே மூர்ச்சையான அவளது உள்ளத்தை நான் கொள்ளை கொண்டுவிட்டேன். எல்லாம் ஒரு விநாடியில் நடந்தது; மின்னல் வேகத்தில். அவளை நான் இதற்கு முன்பு பார்த்ததில்லை. அவள் வீட்டு விலாசமும் தெரியாது. நடுத்தெருவில் ஒரு பெண்ணை வாலிபனாகிய நான் எவ்வளவு நேரம் அணைத்துக்கொண்டிருக்க முடியும்! தற்செயலாக வந்த வண்டியில் அவளை தூக்கிப் போட்டுக்கொண்டு முனிசிபல் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். அங்கு அவளுக்கு சிகித்சை நடந்தது. சிறிது நேரத்திற்குப் பின் கண் விழித்தாள். எழுந்து நின்று சுற்றும் முற்றும் பார்த்தாள். ஏதோ யோசனை செய்பவள்போல் தோன்றிற்று. யாரென அவளை விசாரித்ததற்கு, 'மேலத்தெரு 18ம் நம்பர் வீடு, சுப்புச்சாமி சேர்வை சைவாள் சாப்பாட்டு விடுதி என்று வாசலில் போர்டு போட்டிருக்கும். அந்த விடுதியை நடத்துபவர் என் தந்தை சுப்புச்சாமி சேர்வை. நான் அவருக்கு ஒரே பெண்' என்றாள் அந்தப் பெண்.

உடனே அவளை வண்டியில் ஏற்றிவிட்டு நான் வண்டியை பின்தொடர்ந்து அவள் வீட்டை நோக்கிச் சென்றேன். இப்பொழுது அவளுடன் நேருக்கு நேர் வண்டியில் உட்கார்ந்து செல்ல என் மனம் ஒப்பவில்லை. அவள் பேசத் தொடங்கினாள்: 'உங்களுக்கு ரொம்ப சிரமம் கொடுத்துவிட்டேன். எல்லாம் என் அஜாக்கிரதையால்தான். நீங்கள் செய்த உபகாரத்தை ஒரு நாளும் மறக்க முடியாது. என்னை மன்னிக்க வேண்டும். நீங்கள் என்ன காரியமாக வெளியில் சென்றுகொண்டிருந்தீர்களோ. என்னால் மூன்று மணிநேரம் வீணாகிவிட்டதே' என்று வருந்தினாள்.

'இது என்னம்மா பிரமாதம்! இந்த எதிர்பாராத ஆபத்தினின்றும் தப்பினீர்களே. யாரும் உதவி செய்வது சகஜந்தானே' என்றேன்

'அப்படி சொல்லக்கூடாது. எல்லோருக்குமே உதவி செய்ய மனமும் திடமும் இருக்குமா? நான் இதற்கு என்ன கைமாறு செய்யப் போகிறேன்? இன்று எங்கள் வீட்டில்தான் நீங்கள் சாப்பிட வேண்டும்' என்றாள்.

பேச்சிலேயே அவள் பெயர் கனகவல்லி என்றும், அவள் ஆறுவது பாரத்தில் வாசித்து வருகிறாளென்றும் தெரிந்துகொண்டேன்.

இருட்டி நேரமாகிவிட்டதால், அவளது பெற்றோர்கள் வாசலிலேயே பெண் வருகையை எதிர்நோக்கி நின்றிருந்தனர். மகள் வண்டியிலிருந்து இறங்கவே திகைத்து நின்றார்கள். நான் முந்திக்கொண்டு நடந்ததையெல்லாம் விளக்கிச் சொன்னேன். அவர்கள் ஆனந்தமடைந்தார்கள். 'இப்படி உதவி செய்த நம் தம்பிக்கு நான் என்ன செய்தாலும் ஈடாகாதம்மா. ஏம்பா, நீ எந்த ஊர்? உன்னை நல்ல சமயத்தில் கடவுள் அனுப்பிவைத்தார். நீ தீர்க்காயுசாக இருக்கணும். இன்று இங்கேயே சாப்பிட்டுவிட்டுப் போகலாமாப்பா?' என்று அவள் பிதா கூறி, என் பெயர், மற்ற விவரங்களெல்லாம் தெரிந்துகொண்டார்.

எங்களுடைய பள்ளிக்கூடங்கள் எதிரெதிராக இருந்தது, அடிக்கடி சந்திக்க எங்களுக்கு சௌகர்யமாக இருந்தது. முதல் தேதியிலிருந்து அவ்விடுதியிலேயே சாப்பாடும் வைத்துக்கொண்டேன். நாங்கள் ஒருநாளாவது சந்திக்கத் தவறியதேயில்லை. கண்டதும் காதல் என்பது எங்கள் விஷயத்தில் உண்மையாயிற்று. நான் அவளைக் கண்டெடுத்த மாணிக்கமாய் நினைத்தேன். அவளும் என்னை தனக்காகவே கடவுள் படைத்திருக்கிறார் என்று நினைத்துப் பழகி வந்தாள். பள்ளிக்கூடத்திற்குப் பின்புறமுள்ள தோப்பில் எங்கள் அன்புப் பேச்சு யாருக்கும் தெரியாமல் நடக்கும். 'போட்டோ'கூட எடுத்துக்கொண்டோம். இன்ப வெள்ளத்தில் மூழ்கியிருந்தும், நாங்கள் தாபத்திற்காகத் தவிக்கவில்லை. உள்ளத்தால்தான் ஒருவரையொருவர் தழுவினோம். எப்படியும் எந்தவித இடையூறு நேரினும் ஒருவரையொருவர் விட்டுப் பிரியோம், மனமொத்த காதலர்களாக வாழ்வோம் என்ற நம்பிக்கையுடனிருந்தோம். வேறு வேறு ஜாதியினர் என்ற பேதம் எங்கள் சந்திப்பைக் குலைக்கவில்லை.

கோடை விடுமுறை ஆரம்பமாகிவிட்டது. கனகவல்லி மெட்றிகுலேஷன் பரீட்சை எழுதியிருந்தாள். எனக்கும் டிரெயினிங் முடிந்துவிட்டது. விடுமுறைக்குப்பின் வேலைக்குப் போகவேண்டும். தாயார் என்னை, 'கிராமத்துக்குவா' என்று அழைத்திருந்தாள். 'கொஞ்சம் வேலையிருக்கிறது. இன்னும் ஒரு மாதத்திற்குள் வருகிறேன்' என்று எழுதிவிட்டேன். பள்ளி மாணவர்களெல்லாம் இன்னும் நாலைந்து நாட்களில் தத்தம் ஊருக்குப் புறப்படுவார்கள். சுப்புசாமி சேர்வை, 'நீ ஏன் ஊருக்குப் போவதற்கு ஏற்பாடுகள் செய்யவில்லை' என்று கேட்டதற்கு, 'பரீட்சை ரிஸல்ட் வந்த பிறகு போகலாமென்றிருக்கிறேன்' என்று சொல்லிவிட்டேன். பள்ளிக்கூடம் இருந்த வரையில் சில மணி நேரமாவது பாடத்தில் கழியும். இப்பொழுதோ சதா கனகவல்லியின் நினைவுதான். 'அவள் பள்ளிக்கூடத்திற்கு இனி வரமாட்டாளே, தென்னந்தோப்பு சந்திப்பு இனி இல்லவே இல்லையா, அவள் காலேஜ் படிப்புக்கு வேறு எங்காவது போவாளா, அல்லது படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுவாளோ' என்று ஓர் நாள் மனதைக் குழப்பிக்கொண்டிருந்தேன். அப்போது சேர்வை வீட்டு வேலைக்காரி கனகவல்லியிடமிருந்து ஓர் கடிதத்தை என்னிடம் கொடுத்துவிட்டுச் சென்றாள். அதில் அடங்கிய தகவல் என்னைத் திடுக்கிடவைத்தது. அவள் எழுதியிருந்தாள்:

'. . .பரீட்சை ரிஸல்ட் என்னவானாலும், எனக்குக் கல்யாணம் செய்துவைக்கப்போகிறாராம், என் தகப்பனார். முதலில் கல்யாணம் வேண்டாம் என்றேன். ஏதோ உறவில் உள்ள பையனை எனக்குத் தீர்மானமாகியிருக்கிறது என்று அவர் வாயாலேயே கேட்டேன். என் உள்ளத்தில் ஊறும் உங்களைத்தான் மணப்பேன். மற்றெவரையும் வெறுப்பேன் என்று சொன்னதுதான் தாமதம், குதியாய்க் குதித்தார். ஆவேசத்தோடு, 'அந்த கறுப்புக் கன்னியப்பப்பயலுக்கு இவ்வளவு துணிச்சலா? அவனை என்ன பண்ணுகிறேன் பார்! உங்கள் தொடர்பு இவ்வளவுக்கு வந்துவிட்டதா? குழந்தையாகிய உனக்குக் காதலைப்பற்றி என்ன தெரி

யும்? எல்லாம் அந்த அயோக்கியப்பயல் கற்றுக்கொடுத்தது. உன்னை ஏமாற்றி மயக்கிவிட்டான். காலணா இல்லாத பிச்சைக்கார கபோதி' என்று திட்டிக்கொண்டே இருந்தார். அவர் பிடிவாதத்தை மாற்ற முடியாது. எனக்கு ஒரு யோசனை. ஏன் நாமிருவரும் ஒருவருக்கும் தெரியாமல் எங்கேயாவது ஓடிவிடக்கூடாது? தாமதித்தால் காரியம் கெட்டுவிடும். நீங்கள் சொல்வதைத் தட்ட மாட்டேன். இது உறுதி. என் கையால் நான் வேறொருவனுக்கும் மாலையிடேன். இது சத்தியம். உங்களன்புள்ள—கண்மணி கனகவல்லி.'

கடிதத்தைப் படித்தபின், யோசித்து யோசித்து மனதைக் குழப்பிக்கொண்டேன். கடைசியில் அன்றிரவே சாப்பாட்டவுடன் சேர்வையிடம் இதுபற்றிப் பேசி, சரிப்படுத்திவிடலாமென்று மனதை நானே தேற்றிக்கொண்டேன்.

கனகவல்லியை இழுத்துக்கொண்டு ஊரைவிட்டு ஓட எனக்குப் பயமில்லை. எங்களுடைய ஒப்பற்ற காதலை அவருக்கு எடுத்துரைத்து எப்படியாவது அவரது மனதைக் கரைத்து எங்கள்கல்யாணத்திற்குச் சம்மதி பெற்றுவிடலாமென்ற நோக்கத்துடன்தான் நான் போனேன். அவர் விஷயத்தைக் கிரகித்துக்கொண்டு முகத்தைத் திருப்பிக்கொண்டாரே தவிர, பதில் சொல்லவேயில்லை. நான் விடாப்பிடியாக, 'உங்களை வேண்டிக்கொள்கிறேன். என்னையும் கனகத்தையும் பிரித்தால் பாபம். வாழ்க்கையில் இருவருக்கும் சுகமிருக்காது. அப்படியே வேறு இடத்தில் அவளுக்குக் கல்யாணம் செய்வித்தால், விஷயம் தெரிந்தவுடன் அவள் புருஷன் சந்தேகிப்பான். உண்மைக் காதலுக்கு உதவி செய்யுங்கள். வேணுமானால் கனகத்தைக் கேளுங்கள்' என்று சொல்லி அவர் காலில் விழுந்து நமஸ்கரித்தேன்.

அவர் என்னை எட்டி உதைத்துவிட்டு, 'எத்தனை நாளாய் இந்தக் காதல் நாடகமடா? உன்னை இங்கே சாப்பிட அனுமதித்ததே தப்பு. நாளைக்கு முதல்தேதி. இன்றுவரையுள்ள பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியே நட. காதலாம் கத்தரிக்காயாம். என் பெண்ணின் நல்ல மனதைக் கலைத்துவிட்டிருக்கிறாய். இனி, நீ என் முன் நில்லாதே' என்று சொல்லிக்கொண்டே, காய்கறி வைத்திருக்கும் அறைக்குள் நுழைந்தார்.

நான் அறைக்குச் சென்று திரும்பி அவரை மீண்டும் சந்தித்தேன். கையில் பணத்தை எடுத்துக்கொண்டு, 'இந்தாருங்கள். இதுவரை சாப்பிட்ட பணம்' என்று சொல்லிக்கொண்டே அவருடைய இரு கால்களையும் பிடித்துக்கொண்டு, 'நானிங்கிருந்து போக மாட்டேன். உங்கள் கால்களையும் விடமாட்டேன். என் கனகத்தை எனக்குக் கல்யாணம் செய்து தருகிறேனென்று தயவுசெய்து ஒரு வார்த்தை சொல்லுங்கள்' என்று கண்ணீர்விட்டுக்கொண்டு கெஞ்சினேன்.

அவர் என்னை மறுபடியும் உதைத்துவிட்டுத் தன் கால்களை விடுவித்துக்கொண்டார். 'கல்யாணப் பேச்சைப் பேச மறுபடியும் உனக்கு எவ்வளவு துணிச்சலடா! சீ, சீ நாயே! போ வெளியே' என்று என் கழுத்தை நெறித்துத் தள்ளினார். அவருடைய அவமரியாதைப் பேச்சு என் ரத்தத்தைக் கொதிக்க வைத்துவிட்டது. உடலின் ஒவ்வொரு அணுவும் துடித்தது. என் சுய நினைவு என்னை விட்டகன்றது. உலகமே சுழலுவதுபோல் தோன்றிற்று. என்னையறியாமலே, மேஜையில் புதிதாகப் பளபளப்பான கத்தியைக் கண்டவுடன், அதை எடுத்து கோபத்தில் அவர் வயிற்றில் குத்திவிட்டேன். 'ஐயோ' என்று அவர் அலறவே, அவருடைய சம்சாரம் முத்தாயி என் மேல் பாய்ந்தாள். அவளையும் தோளில் காயப்படுத்திவிட்டேன். சம்பவம் நடந்த ஐந்து நிமிஷத்தில் என் மனச்சாட்சி, நானே குற்றவாளி என்று தீர்மானித்து, என்னைப் போலீஸில் சரண்புக வைத்தது. பாவம்! சுப்புசாமி சேர்வை இறந்துபோனதைக் குறித்து வருந்துகிறேன். என் கனகத்திற்குப் புருஷத் துணையில்லையே என என் மனது ஏங்குகின்றது. நான் செய்ததெல்லாம் காதலின் பாசத்தால்தான். நீங்கள் எந்த தண்டனை கொடுத்தாலும் வரவேற்கிறேன்" என்று சொல்லி முடித்தான்.

கோர்ட்டிலிருந்த அனைவரும் அவன் நிலைமைக்கு வருந்தினர். நீதிபதியும், "இனி, குற்றவாளி சொல்வதற்கொன்றும் இல்லை. எல்லாவற்றையும் விளக்கிவிட்டான். குற்றத்தையும் ஒப்புக்கொண்டுவிட்டான். வழக்கில் வேறு சந்தேகமானகேள்விகளுக்கோ,குறுக்குவிசாரணைக்கோ இடமேயில்லை. நாளை தீர்ப்பு சொல்லப்படும்" என்று கூறிவிட்டுச் சென்றார்.

மறு நாள் அவர் வாசித்த தீர்ப்பின் சாரம் இதுதான்:— "கன்னியப்பன் சந்தேகமறக் குற்றவாளி. சட்டப்படி ஒரு கொலை செய்தாலும், இரண்டு கொலைகள் செய்தாலும் தூக்கு தண்டனைதான் விதிக்க வேண்டும். ஆனால், இவனை ரொம்பக் கேவலமாகப் பேசியிருக்கிறார் சேர்வை. கோபத்தில் செய்த காரியம். பெண்ணுக்குப் பதினாறு வயதுதான். தந்தையின் இஷ்டப்படிதான் நடந்திருக்க வேண்டும். ஆனால், உலகத்திலுள்ள சர்வ ஜீவராசிகளுக்கும் கடவுள் ஓர் பிணைப்பை ஏற்படுத்திவிடுகிறார். ஆசை, பாசம், நேசம், அன்பு, காதல் என்ற பல பெயர்களிருந்தாலும், அந்த சக்தி முன்பின் தெரியாதவர்களை மூந்நூறு வருடங்கள் பழகியவர்கள் போலாக்கிவிடுகிறது. எப்படியானாலும் காதல் என்ற பெயரால் கொலை செய்யக் கூடாது. எதிரியை எல்லோரும் நல்லவனென்று சொல்லுவதால், சிறிது கருணை காட்டுகிறேன். அதாவது, மரண தண்டனைக்குப் பதிலாக ஆயுள் தண்டனை விதிக்கிறேன்."

ஃ ஃ ஃ

வருட மலரில் பல இதழ்கள் உதிர்ந்துவிட்டன. வாழ்க்கையில் எவ்வளவோ மாறுதல்கள். ரிடையராகி சென்னையில் பங்களா கட்டிக்கொண்டு குடியேறிவிட்டேன். ஸீதாவுக்கும் விவாகம் ஆகிவிட்டது. ஆனால், அது பெரிய கதை. ஒரே பெண்ணின் மேலிருந்த அபிமானத்தால் அவள் விருப்பப்படியே கல்லூரியில் படிக்கவைத்தேன். அதன் பலன்? அவள் சர்வகலாசாலையில் பட்டம் மட்டும் பெறவில்லை; காதல் பரீட்சையிலும் தேறிவிட்டாள். ராணுவ ஆபீஸர் ஒருவனிடம் மனதைப் பறிகொடுத்துவிட்டாள். எனது ஒரே மாப்பிள்ளை மிலிடரியில் இருப்பதை நான் விரும்பவில்லை. ஸீதாவுக்கு எடுத்துச் சொன்னேன்; கெஞ்சினேன்; மன்றாடினேன். அவன் 'மேஜர்' ஆகையால் அதற்குமேல் என் முயற்சி பலிக்கவில்லை. நல்ல வேளையாகப் பையன் எங்கள் ஜாதிதான். வேறு வழியின்றி விவாகத்தை நடத்தினேன். அவர்களிருவரும் ஒரு குறையுமில்லாமல்தான் இருக்கிறார்கள்.

ஒரு தடவை பூனாவிலிருந்து ஸீதா சென்னைக்கு வந்திருந்தாள். அவளைத் திருப்பியனுப்புவதற்காக, ரயிலில் 'ஸீட் ரிசர்வ்' செய்ய சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு வந்திருந்தேன். அவளும் என்னுடனிருந்தாள். புக்கிங் ஆபீஸில் சில்லறையை நான் எண்ணிக்கொண்டிருக்கும்போது, "ஸார்!" என்று எப்போழுதோ கேட்ட குரல் மாதிரி ஒரு குரல் என்னை வெகு பவ்யமாக நெருங்கிற்று. என்னைப் பார்த்து இரு கைகளையும் கூப்பி, "நமஸ்காரம். என்னைத் தெரியுதுங்களா? தெரியாது. எத்தனை வருடங்களாச்சு! சௌக்கியங்களா?" என்று அந்தக் குரலுள்ள வாலிபன் கேட்டான்.

இதற்குள் சில்லறையை என் சட்டைப் பைக்குள், 'திருடர்கள் ஜாக்கிரதை' என்று எழுதிவைத்திருக்கும் போர்டை பார்த்துக்கொண்டே, எண்ணிவைத்துக்கொண்டேன். பிறகு அவனை உற்று நோக்கி, ஆச்சரியத்துடன், "ஏம்பா, நீ கன்னியப்பனில்லை! எப்ப வந்தே? எப்படி வந்தே? அதற்குள் உன் தண்டனை முடிந்துபோய்விட்டதா?" என்றெல்லாம் கேட்டுவிட்டேன்.

அதற்கு அவனும், "நான் உங்கள் பள்ளி மாணவனான கன்னியப்பனேதான் ஸார்! இப்பொழுது சம்சாரியும்

விஷ்ணு — சுகந்தா



மணமகள் சுகந்த குந்தளா, கோவை ஜில்லா முன்சீப் காப்டன் வி. பவானி சங்கரின் மகள். மணமகன் டாக்டர் விஷ்ணு சர்மா. காட்டிலாகா ரிடையர்டு ஆபீசர் ஸ்ரீ ஏ. என் சர்மாவின் மகன். இவர்களுடைய விவாகம் ஏப். 27-ந் தேதி கோவையில் நடைபெற்றது.

கூட. மனைவியும் பெண்ணும் இருக்காங்கோ. இன்னும் ஐந்து நிமிஷத்தில் அவங்களையும் பார்க்கலாமுங்கோ" என்ருன். வண்டியில் வரும் தன் மனைவியையும் குழந்தையையும் அழைத்துப் போக அவன் வந்திருக்கிருனென்று தெரிந்து கொண்டேன்.

"ஸாருக்கு நான் எப்படி இவ்வளவு சீக்கிரம் வந்துவிட்டேனென்பதைச் சொல்கிறேன்" என்று ஆரம்பித்து அவன் சொன்னுன்:— "அந்தமான் போன 2, 3 வருடங்களுக்கு மனம் சஞ்சலமாக இருந்தது. அந்தமான் காட்டிலுள்ள தேக்கு மரங்களை வளர்ப்பதில் ஈடுபட்டேன். அதற்குள் ஜப்பான்காரனுக்குப் பயந்து எங்களை இங்கே கூட்டியாந்துட்டாங்க. தேசம் சுதந்திரம் அடைந்த போது, என்னைப்போன்ற கைதிகளையும் விடுதலை செய்தார்கள். அன்றைய தினமே கோயம்புத்தூருக்குக் கிளம்பினேன். என்னுடைய கனகம் ஓர் கிராமத்தில் கதர் அபிவிருத்தித் திட்டத்தில் முக்கிய ஸ்தானம் வகிக்கிருளென்று கேள்விப்பட்டு, அவளிருப்பிடம் சென்றேன். அவள் ஒரு குடிசையில்தான் இருந்தாள். காலை ஏழு மணியிருக்கும். குடிலசயின் ஜன்னல் வழியாக உள்ளே நடந்ததைப் பார்க்க என் உள்ளம் பூரித்தது. கனகம், நாங்கள் முன்பு எடுத்துக்கொண்டிருந்த போட்டோவிற்கு மாலை சாற்றுவித்துக் கைகூப்பி கடவுளைப் பற்றின ஸ்தோத்திரம் சொல்லிக்கொண்டிருந்தாள். 'கடவுளே, எனக்கு என்று நிம்மதி தருவாய்?' என்று அழுதாள். நான், 'இன்று, இதோ வந்தேன், உன் கன்னியப்பன்!' என்று கதவைத் திறந்து உட்சென்றேன். எங்கள் சந்தோஷத்திற்கு எல்லையேயில்லை. ஊராரும் நாங்கள் தம்பதியாவதைத் துரிதப்படுத்தினர். எங்கள் மனம்போலவே எங்கள் கல்யாணம் நடந்தது.

அந்தமான் தேக்கு மரத்தின் விசேஷ அம்சங்களை நான் கற்றிருப்பதால், கவர்ன்மெண்டார் எனக்கு விசாகப்பட்டினத்தில் கப்பல் கட்டும் தொழிற்சாலையில் மரப் பரிசீலனை செய்பவர் உத்தியோகத்தைக் கொடுத்திருக்கிருர்கள். நாளை போகவேண்டும். சம்பளம் ரூபாய் இருநூறு ஸார்! எங்கள் வாழ்க்கையில் மேலும் இன்பம் ஊட்ட எங்களுக்கு ஓர் பெண் குழந்தை பிறந்தது. ரோஜாப்பூ என்ருல் கனகத்திற்கு ரொம்ப இஷ்டம். காதல் பாதையில், முட்களின் நடுவே, எங்கள் காதல் வெற்றிபெற்ற காதலாகிவிட்டதால், அக்குழந்தைக்கு 'முள்ளில் ரோஜா' என்று பெயரிட்டிருக்கிறோம்."

இதற்குள் வண்டியும் வந்தது. அவன் மனைவியும் வந்துவிட்டாள். தம்பதி இருவரும் என்னை நமஸ்காரம் செய்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்கள். எங்கள் வீட்டு விலாசத்தைக் கேட்டுக்கொண்டு, "பிறகு வருகிறோம்" என்று சொல்லிவிட்டுப் போனார்கள்.

கன்னியப்பன் தம்பதி செல்வதைப் பார்த்து நின்ற நானும், ஸீதாவும் பரஸ்பரம் புன்னகை புரிந்துகொண்டோம். காதலில் சிலருக்கு வெற்றி எளிதில் தான் கிடைத்துவிடுகிறது!

கலியாணம்

★

ஹிந்து சமூகத்தில் கலியாணம் ஒரு தெய்வீக இணைப்பாகக் கருதப்படுகிறது. அது,ஒருஒப்பந்தமோ உடன்படிக்கையோ அல்ல. பெற்றோர்களாகப் பார்த்துத் தங்கள் மக்களுக்கு மணம் முடிப்பது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. சிறுவர் சிறுமியராக இருக்கும்போதே மணம் முடிப்பது நடைமுறையில் இருந்தது. ஆனுல் 1929–ஆம் ஆண்டில் வந்த சட்டப்படி (சாரதா சட்டம் என்று வழங்குவது) பெண்ணிற்கு 14 வயதும் பிள்ளைக்கு 18 வயதும் பூர்த்தியாகு முன் கலியாணம் செய்யக்கூடாது.

ஆதி காலத்தில் ஹிந்துக்களிடையே எட்டுவிதமான கலியாணங்கள் நடைமுறையில் இருந்தன:–

(1) பிரம்மா–பெண்ணிற்காக ஒரு விலையும் கொடாமல் நடக்கும் கலியாணம். (2) தெய்வ–பெண்ணை ஹோமம் செய்யும் குருக்களுக்கே கலியாணம் செய்துகொடுத்தல். (3) அர்ஷா–பெண்ணின் தகப்பனுர், மண மகனிடமிருந்து இரண்டு பசுக்களைப் பெற்றுக்கொண்டு பெண்ணைக் கொடுப்பது. (4) பிராஜாபத்யா–'நீங்கள் இல்லற கர்மாக்களை ஒன்ருகச் செய்து வாழ்வீர்களாக' என்று ஆசீர்வதித்து, பெண்ணைக் கொடுப்பது.

மேற்கூறிய நான்கு வகைகளும் நல்ல முறைகளாகக் கருதப்பட்டன. அவ்வளவு சிறந்ததாகக் கருதப்படாத முறைகள் வருமாறு:—

(1) அசுரா–பெண்ணின் தகப்பனுர், பெண்ணிற்காக விலை வாங்கிக்கொண்டு பெண்ணைக் கொடுப்பது. (2) காந்தர்வா–ஆணும் பெண்ணும் தாங்களே தீர்மானித்துக்கொள்வது. (3) ராட்சஸ–பலவந்தமாகப் பெண்ணைக் கைப்பற்றி, கலியாணம் செய்துகொள்வது. (4) பைஸாசா–கற்பழித்த பெண்ணை, கற்பழித்தவனே கலியாணம் செய்து கொள்வது.

நடைமுறையில் இருப்பது, பிரம்மா, அசுரா என்ற இரண்டு வகைதான்.

பழைய சமுதாயத்தில் ஒரு ஹிந்து ஆண் மகன், எத்தனை முறை வேண்டுமானுலும் மணம் செய்துகொள்ளலாம். பெண், ஒரு தடவைக்கு மேல் செய்து கொள்ளக்கூடாது. விதவைகள் மறு விவாகம் செய்துகொள்ளச் சட்டம் அனுமதியளிக்கும் வரை, அவர்களுக்கு மறுமண உரிமையில்லை.

ஹிந்து குடும்பத்தில் பெண்ணைக் கலியாணம் செய்துகொடுக்கும் உரிமையுள்ளவர்கள் முறையே தகப்பனுர், பாட்டனுர் (தந்தையின் தந்தை), சகோதரன், தந்தை வழியில் உள்ள பெரியவர்கள், தாய் முதலியவராவர்.

கலியாணத்தில் இரு தரப்பாரும் ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். வெவ்வேறு ஜாதியினராக இருந்தால் அந்தக் கலியாணம் (கலியாணம் நடத்த சமூகப் பழக்க வழக்கப்படி அனுமதிக்கப்படாவிடில்) செல்லாது.

பம்பாய், கல்கத்தா கோர்ட்டுகளின் சில தீர்ப்புகளில், உயர்ந்த ஜாதி ஆணிற்கும் கீழ் ஜாதிப் பெண்ணிற்கும் நடக்கும் விவாகங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி விவாகத்திற்கு 'அனுலோமா' விவாகம் என்று பெயர். இந்தக் கலப்பு மணத்தில் பிறந்த குழந்தைகள், தங்கள் தயாரின் ஜாதியைவிட உயர்ந்தவர்களாகவும் தகப்பனுரின் ஜாதியைவிடத் தாழ்ந்தவர்களாகவும் கருதப்படுவர்.

கலியாணத்திற்கு வேண்டிய முக்கியமான சடங்குகள் (1) ஹோமம். (2) சப்தபதி.

சப்தபதி என்பது பெண்ணின் கையைப் பிடித்து ஏழு அடி எடுத்து வைத்தல். மணமகன், பெண்ணின் கையைப் பிடித்து ஏழு அடி எடுத்து வைத்து, தன் இல்லற வாழ்க்கைப் பயணத்தைத் துவங்குகிருன். அப்பொழுது கூறும் மந்திரங்களின் சாராம்சம்: 'நாம் நம் கூட்டு வாழ்க்கைப் பயணத்தை இதோ துவங்கிவிட்டோம்'. பிறகு பெண்ணின் காலை அம்மியில் வைத்து, 'நம்முடைய உறவு இந்தக் கல்லைப்போல் என்றும் உறுதியாக இருக்கட்டும்' என்று பிரார்த்திக்கின்ருன்.

சடங்குகள் இல்லாமலேயே வேறு ஒரு முறைப்படி தொன்றுதொட்டு ஒரு ஜாதியினரோ, வகுப்பு அல்லது குடும்பத்தினரோ விவாகம் நடத்துகிருர்கள் என்ருல், அப்படி நடக்கும் கலியாணங்களும் முறைப்படி நடந்த கலியாணமாகவே கருதப்படும். ஆனுல், சட்ட வரம்புக்குள் இல்லாமலும், வெகு காலமாக நடைமுறையில் இருக்கும் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்காமல் புது முறையில் கலியாணம் செய்வது சட்டப்படி செல்லாது. சென்னை ஹைகோர்ட் ஒரு தீர்ப்பில், 'சுயமரியாதைக் கலியாணம்' செல்லாது என்று தீர்ப்புக் கூறியதற்கு இதுவே காரணமாகும்.

விவாக ரத்து என்பது ஹிந்து ஆசாரத்திற்கே முரணுனது. மதம் மாறல், மனைவி விபசாரியாகப் போதல் முதலியனகூட கலியாண பந்தத்தை அறுக்காது என்று கருதப்பட்டது.

1866–ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட சட்டப்படி, கணவனே மனைவியோ வேறு மதத்தைத் தழுவினுல் விவாக ரத்து கோரலாம். விவாக ரத்தான பிறகு மறு மணம் புரியலாம்.

சமுதாயமும் சட்டமும் மாறிவிட்டன. இப்பொழுது ஸ்பெஷல் கலியாண சட்டத்தின் கீழ் இருவர் 'ரிஜிஸ்தர்' மணம் புரிந்துகொள்ளலாம். மேலும் புரட்சிகரமான ஹிந்து விவாகச் சட்டம் சென்ற ஆண்டு அமுலுக்கு வந்துவிட்டது. அதைப் பின்னர் கவனிப்போம்.

—வழக்கறிஞர்.

சிறுவர் தொடர்கதை

அதிசய வீணை

வாண்டு மாமா

வெகு நேரத்திற்குப் பிறகு வெளியே மோட்டார் வந்து நின்ற சப்தம் கேட்டது. நாலைந்து பேர் இறங்கும் பூட்ஸ் சப்தமும் கேட்டது. எல்லோர் நெஞ்சுத்துடிப்பும் அதிகமாயிற்று.

மல்லாரி, இன்ஸ்பெக்டர், இன்னும் நாலைந்து போலீஸ் அதிகாரிகள் எல்லோரும் ஹாலில் நுழைந்தார்கள். இன்ஸ்பெக்டர் முகத்தில் திருப்தி நிலவியிருந்தது.

"மிஸ்டர் .. ரகுபதி, கவலைப்படாதீர்கள். நானே குகைக்குள் போய் ஆராய்ந்துவிட்டுத்தான் வருகிறேன். திருடர்களைப் பிடித்துவிட்டோம். ஆகவே இனி அபாயமில்லை—குகைக்குள் பல வழிகள் பிரிந்து செல்கின்றன. குழந்தைகள்தானே. குகைக்குள் ஆராய்ச்சி செய்துகொண்டிருப்பார்கள். எல்லா வழிகளிலும் ஜவான்களை அனுப்பியிருக்கிறேன்"— என்றார்.

விச்சு எதையோ நினைத்துக்கொண்டவன்போல எங்கோ போக ஆரம்பித்தான்.

"எங்கேடா போறே?" என்றார் ரகுபதி.

"சமையல் கட்டுக்கு"— என்று சொல்லிவிட்டு நிற்காமல் நடந்தான் விச்சு.

ரகுபதியும், அவர் பின்னால் இன்ஸ்பெக்டரும் விச்சுவைத் தொடர்ந்து போனார்கள்.

விச்சுவின் காது எப்போதுமே சூட்சுமமானது. அத்தனை பேர் ஹாலில் இருந்தும் சமையலறையிலிருந்து வந்த சப்தம் அவன் காதில் மட்டும் விழுவானேன்?

சமையல் அறையில் சில மணி நேரத்துக்கு முன்பு அவன் மேஜையை இழுத்துப் போட்டு அதன் மீது பாத்திரங்களை ஏற்றியிருந்தானே அதன் எதிரில் போய் நின்றான் விச்சு.

"இன்ஸ்பெக்டர் சார், நீங்கள் குகைக்குள் எத்தனை பேரைக் கைது செய்தீர்கள்" என்று கேட்டான் விச்சு.

"ஏன்—மூன்று பேரை" என்றார் இன்ஸ்பெக்டர்.

"அவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள்?"

"போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பிவிட்டேன்."

"அப்படியானால் இந்தக் கதவை நெட்டித் தள்ளித் திறக்க முயற்சிப்பது யாராக இருக்கும்?" என்று கேட்டான் விச்சு. அப்போதுதான் இன்ஸ்பெக்டர் 'தம் தம்' என்று கீழேயுள்ள தரையிலிருந்து சப்தம் வருவதைக் கவனித்தார். உடனே சட்டென்று மேஜையை நகர்த்தியதும் சமதரை பிளந்து, கதவுபோல் ஒரு கல் திறந்துகொள்ள ஆரம்பித்தது. வியப்புடன் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும்போது, முக்கி முனகி மூச்சு வாங்க இரண்டு தலைகள் வெளியே வந்து எட்டிப்பார்த்தன.

"எந்த மடையன் இப்படிக் குகைக் கதவைத் திறக்க முடியாமல் மூடி இதன் மீது பாரத்தையும் ஏற்றிவைத்தது? இந்த வழியைக் கண்டுபிடிக்கத்தானே நாங்கள் போனோம். மணிக்கணக்காக இதைத் திறக்க நாங்கள் என்ன பாடுபடுகிறோம்" என்றான் கோபு ஆத்திரத்துடன். அவன் மேலெல்லாம் ஒரே அழுக்கு; ஒரே புழுதி. அவன் பின்னால் ராமுவும் இருந்தான்.

"நான்தாண்டா கோபு, இதை இப்படி மூடினது" என்றான் விச்சு குற்றவாளிபோல.

இன்ஸ்பெக்டர் கோபுவையும், ராமுவையும் கைலாகு கொடுத்து வெளியே கொண்டுவந்தார். அவர்களை மறுபடியும் கண்டதில் விச்சுவுக்கு எத்தனையோ மகிழ்ச்சியாக—மன ஆறுதலாக—இருந்தது. மனதிலிருந்த சுமை குறைந்ததும் தூக்கம் கண்ணைச் சுழற்றிற்று.

காலையில் சகுந்தலா எழுப்பியதும்தான் விச்சு, கோபு, ராமு, ஸரஸா, பட்டு எல்லோரும் சோம்பல் முறித்துக்கொண்டு எழுந்திருந்தார்கள்.

"சீக்கிரம் பல் தேய்த்து காப்பி குடித்துவிட்டு வாருங்கள். இத்தனை நாளாக நாம் எதிர்பார்த்துக் காத்திருந்த அதிசயச் செய்திகள் எல்லாம் வெளியாகப்போகின்றன. ஹாலில் எல்லோரும் தயாராக இருக்கிறார்கள். பாட்டி மாடியிலிருந்து கீழே கொண்டுவரப்பட்டதும் மர்மங்கள் எல்லாம் விளக்கப்படும் .. ம் .. சீக்கிரம்" என்று துரிதப்படுத்தினாள் சகுந்தலா. அவள் முகத்தில் மகிழ்ச்சி பொங்கி நின்றது. சட்டென்று விச்சுவுக்கு அப்போதுதான் சேகரின் நினைவு வந்தது. மல்லாரி திடீரென்று நேற்றிரவு தோன்றினார். ஆனால், சேகர் எங்கே? "சேகரும் வருவானா சகுந்தலா?" என்று கேட்டான் ஆவலுடன்.

"சேகர் ஹாலில் தயாராக இருக்கிறானே—உங்களையெல்லாம் எதிர்பார்த்துக்கொண்டு" என்றாள் குறும்புச் சிரிப்புடன்.

"இத்தனை நாள் எங்கே போயிருந்தானும்?"

"எங்கேயும் இல்லை—இந்தப் பங்களாவுக்குள்ளேயேதான் இருந்தான். நான்தான் அவனை ஒளித்து வைத்துக் காப்பாத்தினேன். அவன் எங்கும் ஓடிவிடவில்லை. கொஞ்ச நாள் அவன் மறைந்துவிட்டதாகப் பிறர் நினைக்கும்படி செய்யவேண்டும் என்று மல்லாரி கேட்டுக்கொண்டார். நான் அவனை பத்திரமாகக் காப்பாற்றுவதாகச் சொல்லி இந்த வீட்டிலேயே ஒரு இடத்தில் யாருக்கும் தெரியாமல் அவனை வைத்திருந்தேன்."

சகுந்தலா ஒரு பெரிய ரகசியத்தை மறைத்து வைத்திருந்தது—விச்சுவுக்கு கோபமாகத்தான் இருந்தது.

அவசரமாகக் குழந்தைகள் கூடத்தில் வந்து கூடினார்கள். மாடியிலிருந்து நூறு வயதுக் கிழவி மாணிக்கவல்லியை மெதுவாக இறக்கிக்கொண்டு வந்து உயரமான ஒரு நாற்காலியில் உட்கார வைத்தார்கள். நூறு வயதுக் கிழவியைக் காண வேண்டுமென்று ஆசைப்பட்ட விச்சுவுக்கு அவளைக் கண்டதும் ஆச்சரியமாக இருந்தது. காய்ந்து சுருங்கிய மாம்பழத்தைப்போல இருந்தாள் மாணிக்கவல்லி. ராஜ்குமாரும், கோவிந்தசாமியும் தங்கள் பாட்டியின் இரு பக்கத்திலும் போய் நின்றுகொண்டார்கள்.

மல்லாரிதான் எல்லா விஷயங்களையும் விளக்கினார். அவர் சொன்ன விஷயங்கள் எல்லோரையும் திகைப்பிலும், வியப்பிலும் மூழ்கவைத்தன.

மல்லாரி சாதாரண மனிதரல்ல. அவர் புனாவிலுள்ள ஒரு பிரபல துப்பறியும் நிபுணர். வரதராஜனைப் புனாவில் சந்தித்து நண்பரானவர். வரதராஜன் பம்பாய் போன பிறகு மல்லாரியுடன் தொடர்பு வைத்துக்கொள்ளவில்லை. பம்பாயிலே வரதராஜனுக்கு மோஹன்,முரளி என்று இருவரின் நட்பு ஏற்பட்டது. இந்த இருவரும் வரதராஜன் தங்கியிருந்த ஹோட்டல் அறைக்குப் பக்கத்து அறையில் வசித்தவர்கள். இருவரும் வரதராஜனிடம் ரொம்ப நெருங்கிப் பழகியதால் வரதராஜன் தன் ரகசியங்களை எல்லாம் மோஹன், முரளியிடம் சொல்லிவிட்டார். தன் குடும்பம், தனக்குச் சேரவேண்டிய சொத்து இவைகளைப் பற்றிச் சொன்னதோடு, முக்கியமான தஸ்தாவேஜுகளையும் அவர்களிடம் காண்பித்து விட்டார். மோஹனும், முரளியும் பெரிய திருடர்கள். பெரிய சொத்துக்கு சேகர்தான் வாரிசு என்பதையும், வரதராஜன் உடல் நலம் கெட்டு சாகும் நிலையில் இருப்பதையும் அறிந்து அவர்கள் மூளை பலமாக வேலை செய்தது.

வரதராஜன் இறக்கும்போது சேகரை இந்த இரண்டு அயோக்கியர்களிடம் ஒப்படைத்து, அவனை எப்படியாவது சாமுண்டிக் கோட்டையிலுள்ள தன் மல்லிகைக் கொல்லை ஜமீனில் கொண்டுபோய் விடும்படி கேட்டுக்கொண்டார். அதற்கு ஆதாரமான — வீணைப் பொம்மை மற்றும் பல தஸ்தாவேஜுகளையும் கொடுத்துவிட்டுக் கண்ணை மூடிவிட்டார். ஆனால், வரதன் இறந்த பிறகு மோஹனும், முரளியும் ஒரு நாள் இரவு பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டான் சேகர். அவர்கள் உண்மை மனது அவனுக்குப் புரிந்துவிட்டது. உடனே சேகர் தனக்குத் தெரிந்த, தான் நம்பக்கூடிய ஒரே நண்பரான மல்லாரியைத் தேடிக்கொண்டு புனாவிற்கு வந்துவிட்டான். விவரத்தையெல்லாம் தெரிந்துகொண்ட மல்லாரி, அந்த மோசக்காரர்கள் சாமுண்டிக் கோட்டையை அடைவதற்குள் தான் அங்கு போய்விடத் தீர்மானித்து அன்றிரவே ஆகாய விமானத்தில் சென்னையை நோக்கிப் பறந்து வந்து சேர்ந்தார்.

வரதராஜனின் மகனைப்பற்றி யாருக்கும் ஒன்றும் தெரியாது. அவன் எப்படி இருப்பான் என்று கூடக் கற்பனை செய்ய முடியாது. மோசக்காரர்களின் கையிலோ முக்கியமான ஆதாரங்களும், வீணைப் பொம்மையும் இருந்தன. இந்த இருவரில் தம்பியாகிய முரளி,வரதராஜனைப்போலச் சாயலில் ஒத்திருந்தான். ஆகவே, மல்லாரி சாமுண்டிக் கோட்டைக்கு வந்ததும் முதன் முதலாக போலீஸ் இன்ஸ்பெக்டர் கனகசபாபதியுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டார். தான் யார் என்பதை மல்லாரி சொன்னவுடன், இன்ஸ்பெக்டர் அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதாக வாக்களித்து விட்டார். மல்லாரியும் தன் முயற்சி பயனளித்தால், போலி வரதராஜனை வேஷமணிந்து வருபவனைக் காட்டிக்கொடுப்பதோடு மட்டுமல்லாமல் பிரபல கொள்ளைக்காரர் இருவரின் கையில் விலங்கு மாட்டும் பாக்கியத்தையும் அவருக்குக் கொடுப்பதாக வாக்களித்தார்.

(தொடரும்)

எனக்கும் இதயம் உண்டு

'முரளி'

மாலை நேரம். ஒருநண்பனைரயிலேற்றி விட்டு வீட்டுக்கு வந்துகொண்டிருந்தேன். சந்தடி குறைந்த அந்த வீதியின் ஓரத்தில் கூடியிருந்த ஒரு சிறு கும்பலை நோக்கி என் கவனம் விரைந்தது. ஆட்டைச் சூழ்ந்து நின்ற ஓநாய்களின் கூட்டம். ரூபவதியான ஒரு பெண்; இருபதுக்கும் குறைந்த வயது; உடையும் தோற்றமும் அவள் வறுமை தீண்டாது வளர்ந்த ஒரு வட இந்தியக் குடும்பப் பெண் என்பதைத் தெளிவுபடுத்தின. கொலைக்காக நிறுத்தப்பட்ட ஆடு, தனக்குற்ற துயரை புரியும்படிப் பேச வாய் இல்லாமல், தன் விதியை நினைந்து ஓலமிட்டு வருந்துவதைப்போல, அந்தக் கும்பலுக்கு விளங்காத ஹிந்துஸ்தானி மொழியில் அவள் ஏதேதோ பேசிக் கண்ணீர் வடித்துக்கொண்டு நின்றாள். அவளை நிராதரவாக விட்டுவிட எளிதில் மனம் வராமல், தங்களோடு உறவு கொள்ளும்படி கெஞ்சியும், கொஞ்சியும், பரிகசித்தும், பயமுறுத்தியும் விண்ணப்பித்துக் கொண்டிருந்தது அந்தக் காவாலிக் கூட்டம்!

நான்தான் 'ஹிந்தி பண்டிட்' ஆயிற்றே! நயமாகக் கூட்டத்தை விலக்கி ஹிந்தியில் அந்தப் பெண்ணிடம் சில கேள்விகளைக் கேட்டேன். அவள் விடுத்த பதில்களிலிருந்து அவளை அந்த இடத்தில், அதே நிலையில் விட்டுச் செல்வது அவளுடைய கற்புக்கும் பொருளுக்கும் ஆபத்தாய் முடியும் என்று எண்ணினேன்.

சூறையாடத் துடிக்கும் அந்தக் கூட்டத்தைப் பகைத்துக்கொள்ள எனக்குப் பயமிருக்கத்தான் செய்தது. என்றாலும் துணிவடைந்து அந்தஅபலையை அழைத்தேன். "நான் உன் சகோதரன். மறுக்காமல் என் பின்னே வந்துவிடு, அம்மா! உரிய இடத்தில் நீ சேர்ந்துகொள்வதற்கு நான் துணை செய்கிறேன்" என்றேன்.

அவள் தயங்கினாள். திடீரென்று முளைத்த ஒரு மனிதனை பூரணமாக நம்பிவிட எந்தப் பெண் துணிவாள்?

"ஒன்றும் யோசிக்காதே, சகோதரி! இப்படியே நின்று கொண்டிருந்தால் உனக்குக் கெடுதி விளையும் என்று சூழ்நிலை உன்னிடம் சொல்லவில்லையா? தெய்வத்தை மட்டும் கதறியழைக்கிறாயே! தெய்வத்தைத் தவிர தூய எண்ணத்தோடு உனக்கு உதவி செய்ய வரும் எந்த மனிதனையும் நீ நம்பப்போவதில்லையா? என்னை நம்பு! உன்னை சேற்றிலிருந்து மீட்டு அகழியில் அமிழ்த்தி விடமாட்டேன்! பயப்படாதே! என்னோடு வந்துவிடு" என்று அவளுக்கு நம்பிக்கையூட்டினேன்.

அவள் என்னை நோக்கி அசைந்தாள். வரவிருந்த பேராபத்திலிருந்து விடுபட்டு, அந்தக் கூட்டத்தைக் கலவரத்தோடு திரும்பிப் பார்த்துக்கொண்டே என்னைப் பின்தொடர்ந்தாள். அவளிடம் ஒரு தோல் பெட்டியும் இருந்தது.

தங்களுக்கு முன்னால் கேட்பாரற்றுக் கிடந்த பழக் குலையை ஒரு வழிப் போக்கன் தூக்கிக்கெண்டு போவதைப் பார்த்துக் குரங்குகளெல்லாம் கோபத்தோடு பல்லைக் காட்டி உறுமின! என் நல்ல வேளை மேலே விழுந்து குதறிப் பிடுங்கவில்லை! வெறும் உறுமலும், பல்லிளிப்பும், மீசை முறுக்கும்தானே! எனக்கு நஷ்டமென்ன?

அம்மாவுங்கூட என் செய்கையில் ஆத்திரமடைந்தாள். அந்தப் பெண்ணை வெளியே அனுப்பினால் என்ன நேரிடும் என்பதை விளக்கிச் சொல்லி உருக்கமாக வேண்டிக்கொண்டபின், அம்மா ஒருவாறு பொறுப்புணர்ந்து, சில நாட்கள் அவளுக்குச் சோறு கொடுத்துக் காப்பாற்ற ஒப்புக்கொண்டாள். அவளுடைய மனத்தின் ஒரு பாதி அந்தத் திக்கற்ற பெண் மீது ஏற்பட்ட இரக்கத்தாலும், மறு பாதி என் மீது ஏற்பட்ட சந்தேகத்தாலும் நிறைந்திருந்தது. சந்தேகத்தை எப்படியும் போக்கி விடுவேன். அம்மா அவள் மீது இரக்கப்பட்டதுதான் எனக்கு முக்கியம். ஒரு பெண்ணின் துயர நிலை கண்டு இன்னொரு பெண்கூட இரங்காவிட்டால், பேய் எப்படி இரங்கும்?

அந்தப் புதிய விருந்தாளி பல நாட்கள் என்னோடு பழகப்பழக, அவளுடைய வாழ்வில் கடந்த காலத்தில் ஏற்பட்ட திருப்பங்கள், மனத்தில் முளைத்து வெடித்துச் சிதறிய எண்ணங்கள், எல்லாவற்றையும் ஒளிவு மறைவின்றி அங்கொரு பகுதியும் இங்கொரு பகுதியுமாக தினமும் சொல்லிக்கொண்டு வந்தாள்.

2

மத்திய பிரதேசத்திலுள்ள சோட்டா சாகரில் கேசவ்லால் நந்தா ஒரு ஜவுளி வியாபாரி. தான் எண்ணியதை உடும்பாகப் பிடித்துக்கொள்ளும் ஒரு முன்கோபி. உயர்ந்துமில்லாமல் தாழ்ந்துமில்

லாமல் சுமாரான நிலையிலுள்ளது அவர் குடும்பம். அவருடைய மக்கள் அறுவரில் பிரமீளாதான் மூத்தவள். கொஞ்சம் ஆங்கிலமும் கற்றவள். பெரும் பான்மையான பெண்களைப் போலல்லாமல் அவளிடம் துணிச்சல் மிகுந்திருந்தது. நந்தாவிடமிருந்து தங்களுக்கு சலுகைகள் கிடைக்கப்பெறுதபோது, எல்லாப் பிள்ளைகளும் தங்கள் தாயார் வாசந்தி மூலமாகத் தங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்வார்கள். கணவனிடமிருந்து பிறக்கும் கோபக் கனலை அவிக்கும் ஆற்றல் அவளிடம் ஓரளவு அமைந்திருந்தது. ஆனால் பிரமீளாவின் அருமையான ஒரு விருப்பத்தை மட்டும் அவளால் பூர்த்திசெய்து கொடுக்க முடியவில்லை.

நந்தா தனது இணைபிரியா நண்பர் புரந்தர்லால் என்பவருக்கு ஒரு வாக்குக் கொடுத்தார். எப்பொழுதுமே அவர் வாயால் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு விட்டாரானால் அதற்கு எழுத்து மூலமான பிடிமானம் வேண்டுமென்ற அவசியமில்லை. அந்த ஒப்பந்தத்தை முறித்துவிடும் வல்லமை அவருக்கே ஏற்பட்டதில்லை. இப்பொழுது அவர் கொடுத்த வாக்குப்படி புரந்தர்லால் நந்தா பிரமீளாவைத் தன் மருமகளாக்கி வீட்டுக்கு அழைத்துக்கொள்ள வேண்டும். கேசவலால் நந்தா இந்த விஷயத்தை அவாது மனைவி வாசந்தியிடம் சொன்னபோது அவளும் வெகு சந்தோஷமாகவே அது குறித்துப் பெருமைப்பட்டாள். ஒரு லட்சாதிபதியின் மருமகளாக தன் மகள் வாழ்க்கைப்படப் போகிறாள் என்பதைக் கேட்க எந்தத் தாய்தான் மகிழ்ச்சியடையமாட்டாள்? அதோடு விடவில்லை அவள். சந்தோஷப் பூரிப்பில் பிரமீளாவிடம் ஓடிப்போய் அவளுக்கு வரப்போகும் பெருவாழ்வை எடுத்துக் கூறி அவளைக் கட்டித் தழுவி இரண்டு கன்னங்களிலும் ஆவேசத்தோடு வாய் ஓயாமல் முத்தமிட்டுக்கொண்டேயிருந்தாள். சட்டென்று தன் வாய்க்குள் உப்புக் கரிப்பதை உணர்ந்து முத்தமிடுவதை நிறுத்திவிட்டுப் பார்த்தபோது பிரமீளாவின் இரு கன்னங்களிலும் கண்ணீர் இறங்கிக்கொண்டிருந்தது.

"ஏன், பிரமீளா! மங்களப் பேச்சை ஆரம்பித்ததும் நீ இப்படியெல்லாம் அழக்கூடாதே! நான் சொல்லித் தெரிய வேண்டுமா, உனக்கு?" என்றாள் வாசந்தி.

"உனக்குத் தெரியாது, அம்மா! விவாக நாளுக்கு முன்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவும் நான் அழுது முடித்துவிட வேண்டும். அதற்குப் பின்னால் அழவே முடியாது. உள்ளபடி பார்க்கப்போனால், என் இன்ப துன்பங்களில் பங்கெடுத்துக் கொண்டு என்னிடம் பரிவும், பாசமும் காட்டும் நாயகனை நீங்கள் தேடித் தரவில்லை. வாழ்நாள் முழுவதும் சிரித்து வேடிக்கையாகப் பொழுதைக் கழிக்க ஒரு கோமாளியைத்தான் தேடிவைக்கிறீர்கள். கோமாளித்தனத்தைத் தவிர விவேகமும், சாதுரியமும், பொறுப்புணர்வும் புரந்தர்லால் மகனிடம் எள்ளளவாவது உண்டா? கொழுத்த பணமும் ஏதோ அழகும் அவனிடம் இருப்பதை நான் மறுக்கவில்லை. இதோடு ஒன்பது தடவை பார்த்து விட்டேன் அம்மா! கொஞ்சமாவது அடக்கமில்லாமல் என்னிடம் பல்லைப் பல்லைக் காட்டியிருக்கிறான்! ஒரு பெண்ணிடம் இப்படித்தான் வரைகடந்து நடந்துகொள்ள வேண்டுமா? அவனைப்பற்றி இன்னும் சொல்ல வேண்டுமா?"

"போதும், பிரமீளா, போதும்! எவ்வளவு அறிவோடு எனக்குத் தெரியாததையெல்லாம் பேசிவிட்டாய் நீ! கன்னியாகக் காலங் கழித்துவிட்டாலும் பரவாயில்லை. வெறுப்போடு அவனை நீ மணக்க வேண்டாம், அம்மா!" என்று தன் மகளை மறு முறையும் அன்போடு கட்டிக் கொண்டு முத்தமிட்டாள் வாசந்தி. மீண்டும், "அப்படிக் கன்னியாக வாழும்படி உன் தலைவிதி ஏன் அமைய வேண்டும்? பிரமீளா, என்னிடம் ஒளிக்காமல் சொல்லு! உன் மனதில் நீ ஏதாவது எண்ணியிருக்கிறாயா? உன் இச்சைப்படி நாங்கள் செய்துவிட்டால் எங்களுக்கும் திருப்தி; உனக்கும் ஆனந்தமாக இருக்கும் அல்லவா?" என்று கேட்டாள்.

"சொல்லத்தான் போகிறேன், அம்மா! ஆனால் இப்பொழுது கேட்காதே! நீ கொண்டுவந்த செய்தியால் நான் எவ்வளவு கலங்கிப் போயிருக்கிறேன், தெரியுமா? மேலும் நீ துடிப்புள்ளவள். இப்பொழுதே போய், எனக்கு உதவி செய்வதாக எண்ணிக்கொண்டு, அப்பாவிடம் சொல்லிவிடுவாய். அது கொதிக்கிற எண்ணெயில் தண்ணீரை விட்டது போலாய்விடும். அப்பாவைக் கட்டுப்படுத்த முடியாது. அவர் மனம் அவர் செய்துகொண்ட தீர்மானத்தோடேயே இறுகிப்போய்விடும்" என்று, பிரமீளா தன் உள்ளத்தைத் திறக்க அன்று மறுத்துவிட்டாள்.

3

புரந்தர்லால் நந்தாவின் பதவிசான வாழ்வை நினைத்து, 'அந்தப் பெரிய இடத்தில் வாழும் பாக்கியம் கிட்டுமா? அவருடைய குமாரச் செல்வத்தின் தகுதி எப்படிப்பட்டதென ஆராயலாமா?' என்று பிரமீளா ஒரு சமயம் தன்னையே கேட்டுக் கொண்டதுண்டு. அந்தக் கோமாளிதான் அதைக் கெடுத்துக்கொண்டு விட்டான். அவனுக்குப் பெண்ணுலகத்தின் ரகசியம் தெரியவே தெரியாது. முந்தவிட்டான்!

இதற்கு மாறாக, சில வாலிபர்கள் கர்வற்ற, சாந்தமான நடவடிக்கைகளால் பல பெண்களின் கடைவிழி வீச்சுக்கு ஏற்கெனவே இலக்காகிவிட்டிருப்பதை அவர்களே உணர்வதில்லை. பிரமீளா தன்னைக் காதலிப்பதை பிரதீப்குமார் பல நாட்களுக்குப் பிறகு அவள் சொல்லித்தான் தெரிந்துகொண்டான்!

கேசவ்லால் நந்தாவின் வீடும் ஜவுளிக் கடையும் பக்கத்தில் பக்கத்தில்தான் இருந்தன. கடை குமாஸ்தாக்களில் ஒருவனான பிரதீப்குமார் காலையில் கடையைத் திறக்க சாவிக் கொத்தை எடுத்துக்கொண்டு போகும்போதும், மாலையில் நந்தாவுக்குத் தேநீர் வாங்கிக்கொண்டு போகும்போதும் நாளொன்றுக்கு இரு முறை பிரமீளாவின் வட்டமிடும் கண்களில் தோன்றிக்கொண்டிருந்தான். அப்பொழுதெல்லாம் அவளை அவன் நிமிர்ந்து கூடப் பார்ப்பதில்லை.

காலையில் பிரதீப்குமார் வீட்டுக்கு வரும்போது, நந்தா பல முறை அவனிடம் வியாபார சம்பந்தமான யோசனைகளைக்

பரிமாறிக்கொண்டிருந்திருக்கிறார்; 'எந்தெந்த ஆலைகளில் எந்த நேரத்தில் ஒப்பந்தம் செய்வது, காலத்துக்கேற்ற கோலத் துணிகள் எவை, சவத நேரங்களில் எந்தெந்த துணைச் சரக்குகளைச் சேர்த்து எப்பொழுது ஒப்பந்தச் சரக்குகளைத் தருவிப்பது' என்ற நுட்பங்களில் பிரதீப்குமார் வெளியிட்ட கருத்துக்கள் பெரும்பாலும் ஆதாயத்தை அள்ளிக்கொடுத்தன. இதையெல்லாம் கண்ட பிரமீளாவுக்கு அவன் மீது பவித்திரமான பாசம் ஏற்பட்டுவிட்டது. புரந்தர்லாலின் மகன் தன்னையே கூர்ந்து பார்த்துச் சிரிப்பதை முகஞ் சுளித்து வெறுப்பதும், பிரதீப்குமார் நேருக்கு நேர் சுந்தர முகத்தை அவளிடம் காண்பிக்காததை எண்ணி ஏங்குவதும் அவளுக்கு வழக்கமாகிவிட்டது. இரண்டு திசைகளிலும் அவளுக்கு ஏற்பட்ட வெறுப்பும், விருப்பும் சம நிலையில் துரிதமாக வளர்ந்து, பிரதீப்குமாரின் துணைவியாவதற்கு முயல வேண்டுமென்ற முடிவுக்கு அவளை அழைத்துக் கொண்டு வந்து நிறுத்திவிட்டன.

பல நாட்கள் காத்திருந்து ஒரு நாள் வீட்டில் வைத்தே பிரதீப்குமாருடன் தனிமையில் அரை மணி நேரம் பேசும் வாய்ப்பு பிரமீளாவுக்கு அகப்பட்டது. சாவிக் கொத்துக்காகக் காத்திருந்த அவனிடம் இனிப்புப் பதார்த்தங்கள் நிறைந்த ஒரு வெள்ளித் தட்டை நீட்டினாள் பிரமீளா.

கைகளைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு, "நான்...நான்தான் பிரதீப் குமார்!...சாவிக் கொத்து வாங்க வந்தேன்—கடையைத் திறக்க" என்றான் அந்த அப்பாவி.

"யாரென்று எனக்குத் தெரியும்! இதை வாங்கிக்கொள்ளுங்கள்!"

"இதெல்லாம் எதற்கு?"

"இந்தக் கசப்புப் பண்டத்தை என் வீட்டுக்காரர்கள் எல்லோரும் தின்றுவிட்டு தாட்சண்யத்திற்காக 'இனிக்கிறது' என்று சொல்கிறார்கள்! நீங்களும் அப்படிச் சொல்லி விட்டீர்களோ, உங்களையும் என் வீட்டுக்காரராகச் சேர்த்துவிட வேண்டியதுதான்!"

"கசப்பான பலகாரங்கள் கூட செய்வார்களா?"

"செய்யலாமே! அதுவே ஒரு வேளை தித்திப்பாகத் தெவிட்டிவிடும்! அதெல்லாம் தயாரிப்பவர் மீது சாப்பிடுபவர் வைத்திருக்கும் அன்பைப் பொறுத்தது. உங்களுக்கு இது இனிக்குமானால்..."

"நீ ஏதேதோ பேசுகிறாயே!"

"ஏனோ அப்படியெல்லாம் பேசுகிறேன்!...பிரதீப்!"

அவ்வளவுதான்! 'பிரதீப்' என்ற வார்த்தையை வேய்ங்குழலில் அடைத்து செவிக்கினிய கீதமாகப் பொழிவது போலிருந்தது. பிரதீப்குமாரின் உடல் சிலிர்த்தது. ஒருவித நடுக்கமும் அவனிடம் ஏற்பட்டது. சொல்லாமலே விடுவிடென்று வெளியே போய்விட்டான்.

சிறிது நேரத்தில் பிரதீப்குமார் மறுபடியும் வந்தான்.

அவளும் சாவியுடன் வெளியே வந்து, "எங்கே ஓடிப்போனாலும் திரும்ப வந்துதான் ஆகவேண்டும்! உண்டா, இல்லையா?" என்று மெதுவாகக் கேட்டுவிட்டு அவனிடம் சாவிக் கொத்தை நீட்டினாள். பிரதீப்குமார் விரல்களால் அதைப் பற்றினான்.

ஒரு அன்னியப் பெண்ணின் விரல்களை அவன் எவ்வளவு நேரந்தான் பிடித்துக் கொண்டிருக்க முடியும்!

வீட்டுக்குள்ளிருந்து கேசவ்லால் ஒரு தும்மல் போட்டதும், பிரமீளா தானாகவே சாவிக் கொத்தை அவனிடம் நழுவவிட்டுவிட்டாள். அவன் போய்விட்டான்.

பிரதீப்குமார் கடைப்பிடித்து வந்த பிரமசரியம் நெகிழ்ந்து கொடுத்தது. எப்பொழுதும்போல தட்டுத் தடங்கலில்லாமல் இரண்டு வேளை பிரமீளாவின் வீட்டுக்கு வந்தான். மேலும் பல முறை வருவதற்குக் காரணந் தேடினான். வரும் போதெல்லாம் அவனுடைய கண்கள் அவளுடைய உருவத்தைத் தேடின.

அன்றொரு நாள். அவளைத் தனியாகச் சந்தித்த பிரதீப், "இன்று பட்சணம் இல்லையா?" என்று கேட்டான்.

"இல்லையே! சாவிதான் இருக்கிறது. பட்சணங்களை உங்களுக்காக நானே தின்றுவிட்டேன்!"

"எனக்காக நீ தின்றுவிட்டால், நான்தான் நீயா?"

"ஆமாம்! நான்தான் நீங்கள்!"

"பிரமீளா! நானும் உன்னைக் காதலிக்கிறேன். இது தவறானால் மன்னித்துவிடு!" என்று துணிந்து பேசிவிட்டான் பிரதீப் குமார். பேச்சுப் பேச்சென்று பேசி, ஒரு பெண்ணுள்ளத்தில் இமயப் பரிமாணம் வேட்கையும் துணிச்சலும் மண்டிக் கிடந்ததை அறிந்து அவன் அதிசயப்பட்டான்.

4

நந்தா, தன் மனைவி வாஸந்தியின் மூலம் பிரமீளாவின் காதல் செய்தியை அறிந்ததும் வானத்தின் உயரத்திற்குத் துள்ளினார். "என் முடிச்சை அவிழ்ப்பதற்கு யார் நீ?" என்று கூப்பாடு போட்டார்.

பிரமீளா தன் அப்பாவையே கேட்டுவிட்டாள். "அப்பா! உங்கள் பெற்ற மனம் துன்பப்படவேண்டாம். நான் பிரதீப்பை மறந்துவிடுகிறேன். ஆனால் நான் துன்பப்படாமலிருக்க நீங்கள் அந்தப் புரந்தர்லால் மகனையும் மறந்துவிட வேண்டும். எல்லோருக்கும் பிடித்தமாக வேறு மாப்பிள்ளையைத் தேடுங்கள். நான் சம்மதிக்கிறேன்" என்றாள்.

"முடியாது! நான் எப்பொழுதோ முடிவு செய்துவிட்டேன். அதை மாற்ற முடியாது."

"முடிவு எல்லோருக்குந்தான் செய்யத் தெரியும். நானும்தான் முடிவு செய்துவிட்டேன்!"

"பிரமீளா! பெண்களுக்கு எப்பொழுதுமே சொந்தமாக புத்தி இருந்ததில்லை. அப்படிக் கொஞ்சம் கொஞ்சம் இருந்தாலும், இதோ இந்த துஷ்டப்போக்கு தான் இருக்கும். உன் கழுத்தில் மாங்கல்யம் ஏறும் வரை நீ என் சொல்படிதான் நடக்க வேண்டும். அதன் பிறகு புரந்தர்லால் மகன் சொல்படி நடக்க வேண்டும். ஆமாம், நான் சொல்லிவிட்டேன்; நீ கேட்டுக்கொள்" என்று தீர்மானமாகக் கூறிவிட்டார் நந்தா.

பிரதீப்குமாரை மறுபடியும் சந்தித்த பிரமீளா, ஒரு தாளில் பொதிந்துவைத்திருந்த முத்தாரத்தை அவனுடைய கைகளில் வைத்தாள். "ஐநூறு ரூபாய்க்கு மேல் போகும். விற்றுக்கொண்டு வாருங்கள். நாளைக்கு அதிகாலை நாலரை மணிக்குப் பிரயாணம். தெற்கே மதராஸ் பக்கம் எங்காவது போய்விட வேண்டும். வேண்டிய துணிமணிகளை எடுத்துக் கொள்ளுங்கள். நான் ஒரு பெரிய பெட்டி வைத்திருக்கிறேன். பின் வாங்கக் கூடாது!" என்றாள்.

"பிரமீளா! நானும் உடன் வருவதற்குத் தடையில்லை. ஆனால் ஒன்றை மறந்துவிடாதே! இன்றிலிருந்து நாம் அனுபவிக்கப்போகும் இன்பத்துக்கும் துன்பத்துக்கும் நீதான்—நீ ஒருத்தியேதான்—பொறுப்பாளி. இன்பம் நமக்கு இடையூறு எதுவும் செய்து பிரிக்கப்போவதில்லை. துன்பம் அதைச் செய்யும்போது நான் தலைநிமிர்ந்து நின்று உன்னிடம் ஒன்று பட்டிருப்பேன். இது உறுதி. அப்படி துன்பம் எதுவும் நேர்ந்தால் நீ என்னை நொந்து வெறுக்கமாட்டாயே?" என்று பிரதீப்குமார் கேட்டுக்கொண்டான்.

அன்றிலிருந்து மூன்றாவது நாள் பிரமீளாவும் பிரதீப்குமாரும் மதுரை ஹோட்டல் ஒன்றில் வாடகைக்கு அறை எடுத்தனர். அவளை அங்கு வைத்துவிட்டு பிரதீப்குமார் வேலை கேட்டு அலைந்தான். மொழிப் பிரச்னை குறுக்கே நின்று தடுத்தது. ஒரே குடும்பத்திலுள்ள இருவர் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளாமல் பகைக்கும்போது அயலார் ஒருவர் வந்து விரோதத்தை விலக்குவதில்லையா? அது போல தமிழர்களுக்கும் தனக்கும் நடுவே அவன் ஆங்கில மொழியையும் பிரயோகித்துப் பார்த்தான். பயனில்லை. ஜவுளிக் கடை நடத்தும் வட இந்தியர்களிடமும் கேட்டுப் பார்த்தான். யாரும் அவனுடைய வரவை எதிர்பார்த்து ஒரு இடத்தைக் காலியாக வைத்திருக்கவில்லை.

பிரதீப்குமாரைக் கவலை சூழ்ந்தது. "எவ்வளவோ முயன்று பார்த்துவிட்டேன், பிரமீளா! இங்கே நமக்கு யாரைத்

அறிவிப்பு

கீழ்க்கண்டவிடங்களில் உள்ள எமது ஏஜண்டுகளிடம் சந்தாதாரர்கள் தங்கள் சந்தாக்களைச் செலுத்தி பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்

பம்பாய்

ஸ்ரீ பி. எஸ். கதிரேசன்,
நியூஸ் ஏஜண்டு,
மதுங்கா மான்ஷன் மதுங்கா.
பம்பாய்-19.

பூனா

ஸ்ரீ N. S. குல்கர்னி,
நியூஸ் ஏஜண்டு,
307, சோமவார்பேட்டை,
பூனா

சர்குலேஷன் மானேஜர்,
சுதேசமித்திரன்.
மவுண்ட்ரோட். மதராஸ்-2

தெரியும்? பழக்கமில்லாத பிரதேசத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு எவ்வளவு திண்டாட்டம் பார்!" என்ருன்.

"எல்லாம் என்னுல்தான்! உங்களுக்கு அதிகமாகத் தொந்தரவு கொடுக்கிறேன்."

"அதுதான் தெரிகிறதே!" என்ருன் பிரதீப்குமார். இதைச் சொன்னபோது அவனுடைய முகத்தில் இன்னும் அவநம்பிக்கையும் வெறுப்பும் பிரதிபலித்தன.

அன்றிரவு சுமார் ஒன்பது மணிக்கு பரபரப்பாக ஓடி வந்தான் பிரதீப்குமார். "ஒரு நல்ல யோசனை, பிரமீளா! மதராஸில் ஒரு 'ஸ்டூடியோ'வில் ஹிந்திப் படங்கள் எடுக்கப்போகிருர்களாம். அந்தப் பட உற்பத்தியாளர்களின் பட விநியோகக் கிளை ஒன்று இங்கே இருக்கிறது. அதிலுள்ள ஒரு பொறுப்பான மனிதர் நம் கதையைக் கேட்டு மனமிரங்கி இதைச் சொன்னர். ஏதாவது சில்லறை வேஷங்கள் கேட்டுப் பார்க்கலாம். இதோ சிபாரிசுக் கடிதமும் தந்திருக்கிருர்" என்ருன்.

அரை மணி நேர ஆலோசனைக்குப் பின் அவளும் சம்மதித்தாள். சரியாக சாப்பிடக்கூட இல்லாமல் ஹோட்டல் அறையைக் காலி செய்துவிட்டு, பெட்டி துணிமணிகளை எடுத்துக்கொண்டு இருவரும் மதுரையில் இரவு வண்டியிலே ஏறிவிட்டனர். சற்று வசதியாக இடம் கிடைத்து நன்ருகத் தூங்கிவிட்ட பிரமீளா, ரயில் திருச்சிக்கு அண்மையில் வந்துகொண்டிருந்தபோதுதான் கண் விழித்தாள். பக்கத்தில் அவன் இல்லை! அந்தப் பெட்டிக்குள் தேடினுள். வண்டி நின்றதும் எல்லாப் பெட்டிகளிலும் தேடிவிட்டாள். ஆளைக் காணேம். பெட்டியைத் தூக்கிக்கொண்டு கைவசமிருந்த இரண்டு 'டிக்கட்டு'களில் ஒன்றைக் கொடுத்துவிட்டு வெளியில் வந்தாள். போக்குத் தெரியாமல் அவள் மாறுய் மருள மருள விழித்துக்கொண்டு நின்றபோதுதான் அந்த சோம்பேறிக் கூட்டம் அவளைச் சுற்றி வளைந்துவிட்டது. அந்தப் பொறியிலிருந்து நான் அவளை மீட்டிருக்காவிட்டால், பாவம், அவளுடைய பொருள்கள் தொலைந்திருக்கும்; வாழ்வும் கெட்டிருக்கும்.

பிரமீளா நாள்தோறும் எனக்கு வார்த்தைகளால் நன்றி கூறினுள். அவளுடைய உள்ளத்தில் ஆழ்ந்து கிடந்த எண்ணங்கள், பிரதீப்குமாரும் அவளும் பேசிக்கொண்ட பேச்சுக்கள் எல்லாவற்றையும் மனம் விட்டுச் சொன்னுள். "எவ்வளவு துன்பம் நேரிட்டாலும் பிரிய மாட்டேன்" என்று உறுதி சொன்னவன், அவளைத் தவிக்கவைத்து மறைந்துவிட்டதை எண்ணி ஓயாமல் வருந்தினுள்.

5

சாப்பிடும் நேரத்தையும் தூங்கும் நேரத்தையும் தவிர பிரமீளா நாள் முழுவதும் திருச்சி நகரைச் சுற்றிவிட்டு வந்தாள். என்ருவது ஒரு நாள் அவளைத் தேடி பிரதீப் திருச்சிக்கு வருவான் என்ற எண்ணம் பாவம், அவளுக்கு!

மாதங்கள் செல்லச் செல்ல என் மனதில் நஞ்சு படிய ஆரம்பித்தது. எனக்குள் பேய் புகுந்துகொண்டது. 'இது நம்பிக்கைத் துரோகமல்ல; இயற்கை கற்றுத்தந்த மனித சுபாவ வேட்கை' என்றது அந்தப் பேய் கொண்ட மனம். 'பிறர் நலம்' என்று கருதி அவளை அழைத்து வந்து காப்பாற்றியதை மறந்து, சுயநலத்துக்கு ஆளானேன். பிரதீப் குமாரைத் தேடி பிரமீளா நகரத்துக்குள் போகும்போது, 'இன்றைக்காவது அகப்பட்டுக்கொள்ள மாட்டானு?' என்று எண்ணியது போய், 'அவன் அகப்படாமல் இருக்க வேண்டுமே!' என்று பிரார்த்திக்க ஆரம்பித்தேன். அவனைக் காணுமல் பிரமீளா சோர்வுடன் வீட்டுக்குத் திரும்பியபோது அவளுடைய வருத்தத்தில் பங்கெடுத்துக்கொண்டதுபோய், இப்பொழுது உள்ளூர ஆனந்தப்பட்டேன். "சகோதரி!" என்று கூப்பிட்டதைவிட்டு, "பிரமீளா!" என்று குழைந்து கூப்பிட ஆரம்பித்தேன். அந்தப் பேதை என் சுயநலத்தை அறிந்துகொண்டாளா? எதிர்கால வாழ்வைப்பற்றி அவளுடைய எண்ணங்கள் என்ன? என்னுல் ஒன்றும் அறிய முடியவில்லை.

அன்று ஒரு நாள். . . ஒரு நண்பனுக்கு திருமணப் பரிசு கொடுக்க வேண்டியிருந்தது. வெள்ளிப் பாத்திரக் கடைக்குச் சென்றபொழுது பிரமீளாவும் என்னுடன் வந்தாள். எந்தப் பொருளும் பிடிக்காமல் கழித்துக் கொண்டே வந்த எனக்கு மிக உயரத்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு சந்தனக் கிண்ணம் தென்பட்டது. வியாபாரி அரை மனத்தோடு எடுத்துக் காண்பித்தான். அங்கிருந்த எந்தப் பொருளையும் விட அதில் போற்றத் தகுந்த கலைத்திறன் வெளிப்பட்டது.

"இது கொடுப்பதற்கில்லை" என்ருன் வியாபாரி.

"ஏன்?" என்று கேட்டேன்.

"நேற்று ஒருவர் இதைப் பார்த்து, விலையும் கேட்டு, பிறகு வந்து வாங்கிக் கொள்வதாகவும் சொல்லிப் போனுர்."

"எப்பொழுது வருவார்?"

"எப்பொழுது என்று சொல்லவில்லை."

"அதற்கென்ன செய்வது? அவருக்கு இது எப்படியும் தேவையென்ருல் ஒரு தவணை சொல்லிவிட்டுப் போயிருக்கலாம். முன்பணமாவது கொடுத்துப் போயிருக்கலாம். அவரும் வராமலிருந்து, இதை விரும்பும் நீங்களும் வாங்காமல் போய்விட்டால் இது விலையாக இன்னும் எவ்வளவு காலம் பிடிக்குமோ? வாங்கக் கொடுத்துவைத்தவர் எவர் எவரோ? விலை ஏற்றத்தாழ்வால் வியாபாரிக்கு நஷ்டம் ஏற்படக்கூடுமானுல் விரும்பிக் கேட்ட உங்களுக்குக் கொடுக்காததை நினைத்து வருந்துவார்." பிரமீளா குறுக்கிட்டாள்.

இதைச் சொன்னபோது பிரமீளா கண் கலங்கினுள். குரலும் தாழ்ந்து ஏக்கம் விரவியிருந்தது.

நஷ்டத்திற்குக் கொடுப்பதைப்போல அரை மனதோடுதான் வியாபாரி அந்தக் கிண்ணத்தை எனக்கு விற்ருன்.

வீட்டுக்கு வந்துகொண்டிருந்தபோது பிரமீளா மறுபடியும் பேச ஆரம்பித்தாள்:

"இந்தக் கிண்ணத்தையும், இதை முதலில் பார்த்துவிட்டுச் சென்ற மனிதரையும் பற்றிப் பேசியபோது என்னையும் பிரதீப் குமாரையும் நினைத்துக்கொண்டேன். விலை கொடுத்து வாங்க சக்தியில்லாமலிருந்து வேண்டாமென்று சொல்லாமலே கிண்ணத்தைவிட்டுச் சென்ற மனிதரைப் போல, என்னைக் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கையில்லாமலிருந்து, அதை வெளிப்படையாகச் சொல்லாமல் இப்படி மறைந்துவிட்டார். உயிரற்ற இந்தப் பொருளை கலையை ரசிக்கத் தெரிந்த நீங்கள் வாங்கிக்கொண்டீர்கள். நான் உயிரோடு இருந்து அளவற்ற வேதனையையும், ஏமாற்றத்தையும் சுமந்து அலைகிறேன்!"

"அப்படியானுல் ஊருக்கே போய் விடேன்! அந்த லட்சாதிபதியின் மகன் உன்னை ஏற்றுக்கொள்ளுவான் அல்லவா?" என்று மனதில் ஒன்றும், வாக்கில் வேறும் வைத்துக் கேட்டேன்.

"முதலில் அப்பா எனக்குக் கடுமையான தண்டனை கொடுப்பார். அந்தப் பயத்தால் 'இனி ஊருக்குத் திரும்புவதில்லை' என்று தீர்மானித்துவிட்டேன்."



சாரணச் சிறுவன்:- சார்! இது நாங்கள் போட்ட பாலம். நீங்கள் இதன் பேரில் தைரியமாக நடந்து அப்பால் போகலாம்.

கனவான்:- ரொம்ப தாங்ஸ் பையா! ஆனுல் இது என்னைத் தாங்காது. நான் விழுந்துடுவேன்!

சிறுவன்:- அப்படியிருந்தாலும் பயப்படாதீங்க. எங்களுக்கெல்லாம் நன்ருக முதல் சிகிச்சை செய்யத் தெரியும்!

"அப்படியானால்?"

"அப்படியானால். . ."

"என்னதான் எண்ணியிருக்கிறாய், பிரமீளா?"

"இந்த நிலையில் நான் என்ன எண்ண முடியும்? நீங்கள்தான் சொல்லுங்களேன்!"

"அப்படியானால், நீ வந்து. . ."

"இந்தக் கிண்ணத்தைப் பாருங்கள்! யாரோ ஒருவர் விரும்பிப் பார்த்து விட்டுப் போனதால் இதனுடைய எழிலுக்கும் பண்புக்கும் களங்கம் ஏற்பட்டு விடவில்லை, அல்லவா?"

"இல்லைதான்."

"ஆணையிட்டுச் சொல்கிறேன். எவ்வளவோ தைரியமாக பிரதீப்குமாரோடு வீட்டைவிட்டு வெளியேறியும் கூட சபல சித்தத்தைப் பொறுமையோடு வென்றிருக்கிறேன். பெண்மையைக் காத்துக்கொண்டேன். இது வரையும் நான் மாசடைந்தவளல்ல. நீங்கள் என்னை நம்ப வேண்டுமே!"

"உன்னையும் உன் பவித்திரத்தையும் நம்புகிறேன், பிரமீளா!"

"எத்தனையோ நாட்களில் உங்கள் மனம் அலையடிபட்டுக்கொண்டிருந்ததை நான் கவனித்திருக்கிறேன்!"

"உண்மையாகவா?"

"என்னைக்கேட்டால்? உங்கள் மனம் உங்களுக்குத் தெரியாதா?"

"உனக்கு எப்படித் தெரிந்தது?"

"எப்படியோ புரிந்து கொண்டுவிட்டேன்!"

"பிரமீளா!"

"உங்கள் அம்மா சம்மதிப்பார்களா?"

"சம்மதிக்க வைப்பேன்!" என்று என்னையும் மறந்து நடு வீதியிலேயே அவளுடைய கைப்பற்றி முகத்தைப் பார்த்தேன். "நீங்களும் கைவிட்டு விடாதீர்கள்!" என்று கெஞ்சும் பார்வையை அந்தக் கண்களில் கண்டேன்.

6

அம்மாவை எந்த விதத்திலும் சமாதானம் செய்ய முடியவில்லை. ஆதரவற்று, அடைக்கலம் கேட்டு வந்த பிரமீளா வீட்டுக்கு அரசியாகப்போவது தெரிந்து வெகுண்டாள். அவளை வெறுத்தாள். எனக்கென்று என் சுற்றத்தாரிலோ அல்லது இனத்தாரிலோ எந்தப் பெண்ணையும் அம்மா பார்த்து வைக்கவில்லை. என்றாலும், "கனி கிடைக்கவில்லை என்பதற்காக கசக்கும் காயைத் தின்பதா?" என்று கேட்டாள்.

பிரமீளா எனக்குக் காயாகவே இருக்கட்டும். ஆனால் அம்மா நினைக்கிறபடி 'கசக்கும் காய்' அல்ல. வெள்ளரிப் பழத்தைவிட, வெள்ளரிக்காயை—பூவிளம் பிஞ்சை—விரும்பித் தின்பதில்லையா?

நான் எவ்வளவோ துணிந்துவிட்டேன். அம்மாவிடம் மென்மேலும் எதுவும் சொல்லிப் புண்படுத்தவில்லை. திருமணத் தேதியையும், இடத்தையும் குறிப்பிட்டு அழைப்பிதழ்கள் அச்சிட்டு, நண்பர்களுக்கும், என் மாணவர்களுக்கும், சக ஆசிரியர்களுக்கும் வழங்கினேன். மணக் கோலத்தோடு வந்து நானும்பிரமீளாவும் அந்தப் பெற்ற தாயின் பாதங்களைப் பற்றிக்கொண்டு வாழ்வுப் பிச்சை கேட்டால் கிடைக்காமலா போய்விடும்? அம்மாவுக்குத் தெரியாமலே எல்லா ஏற்பாடுகளும் செய்தேன்.

இலவசமாகவே ஒரு தனவந்த மாணவன் 'கார்' கொடுத்தான். குளித்து, சிற்றுண்டியை முடித்துவிட்டு, ஸ்ரீரங்கத்தைக் காண்பித்து வருவதாக அம்மாவிடம் சொல்லிவிட்டு பிரமீளாவை அழைத்துப் புறப்பட்டேன். நேராக நண்பர் சவரிமுத்துவின் வீட்டில் வந்திறங்கினோம். முதல் நாளே வாங்கி அங்கு வைத்திருந்த புதிய திருமண உடைகளை அணிந்துகொண்டோம். பிரமீளா சில புது நகைகளைப் போட்டுக்கொண்டாள்.

முஹூர்த்தம் நெருங்கி வந்தது. அரங்கநாதன் சந்நிதியில் திருமணம் நடைபெற வேண்டுமென்று ஏற்பாடு. அங்கே நண்பர்களும், சக ஆசிரியர்களும் குடும்பத்துடன் கூடியிருப்பார்கள். மாணவர்களிலும் பலர் வந்திருப்பார்கள். நண்பர் சவரிமுத்துவும் மனைவியார் சகிதம் அடுத்துக் கிளம்பிவிடுவார். திருமண காலத்தில் கால் மணி நேரம் கோவில் மேளம் முழங்கும். அதுவே போதும்! அதன்பின் ஸ்ரீரங்கம் சாப்பாட்டு விடுதி ஒன்றிலேயே விருந்துக்கு ஏற்பாடாகியிருந்தது. என்னையும் பிரமீளாவையும் சுற்றியிருந்துகொண்டு விருந்துண்ணும் நண்பர்கள், பேச்சால் மகிழ்வித்து எங்களைச் சிரிக்கவைப்பார்கள். சுற்றத்தில் பெண் கிடைத்தால் இவ்வளவும் ஏது?

மேக நிறப் பட்டாடை மதமதக்க பிரமீளாவை இடப்பக்கம் வைத்துக் கொண்டு 'காரி'ல் புறப்பட்டேன். காவேரிப் பாலமும் கடந்தது. 'காரு'ம் நின்றுவிட்டது.

'டிரைவர்' இறங்கி ஏதோ விசைகளைத் திருகினான். பிறகு எங்கள் முகத்தைப் பார்த்தான். நாங்கள் இறங்கித் தள்ளி வேடிக்கை காண்பிக்கவா அந்த மணக்கோலத்தில் இருந்தோம்?

இடப் பக்கமாக எங்களைக் கடந்து சென்ற ஒரு மனிதனை 'டிரைவர்' கைகொட்டி துணைக்கு அழைத்தான். அவனும் நின்று திரும்பினான். அவ்வளவுதான். மின்வேகத்தில் பிரமீளா கதவைத் திறந்து ஓடினாள். ஓடி அந்த மனிதன் காலில் வீழ்ந்தாள்.

அழுக்கடைந்து தையல்கள் போட்ட வேஷ்டி, சட்டை; எண்ணெய் கண்டு நாளான பரட்டைத் தலை; க்ஷவரங்கண்டு மாதங்களான முகம்; இந்தக் கோலத்தில்—நாடோடிப் பரதேசிக் கோலத்தில்—நின்ற ஒரு மனிதனின் முன்பு மணக்கோலம்கொண்டிருந்த பிரமீளா வீழ்ந்து கிடந்தாள்.

பொறுமையிழந்து, ஓடிப்போய் பிரமீளாவைத் தூக்கி நிறுத்தினேன். "பிரமீளா! இவர்தான் பிரதீப்குமாரா? உடனே சொல்!" என்று அவளுடைய தோள்களை உலுக்கினேன்.

கண்ணீர் வடிக்கும் கண்களோடு, "ஆமாம்!" என்றாள் அவள்.

எனக்கு அந்த அசுரத்தனம் வந்திருக்கவே கூடாது. "முட்டாள்! கோழை! ஏன் இவளை அநாதையாகத் தவிக்க விட்டு ஓடிப்போனாய்? பதில் சொல்!" என்று கேட்டு அவன் கன்னத்தில் ஒரு அடி கொடுத்துவிட்டேன்.

அவன் கொஞ்சமும் பதறாமல் இடது கையைக் கன்னத்துக்குக் கொண்டு போனான். கண்ணீரைத் தேய்த்து அழிக்க முடிந்தது; அடியை அழித்து விட முடியுமா? துடிக்கும் உதடுகளால் "மன்னிக்க வேண்டும்!" என்றான்.

நான் திடுக்கிட்டேன். 'அடித்ததற்கு மன்னிப்பா அடிபட்டதற்கு மன்னிப்பா? யார் யாரை மன்னிப்பது?"

அவன் தொடர்ந்து கலங்காமல் பேசினான்: "நான் ஓடிப்போகவில்லை. தற்செயலாக நாங்கள் பிரிந்துவிட்டோம். சந்தர்ப்பம் எங்களைத் துண்டித்துவிட்டது. 'மதுரையில் பசியோடு புறப்பட்டாளே'யென்று ஆகாரம் வாங்கித் தர திண்டுக்கல்லில் இறங்கினேன். புத்தியில்லாத்தனமாக நேரங் கழித்து இறங்கினேன். எதிர்பாராமல், பாஷை முட்டுக்கட்டையால், பலகாரம் விற்பவனுக்கும், எனக்கும் தகராறு வலுத்துவிட்டது. ஒரு வழியாக அதைத் தீர்த்துவிட்டு ஓடிவந்தபோது ரயில் புறப்பட்டுவிட்டது. கொடி காட்டிக்கொண்டு நின்ற ஒருவர் என்னைத் தடுத்து நிறுத்திவிட்டார். நான் என்ன செய்வேன்? இந்தத் துன்பங்களையெல்லாம் நான் எதிர்பார்த்தவன்தான். இவளோடு வராமல் ஊரிலேயே நான் தங்கிவிட முடியும். ஆனால்

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி" REGD

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் அசல் விஜயநகரம் மருந்து. எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும். போலிகளைக் கண்டு ஏமாறுதீர்

Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

19, தெற்குமாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்-4. போன்: 71354.

கும்பகோணம் கிளை: 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி.

அப்படிச் செய்யவில்லை. வீடு, வாசல், உற்றார், பெற்றோர், எல்லாம் துறந்தேன். இங்கே போகாத ஊர் இல்லை; தேடாத இடமில்லை. எனக்கென்றே பிறந்தவள் என்று கருதிய பிரமீளாவை இப்பொழுது கண்டுபிடித்துவிட்டேன்! ஆனால் என்ன லாபம்? பிரியும்போது என் பொருள்; கிடைத்தபோது அவள் உங்கள் பொருளல்லவா? பிரமீளாவுக்குக் கொடுத்த வாக்குப்படி அவளுக்காக எவ்வளவோ துன்பங்களை அனுபவித்துவிட்டேன். அடி, உதை எல்லாம் பட்டிருக்கிறேன். நீங்கள் கொடுத்த இந்த ஒரு அடி அவ்வளவு அதிகமில்லை!"

என் மனம் கசிந்து உருகிப் பெருக்கெடுத்தது. வேதனையும் சேர்ந்து வீங்கிப் புடைத்துக்கொண்டு வந்தது. அது எந்த நேரத்தில் பல்லாயிரம் சிதறல்களாக வெடித்து எனக்கு மரணத்தைக் கொண்டு வந்து விடுமென்று தெரியவில்லை.

அலகையாக இரைச்சலிடும் நெஞ்சத்தைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு அந்த 'காரை'ப் பார்த்தேன். பொருத்தமாகப் பழுதடைந்து அது என்ன வேலை செய்துவிட்டது! கால்நடையாகவே வீட்டை நோக்கிப் பறந்தேன்.

வீட்டிற்குப் போய்க் கட்டிலில் படுத்துக் குமுறினேன். வெகு நேரம் பிரமை பிடித்துக் கட்டிலிலேயே கிடந்தேன். யாரோ காலைத் தொடுவதை உணர்ந்து எழுந்தேன். 'பிரமீளா! பக்கத்தில் பிரதீப்குமார்! என்னென்ன பேசிக் கொண்டு வந்தார்களோ?' என் வாய் இறுக மூடி ஒட்டிக்கொண்டது.

பிரதீப் குமார் வாயைத் திறந்தான்; மூடினான். திறக்க முயன்றான்; திறந்தான்: "மன்னித்துவிடுங்கள். . . அதிகமாகத் துன்பப்பட்டுவிட்டேன். . . பிரமீளாவுக்காகதான். . . அவளுக்காகத்தான் உயிரை வைத்திருக்கிறேன்... மன்னித்துவிடுங்கள்! . . .என்றால் எதுவும் பேசிக் கேட்க முடியவில்லை!" என்று குளறினான். இரண்டு கைகளாலும் வாய் பொத்தி வாங் கேட்டு நின்றான்.

நெம்பிப் பிளப்பதுபோல என் வாயைச் சிரமப்பட்டுத் திறந்தேன். "நீ என்ன கேட்கப் போகிறாயென்று எனக்குத் தெரியும். இவளுக்கும் மனமிருக்கும்; நானும் தடுக்கவில்லை. எங்கேயாவது போய்விடுங்கள்!" என்றேன்.

"எங்கே போவது? உங்கள் துணையிருந்தால் நாங்கள் இந்த ஊரிலேயே எப்படியாவது பிழைத்துக்கொள்வோம்!" என்றான் பிரதீப்குமார்.

"வீண் கனவு! நான் உங்களுக்குத் துணையாக இருப்பதா? அது முடியாது! நீங்கள் எங்காவது போய்விடத்தான் வேண்டும். கொஞ்சம் பணம் வேண்டுமானால் தந்து உதவுகிறேன். போய்விடுங்கள்! என் கண்ணில் படவே கூடாது. எனக்குக் கடிதமும் எழுதக் கூடாது. முழு சம்மதத்துடன் சொல்கிறேன், எங்காவது போய்விடுங்கள்!"

நான் கொடுத்த ஐநூறு ரூபாயை பிரதீப் குமார் தடை சொல்லாமல் பெற்றுக் கொண்டான். அவனுக்கு வேறு உடுப்புகளும் கொடுத்தேன்.

யார் என்ன சொன்னபோதிலும் நான் அவர்களைக் கண் காணாமல் போய்விடச் சொன்னது நல்லதற்குத்தான். எனக்கும் இதயம் உண்டு. அதன் உணர்ச்சிகள் வரம்பு மீறிப் போகும்போது தாங்கிக் கொள்ளும் சக்தி எனக்கில்லை. அது மகிழவும் செய்யும், வேதனையும்படும்; தூயதாகவும் இருக்கும், கெட்டும்போய்விடும்; உறுதியாகவும் இருக்கும், நெறி தவறிப் போகவும்கூடும்; வைரமாக இறுகிவிடவும் செய்யும், சுக்கல் ஆயிரமாக வெடித்துப்போனாலும் போகும்.

அப்படிப்பட்ட இதயம் பிரமீளாவுக்கும் இருந்தது. அதனால்தான் அவள், உடுத்திருந்த திருமணச் சேலையையும், நான் செய்துகொடுத்த நகைகளையும், மற்ற பொருள்களையும் கொண்டு போக மறுத்துவிட்டாள். பிற்கால மன அமைதிக்காக என்னை மறந்துவிட, அவள் அப்படிச் செய்ததும் நன்மைக்காகத்தான். வீட்டைவிட்டு வெளியேறும் வரை அவள் அழுதுகொண்டேயிருந்தாள். வேறு எதுவும் பேசவில்லை. போகும்போது என்னையும், அம்மாவையும் தரையில் விழுந்து வணங்கிச் சென்றாள். கணவன் வீட்டுக்குச் செல்லும் தங்கையாக எண்ணி அவளை வாழ்த்தி அனுப்பினேன்.

பிரமீளா என்னைவிட்டுப் போய்விட்டாள். என் கண் மறைவில் அவள் பிரதீப் குமாரோடு சுகமாக வாழ வேண்டும். பக்கத்திலேயே அவர்களை வாழவைத்துப் பார்த்திருக்கலாம். ஆனால் அது முடியாத காரியம். எனக்கும் இதயம் உண்டு. அதன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த என்னால் முடியாது. மீறிப் போனால் அந்த உணர்ச்சிகளை என்னால் தாங்கிக்கொள்ள முடியாது.

மோக முள்

தி. ஜானகிராமன்

கார் கிளம்பி நகர்ந்தது.

சற்றுப் பெரிய கிராமம் என்று சொல்ல வேண்டிய ஊர்தான். இப்படியும் அப்படியுமாக நூறு வீடுகளுக்குக் குறையாது. எல்லாமே அகலப்பாங்கான வீடுகள். காலி மனைகளோ, பாழ் மனைகளோ தென்படவில்லை. கொஞ்சம் சுபிட்ச வரிசையில் சேர்க்க வேண்டிய ஊர் என்று நிகிநிகி என்ற திண்ணைகளும், வீடுகளின் நிலை உயரமும், வீச்சும், நடுவயதுத் தோற்றமும், தெருவில் காரோடு ஓடிவந்த குழந்தைகளும், வீட்டுக்கு வீடு வாசலில் நின்று வேடிக்கை பார்த்த பெண்ணினத்தின் தெளிவும், பொலிவும் சொல்லின. அப்படி கார் வேகமாகவும் போகவில்லை. ஆனால், ஊன்றி ஒவ்வொரு வாசலாக ஒவ்வொரு மனிதராகப் பார்த்துப் போகக்கூடிய மெதுவும் இல்லை. அந்த வேகத்திலேயே புடவைத் தலைப்பு, கழுத்து, கைகளில் இருந்தவைகள், முகங்கள் எல்லாமே பொதுவாக நல்ல கோலமாகத்தான் இருந்தன. நடுத்தெருவில் போன காரிலிருந்து, கார் போன அந்த வேகத்தில், இவ்வளவு தெரிந்து கொள்ள முடிந்தது பாபுவால். சில கிராமங்களில் பார்க்கிறாற்போல இங்கு இல்லை—இங்கு அநேகமாக ஸ்திரீகள்—சிறிசு, பெரிசு, கிழம் எல்லாருமே சற்று பார்க்கக்கூடியவர்களாக இருந்தார்கள்; பங்கரையில்லாமல் இருந்தார்கள். கொஞ்சம் ஆரோக்கியமாகக்கூட என்று தோன்றிற்று. சற்றுக் காலை அகட்டி, குனிந்து வாசலில் கோலம் போட்டுக்கொண்டிருந்த இரண்டு ஸ்திரீகளில் ஒருத்தி, கார் நெருங்கியதும் நிமிர்ந்து நகர்ந்து திண்ணையோரமாக நின்றுகொண்டாள். இன்னொருத்தி—அடுத்த வீட்டு வாசலில்—அகட்டின கால்களுடனேயே அப்படியே நிமிர்ந்து, கார் உள்ளேயிருப்பவர்கள் எல்லாவற்றையுமே மனதில், கோலம் போட்டுக்கொள்வது போல, பார்த்து வைத்துக்கொண்டாள். இரண்டு மூன்று விஷமப் புன்சிரிப்புகள், எதிர்ச்சாரியில் பூத்த புன்னகைகளுக்குப் பதில் கொடுத்தன. அதே போல கண்கள் எதையோ ரகசியத்தைக் கண்டுபிடித்துவிட்ட பெருமையைக் கொடுத்து வாங்கிக்கொண்டன. இவ்வளவு கிண்டலுக்கும், விஷமத்திற்கும் என்னதைக் கண்டுவிட்டார்களோ! ஒரு திண்ணையில் சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்த ஒருவர் காரை வெகு அலட்சியமாகப் பார்த்துக்கொண்டிருந்தார். பிரமாதக் கார்! அல்லது கார் என்ன பெரிய அதிசயமா, எல்லாம் நானும் பார்த்திருக்கிறேன், என்று இடிப்பதுபோல ஒரு அலட்சியப் பார்வை! பாபுவுக்கு அவரைக் கண்டுதான் சற்று அருவருப்பாக இருந்தது. கிண்டல் பார்வைகூட சகஜம் என்று சொல்லலாம். யார், என்ன என்று தெரிந்துகொள்ளவே விரும்பாதது போன்ற இந்த அலட்சியம்தான் சகிக்க முடியவில்லை. இப்படியே இருந்துவிடுவாரா இந்த மனிதன்! யாரையாவது கூப்பிட்டு, 'யாருடா கார் அது?' என்று தெரிந்து கொள்ளாமலிருக்கப்போவதில்லை. இந்த வறட்டு அகம்பாவம் இப்போது எதற்கு?

பாபு சற்று உள்ளே திரும்பினான். யமுனாவும், பார்வதியும் பக்கத்தில் எங்கும் பார்க்கவில்லை. நேராகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். யமுனாவின் விழிகள் மட்டும் கடையில் அடிக்கடி ஒதுங்குவது போலிருந்தது.

தெரு முனங்கு திரும்பியதும், "கிராமம்னா மரியாதை, கட்டுப்பாடு எல்லாம் ஜாஸ்திதான்" என்றாள் யமுனா.

திடீரென்று அவள் கிராமத்தைப் பற்றி அபிப்பிராயம் சொல்ல ஆரம்பித்தது விந்தையாகத்தானிருந்தது.

"ஆமாமாம். ஜாஸ்திதான். வெத்திலை பாக்கு வச்சு அழச்சாப்போல, எல்லாரும் வாசலுக்கு வந்து நின்னு பாக்கறது மரியாதையும், கட்டுப்பாடும் அதிகம்தான். கிழம்கட்டை, குஞ்சுகுளுவான், ஒண்ணு பாக்கியில்லையே" என்றான் பாபு.

"நான் அதைச் சொல்லலே. இந்த அம்மாவைச் சொன்னேன்" என்று கிராமத்தையும், சாலையையும் இணைக்கிற பாதையின் நடுவில் ஒற்றைக் கட்டிடமாக நின்ற சத்திரத்தில் ஈரம் சொட்டச்சொட்ட, கையில் ஒரு டம்ளருடன் ஒதுங்கி நின்ற விதவைக் கிழவியைப் பார்த்தாள் யமுனா.

யாரோ கிழவி. ஆற்றில் குளித்து விட்டுத் திரும்பிக்கொண்டிருந்தவள் அபசகுனமாக எதிரே வருவானேன் என்று, காரைக் கண்டதும் சத்திரத்தில் ஒதுங்கி நின்றிருந்தாள்.

"ஹூம்" என்று பெருமூச்சுவிட்டாள் பார்வதி.

யமுனா பாபுவின் பக்கம் திரும்பி நாக்கைக் கடித்துக்கொண்டாள்.

"பாரு, விடிகாலம் இந்தத் தள்ளாத உடம்பிலே எழுந்து நடந்து ஆத்திலே போய்க் குளிச்சுப்பிட்டு வரதுன்னா, மனசும், உடம்பும் ஒரு கட்டுப்பாட்டுக்குக் கட்டுப்பட்டு வளைஞ்சு கொடுத்தாத்தானே முடியும்" என்று பேச்சைச் சட்டென்று மாற்றிவிட்டாள் யமுனா. விதவை, அபசகுனம் என்று பார்வதி இருப்பதைக்கூடக் கவனிக்காமல் என்னத்தையோ சொல்லிவிட்டாளே என்று அதிர்ந்த பாபுவுக்கு அவள் பேச்சை எங்கோ திருப்பின சுருக்கையும், லாகவத்தையும் கண்டு தூக்கிவாரிப் போட்டது.

"யாரு யமுனா அது? தையுப் பாட்டி மாதிரி இருக்கே" என்று கேட்டாள் பார்வதி.

"ஆமாம்மா. தையுப் பாட்டிதான்" என்று பின்பக்கம் இருந்த கண்ணாடி வழியாகப் பார்த்தாள் யமுனா. "ஆமாம், தையுப்பாட்டிதான்" என்றாள்.

"பாவம், இந்த ஆறும் முழுக்கும் தான் அதுக்கு ஆறுதல்" என்று சொன்ன பார்வதி, தேம்பித் தேம்பி அழத் தொடங்கிவிட்டாள்.

பாபுவுக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் திகைத்துப் போய் குழம்பும்

☆ தொடர் நாவல் ★

போதே, பார்வதி அழுகையும், அடைப்புமாகச் சொன்னாள். "பாவம். . . மூணு வயசிலே கல்யாணம். நாலு வயசிலே தாலி போயிடிச்சு. அப்பறம் எழுபது வருஷம் இந்தக் கோலம்... அநியாயம்" என்று கண்ணைத் துடைத்துக்கொண்டாள்.

தனக்கு வந்த அழுகைக்கு ஏதோ வியாஜமாக இதைச் சொல்லி அழுதாள் பார்வதி என்று தெரிந்தது. இருவரும் ஒன்றும் சொல்லவில்லை.

"எப்படித்தான் சகிச் சிட்டிருந்திச்சோ பாவம்" என்றாள் பார்வதி.

சற்றுப் பேசாமலிருந்துவிட்டு, "நம்மைவிடக் கஷ்டப்படறவங்களைப் பார்த்து நாம தேத்திக்க வேண்டியது தான்" என்றாள் யமுனா.

"வாஸ்தவம்" என்றான் பாபு.

"ஹம்மா" என்று வாய்விட்டு அரற்றிக்கொண்டே சூன்யத்தைப் பார்த்தாள் பார்வதி.

ஃ ஃ ஃ

பாபுவுக்கு அந்த விஷமப்பார்வைகளை—இந்தச் சாரிக்கும் அந்தச் சாரிக்குமாக ரகசியம் பரிமாறிக்கொண்ட கண்களை மறப்பது சிரமமாயிருந்தது. இரவு அவன் மிரட்டிக் காதைக் குலுக்கிய கிழவரையும் மறக்க முடியவில்லை. அவர் கற்றுக்கொண்ட பாடம் உபயோகமானதுதான். பகலில் பக்கம் பார்த்துப் பேச வேண்டும், இரவில் அதுவும் கூடாது. ஆனால் யமுனாவையும், பார்வதியையும் பற்றி அவர் வெகு காலமாக வளர்த்திருக்கிற எண்ணங்களைக் கழித்து எறிய வேண்டும் என்று அவன் சொல்லிக்கொடுத்த பாடத்தைக் கற்றுக் கொண்டிருப்பார் என்று தோன்றவில்லை. இப்போது கண்ட கிண்டலையும், புன்னகைகளையும் நினைக்கும்போது ஊர் முழுவதுமே வேரூன்றின விஷம் இது என்று தெரிகிறது. பாலம்மாளே இல்லாமல் பார்வதி மட்டும் சுப்ரமண்யத்தின் மனைவியாக இருந்திருந்தால், அப்போதும் இப்படித்தானே இருக்கப் போகிறது? உறவுக்காரர்கள் மட்டும் இல்லை; ஊரே, எல்லாருமே இதை விரும்பவில்லை என்று பார்வதிக்குத் தெரிந்திருக்குமா? இதையெல்லாம் நினைத்துத்தான் கடையாணி கழண்ட வண்டி என்று அப்பா சொன்னார் போலிருக்கிறது.

கடையாணி கழண்டிருக்கிறது என்று யாராவது சாலையில் போகிறவன் பார்த்துச்சொல்லுவான்.

இப்போது சொல்லாமல் சிரிக்கிறார்கள். நையாண்டி செய்கிறார்கள். வண்டி விழுந்து நொறுங்குவதைப் பார்த்தால் ஒழிய அவர்களுக்கு நிம்மதி வராது.

கார் வேகமாகப் போயிற்று. எதிர்க் காற்று சில்லென்று அடித்தது.

யமுனா வெளியே பார்த்துக்கொண்டு வந்தாள். இரண்டு பேர் முகத்திலும் கவலை தேங்கிக்கிடந்தது.

"நேத்திக்கு எப்ப தந்தி வந்துது?"

"பத்து மணியிருக்கும்."

"ஆறு ஆறரை மணிக்கு எக்ஸ்பிரஸ் தந்தி கொடுத்தேன்னாரே அவர்."

"அவன் எக்ஸ்பிரஸ்லே கொடுன்னு ஆளனுப்பிச்சாளும். போனவன் சாதாரணமாக் கொடுத்தானும்" என்றாள் பார்வதி.

"குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறபோது வேற செய்வானா ஆளு?"

"எழுதிக்கொடுத்த கடுதாசியிலே எக்ஸ்பிரஸ்னு எழுதலியாம். மறந்து போச்சாம் அலமலப்பிலே."

"அப்படியா?" என்றான் பாபு.

சிறிது நேரம் யாரும் பேசவில்லை.

"எனக்கு என்னமோ. . ."என்று இழுத்தவன் மேலே பேசாமல் நிறுத்திக் கொண்டான். அரை நிமிஷம் எதிர் பார்த்துவிட்டு "என்ன பாபு?" என்று கேட்டாள் பார்வதி.

"நான் நினைக்கிறது சரியோ என்னவோ!"

"என்ன?"

"இவரை நம்ப முடியுமான்னு எனக்கு சந்தேகமாயிருக்கு" என்று எங்கேயோ பார்த்துக்கொண்டே சொன்னான் பாபு.

"ஏன்?"

"அதான் சொன்னேனே. நான் நினைக்கிறது சரியில்லாமல் இருக்கலாம். ஆனால் ஏதோ சந்தேகம் எனக்கு."

"என்னதினாலே அப்படி தோணுது உனக்கு?" என்று கேட்டாள் பார்வதி. அவள் முகம் இன்னும் வாடிற்று.

"பேசற மாதிரி, தோரணையெல்லாம் பாத்தா அப்படியிருக்கு."

"ஏதாவது சொன்னானா?"

"ஒண்ணும் சொல்லலே. அவசரத் தந்தி கொடுத்தேங்கறேள்; இன்னும் கொஞ்சம் பாக்கப்படாதான்னு கேட்டதுக்கு, ஏதோ ஊர்லே பட்டினி கிட்டினின்னு நொண்டி சமாதானம் எல்லாம் சொன்னார். அதுதான் போனாப்போறதுன்னு, முன்னாடியே வந்து பாக்கப்படாதான்னு மூஞ்சி ரொம்ப அலட்சியமா, சொன்னார்."

"நான் புறப்படறதாத்தான் இருந்தேன். கவலையில்லேன்னு எழுதியிருந்தானே... அதனாலே."

"நான் அதைத்தான் சொன்னேன். 'உடம்பு கவலைக்கிடமா இருந்தாத்தான் வந்து பாக்கணும்போலிருக்கு'ன்னு வள்ளுனு விழுருப்போல விழுந்தார்."

"வேற என்ன சொல்லப்போறான் அவன்? வேற என்ன சொல்றதுக்கு இருக்கு?" என்றாள் யமுனா.

பாபுவுக்கு என்னென்னமோ கேட்க வேண்டும்போலிருந்தது. என்னதான் கார் ஓட்டுகிறவனும், கூட உட்கார்ந்திருப்பவனும் அந்நியனாக, முகம் தெரியாதவனாக இருந்தாலும், அவர்கள் எதிரே குடும்ப விஷயங்களை – அதுவும் இந்த மாதிரி உறவுள்ள குடும்பங்களின் உள்ளந்தரங்கங்களைப்பற்றிப் பேசத் துணிவில்லாமல் பேச்சை விட்டுவிட்டான்.

கார் நிதானமாக ஒரே வேகத்தில் போய்க்கொண்டிருந்தது. எதிரே சென்ற வயல்களும், மரங்களும் திருப்பித் திருப்பி ஒரே காட்சியாக வந்தன. தூக்கம் கண்ணை அமட்டிற்று. இரண்டு, மூன்று தடவை விழுந்து எழுந்தான் பாபு.

"அப்படியே சாஞ்சுக்கோயேன் பாபு" என்றாள் பார்வதி.

"பரவாயில்லை". ஆனால் இமை அழுந்திற்று. பசையிட்டு ஒட்டிக்கொண்டது. கண்ணை விழித்தபோது கார் எங்கேயோ ஓட்டம் தடைப்பட்டு நின்றிருந்தது. முன்னால் ரயில்வே கேட் ஒன்று சாத்தியிருந்தது.

மலமலவென்று விழித்தான் அவன்.

"சுந்தரப் பெருமா கோயில் ரயில்வே கேட்டா?"

"ஆமாம்."

"பாபநாசம் தாண்டியாச்சா?"

"ஆச்சு."

"அடேடே."

"என்ன?"

"வரபோதாவது பாபநாசத்திலே இறங்கலாம்னு பாத்தேன்."

"தூங்கிப்போயிட்டியே" என்றாள் யமுனா.

"என்னறியாம அமட்டிண்டு வந்துடுத்து."

"நல்ல வேளை" என்றாள் யமுனா.



"ஏன் யமுனா?"

"இல்லாட்டா இன்னிக்குக் காலேஜிலே முதல் பீரியட் போயிருக்கும்."

"அப்பா ஏதாவது தைரியமா சொல்லுவார். அதான் நெனச்சேன்."

"நீ இருக்கிறதே தைரியம்தான் பாபு" என்றாள் பார்வதி.

வாழைக் குருத்து போல—பறித்து இரண்டு நாளான—அவள் உடல் பக்கத்தில் பொலிந்துகொண்டிருந்தது. அப்பால் இருந்தது புதிய குருத்தாகப் பளபளத்தது.

யமுனாவின் முகத்தையும், கண்ணையும் வனப்பையும் பார்த்தான் பாபு. கோயம்புத்தூர்க்காரன் முட்டாள் என்றுகூடத் தோன்றவில்லை. இந்த வனப்பை எதிர்த்து நிற்கிற சக்தி எப்படி அவனுக்கு வந்தது? இல்லை இதை அழகு என்றே புரிந்துகொள்ளாத மௌட்யமா அது? அப்படி ஒன்றும் புரியாததில்லை. இல்லை, அவனும் கடையாணி இல்லாத வண்டி என்று பயந்துவிட்டானா?

இவளிடம் ஏதோ அசாதாரணமான ஒன்று இருக்கத்தான் இருக்கிறது. அணுக முடியாத, தொட முடியாத ஒரு முழுமை, பொலிவு. சந்தனக் கட்டையின் வழவழப்பு, வர்ணம். நீண்ட விரல்கள், நீண்ட கைகள், நீண்ட பாதம்.

படித்த முகம்தான் இது. சாதாரணமாகப் படித்த முகம் இல்லை. இவள் படித்தது, பள்ளிக்கூடத்தில் படித்தது, சொல்பம். முகம், படிப்பிலேயே சிறு வயதையும் குமரப் பருவத்தையும், யௌவனத்தில் பாதியையும் கழித்துவிட்டாற்போல சுடர் வீசுகிறது. அறிவின் மையத்தை, அறிவின் உயிரை, அறிவின் சீரத்தைப் பிடித்து ஆட்கொண்டுவிட்ட சாதனை தான் கண்ணின் திறந்த ஒளியும் நிதானமும்.

உண்மையாகவே இவள் தொடக்கூடாதவளா? நெருங்க முடியாதவளா? நெருங்கத் தகாதவளா? அறிவைத் தவிர, எண்ணங்களைத் தவிர வேறு ஒன்றுமே இவளுக்குக் கிடையாதா? இவள் சரீரத்திற்கு, தங்கச் சுரங்கமான இந்தப் புற அழகிற்குப் பலனே கிடையாதா?

தூக்கம் கலைந்து, முக்கால் உணர்வும் கால் மயக்கமுமாக, சிறிது சிறிதாகத் தெளிந்துகொண்டிருந்தவனுக்கு என்னென்னமோ படம் படமாகத் தோன்றிற்று.

கார் சுவாமிமலை ஸ்டேஷனைத் தாண்டிச் சென்றுகொண்டிருந்தது.

பார்வதியிடம்கூட இந்த அசாதாரணத் தன்மை ஒரு அளவு இருக்கத்தானிருக்கிறது. அதற்காக அவள் எந்த அனுபவத்தைப் பெறவில்லை? சுப்ரமண்யம் என்ற ஒரு மனிதனை, சர்வ சாதாரண மனிதனைக் கணவனாக வரித்து, மற்றவர்களைப்போல ஒரு குழந்தையைப் பெற்று, மற்ற வீடுகளுக்கு நடுவில் ஒரு வீட்டில் மனிதப் பெண்ணாகத்தானே வாழ்ந்தாள்?

அதே போல இவளும் மனித அனுபவங்களைப் பெற வேண்டியவள்தானே? சாப்பிடுகிறாள். சோற்றையும் பண்டங்களையும் பல்லால் கடித்து மென்றுதானே தின்கிறாள். இவள் சாப்பிடும்போது விகாரமாக இல்லை, அவ்வளவுதான். இவள் முகத்திலும் வியர்வை அரும்புகிறது. நாம் பேசுகிற வார்த்தைகளை, பாஷையைத்தானே பேசுகிறாள் இவளும்! இவளுக்கும் குளியல், சோப்பு, அங்கங்களை மறைத்துக்கொள்ள ஒரு புடவை ரவிக்கை எல்லாம் வேண்டித்தானிருக்கின்றன.

இவளும் ஒரு கணத்தில், ஒளி மங்கிய முக்கால் இருளில், தனிமையின் கைமறையும் அந்திமங்கலில் அன்பைமட்டும் ஆடையாக அணிந்து மயங்கத்தானே வேண்டும். தனிமையின் தயங்கும் துணிச்சலில், இருள்—ஒளிக் கலவையின் மறைவில், ஆகாயத்தை மட்டும் ஆடையாக அணிந்து நாணம் மின்னி நெளிய, குன்றியும் ஒடுங்கியும் எழுச்சி பெற்று நினைவழியத்தானே வேண்டும்!..

பாபு சரேலென்று உலுப்பிக் கொண்டான்.

உள்ளே தோன்றிய உருவங்களும் நிலைகளும் அழிந்தன.

சை—என்ன அசட்டுக் கற்பனை; அநியாயமான கற்பனை! விழித்துக்கொண்டிருக்கும்போதே நம்மை ஏமாற்றி எப்படி இந்த அசட்டுத்தனத்தில் குதித்துத் திளைத்தது? மனம் அடங்காத பிடாரி!

மனதினாலேயே அவள் கால்களை எடுத்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டான் அவன். இதயத்தில் அவற்றை எடுத்து வைத்து மனசிலேயே தலைவணங்கினான்.

"நான் உன்னைச் சாதாரண மனிதப் பிறவியாக நினைக்கவில்லை. நான் வணங்கும் தெய்வத்தின் வடிவம் நீ" என்று அந்தராத்மா தலையைத் தொங்கவிட்டு மன்னிப்புக் கோரிற்று. அப்பா சொன்ன பிரார்த்தனையை மனம் முணுமுணுத்தது.

வண்டி கும்பகோணத்திற்குள் வந்து விட்டது.

❧ ❧ ❧

வீட்டைத் திறந்து உள்ளே வந்ததும் பார்வதி அப்படியே ஊஞ்சலில் வந்து துணியாகத் துவண்டுவிட்டாள்.

பாபு ஏதோ கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற திட்டத்துடன், நாற்காலியில் உட்கார்ந்தான். அதற்குள் எதிர்வீட்டு அம்மாள் வந்து "இப்பதான் வந்தீங்களா?" என்று உட்காரவே, ஒன்றும் ஓடவில்லை. அவள் சீக்கிரம் போகும் யோசனையுடன் வரவில்லை போலிருந்தது. "என்னம்மா அநியாயம், நீங்க போறதுக்குள்ளாகவா முடிப்பாங்க.." என்று ஆரம்பித்தவள், பார்வதியை மாறி மாறி அழவைத்தும் அடக்கியும் செய்து கொண்டிருந்தாள். உள்ளிருந்து யமுனா காப்பிக்கொட்டை அரைத்துவிட்டு கும்மட்டியை விசிறும் ஓசை கேட்டது. இந்த அம்மாள் இப்போது நிச்சயமாகக் கிளம்பப் போவதில்லை.

"நான் வரேன்" என்று எழுந்தான் அவன்.

"காபி சாப்பிட்டுப் போகலாம் பாபு."

"காலமே ஒரு தடவை சாப்பிட்டாச்சு. போரும். எனக்கு வேலை நிறையக் கிடக்கு" என்று தீர்மானமாகக் கிளம்பி விட்டான் அவன்.

"யமுனா, போய்ட்டு வரேன்" என்று சொல்லிக்கொண்டான் உள்ளே போய்.

முழங்காலை முன்னுக்கு மடக்கி உட்கார்ந்து அடுப்பை விசிறிக்கொண்டிருந்தாள் யமுனா. மற்ற பெண்களைப் போல் இவளும் உலகத்துப் பிறவிதான். இவளும் அடுப்பு மூட்டி, காபி போட்டு....

"காபி சாப்பிட்டுட்டுப் போகலாமே."

"இல்லை நாழியாயிடுத்து."

அவன் முகத்தின் அலுப்புக்குப் பலன் இருக்கத்தான் இருந்தது.

"சரி, அப்ப எப்ப வரே?"

"நாளைக்கு இல்லாட்டா மறுநாள்."

"ம்..."

"வரட்டுமா?"

"சரி..."

"ஏன், இழுக்கறே இப்படி?"

"இழுக்கலே, போய்ட்டு வா."

இவ்வளவு அழகு எப்படி இவளுக்கு வாய்த்தது? கும்மட்டியில் கணகணவென்று ரோஜாக் கொழுந்துடன் பறக்கும் கனலின் நிறம், இவளுக்கு எப்படிக் கிடைத்தது. முகத்தில் ஒளிர்கிற அறிவு வேலி போடாவிட்டால் இந்த அழகைத் தொட்டுவிடலாம். எத்தனையோ நாள் முன்னால் யாராவது தொட்டிருப்பான். இந்த அறிவுதான், இந்தக் கண்தான் தூரத்தில் நிறுத்திவிடுகிறது. விவரிக்க முடியாது நடுக்கத்தை—தளிர் நடுங்குவதுபோன்ற நடுக்கத்தை எழுப்புகிறது.

"என்ன யோசிக்கிறே?" என்று கேட்டாள் யமுனா.

"ஒண்ணுமில்லியே."

"இன்னும் அஞ்சு நிமிஷம் இருந்தாக் காபி ஆயிடும். தண்ணி கொதிச்சு, பால் காயணும்."

"வேண்டாம்."

"வேண்டாம்னு அப்பவே சொல்லிப்பிட்டியே."

"நெஜமாத்தான் சொன்னேன்."

"அப்ப இரு" என்று அலமாரியில் தர்மாஸ்ஃபிளாஸ்கில் இருந்த காபியை எடுத்துக்கொடுத்தாள் யமுனா.

"இது ஏது?"

"ஊரிலேர்ந்து கொண்டுவந்தது."

"யமுனா ஏன் என்னைத் தொந்தரவு பண்றே?" என்று சொல்லிக்கொண்டே சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தான் பாபு.

"நான் வரேன்."

"காபி சாப்பிட்டியா?"

"சாப்பிட்டேன்."

"பாபு...கொஞ்சம் உட்காரேன்."

"என்ன?"

"உட்காரேன்."

"சொல்லுங்களேன்."

"இத்தனை நாளா இருந்ததெல்லாம் சரி. இனிமே எங்களுக்கு மனுஷான்னு நீ ஒருத்தன்தான் இருக்கே" என்று மெதுவாகத் தயங்கித் தயங்கிச் சொன்னாள் பார்வதி.

"ம்."

"அதுதான் சொல்லணும்னு நெனச்சேன்."

"உங்க வீட்டு மனுஷன்தான் நான். உங்க பிள்ளை மாதிரியே நெனச்சுக்கலாம் நீங்க."

"பிள்ளையாகத்தான் நெனச்சிருக்கேன்" என்றதும் பார்வதி மறுபடியும் அழத் தொடங்கிவிட்டாள்.

சற்று நின்றான் பாபு. அவள் கண்ணைத் துடைத்துக் கொண்டதும், "நான் வரட்டுமா?" என்று நகர்ந்தான்.

"கொட்டிக் கொட்டிப் பேசத் தெரியாது எனக்கு. நிலைமையைச் சொல்லிப்பிட்டேன். சரி, உனக்கும் குளிச்சுக் கிளிச்சுப்பிட்டு காலேஜுக்குப் போகணும். போயிட்டு வா...சும்மா நான் என்னத்தைச் சொல்லப் போறேன்."

ஃ ஃ ஃ

மறு நாள் விடியற்காலையில் எழுந்துவிட்டான் பாபு.

இரவில் நல்ல தூக்கம். ஒன்பது மணிக்கே படுத்துவிட்டான் அன்று. ஏழு மணிக்கே சாப்பிட்டுவிட்டு, அரிக்கேன் விளக்கை ஏற்றி வைத்துக்கொண்டு ராஜபுத்திர சரித்திரத்தில் பாதியை வாசித்துத் தீர்த்தான். தீர்க்க முடியவில்லை. திரும்பித் திரும்பி அவர்கள் ஞாபகம்தான் வந்தது. எதற்காக இவர்கள் இப்படி அல்லல்பட வேண்டும்? ராஜ வம்சமாகப் பார்த்துப் பிறக்காமல் இப்படி சாதாரணமாகப் பிறந்ததற்குத் தண்டனையா? அல்லது சாதாரண மனிதர்களின் வகுப்பில் அசாதாரணமாகப் பிறந்ததற்கு தண்டனையா? எங்கு திரும்பினாலும் துயரம், அதிருப்தி, மனவலி, தோல்வி. ஒரு பக்கம் யமுனா, ஒரு பக்கம் பார்வதி, இந்தப் பக்கம் தலைமைக் குமாஸ்தாவின் மனைவி...இன்று என்னமோ வாசற் கதவு பூட்டியிருக்கவில்லை. சிவசிதம்பரத்திற்கு கருணை வந்துவிட்டாற்போலிருக்கிறது, மனைவி மீது. இல்லாவிட்டால் பயமாக இருக்கும். அங்கும் வெளிச்சமில்லை. எட்டரை மணிக்கு எழுந்து பார்த்தபோது ஒரு நிமிஷத்திற்குப் பிறகு வெளிச்சம் தெரிந்தது. உள்ளே அவர் தலை தெரிந்தது. அரை நிமிஷம் ஆனதும் அந்த வெளிச்சம் அணைந்துவிட்டது. மனதில் உள்ள குழப்பத்தை விரட்டிட முடியவில்லை. மூச்சை பத்து தடவை நன்றாக இழுத்து, ஸ்தம்பனம் செய்து அப்பா காண்பித்த தெய்வத்தை புருவத்திடையே நிறுத்தி வேண்டினான். அது யமுனாவின் வடிவாக வந்து நின்றது. இந்த யமுனா எதற்காக மனுஷியாகப் பிறந்தாள்? இவளுக்கு நிச்சயமாக கலியாணம் ஆகுமா? சத்யம் செய்து கொடுத்தோமே—நம்மால் செய்து வைக்க முடியுமா? நாம் செய்து வைத்து இவளைச் சாதாரண மனுஷியாக ஆக்க முடியுமா? எவ்வளவு அழகான உடல்!... முகத்திலுள்ள அறிவுக்கும் இப்படிக் கிடக்கும் அழகிற்கும் பொருந்துகிறதா... அழகான உடலுக்கும் முகத்திற்கும், அறிவின் ஒளி வீச்சுக்கும் பொருத்தம் கிடையாதா?

உடல் அயர்ந்து கிடந்தது. எப்போது தூங்கினேனென்று தெரியவில்லை. கீழே கூடத்தில் மாட்டியுள்ள கடிகாரம் தருகிற ஒவ்வொரு மணியும் கேட்கும். ஒன்பது மணி எண்ணின ஞாபகம் இருக்கிறது. பத்து மணிக்குள் தூங்கிவிட்டோம் போலிருக்கிறது.

பாபு அவசரமாகக் குளித்துவிட்டு முதல் நாள் மாலை வாங்கி வைத்திருந்த சாத்துக்குடிகளையும், மலைப் பழங்களையும் ஒரு பையில் போட்டுக்கொண்டு கிளம்பினான்.

சூரியோதயமாகிவிட்டது. ரங்கண்ணாவைப் பார்க்கப்போகும் ஆவலில் கால் எட்டி எட்டி விழுந்தது. மடத்துத் தெருவில் கடை திறந்துகொண்டிருந்தார்கள். கரி பிடித்த ஹோட்டல் ஜன்னலிலிருந்து புகையும், சுர் சுர் என்று தோசையின் ஓசையும் தெருவில் வழிந்தன.

கும்பேச்வரன் திருமஞ்சன வீதி போவதற்குள் வெயிலின் ஆரஞ்சு நிறம் மாறி வெள்ளையாக மாறிக்கொண்டிருந்தது.

முந்தாநாளிரவு பார்த்ததுபோல்தான். ரங்கண்ணா பட்டை பட்டையாக விபூதியிட்டுக்கொண்டு இடைகழியின் ஒட்டுத் திண்ணையில் கண்ணை மூடி உட்கார்ந்திருந்தார். கைகள் மட்டும் அப்போது மாதிரி மேலும் கீழும் போகாமல் விரல் கோத்து மடியில் கிடந்தது. தியானத்தில் ஆழ்ந்திருந்தவருக்கு பாபு வந்தது கேட்கவில்லை. அவன் லேசாக இருமுறை இருமிய பிறகுதான், கண்ணைத் திறந்து திரும்பினார். இரண்டு விநாடி புரியாமல் பார்த்தார்.

"வாடாப்பா, வா. உன்னைத்தானடா தியாகராமன் அழைச்சிண்டு வந்தார்?"

"ஆமாம்."

"உம் பேர் மறந்து போச்சுடா."

"பாபு."

"பாபுவா? ரொம்ப சின்னப் பேரா இருக்கேடா" என்று சிரித்துக் கொண்டே உள்ளே நடந்தார் அவர்.

"உக்காந்துக்கோ."

அவர் மனைவி பாபுவை அடுக்களையிலிருந்து பார்த்துக்கொண்டே, அருகில் வந்து, "புதுசாச் சொல்லிக்கப் போறான்னேளே, இந்தப் பையன் தானா?" என்று கேட்டாள். பாபுவுக்கு தைரியம்கூட சற்றுத் தளர்ந்துவிட்டது. குரலில் தொனித்த அதிகாரம்—அதுவும் அவரைக் கேட்கும்போது தொனிப்பது விசித்திரமாயிருந்தது.

"என்ன?" என்று தம்புராவை மூலையிலிருந்து எடுக்கப்போன ரங்கண்ணா,

அதைத் தொட்டுக்கொண்டே திரும்பிக் கேட்டார்.

"இவன்தான் புதிசாச் சொல்லிக்க வந்திருக்கிற பையனுன்னு கேட்டேன்" என்று இன்னும் சற்றுக் குரல் உயர்ந்தது.

"ஆமா ஆமா. இவன்தான். வெறும் சிஷ்யன் இல்லேடி. பி. ஏ. படிக்கிறுனும். ஏண்டா குழந்தை, பி. ஏ.தானே?"

"ஆமாம்."

தம்புராவை எடுத்து வந்து உட்கார்ந்து உறையைக் கழற்றினுர் ரங்கண்ணு.

"ஒரு தட்டு வேணும்" என்றுன் பாபு.

அவனை ஏற இறங்கப் பார்த்துக்கொண்டிருந்த கிழவி, உள்ளே போய் ஒரு தட்டை எடுத்து வந்தாள். பையிலிருந்த பழங்களையும், புஷ்பத்தையும் அதில் எடுத்துவைத்து, அவர் முன்னுல் வைத்து விழுந்து வணங்கினுன் பாபு.

"தீர்க்காயுசா இருக்கணும்டாப்பா.... இதெல்லாம் என்னத்துக்கு இப்ப?" என்றுர் அவர்.

கிழவிக்கும் ஒரு நமஸ்காரம் செய்தான் பாபு.

மறுபடியும் கண்ணை மூடி அஞ்சலி செய்துவிட்டு ஒரு தடவை மீட்டி, பிருடையை முடுக்கி சுருதி சேர்க்க ஆரம்பித்தார் ரங்கண்ணு.

"எனக்கு தள்ளலேப்பா. ஏதோ முடிஞ்சதைச் சொல்லிக்கொடுக்கிறேன்."

"காபியைச் சாப்பிட்டு உட்காருங்களேன்" என்று குரல் வந்தது.

"உட்கார்ந்தாச்சு. இங்க கொண்டு வந்து கொடுத்துடப்படாதா?" என்று சொல்லவே, உள்ளே போனுள் கிழவி.

கிழவி ஒல்லி. பொல்லென்று வெளுத்த மயிர். அதற்காகக் காலிறங்கின புடவை இல்லை. அரக்குப் பட்டில் சலங்கைப் பேட்டு போட்ட ஒரு புடவை. பட்டின் துவளலும், கொடியில் காய்ந்த முடமுடப்பும் கலந்த கொசகொசப்பு. காதில் துவாரத்திலிருந்து விழுந்துவிடுவேன், விழுந்துவிடுவேன் என்று பயமுறுத்துகிற ஒரு பெரிய சிவப்புக் கல் ஓலை. நல்ல ஜாதிச் சிவப்பு. கழுத்தை நெருக்கமாகச் சுற்றிய ஒரு பழைய கால அட்டிகை-பட்டை மாதிரி-குறுகிய பட்டைதான். கிழவிக்கு வயது அதிகம்தான் என்று தோன்றிற்று. ஆனுல், நிமிர்ந்து வேகமாக நடந்தாள். காலிலும், முகத்திலும் மஞ்சள் தேய்த்துக் குளித்த பசுமை படர்ந்திருந்தது.

ஒரு பெரிய டம்ளர் நிறைய காபி வந்தது. தண்ணீர் காபி. நுரைக்காத காபி. மடமடவென்று குடித்தார். "அப்பாடா . . . காபியைக் குடிச்சாத்தான் உசிரு வருது. எங்க ஐயாவுக்கு இது பேர்கூடத் தெரியாது. எனக்கும் நாப்பத்தஞ்சு வயசு வரையில் தெரியாது. அப்பறம் இதைச் சாப்பிடுய்யா, சாப்பிடுய்யான்னு பழக்கிவிட்டுப்பிட்டார், பிடில் பொன்னுசாமி. இருபத்தஞ்சு வருஷமாச்சு. என்னமோ சொல்றுளே, வெள்ளி விழாவா. . . இருபத்தஞ்சு வருஷம் பூர்த்தியாச்சுன்னு செய்யறதாமே... அது என்ன சொல்லேன்."

"வெள்ளி விழாத்தான்."

"வெள்ளிவிழாத்தானே. செத்துப் போன ராஜாவுக்குக்கூட அது கொண்டாடினுளாமே. பட்டத்துக்கு வந்த வருஷத்தைக் கணக்குப் பண்ணி."

"ஆமாம்."

"அதான் இந்த காபிக்குக் கொண்டாடணும்" என்று சிரித்தார், ரங்கண்ணு. "தங்க விழா, வைரம் எல்லாம் உண்டோ?"

"தங்க விழான்னு அம்பது வருஷத்துக்கு."

"ஏ அம்மாடி.! அதுவரையிலே யாரு இருக்கறது?" என்று தந்தியை மீட்டினுர் ரங்கண்ணு. பிருடையை முடுக்கினுர். தண்டியைக் காதருகில் சாய்த்துக் கொண்டார்.

தம்புரா கம்பீரமாக நாதம் எழுப்பிற்று. கா..வ், கா..வ் என்று உள்ளோட்டமாக காந்தாரம் எழுந்தது.

"இது என்னடா குழந்தே. ஸ்வரம்... ஸ, ப இல்லே... தனியாக் கேக்கறதே... கேளு."

"காந்தாரம்."

"காந்தாரமா? சரி. அத எந்தத் தந்தியிலே கேக்கறது? ஒண்ணுவதா?, நாலாவதா, நடுத் தந்திகளா?"

"ஒண்ணுலியுமில்லே. எல்லாத்திலியும் தான்."

"தம்புரா இருக்கா உங்கிட்ட?"

"ஊரிலே இருக்கு."

"பெரிய தம்புராவா?"

"இது மாதிரிதான் இருக்கும்."

"நல்லது... இந்த காந்தாரம் கேக்கறது பார்... அந்த மாதிரி இருக்கணும் பாட்டு. சங்கீதம் அப்படியிருக்கணும். பாடறபோது, சிரமமில்லாமல் ஜீவன் கேக்கணும்... இப்படியெல்லாம் சேர்ந்தாத்தான் அது கேக்கும்."

சுருதி நன்றுகச் சேர்ந்துவிட்டது.

ரங்கண்ணு காதில் தண்டியை ஒட்டி ஒட்டி, கண்ணை மூடி மூடி, மீட்டிக் கொண்டேயிருந்தார். புருவத்தைச் சுருக்கி காய்களை அணு அணுவாக நகர்த்தினுர். ஜீவாப்பட்டை திரித்துத் திரித்துப் பார்த்தார். மறுபடியும் காய்களைத் தள்ளினுர்.

பத்து நிமிஷம் ஆயிற்று.

ரங்கண்ணு இன்னும் காதைத் தண்டியிலிருந்து எடுக்கவில்லை. காய்களையும் ஜீவாக்களையும், தள்ளியும் திரித்தும் முகத்தைச் சுளித்தார்.

"யார்ரு அது?" என்று பாபுவின் தலைமேல் பார்த்தார்.

"நான்தான்" என்று ஒருவன்-இருபத்தைந்து வயதிருக்கும்-வாட்டசாட்டமாக வந்து கையைக் கட்டி நின்றுன்.

"யார்ரு அது, சாம்பனு?"

"ஆமாம்."

"ஏண்டா, தடியா? நேத்திக்கி எங்கே போயிட்டே?... தடிக் கழுதே..."

"ஊருக்குப் போயிருந்தேன்."

"ஊருக்கா? எந்தூருக்கு?"

"கிராமத்துக்கு."

"கிராமத்துக்கா?... நீ கலியாணத்தைப் பண்ணிண்டு போயேன். ஏன் என் கழுத்தை அறுக்கிறே...ம்?"

சாம்பன் என்ற அந்த "தடியன்" தூரேரமாக உட்கார்ந்துகொண்டான்.

"இந்தப் பையன் புதிசாச் சொல்லிக்க வந்திருக்காண்டா. பி. ஏ. படிக்கிறுன். உம்மாதிரி தற்குறியில்லேடா."

சாம்பன் புன்சிரிப்புடன் தலையைக் குனிந்துகொண்டான்.

"சுருதி சேர்ந்திருக்காடா?...ம்"

"சேர்ந்திருக்குண்ணு."

"நன்னுக் கவனிடா, மட சாம்பிராணி. எங்கே சேர்ந்திருக்கு? உன் காதைப் பொசுக்க."

ரங்கண்ணு ஜீவாவைத் திரித்துத் திரித்து மீட்டிக்கொண்டிருந்தார்.

இருபது நிமிஷமாயிற்று. ரங்கண்ணு கண்ணை மூடிப் புருவத்தைச் சுளிக்காமல், கண்ணை மூடிக் கேட்டார். ஒரு நிமிஷம் கேட்டுவிட்டு, மறுபடியும் மணியைத் தொட்டார். தண்டியைச் சாய்த்துக்கொண்டார். நாலு நிமிஷம் ஆயிற்று.

"அப்பாடா . . . ஏண்டா, செவிட்டு முண்டம்...அப்பவே சேந்துடுத்துன்னியே..." என்று மறுபடியும் செல்லமாக பாட்டு விட்டு, "ஆரம்பிக்கலாமா?" என்றுர். "அ... சேந்துக்கோ..."

பாபு வாயைத் திறந்தான்.

"ரொம்ப திறக்காதே... இது போரும்" என்று உதட்டைச் சற்று திறந்தார் ரங்கண்ணு.

(தொடரும்)

அட்டைப் படம்

★

குளத்தில் உள்ள பாறையின் மீது உட்கார்ந்தவாறு ஆலம் விழுதால் அவன் பல்லைத்தேய்த்துக் கொண்டே இருக்கிறுன், குறும்புடன் அவளைப் பார்த்துக் கொண்டே, நேரம் போவது தெரியாமல்!

அவளும்தான் என்ன; குளத்தில் தண்ணீர் எடுக்கக் குடம் சுமந்து வந்தவள், தன்நிலை மறந்து, விழிக்கோணத்தில் பார்வையைச் செலுத்தி ஓவியப் பாவைபோல் ஒயிலாக் நிற்கிறுளே!

'ஆலும் வேலும் பல்லுக்குஉறுதி' என்றெரு சொல்லுண்டு. அவனே, ஆலம் விழுதால் பல்லைத் தேய்த்துக்கொண்டே, அந்த 'வேல்' விழியாளிடம் தனது காதலையும் உறுதி செய்துகொள்ளுகிறுன்!

கிராமியக் காதலைச் சித்திரிக்கும் இவ்வார அட்டைப் படத்தை வரைந்தவர், சைத்ரிகர் உமாபதி.

துப்பறியும்
சுப்புடு
பரீட்சை காலம் ஹைஸ்கூல் ஹெட் மாஸ்டர் ஒருவர் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடிவந்தார்.
ஒரு சின்ன கேஸ் ஸார்! வருகிற பரீட்சைக்காக ஆறுவது பாரத்தின் ஆங்கில கேள்வித்தாள்கள் அச்சாகி வந்தன. அதன் நகலை என் மேஜையின் மீது வைத்திருந்தேன் நேற்று அதைத் தேடிப்பார்த்தால் காணவில்லை ஒருவேளை அது மாணவர் கையில் சிக்கியிருந்தால், பேராபத்து பிறகு பரீட்சையைத் தள்ளிவைக்க வேண்டியது தான் இதைப்பற்றி நீங்கள் துப்புக்கண்டுபிடிக்க வேண்டும்
சரி! பார்க்கிறேன்!
மிஸ்டர் சுப்புடு! நீங்களும் கொஞ்சம் இது விஷயத்தில் அக்கறை எடுத்துக்கொள்ளுங்கள்!
பரீட்சைக்கு முந்திய நாள்
நாளோ ஓடிப் போச்சு! இதுவரை கேள்வித்தாளைப்பற்றி எந்தவித க்ளூ'வும் கிடைக்கவில்லை பெரிய தர்ம சங்கடமாப்போச்சே!
அன்று மாலை சுப்புடு பிள்ளையார் கோவிலுக்குப் போய் விட்டுத்திரும்பினார்.
இந்தப்பிள்ளையார் பிரசாதத்தை இன்ஸ்பெக்டர் வீட்டில் கொடுத்துடலாம் ... இதை வைத்துக்கொள்ள ஒரு கடுதாசி கிடைக்கலையே!
ஆ! இதோ ஒரு நல்ல தாள் பறந்து வருகிறதே! இதில் வைத்துக்கொள்கிறேன்
அதே சமயம் இன்ஸ்பெக்டர் வீட்டில்
ஹெட் மாஸ்டர் ஸார்! ஐ ஆம் ஸாரி! என்னால் ஆனதை முயன்று பார்த்தாய்விட்டது கேள்வித்தாள் விஷயம் ஒன்றும் புலப்படவில்லை
வாருங்கள் மிஸ்டர் சுப்புடு! எங்கிருந்து வருகிறீர்கள்? கேள்வித்தாள் பற்றி ஏதாவது துப்புக்கிடைத்ததா?
ஒன்றும் கிடைக்கவில்லையே! ஆற்றங்கரைப் பிள்ளையார் கோவிலுக்குப்போய்விட்டு வருகிறேன் இந்தாருங்கள் பிரசாதம்!
ஆஹா!!.....
இது தான் அந்தக்கேள்வித்தாளின் நகல்!
பலே! சுப்புடு பலே!
இப்போதுதான் சார் ஞாபகம் வருகிறது. இதை என்னுடைய கோட்பாக்கட்டில் வைத்திருந்தேன் அப்படியே சலவைக்குப் போட்டுவிட்டார்கள் போலிருக்கிறது
எப்படியிருந்தால் என்ன? எங்கள் சுப்புடு அதைக்கண்டுபிடித்துவிட்டார் பாருங்கள்!
சந்தர்
தொடரும

இலங்கை லிகிதம்

இலங்கை இந்தியர் பிரச்னையைப் பற்றிப் புதிய இலங்கைப் பிரதம மந்திரி ஸ்ரீ பண்டாரநாயகா, பாரதப் பிரதமர் நேருவை லண்டனில் சந்திக்கும்போது சம்பாஷிக்கப்போவதாயும், ஆனால் உத்தியோகபூர்வமான பேச்சுகள் பிறகுதான் நடக்க முடியுமென்றும் அறிவித்திருக்கிறார். அவர் பத்திரிகை நிருபர்களின் மகாநாடு ஒன்றை முதன் முறையாகக் கூட்டிப்பேசியபோது இதை வெளியிட்டார். ஜூன் மாதம் காமன்வெல்த் பிரதம மந்திரிகளின் மகாநாடு முடிவடைந்தவுடன், ஜூலை முதல் வாரத்தில் பட்ஜட் விவாதம் இலங்கை பார்லிமெண்டில் ஆரம்பமாகி செப்டம்பர் மாதக் கடைசி வரையில் நடக்கும். ஆகையால் உத்தியோகபூர்வமான இலங்கை–இந்தியப் பேச்சுகள் அக்டோபர் மாதத்துக்கு முன்னால் நடைபெறுவதற்கில்லை. அதுவரையில் இலங்கைப் பார்லிமெண்டில் இந்திய வம்சாவழியினர்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்க முடியாதென்பதையும் பிரதமர் ஸ்ரீ பண்டாரநாயகா சூசகமாக வெளியிட்டிருக்கிறார்.

இலங்கையின் பதிவுப் பிரஜைகளாகிய இந்திய வம்சாவழியினர்களுக்குப் பார்லிமெண்டில் நான்கு ஸ்தானங்களை ஒதுக்குவதென்றும், இதற்காக தனித் தொகுதி அடிப்படையில் தேர்தல் நடத்துவதென்றும், முன்பு தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால், இம்மாத ஆரம்பத்தில் இங்கு பொதுத் தேர்தல் நடைபெற்றபொழுது இந்தியப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் தனித் தொகுதி தேர்தல் மாத்திரம் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இந்தத் தேர்தலை எப்பொழுது நடத்தப்போகிறீர்கள் என்று புதிய பிரதம மந்திரியிடம் "மித்திரன்" நிருபர் கேட்டதற்கு, இதைப்பற்றித் தாம் இன்னும் யோசிக்கவில்லை என்றும், இலங்கை இந்தியர் பிரச்னைக்கு ஒரு தீர்வு காணும் பொழுதுதான் இந்தியர்களின் பிரதிநிதித்துவப் பிரச்னைக்கும் ஒரு முடிவு ஏற்படுமென்றும் பிரதம மந்திரி தெரிவித்தார். இதிலிருந்து பார்லிமெண்டில் இந்தியர் நலனைக் கவனிக்க எவரும் இருக்கப்போவதில்லையென்பது இப்பொழுது தெளிவாகி விட்டது.

சிங்களத்தை மட்டுமே ராஜாங்க பாஷையாக்க அடுத்த வாரம் பார்லிமெண்டில் ஒரு மசோதா வரப்போகிறதென்றும், இந்த மசோதா அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு முரணானதென்று யாராவது சவால்விட்டால், அந்தச் சவாலை ஏற்கத் தாம் தயாரென்றும் பிரதம மந்திரி அறிவித்திருக்கிறார். இவ்வாரம் மந்திரி சபை ஆமோதித்திருக்கும் இந்த மசோதாவில் தமிழ் மொழியையும் இஷ்டப்பட்டவர்கள் சுதந்திரமாக உபயோகிக்கலாம் என்று ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. இது தமிழர்களுக்கு அளிக்கும் ஒரு விசேஷமான சலுகையாம்! தமிழ் மொழியை உபயோகிக்கும் உரிமை தமிழ் மக்களுக்கு இருந்த பொழுதிலும், நாட்டின் உத்தியோக பாஷை என்ற கௌரவம் சிங்கள பாஷை ஒன்றுக்கு மட்டுமே இருக்கும். அரசாங்கத்தின் இந்த மாற்றாந்தாய்க் கொள்கையைத் தமிழ்த் தலைவர்கள் கடுமையாக ஆட்சேபித்து சிம்மாசனப் பிரசங்கத்துக்கு இரண்டு திருத்தங்களைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். இலங்கையில் தமிழ் ராஜ்யம் ஒன்று ஸ்தாபிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதை அந்தத் திருத்தத்தில் அவர்கள் வலியுறுத்தி, தமிழ் ராஜ்யத்துக்காகக் கடைசிமூச்சு இருக்குமளவும் தாங்கள் போராட்டம் நடத்தப் போவதாயும் எச்சரித்திருக்கிறார்கள்.

இலங்கையில் பாஷாவாரி ராஜ்யங்கள் ஏற்படுத்தும் கொள்கையைத் தாம் கடுமையாக எதிர்ப்பதாயும், அதிக சுயேச்சையுள்ள மாகாணக் கவுன்சில்களை ஏற்படுத்தும் யோசனையை வேண்டுமானால் தாம் ஆராய முடியுமென்றும், பிரதம மந்திரி தெரிவித்திருக்கிறார். இலங்கையில் தமிழ், சிங்கள வகுப்புகள் இரு தனி கோஷ்டிகளாகத் தெளிவாய்ப் பிரிந்து போயிருப்பது இந்தப் பொதுத் தேர்தலில்தான். சர்க்கார் கட்சியிலிருந்து தமிழர்கள் அடியோடு துண்டித்துக்கொண்டிருப்பதும் இப்போது தான்.

* * * *

புத்த பகவானின் 2500-வது ஜயந்தியை மே மாதக் கடைசி வாரத்தில் கொண்டாட பிரமாதமான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சம்புத்த ஜயந்தி எனப்படும் இந்த வைபவத்துக்கு பாரதப் பிரதமர் நேருவையும், பர்மியப் பிரதமர் நூவையும் அழைத்திருக்கிறார்கள். ஒரு வார காலத்திற்கு நடக்கும் இவ்விழாவின் போது இலங்கையில் எந்த இடத்திலும் மதுபானம் விற்கப்படாதென்று அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது.

* * * *

இலங்கை வானொலி தேசீய ஒலிபரப்பில் ஆங்கில ஒலிபரப்பை அடுத்த வருஷத்திலிருந்து அடியோடு நிறுத்திவிட உத்தேசித்திருக்கிறார்கள். இதற்குப் பூர்வாங்கமாக இப்பொழுதே ஆங்கில ஒலிபரப்பு நேரம் வெகுவாகக் குறைக்கப்பட்டு, தமிழ், சிங்கள ஒலிபரப்பு நேரம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. வெளிநாடுகளுக்காக அகில இந்திய ரேடியோ விசேஷ ஒலிபரப்புகளை நடத்துவதைப் போல, இலங்கை வானொலியும் தென் இந்தியாவிற்காக விசேஷத் தமிழ் நிகழ்ச்சியொன்றை ஒலிபரப்பத் திட்டமிட்டு வருவதாய் ஒலிபரப்பு இலாகா மந்திரி அறிவித்திருக்கிறார்.

* * * *

பாகிஸ்தானுக்கு இலங்கைப் பிரதமர் நாசூக்காக ஒரு சூடு கொடுத்திருக்கிறார். நேருவின் அயல் நாட்டுக் கொள்கையை இலங்கை ஆதரிப்பதைக் கண்டு பாகிஸ்தான் கவலைப்படுவதாகத் தெரிகிறதென்றும், பாகிஸ்தானின் கவலைக்குக் காரணமே கிடையாதென்றும், அந்த நாட்டுடன் இலங்கை எப்பொழுதும் போல நேச உறவு கொண்டிருக்குமென்றும் ஸ்ரீ பண்டாரநாயகா தெரிவித்திருக்கிறார்.

⁂ ⁂ ⁂

இலங்கைக்கு அமெரிக்காவிடமிருந்து 50 லட்சம் டாலர் உதவி இவ்வருஷம் கிடைக்கவிருக்கிறது. எவ்விதமான நிபந்தனையுமில்லாமல் இந்தியாவுக்கு உதவி புரிவதைப்போலவே இலங்கைக்கும் உதவி புரிய அமெரிக்கா முன்வந்திருப்பதனால் அதை ஏற்றுக்கொள்ளுவதென்று இலங்கை மந்திரி சபை இவ்வாரம் தீர்மானித்திருக்கிறது.

இலங்கைப் பிரதம மந்திரி ஸ்ரீ பண்டாரநாயகா நடத்திய முதலாவது பத்திரிகை நிருபர்கள் மகாநாடு. பிரதமருக்குப் பின்னாலிருக்கும் பெண்மணி ஒரு ஸ்திரீ நிருபர். இடது கோடியிலிருந்து இரண்டாவதாக இருப்பவர் நமது நிருபர்

கலாமண்டபம்

தமிழ்ப் படத் தயாரிப்பாளர்களில் 100க்கு 99 சத விகிதம் பேர் பழைய கதைகளைத்தான் படமெடுக்கின்றனர். அநேகமாக பழைய நாடகக் கதைகள் யாவும் தீர்ந்துவிட்டன என்றே கூற வேண்டும். அதாவது, புராணமும் இல்லாமல் சரித்திரமும் இல்லாமல் இருக்கும் கிராமியக் கதைகள், கர்ண பரம்பரைக் கதைகள் யாவும் குறைந்தபட்சம் இரண்டு தடவைகளுக்கு மேல் படமெடுக்கப்பட்டு விட்டன; அல்லது எடுக்கப்பட்டு வருகின்றன. ஏதாவது விட்டுப்போயிருந்தால் அதையும் தேடிப் பிடித்துத் தயாரிக்கப்போவதாக அறிவித்துள்ளார்கள் பல பேர். இவ்வாறு சமீபத்தில் அறிவிக்கப்பட்டுள்ள படங்கள் 'டம்பாச்சாரி', 'மிருச்சகடி' (வஸந்தசேனா), உத்தம புத்திரன், சகுந்தலா ஆகியவையாகும். ஏற்கெனவே தயாரிப்பில் உள்ள சுமார் இருபத்தி இரண்டு படங்களுடன் (இவை யாவும் முன்னொரு முறை படமாக வெளி வந்தவைதான்) இவையும் சேர்கின்றன இப்போது.

ஒரு சிலர்தான் புதிய கதைகளைப் படமெடுக்கப்போவதாக அறிவித்துள்ளனர். தற்போது பட உலகம் உள்ள நிலையில் இது துணிச்சலான காரியம் என்றே சொல்ல வேண்டும்; இவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். மற்றும் சிலரோ 'பெண்ணின் பெருமை'யின் பிரமாத வெற்றியையடுத்து வங்காளிக் கதைகளை நம் திரைக்குக் கொணர முற்பட்டிருக்கின்றனர்; நமக்குப் புதிய கதைகள் என்ற அளவில் இதுவும் வரவேற்க வேண்டிய விஷயமே.

இம்மாதிரிச் செய்பவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ராஜ்ஸ்ரீ பிக்சர்ஸார். இதுவரை படங்களை வாங்கி விநியோகம் செய்து வந்த இவர்கள் இப்போது சொந்தத்தில் படமெடுக்க முன்வந்துள்ளனர். 'சியாமளி' என்ற வெற்றிகரமான வங்க நாடகத்தையே இவர்கள் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். தெலுங்கு, தமிழில் தயாராகும் இப்படத்தை 'பெண்ணின் பெருமை'(வங்காளி 'ஸ்வயம்ஸித்தா')யை எடுத்த பி. புல்லையாதான் டைரக்ட் செய்யப்போகிறார். அன்னபூர்ணா பிக்சர்ஸாரோ சரத்சந்திரரின் 'நிஷ்கிருதி' என்ற நாவலை தெலுங்கு, தமிழில் படமாக்கப் போகின்றனர். விஜயா ப்ரொடக்ஷன்ஸின் அடுத்த படம் தெலுங்கில் தானென்றாலும் அதுவும்

சினிமாச் செய்திகள்

'மிஸ்ஸியம்மா'வைப்போல வங்காளிக் கதையொன்றைத் தழுவியதுதான். 'அப்பு சேஸி பப்பு தின்னு' ('கடன் வாங்கி காலம் தள்ளு') என்ற இப்படத்துக்கான கதையை ஸ்ரீ சக்ரபாணி எழுதி வருகிறார்.

தங்கள் 'சசிரேகா பரிணய'த்துக்கு 'மாயா பஜார்' என்று பெயர் மாற்றி வைத்துவிட்ட இவர்கள், ஹிந்தியில் படம் பிடிப்பதில்லையென நிச்சயமாகத் தீர்மானித்து விட்டனர். ஆகவே விஜயாவின் 'மிஸ்ஸியம்மா'வை ஏவி. எம். ஸ்டுடியோ தான் ஹிந்தியில் தயாரிக்கப் போகிறது. இதைத் தவிர தமிழ் நாட்டில் சுமாராக வெற்றி பெற்ற படங்கள் இரண்டு மூன்றையும் ஸ்ரீ மெய்யப்பன் ஹிந்தியில் தயாரிக்கப்போகிறார். அவைகளில். "காலம் மாறிப்போச்சு" என்ற படமும் இடம் பெறுகிறது. ஏற்கெனவே உள்ள திட்டத்தின்படி "நால்வர்" ஹிந்தியில் தயாராகிறது. இந்தப் படத்தில் பூராவும் தமிழ், தெலுங்கு நட்சத்திரங்களையே போட்டுப் படமெடுக்க உத்தேசித்துள்ளதாக ஸ்ரீ மெய்யப்பன் கூறினார். (இதை ஏற்கெனவே நாராயணன் கம்பெனியார் செய்து வருகின்றனர். இவர்களது "தேவதா" (கணவனே கண் கண்ட தெய்வம்) வில் முக்கிய பாகத்தில் அஞ்சலியும், ஜெமினி கணேசனும்தான் நடிக்கின்றனர்). அவருடைய 'பாய் பாய்' (ஹிந்தி 'ரத்தபாசம்') வட நாட்டில் திரையிடப்பட்டுவிட்டதாலும், ராஜ் கபூரும், நர்கீஸும் நடிக்கும் 'சோரி சோரி'யும் முக்கால்வாசி பூர்த்தியாகிவிட்டபடியாலும் ஹிந்தி 'மிஸ்ஸியம்மா', 'நால்வர்' ஆகியவற்றில் முழு கவனம் செலுத்தப்படுமென எதிர்பார்க்கலாம். இவை தவிர ஏவி. எம். ஸ்டுடியோவில் 'குல தெய்வம்' என்ற தமிழ்ப் படம் கிருஷ்ணன்–பஞ்சு டைரக்ஷனில் வேகமாகத் தயாராகிறது.

ஓம்சக்தி பிலிம்ஸ் 'தந்தி'யில் சிங்கப்பூர் சம்பந்தமிருப்பதால் அதற்கான வெளிப்புறக் காட்சிகளை நேரில் சென்று படமெடுக்க முயற்சி நடக்கிறது. அதையடுத்து சிங்கப்பூர் செல்லவிருக்கும் நடிகர் கே. ஆர். ராமசாமியின் நாடகங்களை மலேயாவில் நடத்துவதற்கான ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள கோலாலம்பூரிலிருந்து எஸ். கே. லிங்கம் என்பவர் சென்னை வந்துள்ளாராம். இந்தச் சிங்கப்பூர் படப்பிடிப்பு மே மாத இறுதியில் நடைபெறுமாம். இந்தக் குழுவில் கே. ஆர். ராமசாமி, குமாரி வனஜா, டைரக்டர் கே. ஆர். சுந்தரேசன், காமிராமேன் ராஜகோபால், கதாசிரியர் எஸ். வி. ராஜகோபாலன், மற்றும் பட உரிமையாளர்களும் செல்வராம்.

டெக்னிகலரில் இரு சினிமாஸ்கோப் படங்களை எடுக்க ஜெமினி ஸ்டுடியோவில் பூர்வாங்க வேலைகள் மும்முரமாக நடந்துவருகின்றன. இவற்றில் வைஜயந்திமாலா நடிக்கவிருக்கும் ஒரு படம் இம்மாதமே பிடிக்கப்பட துவங்கிவிடுமாம்; இதை முன்பு இந்திய சர்க்கார் செய்திப் படப் பிரிவில் இருந்த ஸ்ரீ பன்னி டைரக்ட் செய்வார். மற்றொன்றை ஸ்ரீ வாஸனே டைரக்ட் செய்யவிருக்கிறார். இடையே ஹிந்தி, தமிழில் ஒரு படம் பிடிக்க ஜெமினி திட்டமிட்டு இம்மாதமே வேலைத் துவக்கவிருக்கிறது.

'நயா அந்தாஜ்' என்ற படத்தில் மீனாகுமாரி.

நகர அரங்கம்

வ. உ. சிதம்பரம் பிள்ளை கடற் சாரணர்கள் தங்களுடைய குழுவின் நிதிக்காக "இருளில் ஒளி" என்கிற தமிழ் சமூக நாடகத்தைத் திருவல்லிக் கேணி கலா மண்டபத்தில் சென்ற சனிக்கிழமை மாலை நடித்தனர்.

டாக்டராகத் தோன்றிய ஸ்ரீ தே. விசய ராகவன் முதல் தரமாக நடித்தார். 'மணி வண்ணன்' பாகமேற்ற புதுவை ஸ்ரீ சி. ஏ. முகிலன் ஏதோ காயமுற்று மேற் கொண்டு நடிக்க இயலாமல் போகவே, அப்பாகத்தையும் ஏற்று அநாயாசமாக நடித்தார் தே. விசயராகவன். கதை, வசனங்களை எழுதியதோடு மட்டுமல் லாமல் பாடல்களை அமைத்தவரும் இவரே. மேலும், புதுவை முகிலனுடன் சேர்ந்து நடிகர்களுக்கு நல்ல பயிற்சியும் இவர் அளித்துள்ளார்.

மற்றும் எம். கே. இராசமாணிக்கம், து. முனிசாமி, மு. ராமலிங்கம், சே. கணேசன், கோ. அசோக், பூ. பார்த்த சாரதி, பெ. வ. சண்முகம், குமாரிகள் எஸ். எம். தர்மா, அ. மல்லிகா முதலி யோர் தத்தம் பாகங்களை கூடியமட்டில் உணர்ந்து நடித்தனர். அ. கமலநாதனும், அ. சாம்பசிவமும் மேடை நிர்வாகப் பொறுப்பை திறம்பட ஏற்றிருந்தனர்.

ஃ ஃ ஃ

ஸ்ரீ டி. கே. கோவிந்தன் எழுதிய "போட்டா போட்டி" என்கிற ஹாஸ்ய நாடகத்தை 'தி எண்டர்டெய்னர்ஸ்' சங்கத்தினர் இரண்டாம் முறையாக எழும்பூர் மியூஸியம் தியேட்டரில் போன ஞாயிறன்று நடித்தனர். வருட ஆரம்பத் தில் அண்ணாமலை மன்றத்தில் நடிக்கப் பட்டதுடன் ஒப்பிடுமிடத்து இப்போது பொதுவாக நடிப்பில் நல்ல நயம் காணப் பட்டது.

முன்போலவே ஸ்ரீ கொத்தமங்கலம் கிட்டு அமர்க்களமாய்ப் பேசி நடிப்பில் பிறரை மிஞ்சினார். புது முகங்களான குமாரிகள் எஸ். நிர்மலாவும், கல்பகமும் அழகாகப் பேசினர். 'சுலோ' பாகம் ஏற்க இன்னும் கொஞ்சம் ஆகிருதியுள்ள வர் தேவை.

ஃ ஃ ஃ

பன்மொழிப் புலவர் ஸ்ரீ கா. அப்பா துரை தீட்டிய 'காற்றும், மழையும்' என்கிற கதையை சிலம்பு நாடக மன்றத் தினர் கடந்த மாதம் 22–ந் தேதி ஒற்றை வாடை தியேட்டரில் நாடகமாக அரங் கேற்றினர்.

'கார்மேகம்' என். கிருட்டினனின் நடிப்பு மிகவும் பிரமாதம். 'ஆமாம், கார் மேகம் பேச்சுக்கு அப்பீல் இல்லை' என்று ஆரம்ப கட்டத்தில் அவர் சொன்ன போதெல்லாம் சபையில் சிரிப்பொலி அலை பாய்ந்தது. பிறகு அடிக்கடி அதே வாக்கியத்தை அவர் பிரயோகிக்கவே அதனுள்ளிருந்த ஸ்வாரஸ்யம் கெட்டு விட்டது.

அடுத்தபடி காஞ்சிநாதனாக வந்த வளையாபதி முத்துகிருஷ்ணனின் நடிப்பைக் குறிப்பிட வேண்டும். 'சின்னக் கண்ணு' எம். கே. ராச மாணிக்கம் திறம்பட நடித்தார். 'கோந்து' பி. சண்முகம் தேவலை. 'தென்னவன்' பாண்டியன், 'ஹெட் கான்ஸ்டபிள்' கவிஞர் கண்ணதாசன், 'கான்ஸ்டபிள்' எஸ். எஸ். பி. லிங்கம் ஆகியோரின் நடிப்பு பரவாயில்லை.

'கற்பகவல்லி'யாகத் தோன்றிய டி. கே. காந்தாவின் நடிப்பும், பேச்சும் எடுப்பாக இருந்தன. 'ஆனந்தவல்லி' டி. கே. வனிதா உழைத்து நடித்தார். பெண் வேஷமேந்திய இரா. மணிவேந்தனுக்கு நல்ல 'மேக்கப்'.

மேடைக் கதை, உரையாடல் அமைத் தவர் இரா. மணிவேந்தன். கால மாறுத லுக்கேற்ற கருத்து செறிந்த கதை. உரையாடலில் விசை இருந்தது. ஆனால் சில வசனங்களில், பிற கட்சியினரைத் தாக்கும் எண்ணத்துடன் அனாவசிய மாகக் கூர் தீட்டியிருப்பது நாடகத் தின் உயரிய லட்சியங்களையே மழுங்கச் செய்துவிட்டது.

"அயோக்கியனுக்கு நல்ல வேலை வேணுமா? நிதி மந்திரி பதவி காலி யாகப்போகிறது. அது கிடைக்கலாம். . . கை நீட்டி வாங்கி வாழ வேண்டுமா? பொது மாமத்து மந்திரி பதவி கிடைக்கும். . . படிக்கத் தெரியாதா, எழுதத் தெரியாதா? அப்படியானால் முதல் மந்திரியாகலாமே" என்கிற தோரணையில் ஓடும் வசனங்களை 'பச்சைத் தமிழரின் ஆட்சி' கண்டு பெரு மிதப்படும் பொதுமக்கள் வரவேற்பார் களா என்பதே கேள்வி. "போலீஸ் ஸ்டேஷன் இல்லாவிட்டால் பாதுகாப் புடன் சாராயம் கிடைக்குமா?" . . . "வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுத் தவன் போலீஸ் இலாகாவிலேயே நான் ஒருத்தன்தான் என்று பெயர் எடுக்க மாட்டேனா?" என்கிற ரீதியில் அமைந்த வசனங்கள் போலீஸ் இலாகாவை நாசூக் காகத் தாக்கியிருக்கின்றன.

பாடல்களைப் புனைந்தவர் கவிஞர் கண்ணதாஸன். பின்னணிகீதம் இனிமை யாக இருந்தது. அரங்க அமைப்புகள் பாராட்டும்படி விளங்கின. மொத்தத் தில் நாடக மன்றத்தினருக்கு இம்முதல் நாடகம் ஓர் வெற்றியே.

• • • •

யுனைடெட் அமெச்சூர் ஆர்டிஸ்டுகள் சங்கத்தினரின் நான்காம் ஆண்டு விழா மயிலை ரஸிக ரஞ்சனி சபை ஹாலில் ஏப்ரல் 30–ந் தேதி சிறப்பாக நடை பெற்றது. திரைப்படமாகத் தயாரிக்கப் பட்டுவரும் "டயல் மிஸ்டர் சஞ்சீவி" என்கிற நாடகத்தைச் சங்கத்தினர் அன் றைய தினம் நடித்தனர். ஒய். ஜி. பி., பட்டு, வித்யாவதி முதலியோர் வழக்கம் போல் தத்தம் திறமையை நன்கு வெளிக் காட்டினர். வந்திருந்த பல சினிமா நட் சத்திரங்கள் நாடகத்தை மிகவும் ரஸித் தனர்.

—ஸஞ்சாரி.



'சம்பூர்ண ராமாயணம்' படப்பிடிப்புக்குச் பல ஸ்தலங்களை சமீபத்தில் பார்வையிட்டார் எம். ஏ. வி. பிக்சர்ஸ் ஸ்ரீ வேணு.

மைசூர் வாசுதேவாச்சார் கீர்த்தனைகள்

ராகம் : ஜயந்தஸ்ரீ]   [தாளம் : சதுரச்ர ரூபகம்.

ஆ. ஸ க ம த நி ஸ்
2 1 1 1
அ. ஸ் நி த ம ப ம க ஸ

பல்லவி

ஸ்ரீதர பாஹி தயாகர
4 3
வேத ஸுகோசர கிரிதர (ஸ்ரீதர)
3 3 4

அநுபல்லவி

யாதவ வரத பராத்பர
3
பாதந தாமர ஸுககர (ஸ்ரீதர)
2

சரணம்

பூஸுராதி பாலன பர
4 3
வாஸுதேவ முரளீதர
4
பாஸுரமணி பூஷண–நர
4 4
காஸுர ஹர தாமோதர (ஸ்ரீதர) (37)
3 3

ப:— லக்ஷ்மியைத் தரித்திருப்பவனே! தயையுள்ளவனே! வேதங்களுக்கும், வேதாந்தங்களுக்கும் அறியும் பொருளாயிருப்பவனே! கோவர்த்தனமென்னும் மலையை சுண்டு விரலால் தரித்தவனே! என்னைக் காக்க வேண்டும்.

அ–ப:— யது வம்சத்தில் உண்டான அரசர்களைக் கரையேற்றுவிக்க, அவ்வம்சத்தில் உதித்தவனே! உயர்ந்த தேவதைகளுக்கும் உயர்ந்தவனே! எல்லா தேவதைகளும் என்றும் தன் பாதத்தில் வணங்கும் மஹிமையுடையோனே! ஸர்வ ஜீவராசிகளுக்கும் ஸுகத்தைக் கொடுப்பவனே! காக்க வேண்டும்.

ச:— ப்ராம்மணன் முதலான ஸர்வ ஜனங்களையும் காப்பாற்றுவதையே முக்கியமாகக் கொண்டவனே! வாஸுதேவன் என்ற பெயர் கொண்டவனே! புல்லாங்குழல் தரித்து உலகை வசப்படுத்தினவனே! பிரகாசிக்கிற ரத்தினங்களை ஆபரணங்களாகக் கொண்டவனே! நரகாஸுரனைக் கொன்று, உலகத்திற்கு க்ஷேமத்தை யளித்தவனே! கயிற்றால் கட்டுண்டு, தாயின் பக்திக்கு வசமாய் நின்றவனே! என்னைக் காத்தருள வேண்டும்.

0	I	0	I

ராகம் : ஜயந்தஸ்ரீ] [தாளம் : சதுரச்ர ரூபகம்.

பல்லவி

, நி ஸ	, கமா தா	நி ஸ்ரி	ஸ்ா ஸ் ஸ்
. ஸ்ரீ . .	. தர. பா	ஹி த .	யா க ர
நி ஸ் க்ஸ்	ஸ்ரி நித தநிஸ்ரி	நித தம	பமக மாகஸா
வே. . .	த . ஸு. கோ. .	ச . . ர .	இ ரி . . தர .
, நிஸ	, கமா தாநித தம	த நி	ஸ்ா ஸ்ஸ்
ஸ்ரீ	. தர பா. . . .	ஹி த	யா க ர
நி ஸ் க்ம்	, க் ஸ்ா க்ஸ்ஸ்ரி	நித தம	பம கமா கஸா
வே . . .	. தஸு. கோ. . .	ச. ர .	இ. . ரி . . தர. .

அநுபல்லவி

, ஸ்ரி	தமா தநி	ஸ்ரி	ஸ்ா ஸ்ஸ்
. யா .	. தவ. வர	தப	ரா த்பர
, ஸ்ரி	, தமா தநி	ஸ் ஸ்ரி	ஸ்ா க்ஸ்கா
யா .	. தவ வர	த ப .	ர ா த்பர.
ம்க் ம்க்	ஸ்ாஸ்ரி தநிஸ்ரி	தாதம	, ப ம ா கஸா
பா . .	த . ந . தா . . .	ம. ர.	. ஸுக. க ர.

சரணம்

, , , த	, ம பாம	மககம	கஸ நிஸ
. . . பூ	ஸு ராதி	பா. . .	லந பர
, , , ஸ	க ஸ நிஸகக ஸா	ஸக ஸக	ம க மா தமபா
. . வா	. ஸு தே. . வ.	மு . ர .	ளீ . . . த . ர.

பாஸுரமணி ‖ பூஷணநர ‖
காஸுரஹர ‖ தாபோதர ‖
(ஸ்ரீதர பாஹி தயாகர)

அநுபல்லவிபோல் பாடவும்.

'ஆர்வி'

எழுதும் தொடர் கதை

★

இம்மாதம் 20-ந் தேதி
'மித்திர'னில் ஆரம்பமாகிறது.

பம்பாய் நிகழ்ச்சிகள்

மாதுங்காத் தமிழ்ப் பெருமக்கள் ஸ்ரீராம நவமி உத்ஸவத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடினர். 19-ந் தேதி முதல் 23-ந் தேதி வரையில் தினமும் காலையில் புருஷஸூக்தம், அபிஷேகம், உஞ்சவிருத்தி, அர்ச்சனை, தீபாராதனை ஆகியவைகளோடு, இசை விருந்து, நாட்டியக் கச்சேரி, உபந்யாசம் முதலியவைகளும் நடைபெற்றன. ஸ்ரீராம நவமி அன்றையதினம் நிகழ்ந்த மாஸ்டர் ராஜகோபாலுடைய பாட்டுக் கச்சேரி குறிப்பிடத்தக்கதாக இருந்தது. அன்றிரவு மாதுங்காவில் உள்ள சங்கர மடத்துத் தலைவர், சாஸ்திர ரத்னாகர பண்டிதராஜ ஸ்ரீ டி. ஏ. வெங்கடேச தீக்ஷிதர் உபன்யாசம் செய்தார். அடுத்த நாள் வெள்ளிக்கிழமையன்று வந்திருந்த ஸ்திரீகள் அனைவருக்கும் மஞ்சள், குங்குமம் வழங்கப்பட்டது. குமாரி ராஜேஸ்வரி நாட்டியக் கச்சேரியை அபிமானிகள் கண்டு களித்தனர். இரவு தனிப்பட்ட பஜனை ஒன்று நடந்தது. 21-ந் தேதி ஸ்ரீமான் ஞானசாகர ராவுடைய புல்லாங்குழல் கச்சேரி நடைபெற்றது. ஞாயிற்றுக்கிழமை மஹா பிரதோஷம், அகண்ட நாமம், ருத்ராபிஷேகம் முதலியவையும், இரவு ஆவணி சிருங்கேரி மடத்தைச்சேர்ந்த ஆஸ்தான வித்வான் அத்வைத வேதாந்த வித்வத் பிரவார பிரும்ஹஸ்ரீ ஸ்ரீனிவாச சாஸ்திரிகள் உபன்யாசமும் நடந்தேறின. உத்ஸவ கடைசி தினத்தன்று காலையில் பூர்ணாபிஷேகமும், சீதா கல்யாண உத்ஸவமும், சாயந்திரம் ஊர்வலமும், ஆஞ்சனேய உத்ஸவமும் நிகழ்ந்தன.

ஃ ஃ ஃ

டோம்பிவில்லியிலும் ஸ்ரீராமநவமி உத்ஸவம் கொண்டாடப்பட்டது. 19-ந் தேதி மாலை 'ஸ்ரீராமபிரானும், ஆஞ்சநேயரும்' என்ற பொருளில் ஸ்ரீமான் நரஸிம்ஹாச்சாரியார் ஸ்வாமி அரியதொரு உபன்யாசம் செய்தார்.

ஃ ஃ ஃ

தானாவில் உள்ள தென்னிந்தியர்களும் ஸ்ரீராமநவமி உத்ஸவத்தை 19-ந் தேதி முதல் 21-ந் தேதி வரை கொண்டாடினர். உத்ஸவம் தானாவில் உள்ள ஆர்ய கிரீத மன்றத்தின் ஹாலில் நடைபெற்றது.

ஃ ஃ ஃ

'இந்தியன் நேஷனல் தியேட்டர்'ஸ் நிர்வாகிகளின் முயற்சியால் நிகழ்ந்த நாட்டிய விழாவில் நடந்த தஞ்சை பொய்க்கால் குதிரை நாட்டியத்தையும், கும்பகோணம் பொம்மலாட்டத்தையும் விழாவிற்கு விஜயம் செய்த கலை அபிமானிகள் மிகவும் ஆர்வத்துடன் கண்டு களித்தனர். பொய்க்கால் குதிரை நாட்டியக்காரர்களுடைய விசித்திர நடனங்கள் சபையோரது கண்களை வெகுவாகக் கவர்ந்தன.

மேலும், கும்பகோணம் பொம்மலாட்டக்குழுவின் அதிசய திறமையைக் கண்ட சபையோர் வியந்தே போயினர் என்று சொன்னால் அது மிகையே



கர்நாடக திரிமூர்த்திகள் நினைவு விழா சபை ஆதரவில் திரிமூர்த்திகளின் ஜெயந்தி விழா திருவாரூரில் தீக்ஷிதர் அவதார ஸ்தலமாகிய மேல வடபோகி தெருவில் 6 தினங்கள் நடைபெற்று ஏப்ரல் 18-ந் தேதி ஆராதனையுடன் முடிவடைந்தது. (மேல் படம்) அன்று நிகழ்ந்த ஆலத்தூர் சகோதரர்களின் கச்சேரி. (நடு) ஸ்ரீ சியாமாசாஸ்திரிகள் ஜயந்தி தினத்தில் ஸ்ரீ ஆலத்தூர் வெங்கடேசய்யர் தலைமையில் உஞ்சவிருத்தி கைங்கர்யம் (கீழ்) ஸ்ரீ தியாகப்பிரும்ம ஜெயந்தி தினத்தில் சங்கீத வித்

தில்லி மாதர் சங்கத்தின் ஆதரவில் உதவி நிதிக்காக நடந்த நாட்டியக் கச்சேரியில் குமாரி ஊர்மிளாவின் குறத்தி நடனக் காட்சி.

தலைநகர் பால்.....

கர்நாடக சங்கீத விற்பன்னராக விளங்கும் சங்கீத கலாநிதி மகாராஜபுரம் ஸ்ரீ விஸ்வநாதய்யருக்கு பாரத ஜனாதிபதியால் விருது வழங்கப்பெற்றதைப் பாராட்ட ஏப்ரல் 12-ந் தேதி கும்பகோணத்தில் நடைபெற்ற வைபவத்தின் போது எடுத்த படம்.

ராமாயண காலத்திய வாழ்க்கை முறையை சித்திரிக்கும் அதி நேர்த்தியான கலை நிகழ்ச்சி ஒன்றை தில்லி மக்கள் கண்டு மகிழ்ந்தனர். 'சீதா சுயம்வரம்' என்ற நடன நாடகத்தை அடையாறு கலாக்ஷேத்திரக் கலைஞர்கள் நடத்திப் பெருமை அடைந்தனர். ஸ்ரீமதி ருக்மணி தேவியின் தயாரிப்பான இந்த நாடகத்தில் சுத்தமான கதகளியையும், பரத நாட்டியத்தையும் கையாண்டிருக்கிறார்கள். கம்யூனிடி ஹாலில் சென்ற செவ்வாயன்றும், புதனன்றும் நடந்த இந்த நிகழ்ச்சியைக் காண ஸ்ரீ ஜவஹர்லால் நேருவும், ஸ்ரீ வி. கே. கிருஷ்ண மேனனும் உட்பட திரளான மக்கள் வந்திருந்தனர்.

இந்த நடன நாடகத்திற்கு இசையமைத்துக் கொடுத்தவர் சங்கீத விற்பன்னர்—சங்கீத கலாநிதி ஸ்ரீ கே. வாசுதேவாச்சார்; வால்மீகி ராமாயணம், ஆனந்த ராமாயணம் ஆகியவற்றைச் சேர்ந்த சுலோகங்களை இசையில் அமைத்த அழகே தனி; அதுவும் அவற்றை வார்த்தைச் சிதைவின்றி அழகுறப் பாடினார்கள். வாத்ய கோஷ்டியும் சிறப்பாக அதன் பணியைச் செய்தது. ராமன் – சீதைக் கதை அமர கதை; அதை நாடக மேடைகளிலும், திரைப் படத்திலும் கண்டிருக்கிறோம். ஆனால் அதற்குப் புது மெருகேற்றிக் கலையழகு மிளிரும் வகையில் புத்துயிரளித்து, காண்போரை பரவசப்படுத்தும் நடன நாடகமாக நடித்து வெற்றி கண்டவர் ஸ்ரீமதி ருக்மணி தேவி. கலைப் பணியையே தன் வாழ்க்கைப் பணியாகக் கொண்டு இடைவிடாது கலாதேவியின் முன் புதுப் புது சிருஷ்டிகளைச் சமர்ப்பித்து வரும் அவரை தில்லி போற்றிற்று என்றால் மிகையாகாது.

ஃ ஃ ஃ

சின்னஞ் சிறுமி ஒருத்தி நாட்டியமாடி நிதி ஒன்றுக்கு பணம் திரட்டி உதவினாள். குமாரி ஊர்மிளா அளகேசன், சென்ற வெள்ளிக்கிழமை கம்யூனிடி ஹாலில் பரத நாட்டியக் கச்சேரி செய்தாள். ஆம்; சிறுமியாகிய அவள் சுமார் ஒன்றரை மணி நேரம், தங்குதடையின்றி அபாரமாக ஆடினாள். அலாரிப்பு, தில்லானா இவை சிறப்பானவை. 'கிருஷ்ணா நீ பேகனே' என்ற பாட்டுக்கு அபிநயம் பிடிக்கையில், அதுவும் குறிப்பாக குழலூதும் கண்ணனாக நின்ற காட்சி, எளிதில் மறக்க முடியாது. குறி சொல்லும் குறத்தியாகவும் ஆடிப்பாடி அப்ளாஸ் வாங்கினாள் ஊர்மிளா. தவிர, பத்மினி சுகந்தா, ஜயா ஆகியோரும் இடையிடையே நடனமாடினார்கள். நடன ஆசிரியர் ஸ்ரீ பக்கிரிசாமியின் ஏற்பாட்டிலான இந்நிகழ்ச்சிக்கு, நல்ல சாரீர வளமுள்ள தில்லி லலிதா பாட்டுப் பாடி சிறப்பித்தார்.

★

காந்திதாம் பஜனை ஸமாஜம்

கட்ச், கண்ட்லா துறைமுக அபிவிருத்தித் திட்டத்தில் அடங்கிய காந்திதாம் நகர் பஜனை ஸமாஜத்தின் நான்காவது ஆண்டு நிறைவு விழா ஏப்ரல் 1-ந் தேதி பிரதம அதிகாரி ஸ்ரீ பி. என். ஸாக்ஸேனா தலைமையில் நடைபெற்றது. அன்று, ஸமாஜ உறுப்பினர்களால் 'இரு புஷ்மர்கள்' என்ற சிறு நாடகம் நடிக்கப்பெற்றது. பஜனையுடன் விழா இனிது முடிந்தது.

தில்லி மாதர் சங்கத்தின் ஆதரவில் நடந்த இந்த உதவிக் கச்சேரியின் மூலம் கிடைக்கும் பணத்தைக்கொண்டு அந்த சங்கம், வைத்திய உதவிக்கான மோட்டார் வண்டி ஒன்றை வாங்கத் திட்டமிட்டிருக்கிறது. நடனக்கலையில் ஆர்வ மிக்க சிறுமியின் தரமான நாட்டியம்; பணமோ தர்ம காரியத்துக்கு; நடத்துபவர்களோ மாதர்கள், வசூலுக்குக் கேட்பானேன்?



ரிஷீகேசத்திலுள்ள ஸ்ரீ சிவானந்த ஸரஸ்வதி ஸ்வாமியால், நாகையநல்லூர் பிரும்ம ஸ்ரீ லக்ஷ்மீ நாராயண பாகவதர் அவர்களுக்கு 'ஸ்ரீராமாயண ஜ்யோதி' என்ற பட்டம் ரிஷீகேசம் ஆசிரமத்தில் அளிக்கப்பட்டபோது எடுத்த படம்.

கரோல்பாக் தென்னிந்தியக் கலைக்கழகத்தின் சார்பில் கம்ப ராமாயணப் பிரசங்கம் செய்த கோவை ஸ்ரீ தியாகராஜனுக்கு தில்லித் தமிழர் சார்பில் டாக்டர் கிருஷ்ணன் பண முடிப்பு வழங்கியபோது எடுத்த படம்.

Regd. No. 2514.
Registered as a Newspaper in CEYLON.

L. 259-X52 TM
இந்தியாவில் தயாரித்தது

Printed and Published by N. Rajagopalan, at the 'Swadesamitran' Press, 'Victory House
Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.